# கோத்தபாய ராஜபக்சவின் போர்க்கால வகிபாகம்

ஜனவரி 2024



INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

# லெப். கேணல் (ஓய்வுபெற்ற) நந்தசேனா கோத்தபாய ராஜபக்ச

**‘என்னிடம் இரண்டு குழுக்கள்தான் இருக்கின்றன - தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் மக்கள் மற்றும் தீவிரவாதிகள்.’**

**கோத்தபாய ராஜபக்ச**[1]

[1] Sri Lanka Journalists Risk Death, BBC, 3 Feb 2009, http://news.bbc.co.uk/2/hi/south_asia/7866253.stm

# அட்டவணை


**அறிமுகம்** : **பக்கங்கள் - 4-5**

1. **அதிகாரங்கள் : பக்கங்கள் 6-31**
பாதுகாப்புத் துறை அமைச்சகச் செயலாளர் என்ற பதவியில் இருந்துகொண்டு கோத்தபாய ராஜபக்ச சிறிலங்கா உள்நாட்டுப் போரின்போது வகித்த பங்கை இந்தப் பகுதி விவரிக்கிறது. சட்டப்படியான கட்டளை பிறப்பிக்கும் கட்டமைப்பில் அவருக்கு இருந்த நிலையையும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த அலகுகளையும் பிரச்சினைகளையும் ஆய்வுசெய்கிறது. அவருக்கும் ஜனாதிபதியான அவரது சகோதரருக்கும் இருக்கும் உறவின் அடிப்படையில் இந்தப் பதவியில் அவருக்கு முந்தி இருந்தவர்களையும் இனி வரப்போகிறவர்களையும்விட கோத்தபாய ராஜபக்ச தான் மிகவும் சக்திவாய்ந்த பாதுகாப்புத் துறை செயலாளர் என்று ஒரு வாதம் வைக்கப்பட்டுவருகிறது. அவரே ஒரு முன்னாள் இராணுவ வீரராக இருந்ததால், அதிகமான வளங்கள் கிடைக்கப்பட்டமையாலும் தான் விரும்பும் தன்னுடைய திட்டங்களை நடைமுறைப்படுத்த யாரைவேண்டுமானாலும் நியமிக்கும் அதிகாரம் இருந்ததாலும் இராணுவ மூலோபாயத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கை ஆற்றினார். அவர் ஓர் ஆட்சிப்பணியாளராக இருந்தபோதிலும் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் இல்லாத அமைச்சகங்களின் மீது அந்த அமைச்சகங்களுக்குப் பொறுப்பாய் இருந்த அமைச்சர்களை விட அவருக்கு அதிகக் கட்டுப்பாடு இருக்கும் அளவுக்கு சில கட்டங்களில் உண்மையில் அவர் மிகவும் சக்திவாய்ந்தவராக விளங்கினார்.

2. **இறுதிப் போரில் குறிப்பிட்ட நிகழ்வுகள் : பக்கங்கள் 32-65**
போர் முடிந்த பின் குறிப்பிட்ட நிகழ்வுகளில் கோத்தபாய ராஜபக்ச வகித்த வகிபாகமும், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவற்றை அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பாதுகாப்புப் படைகள் மீறியதைப் பற்றிய அவரது அறிதலும் குறித்து இந்தப் பகுதி கவனம் செலுத்துகிறது. மேலே கோடிட்டுக் காட்டியது போல, மரபான அதிகாரப் படிநிலையைக் காற்றில் பறக்கவிட்டு களத்தில் இருந்த தளபதிகளுக்கு நேரடி உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு ராஜபக்ச கருவியாக இருந்தார் என்பது தெரிகிறது. வன்னியில் இருந்த பொதுமக்கள் உணவும் மருந்தும் இல்லாமல் பட்டினியிலும் உயிர்வாழத் தேவையான இன்றியமையாத பொருள்கள் மறுக்கப்பட்ட நிலையிலும் இருந்ததனால் நூற்றுக்கணக்கானோர் இறந்த மனிதாபிமான சிக்கல் அவருக்கு முற்றும்முடிய தெரிவிக்கப்பட்டது. கூடுதலாகப் பொருள்களை அனுப்புவதைத் தடைசெய்வதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் (MOD) ஒப்புதல் தேவை என்றும் அதை வழங்கும் அதிகாரம் கோத்தபாய ராஜபக்சயிடம்தான் இருந்தது என்றும் அறிக்கைகள் கூறுகின்றன. ஐ.நா. முகமையங்களையும் உதவிப் பணியாளர்களையும் செப்டம்பர் 2008இல் போர் மண்டலத்தில் இருந்து விலகிச்செல்லும்படி எடுக்கப்பட்ட சர்ச்சைக்குரிய முடிவு கோத்தபாய ராஜபக்சவால் எடுக்கப்பட்டது மட்டுமல்லாமல் அரசு-சாரா அமைப்புகளுக்கும் (NGO) ஐ.நா.-வுக்கும் வாய்மொழியாகவும் எழுத்துபூர்வமாகவும் தெரிவிக்கப்பட்டது. ஐ.நா. மற்றும் உதவிப் பணியாளர்களை அகற்றியதுதான் வெகுஜனத்தின் மீது நடத்தப்பட்ட அட்டூழியங்களுக்கு முன்னோடியாக இருந்து சுதந்திரமான சர்வதேச மேற்பார்வையையும் புலனாய்வுக்கு சாத்தியமான சான்றுகளையும் இல்லாமல் செய்தது.

3. **விசாரணை செய்யத் தவறுதல் பக்கங்கள் : 65-72**
பரவலான மனித உரிமை மீறல் நிகழ்வுகள் அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், செயல்படுவதற்கான சட்ட ரீதியான கடமை இருந்தாலும்கூட, செயல்படவும் தன் கடமையை ஆற்றவும் அவருக்குத் திறன் இருந்தபோதிலும் அவர் எதிர்வினை ஆற்றவில்லை; தான் செயல்படாமல் இருந்தால் ஏற்படும் விளைவுகளையும் சாத்தியமான தீங்கையும் அவர் நன்றாகவே அறிந்திருந்தார் என்ற குற்றச்சாட்டை இந்தப் பகுதி ஆராய்கிறது. இந்த மனித உரிமை மீறல்கள் அவருடைய கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, அவர் விசாரணை செய்ய அப்பட்டமாக மறுத்தார் அல்லது தவறு எதுவும் நடைபெறவில்லை என்ற முடிவை முன்கூட்டியே நிதானித்தார்; பல நேர்வுகளில் அவர் விசாரணை செய்பவர்களைத் தடுத்தார், அல்லது விசாரணை செய்ய தன் நண்பர்களை நியமித்தார். மேலும் தன் அரசியல் எதிரிகளை மட்டுமே விசாரணை செய்தார்; தன் கூட்டாளிகளின் மேல் கோரப்படும் விசாரணை என்பது அவர்களைப் பழிவாங்கும் அரசியல் நோக்கம் கொண்டது என்று கூறினார்.

4. **சட்டப்பூர்வ பகுப்பாய்வு பக்கங்கள் : 73-94**

**இணைப்பு 1:** கோத்தபாய ராஜபக்சவின் வாழ்க்கை வரலாறு பக்கங்கள் : **96-97**

**இணைப்பு 2:** ஊடக அறிக்கைகள் பக்கங்கள் : **98-100**

# அறிமுகம்

1989ஆம் ஆண்டு மாத்தளையில் பெருந்திரளான மக்களைப் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்ததில் கோத்தபாய ராஜபக்சவின் குற்றப்பங்கை ஆராய்ந்து 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ITJP அறிக்கையின் ஒரு பின்தொடர்ச்சிதான் இந்த அறிக்கை.[2] அந்த அறிக்கையைத் தொடர்ந்து ஐ.நா. வின் ஒரு நிபுணர் குழு 2022 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசுக்கு அவர்கள் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று எழுத்து மூலம் கேட்டார்கள். அதற்குப் பதில் அளிக்கப்படாதபோது அவர்கள் தங்கள் தகவல் தொடர்பை பொது அரங்கில் வெளியிட்டனர்.[3]

ஐ.நா.வின் நிபுணர் அறிக்கைக்கு இன்றைய தேதிவரை அரசு பதில் அளிக்காத நிலையில் ஓர் உண்மை கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்கும் தற்போதைய அரசின் முன்மொழிவு கவலைக்குரியதாக இருக்கிறது. பல சிங்களவர்களின் வாழ்க்கையையும் தமிழர்களின் வாழ்க்கையையும் அழித்த எண்பதுகளின் பிற் பகுதியிலும், 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரின் போதும் நடந்த வன்முறைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள மிக மோசமான நபராக கோத்தபாய ராஜபக்சதான் இருக்கமுடியும்.

2009 ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கும் சர்வதேசக் குற்றவியல் சட்டங்களுக்கும் எதிராக நடத்தப்பட்ட போர்க்குற்றங்களும் மனிதகுலத்துக்கு எதிராக நடத்தப்பட்ட குற்றங்களுமான பலவகை மீறல்களும் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் அதிகாரத்தின் கீழ்தான் நடைபெற்றது என்றும் அவருக்கே மேலான பொறுப்பு உள்ளது என்றும் இந்த இரண்டாம் அறிக்கை கூறுகிறது. வேண்டுமென்றே, கண்மூடித்தனமாக மருத்துவ மனைகளின் மீதும் பொதுமக்கள் முகாம்களிலும் குண்டு வீசியதால் ஏற்பட்ட சட்டவிரோதப் படுகொலைகளும், சித்திரவதைகளும், பாலியல் வன்முறைகளும், போரின் முடிவில் போராளிகள் என்று சந்தேகப்பட்ட நூற்றுக் கணக்கானோரைத் திட்டமிட்டு பலவந்தமாகக் காணாமல் போகச்செய்ததும், பொது மக்களை வேண்டுமென்றே பசிப்பட்டினிக்கு ஆளாக்கியதும், மருந்துகளையும் மற்றவர்களின் மத்தியில் நல் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும் நிறுத்திவைத்ததும், இந்த மீறல்களையும் எதிரிகளை சட்டவிரோதமாகக் கடத்தி வைத்ததையும் தடுத்து வைத்ததையும் பற்றிய குற்றச்சாட்டுகளைப் விசாரணை செய்யத் தவறியதும் இந்தக் குற்றங்களில் அடங்கும்.

களத்தில் இருந்த தளபதிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச கொடுத்த கட்டளைகளுக்கும், அவருக்கு சர்வதேச மனிதாபிமான சட்டத்தையும் சர்வதேசக் குற்றவியல் சட்டத்தையும் மீறப்பட்டது குறித்து அது நிகழ்ந்த காலத்திலேயே தெரியும் என்பதற்கும் விவரமான சான்றாதார இணைப்புகளை இந்த அறிக்கை வழங்குகிறது. மேலும், அவருக்கும் தொடர்ந்துவந்த சிறிலங்கா அரசாங்கங்களுக்கும் போர் முடிந்ததில் இருந்து பெரும் அளவில் கூறப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை நம்பகமான முறையில் விசாரணை செய்யவும் குற்ற விசாரணை நடத்தவும் எண்ணற்ற வாய்ப்புகள் இருந்தன. ஆனால் அவர்கள் இந்த மீறல்களில் பாதுகாப்புப் படையினருக்கு உடந்தையாக இருந்து தொடர்ந்து குற்றச்சாட்டுகளை மறுத்து உண்மையை வெளிச்சத்துக்கு வரமுடியாமல் தடுத்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வெகுமதியும் பாதுகாப்பும் அளித்துக்கொண்டு இருக்கின்றனர்.

1989 முதல் 2009 வரையிலும் அதன் பின் தற்போது வரையிலும் ஒரு நேர்கோடுபோல் தண்டனையின்மை இருந்துவருகிறது. 1980 ஆம் ஆண்டு மாத்தளை மாவட்டத்தில் ஓர் இளம் இராணுவத் தளபதியாக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் ஆணையின் கீழும் கட்டுப்பாட்டிலும் இருந்த 700 பேர் அவரது கண்காணிப்பின் கீழ் காணாமல் போனார்கள். அவரும் அந்தக் காலகட்டத்தில் அவருக்குக் கீழ் பணியாற்றிய அதிகாரிகளும் பதவி உயர்வு பெற்று 2009 ஆம் ஆண்டு மோதலின் போது முக்கிய பங்காற்றினர். எடுத்துக்காட்டாக சவேந்திர சில்வா சிறிலங்கா இராணுவத்தின் தற்போதைய பாதுகாப்புப் படைத் தலைவர் ஆனார்.[4]

---

[2] https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities

[3] Working Group on Enforced or Involuntary Disappearances; Working Group on Arbitrary Detention; Special Rapporteur on extrajudicial, summary or arbitrary executions and Special Rapporteur on the promotion of truth, justice, reparation and guarantees of non- recurrence. Ref.: AL LKA 3/2022 , 8 Nov. 2022, online at: https://itjpsl.com/assets/DownLoadPublicCommunicationFile.pdf

[4] Shavendra Silva is designated in the United States for his alleged role in gross violations of human rights - Public Designation, Due to Gross Violations of Human Rights, of Shavendra Silva of Sri Lanka Under Section 7031(c) of the Department of State, Foreign Operations, and Related Programs Appropriations Act, 14 Feb. 2020, https://2017-2021.state.gov/public-designation-due-to-gross-violations-of-human-rights-of-shavendra-silva-of-sri-lanka-under-section-7031c-of-the-department-of-state-foreign-operations-and-related-programs-appropriations-a/ ITJP Dossier on Shavendra Silva at https://itjpsl.com/reports/shavendra-silva

2015-2019 காலகட்டத்தில் ராஜபக்ச குடும்பம் அதிகாரத்தை இழந்த போது, முக்கியமாகப் பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சிறிலங்காவில் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக உள்ளூர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் அவர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட பின் இந்த வழக்குகள் கைவிடப்பட்டன. ITJPயும் அமெரிக்காவிலுள்ள Housfeld சர்வதேச சட்ட நிறுவனமும் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட பதினொரு பேர் கோத்தபாய ராஜபக்சக்கு எதிராக ஓர் இழப்பீடு உரிமையியல் கோரிக்கை வழக்கை கலிபோர்னியாவில் 2019 ஆம் ஆண்டு தொடுக்க உதவின. இருந்தாலும், கோத்தபாய தேர்தலில் வெற்றிபெற்றதால் நாட்டின் தலைமைப் பதவி அவருக்கு சட்டவிலக்கு அளித்ததால் இந்த வழக்கைத் தொடர முடியவில்லை. 2022 ஆம் ஆண்டு சிறிலங்காவில் நடந்த வெகுஜன போராட்டத்தால் கோத்தபாய வலுக்கட்டாயமாகப் பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று. மாலைதீவுக்கு ஓடிய அவர் பின் சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கு அவருக்கு எதிராக ஒரு குற்றவியல் புகாரை ITJP சமர்ப்பித்தது.[5] பின் அவர் தாய்லாந்து சென்று இறுதியில் சிறிலங்காவுக்குத் திரும்பி வந்துள்ளார்.

1989 அல்லது உள்நாட்டுப் போரின்போது நடத்தப்பட்ட வெகுஜன அட்டூழியங்களுக்குப் பொறுப்புகூற எந்த ஒரு முயற்சியும் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக இன்னும் எடுக்கப்படவில்லை. 2009ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறை செயலாளராகப் பதவி வகித்தபோது மிகக்கடுமையான சர்வதேசக் குற்றங்கள் செய்ததற்காக கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக எவ்வளவு வலிமையான ஒரு வழக்கைத் தொடுக்க வேண்டும் என்பதை இந்த ஆவணம் சித்தரிக்கிறது.

கனடா கோத்தபாய ராஜபக்சவுக்குத் தடை விதித்துள்ளது[6] -பிற நாடுகளும் இதைச் செய்ய வேண்டும், சிறிலங்காவுக்கு என்றே பொறுப்புக் கூறலுக்காக ஒரு சுதந்திரமான பொறிமுறையை நிறுவ வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாக்களித்த நாடுகள் குறிப்பாக இதைச் செய்ய வேண்டும்.

---

[5] https://itjpsl.com/press-releases/itjp-files-criminal-complaint-against-gotabaya-rajapaksa-in-singapore

[6] https://www.canada.ca/en/global-affairs/news/2023/01/sanctions-imposed-on-sri-lankan-state-officials.html

# 1. அதிகாரங்கள்

'தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடும்போது, நீங்கள் சாதாரண நடைமுறையைக் கடைப்பிடிக்க முடியாது.'
கோத்தபாய ராஜபக்ச [7]



நேற்றைய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபச்ச மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச

**பாதுகாப்பு அமைச்சகச் செயலாளர் என்ற பதவியில் இருந்து கொண்டு கோத்தபாய ராஜபக்ச சிறிலங்கா உள்நாட்டுப் போரின்போது கொண்டிருந்த வகிபாகத்தினை இந்தப் பகுதி விவரிக்கிறது. சட்டப்படியான கட்டளை பிறப்பிக்கும் கட்டமைப்பில் அவருக்கு இருந்த நிலையையும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த அலகுகளையும் பிரச்சினைகளையும் ஆய்வுசெய்கிறது. அவருக்கும் ஜனாதிபதியான அவரது சகோதரருக்கும் இருக்கும் உறவின் அடிப்படையில் இந்தப் பதவியில் அவருக்கு முந்தி இருந்தவர்களையும் இனி வரப்போகிறவர்-களையும் விட கோத்தபாய ராஜபக்சதான் மிகவும் சக்திவாய்ந்த பாதுகாப்புத் துறை செயலாளர் என்று ஒரு வாதம் வைக்கப்பட்டு வருகிறது. அவரே ஒரு முன்னாள் இராணுவ வீரராக இருந்ததால், ஆதாரங்களின் அணுகல் அதிகமாக இருந்ததனாலும், தான்விரும்பும் தன்னுடைய திட்டங்களை நடை-முறைப்படுத்த யாரை வேண்டுமானாலும் நியமிக்கும் அதிகாரம் இருந்ததாலும் இராணுவ மூலோபாயத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்துவதில் முக்கிய பங்கை ஆற்றினார். அவர் ஓர் ஆட்சிப்பணியாளராக இருந்தபோதிலும் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் இல்லாத அமைச்சகங்களின் மீது அந்த அமைச்சகங்களுக்குப் பொறுப்பாய் இருந்த அமைச்சர்களை விட அவருக்கு அதிகக் கட்டுப்பாடு இருக்கும் அளவுக்கு சில கட்டங்களில் உண்மையில் அவர் மிகவும் சக்திவாய்ந்தவராக விளங்கினார்.**

## A. பாதுகாப்புச் செயலர் வகிபாகம்

25 நவம்பர் 2005 முதல் 9 ஜனவரி 2015 வரை கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளராகப் பதவிவகித்தார்.[8] 2005-2015 காலகட்டத்தில் சிறிலங்கா இராணுவ மற்றும் புலனாய்வுப் படைகளின் அனைத்து முகமையங்களும் இவருடைய ஆணையின் கீழ் இருந்தன. மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சகத்தின் கீழ் காவல் துறை வரும்வரை, அதாவது 2005 முதல் ஆகஸ்ட் 2013 காலகட்டத்தில் அது அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

கோத்தபாய செயலாளராக இருந்தபோது அவரது கட்டுப்பாட்டில் இரு சட்டங்களின் கீழ்[9] அவருக்கு

[7] How can there be freedom without discipline ? – Gotabaya, Daily Mirror, 12 Feb. 2019, http://www.dailymirror.lk/article/How-can-there-be-freedom-without-discipline-Gotabaya-162220.html Picture from: Troops capture Pooneryn: 16 NOV 2008, Daily News, On File.

[8] Date from MOD webpage, on file, ref B.

[9] §108, OISL, 2015. "மற்றவைகளுக்கு மத்தியில் தேசியப் பாதுகாப்பு கருதியும் 2006 ஆம் ஆண்டு முதற்கொண்டு பயங்கரவாதம் தொடர்பாகவும் கைது செய்வது தேவை என்று பாதுகாப்புச் செயலாளர் "கருதினால்" கைது செய்யவும் தடுப்புக் காவலில் வைக்கவும் அவருக்கு எல்லையற்ற அதிகாரம் இருப்பதாகப் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் (அத்தியாயம் 40) அவசரகாலநிலை விதியின்கீழ் ஆகஸ்ட் 13, 2005 அன்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது."

அசாதாரணமான அதிகாரங்கள் இருந்தன. இதை 'கைது செய்யவும் தடுப்புக்காவலில் வைக்கவும் அளிக்கப்பட்ட எல்லையற்ற அதிகாரம்' என்று ஐ.நா. விவரித்தது. ஒன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA). பல பத்தாண்டுகளுக்கு முன்னரே அகற்றப்படும் என்று அரசு உறுதிமொழி கொடுத்த பின்னரும் இது இன்றும் அமுலில் உள்ளது. இந்தச் சட்டம் 'பயங்கரவாதம்' என்பதற்குத் திகைப்பூட்டும் வகையில் மிகப்பரந்த வரையறையை வழங்குகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகப்படும் எந்த ஒரு நபரையும் (தன்னிச்சையாக) நீதித்துறை விசாரணை இல்லாமல் கைதுசெய்து நீண்டநாள் தடுத்து வைக்கவும், பொதுவாக சித்திரவதை செய்து பெறும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரைத் தண்டிப்பதற்குமான அதிகாரத்தை அதிகாரிகளுக்கு அளிக்கிறது. இரண்டாவது அவசரகால நிலை சட்டம். இது 2005 ஆம் ஆண்டு ஏற்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. குற்றம் சாட்டப்படாமலேயே கால வரையறையின்றி தடுத்து வைக்கும் இன்னொரு அடிப்படையை இது வழங்கியது. 'சட்ட எண் 1982 இல் 10 இன் படி திருத்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எண் 1979இல் 48 ஐ நடைமுறைப்படுத்தி பராமரிப்பதே அமைச்சகத்தின் நோக்கம் என்பதைப் பாதுகாப்பு அமைச்சக இணையத் தளங்களின் சமகாலத்துப் பதிப்புகள் தெளிவாகக் கூறுகின்றன.[10]'

**ஆயுதப்படைகளின் கட்டுப்பாடு**

பாதுகாப்பு அமைச்சகம் சிறிலங்கா இராணுவத்தையும், கடற்படையையும், விமானப் படையையும் நிர்வகிக்கிறது.[11] அமைச்சகத்தின் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவுக்கு அனைத்து நியமனம், பதவி உயர்வு மற்றும் அவரது சகோதரரான ஜனாதிபதியால் அமைக்கப்படும் இராணுவ நீதிவிசாரணை மூலம் குற்றவாளிகளைத் தண்டித்தல் உட்பட குற்றவாளிகளின் மேல் ஒழுங்குநடவடிக்கை எடுக்கும் விடயங்களில் அனைத்து அதிகாரங்களும் இருந்தன.[12] போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஒரு மிகவும் உயர்ந்த மூத்த அதிகாரியான பாதுகாப்புப் படைகளின் பிரதானி என்ற பதவியும் இவரது கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.[13] 2009 ஆம் ஆண்டு பாதுகாப்புப் படைகளின் பிரதானி என்ற பதவி உருவாக்கப்படும் முன் அது கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் என்று அழைக்கப்பட்டது. 2006-9 காலகட்டத்தில் பாதுகாப்புப் படைகளின் பிரதானி என்ற பதவியில் இருந்தவர் டொனால்ட் பெரேரா.[14] அவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவின் கட்டளைகளின்படி நடந்தார்.[15] பின்னர் 2009 இல் உருவாக்கப்பட்ட பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியைவிட இது குறைந்தது என்று BBC யால் வர்ணிக்கப்பட்டது.[16]

**உளவுத்துறையின் கட்டுப்பாடு.**

இராணுவப் உளவுப் படைகள் மற்றும் அரசு உளவு சேவைகள் (SIS) ஆகியவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு உளவு சேவைகள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன.[17] ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அவர்களது வேலைப்பழு எவ்வளவாக இருந்தாலும் உளவுத்துறை தலைவர்கள் பாதுகாப்புத் துறைச் செயலாளர்

---

[10] On file. Ref A.

[11] "பாதுகாப்புத்துறை செயலாளரான கோத்தபாய ராஜபக்சயின் மேற்பார்வையில் காட்டு நாயக்கா விமானப் படைத்தளத்தில் இருந்து நிலப்படைகளை ஆதரித்தும், LTTE யின் பயிற்சி, இராணுவ மற்றும், தளபாடத் தளங்களையும் அவர்களுடைய தலைவர்களையும் இலக்காகக் கொண்டு சுதந்திரமான போர் செயல்பாடுகளை நடத்தியும், விமானப்படை தாக்குதலை உச்சகட்டத்துக்குக் கொண்டுவந்து LTTE யைத் தோற்கடிப்பதில் SLAF பெரும்பங்கு ஆற்றியது." 12 ஜூன், டெய்லி நியூஸ்.

[12] 2008ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சக வலைத்தளத்தில் கோத்தபாய ராஜபக்ச அளித்த பேட்டியில், "எமது அரசியலமைப்பில் அமைச்சகச் செயலாளரே பிரதமக் கணக்கியல் அதிகாரி மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர். என்னுடைய பொறுப்பு அதுதான். இதைத்தான் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செய்து வருகிறேன். முப்படைத் தளபதிகளின் உதவியுடன் கொள்கை வகுப்பதில் பாதுகாப்பு அமைச்சருக்கு உதவுவதும் எனது பொறுப்பாகும். நியமிக்கப்பட்டவுடன் நாங்கள் செய்த முதல் காரியம், நாட்டின் முழு பாதுகாப்பு நிலைமையையும் மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் கொள்கையை உருவாக்கியதுதான். அந்தக் கொள்கையை நிறைவேற்றுவது என் பொறுப்பாகும்." https://web.archive.org/web/20080923065349/http://www.defence.lk/new.asp?fname=20080919_05

[13] 'பாதுகாப்புத்துறை அமைச்சகச் செயலாளரின் வழிகாட்டுதல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவர் செயல்படுவார். … செயலாளரின் அதிகாரம், வழிகாட்டுதல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டு CDS செயல்படும்…." டெய்லி நியூஸ், 12 ஜூன் 2009 - CDS பதவிக்கான புதிய சட்டத்தைப் பற்றி.

[14] 2015 ஆம் ஆண்டு இலங்கையின் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் MIG விமானம் விபத்துக்குள்ளானது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. MIG விமான பரிவர்த்தனை குறித்து முன்னாள் விமானப்படை தளபதி சீ்ப் மார்ஷல் டொனால்ட் பெரேரா கேள்வி எழுப்பினார், 2 ஏப்ரல் 2015, http://www.ft.lk/article/402905/Former-Air-Chief-Marshal-Donald-Perera-questioned-over-MiG-aircraft-transaction

[15] "பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பொறுப்பான பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமை அதிகாரியால் JoH கட்டளையிடப்பட்டது என்று UN (§112) கூறுகிறது".

[16] New military posts created, 12 Jul 2009, https://www.bbc.com/sinhala/news/story/2009/07/printable/090712_military_new.shtml

[17] "Administration of the Directorate of Foreign Intelligence & the Directorate of Internal Intelligence." Stated on MOD website 2008, accessed at https://web.archive.org/web/20081218215747/http://www.defence.lk/main_abt.asp?fname=resp_functons also in more detail at https://web.archive.org/web/20081216074101/http://www.defence.lk/main_abt.asp?fname=orgstr ON SIS - REGISTRATION OF SUPPLIERS / CONTRACTORS FOR YEAR 2012 (on file) cites SIS as coming under the purview of the MOD. Likewise this report in the Media - https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/20200913/281522228502926 which is based on Kamal Gunaratne's book.

கோத்தபாய ராஜபக்சவின் தலைமையின் கீழ் கூடுவார்கள்.[18] அப்போது மண்டலத் தளபதிகளில் ஒருவராக இருந்த கமல் குணரட்ண, 'பாதுகாப்புப் படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் காவல்துறை மாஅதிபர்[19] ஆகியோர் வழக்கமாக அதில் கலந்து கொண்டதால் அந்தக் கூட்டம் மிகவும் முக்கியமானதாக மாறியது' என்று கூறினார்.[20] கோத்தபாய தவறாமல் அதில் கலந்துகொள்வார் என்று மேலும் அவர் கூறினார்.[21]

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவ உளவுத் துறையின் தலைவராக மேஜர் கபில ஹெந்தவிதாரனா இருந்தார். அவர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் இராணுவத் தளபதியின் தலைமையின் கீழ் சிறப்பு இராணுவ உளவு அணிகளை நடத்தியதாக விக்கிலீக்ஸ் தொலைநகல்கள் கூறுகின்றன.[22] பின்னர் இவர் சிறிலங்கா காவல்துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவால் விசாரிக்கப்பட்டார்.[23] ஹெந்தவிதாரனாவின் தலைமையின் கீழ் உளவுப் பிரிவுகள் இணைவதற்குக் 'கட்டளை' இட்டார்.[24] சில வேளைகளில் கோத்தபாய உள் மட்டத்தினர் மட்டும் அடங்கிய கூடுதல் உளவுப்பிரிவுக் கூட்டங்களையும் கூட்டியதாக அவருடைய இராணுவ சக அதிகாரிகள் கூறினர்:

*அடுத்த செவ்வாய்க்கிழமை வரை காத்திராமல் அவசர நிலையாக உடனே தேவையானவர்களை அழைக்கு-*

---

[18] Kamal Gunaratne's Sinhala book "Gota". Picked up and translated in How Gotabaya directed intelligence, Sunday Times, 13 Sep 2020, https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/20200913/281522228502926 In Aug 2009, a media report credited Gotabaya Rajapaksa and Kapila Hendewithrane (his intelligence chief) with the capture of a key LTTE arms dealer, KP. https://lrrp.wordpress.com/2009/08/09/state-intelligence-wins-at-hide-and-seek-with-kp/
Also ITJP W272 who said: "STF உளவுத்துறை தலைமையகம், உளவுத்துறை சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வின் மையமாக இருந்தது; ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை பாதுகாப்பு அமைச்சகத்தில் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்மற்றும் முப்படை தளபதிகள், STF, காவல்துறை தளபதிகள் ஆகியோர் அடங்கிய கூட்டம் நடைபெறும், அது முக்கியமாக இராணுவம் மற்றும் கடற்படை உளவுப் பிரிவு, விமானப்படை, காவல்துறை உளவுப் பிரிவு மற்றும் NIB (தேசிய புலனாய்வு பணியகம்), பொதுமக்கள் உளவுத்துறை ஆகியவற்றை உள்ளடக்கிய உளவுத் தகவல் பரிமாற்றமாக இருந்தது.. ஒவ்வொரு முகமையும் அந்தந்த அதிகார கட்டமைப்புகள் மற்றும் பிராந்திய செயல்பாட்டு மண்டலங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களைச் சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ளும். இராணுவ உளவுத்துறை முதன்மையான நிறுவனமாக இருந்து, உளவுத்துறையின் ஒருங்கிணைப்பில் முதன்மையான பங்கை ஆற்றியது. வழக்கமான கூட்டங்களில் முக்கியமான தகவல்கள் பகிரப்பட்ட அதே நேரத்தில் நேரடி கோரிக்கைகளும் வைக்கப்பட்டன."
இந்தச் செவ்வாய்க்கிழமைக் கூட்டங்கள் எப்போது தொடங்கப்பட்டன என்பதற்கான சரியான தேதி எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கமல் குணரட்ணவின் புத்தகத்தைப் படிக்கும்போது, 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கோத்தபாய பதவியேற்றவுடன் உளவு சேவைகளின் மறுசீரமைப்பு நிகழ்ந்ததாகத் தெரிகிறது, மேலும் 2006 ஆம் ஆண்டளவில் அவர் அனைத்தையும் ஒருங்கிணைக்க கபில ஹெந்தவிதர்னாவை ஏற்கனவே நியமித்திருந்தார் (கபிலா இங்கு குறிப்பிடப்படுவதைப் பார்க்கவும்: https://www.colombotelegraph.com/index.php/exclusive-gotas-intelligence-czar-caught-red-handed-as-chinese-mole/ மேலும் இதன்படி 2007 இல் செயல்பட்டுள்ளது: https://lrrp.wordpress.com/2007/01/05/athurugiriya-safe-house---unp-explains/) மேலும் மறுசீரமைப்பு 2006 ஆம் ஆண்டு நடந்தது என்று ஒரு முக்கிய காவல்துறை அதிகாரி ஏப்ரல் 2009 ஆம் ஆண்டு பேசும்போது, "2006 ஆம் ஆண்டில், எங்களுக்கு ஒரு பெரிய பொறுப்பு வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் நாங்கள் யாவரும் ஒரே அணியாக மாறினோம். CID, TID, இராணுவப் உளவுப் பிரிவுகள் மற்றும் காவல்துறை உளவுப் பிரிவுகள் - அனைத்தும் ஒன்றாக மாறின. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச இந்த முயற்சியை எடுத்தார்... நாங்கள் அவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்கிறோம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டங்களையும் நடத்துகிறோம். இந்தக் கூட்டத்தில் வாரம் முழுவதும் ஒரு சிறந்த சரிபார்ப்பும் சமநிலையும் செய்யப்படுகிறது.", (https://businesstoday.lk/senior-superintendent-of-police-c-n-wakishta/) எனவே 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் போர் தீவிரமடைந்த போது இந்தச் கூட்டங்கள் சிறப்பாக நடந்துகொண்டிருந்ததாக நம்புவது நியாயமானது.

[19] போருக்குப் பின் வந்த காவல்துறை தலைவர் 1989 ஆண்டு கோத்தபாய ராஜபக்சவின் அதிகாரத்தின் கீழ் மாத்தளையில் காவல்துறை கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது, இது கடந்த காலத்தில் இருந்து அவரது தோழர்கள் பாதுகாப்பு அமைப்பின் உயர்மட்டத்திற்கு எவ்வாறு உயர்ந்தனர் என்பதைக் குறிக்கிறது.

[20] Page 131-2, Kamal Guneratne book Gotabaya (translated from Sinhala).

[21] "அதன்படி, அரசு உளவுச் சேவை (SIS), CID, TID, சிறப்புப் பிரிவு, STF, மேற்கு மாகாணப் புலனாய்வு, உளவுத்துறை, இராணுவம். கடற்படை மற்றும் விமானப்படை உளவுத்துறை என அனைத்து உளவு சேவைகளின் தலைவர்களும் கோத்தபாயவால் கூட்டப்பட்ட உளவு நிறுவனத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை காலையிலும். கோத்தபாய ராஜபக்ச மற்ற அனைத்து வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தப் பாதுகாப்பு சேவைக் கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு நடவடிக்கை மேற்கொண்டார். பக்கம் 131, கமல் குணரட்ணவின் புத்தகமான கோத்தபாய (சிங்கள மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது).

[22] https://wikileaks.org/plusd/cables/09COLOMBO47_a.html

[23] https://www.dailymirror.lk/breaking_news/Maj-Gen-Hendawitharana-at-FCID/108-130951
*Exclusive: Gota's Intelligence Czar Caught Red Handed As Chinese Mole*, https://www.colombotelegraph.com/index.php/exclusive-gotas-intelligence-czar-caught-red-handed-as-chinese-mole/
*Millions Credited To Ex-Intelligence Chief Maj Gen Kapila Hendawitharana's Account*, 25 Feb 2017, https://srilankabrief.org/millions-credited-to-ex-intelligence-chief-maj-gen-kapila-hendawitharanas-account/
https://economictimes.indiatimes.com/news/defence/sri-lanka-blasts-rajapaksas-close-aide-allegedly-trying-to-hinder-probe/articleshow/69155353.cms?from=mdr
Ex-Army Intelligence Chief at FCID, 14 June 2017, https://www.dailymirror.lk/print/breaking-news/Ex-Army-Intelligence-Chief-at-FCID/108-130869

[24] Ibid.

*மாறு கோத்தபாய கபில ஹெந்த விதாரனாவுக்கு அறிவுறுத்தினார். எனவே, அனைவருடனும் விவாதிக்க வேண்டிய விடயங்கள் அனைவருடனும் விவாதிக்கப்பட்டன, அதே நேரத்தில் மிகவும் முக்கியமான உளவுத்துறை தகவல் முக்கிய நபர்களுடன் மட்டுமே விவாதிக்கப்பட்டது.*[25]

அரசு உளவு சேவை (SIS) பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கியது.[26] இந்த SIS அமைப்புதான் ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களில் செயல்பட்டதோடு இன்றும் செயல்படும் உளவு அமைப்புகளில் ஒன்றாக உள்ளது. LTTE பற்றிய தகவலைப் பரிமாறிக்கொள்ள, பாதுகாப்புத்துறை செயலாளரின் தலைமையின் கீழ் நடைபெற்ற வாராந்தரக் கூட்டங்கள் உட்பட, SIS, காவல்துறை உளவு அலகுகள், மற்றும் இராணுவ உளவுத்துறை இயக்ககத்தை உள்ளடக்கிய பல்வேறு உளவு சேவைகளுக்கு இடையில் இருந்த நெருங்கிய இணக்கத்தை 2009, ஏப்ரல் பிசினஸ் டுடே பத்திரிகைப் பேட்டியில் அப்போதைய சிறிலங்கா காவல்துறை மா அதிபர், குற்றவியல் புலனாய்வுப் பிரிவின் துணை காவல்துறை மாஅதிபர் (DIG of CID) கூறினர்.[27]

மேலும், சிறிலங்காவில் உளவு செயல்பாட்டை மறுவுருவாக்கம் செய்ததில் கோத்தபாய தனிப்பட்ட முறையில் புகழ் தேடிக்கொண்டதை அவரது அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்:[28]

*நம் நாட்டின் அனைத்து உளவுத்துறை அலகுகளையும், முப்படைகளையும், காவல்துறையையும், CID, TID, CCD மட்டுமல்லாமல் NIS ஐயும் ஒன்றிணைத்து ஒரு சிறந்த உளவுத்துறை அமைப்பை நம் நாட்டுக்கு அளித்தோம்.*[29]

தீவுக்குள் போதைப் பொருட்கள் வருவதை எப்படித் தடுப்பது என்று கேட்டபோது, உளவுத்துறை தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் குறைந்தபட்சம் போதைப் பொருட்கள் நாட்டுக்குள் வருவதை தாம்தான் தடுத்ததாகவும் கோத்தபாய ராஜபக்சே கூறினார்.[30]

## காவல்துறையின் கட்டுப்பாடு

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID), பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு (TID), துணை இராணுவப் பிரிவு சிறப்புப் பணி படை (STF), கொழும்பு குற்றவியல் பிரிவு (CCD) போன்ற முறையான சித்திரவதைகளில் ஈடுபட்டதாக ஐக்கிய நாடுகள் சபை கூறிய பிரிவுகள் உட்பட 2013 ஆம் ஆண்டு வரை காவல்துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் கூட பாதுகாப்பு அமைச்சகம் பொறுப்பாக இருந்தது.[31] பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற முறையில், கூடுதல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள், காவல்துறை மாஅதிபர் மற்றும் காவல்துறை துணை மாஅதிபர் ஆகியோரை உள்ளடக்கிய தொடர் அதிகாரங்கள் மூலம் கோத்தபாய ராஜபக்ச இந்தப் பிரிவுகளின் மீது செயல்முறை கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். 2010 ஆம் ஆண்டளவில் காவல்துறை எந்தவிதமான விதிமுறையும் இல்லாமல் ராஜபக்ச சகோதரர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக சர்வதேச பிரச்சினைக் குழு (Internation Crisis Group) கவலை தெரிவித்தது:[32]

*கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகார வரம்பிற்குள் காவல்துறை*

---

25 Page 131-2, Kamal Guneratne book, 'Gotabaya' (translated from Sinhala).

26 §127, OISL, 2015.

27 www.businesstoday.lk archive, April 2009.

28 "வெவ்வேறு உளவு சேவைகளையும் ஓர் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் கொண்டு வருவது கோத்தபாயவின் பணிகளின் மற்றொரு முக்கிய அம்சமாகும். ஆசிரியர் அதைப் பற்றி பக்கம் 356 மற்றும் 357 இல் பேசுகிறார். "2006 ஆம் ஆண்டில் போர் தொடங்கிய பின், கோத்தபாய நாட்டில் உள்ள அனைத்து வெவ்வேறு உளவுச் சேவைகளையும் ஓர் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் கொண்டு வந்தார். உளவுத்துறை சேவைகள் ஒன்றுக்கொன்று தகவல் தொடர்பில்லாமல் தனித்தனியாக வேலை செய்ய முனைந்ததைக் கடந்தகால அனுபவம் காட்டியது. இது பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் முயற்சிகளில் பலவீனமான விளைவை ஏற்படுத்தியது. பயங்கரவாதப் புலனாய்வு திணைக்களம், TID, குற்றப் புலனாய்வு திணைக்களம், CID, கொழும்பு குற்றவியல் பிரிவு, CCD, அரச உளவு சேவைகள், SIS, காவல்துறை சிறப்புப் பிரிவு, மேற்கு மாகாண உளவுப் பிரிவு, WPID, இராணுவ உளவுப் பிரிவு இயக்குநர், கடற்படை உளவுப்பிரிவு இயக்குநர், விமானப் படை உளவுப் பிரிவு ஆகிய அனைத்தும் தனித்தனியாகப் பணியாற்றினர். கோத்தபாய தேசிய உளவுப் பிரிவின் தலைமைப் பதவியை உருவாக்கி அதற்கு மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதர்னாவை நியமித்தார். இது அனைத்து உளவு அமைப்புகளின் மீதும் நேரடி அதிகாரம் கொண்ட, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியாகும். இது உளவுத்துறையின் செயல்பாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்று நினைக்கிறேன். அதாவது, உளவுத்துறையினர் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதே பயங்கரவாதத்தின் மீதான வெற்றிக்குக் காரணம் என்று பெரும்பாலான மக்கள் கூறுகின்றனர். லலித் வீரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர், 'கோத்தபாயவின் போரைத் தொடங்குவதற்கான உரை', பிசினஸ் டுடே, ஜூன் 2012, https://www.businesstoday.lk/article.php?article=7101

29 19 October 2019 election campaign rally Divulapitiya . https://www.youtube.com/watch?v=8NWmtUdee24&t=218s, 2'00" - 6'19".

30 "எங்களிடம் கடலோரக் காவல்படை உள்ளது; எங்களிடம் கடற்படை உள்ளது. அவர்கள் படகில் வருவதைத் தடுக்க அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அது அங்கே ஆரம்பிக்க வேண்டும். அடுத்து, நான்… என் காலத்தில், உளவுத்துறை சேவைகளைப் பயன்படுத்தி இதைச் செய்பவர்களைத் தேடினோம். இவர்களைப் போய்ப் பிடிக்க. இதை பெரிய அளவில் கட்டுப்படுத்தினோம். சிலர் நாட்டை விட்டு ஓடிவிட்டனர். இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் பிரபல பாடகரும் யூடியூபருமான ஐராஜ் உடனான நேர்காணல் யூடியூப்பில் வெளியிடப்பட்டது 14 நவம்பர் 2019 அன்று வெளியிடப்பட்டது, https://www.facebook.com/GotasVoice/videos/448126565843863/, 34'03" – 35'48"


31 "1 ஆகஸ்ட் 2006 முதல் பாதுகாப்பு, பொது பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு அமைச்சகத்தின் கீழ் சிறப்பு அதிரடிப்படை மறுநியமனம் பெற்றதுடன், சிறப்பு அதிரடிப்படையின் அனைத்து விடயங்களும் தற்போது காவல்துறைப் பிரிவினால் கையாளப்படுகின்றன." On File MOD webpage, Ref MOD D.
"The STF only operate under orders from Gotabaya" – witness to ITJP.

32 A Bitter Peace, ICG. January 2010.

*வருவதால், காவல்துறை உயர் பதவிகளில் நியமனங்களைச் செய்வது அரசியலமைப்பின்படி தேசிய காவல்துறை ஆணைக்குழுவுக்குப் பதிலாக ஜனாதிபதியின் அதிகாரத்துக்குள் வந்தது. காவல்துறை ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது.. இது அரசியலமைப்பை நேரடியாக மீறுவதாகும். இது நேரடியாக அரசியல் மயமாக்கப்பட்ட காவல்துறையாக உள்ளது.*

சிறிலங்காவில் நடத்தப்பட்ட UN OHCHR விசாரணை அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்ட அதிகாரக் கட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்தான் உயர்நிலைக் கட்டுப் பாட்டில் இருப்பதை இது காட்டுகிறது.[33]

குறிப்பிடத்தக்க வகையில், பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச ஒரு முக்கிய காவல்துறை புலனாய்வு பதவியான தேசிய உளவுத்துறை தலைவர் பதவியை இராணுவ மயமாக்கினார் என்று அவருக்குக் கீழ் பணிபுரிந்த கமால் குணரத்தின கூறினார்.[34]




**சிறிலங்கா காவல்துறையின் நிருவாகக் கட்டமைப்பு**

[33] OISL.

[34] "இந்த உளவு அமைப்புகளுக்கு இடையில் எந்தத் தொடர்பும் அல்லது ஒருங்கிணைப்பும் இல்லாமல், அவை தங்கள் தங்கள் சொந்த வழியில் சென்றுகொண்டு இருப்பதில் அவர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். ..இந்தப் பிரிவுகளுக்கு இடையில் எந்த விதத் தொடர்பும், ஒருங்கிணைப்பும் இல்லாத காரணத்தால், 55 வயதில் ஓய்வு பெற்ற கோத்தபாய, உடனடியாக அரசு உளவுப் பிரிவின் தலைவராக மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவித்தாரனாவை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றார். இதற்காக நிறுவன வாரியத்தின் ஒப்புதலும் பெறப்பட்டது, அந்த ஒப்புதலின்படி, தேசிய புலனாய்வுத் தலைவர் (CNI) பதவிக்கு இராணுவ அதிகாரி கட்டாயம் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.
கமல் குணரட்ணவின் புத்தகம் கோத்தபாய, பக் 130, (சிங்களத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது).

## B. போர் வெற்றியில் கோத்தபாய ராஜபக்சவின் முக்கியத்துவம்

### படைத்துறை நடவடிக்கைகளை திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும்

நடவடிக்கைகளை திட்டமிடலிலும் ஒருங்கிணைத்தலிலும் தனக்கிருந்த தனக்கு முக்கிய வகிபாகம் இருந்ததாக கோத்தபாய ராஜபக்சவே ஒத்துக்கொள்கிறார்:

*பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய போது, வெற்றி பெற்ற இலங்கையின் ஆயுதப் படைகளுக்குத் தலைமைத்துவம், ஊக்கம் மற்றும் தளவாட ஆதரவை வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.*[35]

போருக்குப் பின், உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்ட இராணுவ நடவடிக்கையைத் திட்டமிடுவதிலும் ஒருங்கிணைப்பதிலும் கோத்தபாய தனது பங்கு குறித்து, இலங்கையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) என்ற உள்நாட்டு விசாரணையில் சாட்சியம் அளித்தார். 'நாங்கள் இராணுவ நடவடிக்கையைத் திட்டமிடும் போது' என்று கூறி தன் பங்கை நிலைநாட்டிய அவர், 'இராணுவ நடவடிக்கையை நாங்கள் எவ்வாறு திட்டமிட்டோம் என்பது பற்றிய உண்மைகளை ஆணையத்தின் முன்வைப்பதில் குறிப்பிடத்தக்க விதமாக ஆர்வமாக இருந்தேன்' என்று கூறினார்.[36] அவர், போர் ஓர் அசாதாரண சூழ்நிலை என்று வாதிட்டார்:

*பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று அனைவரும் விரும்பிய நேரத்தில் நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தேன். நான் அதில் செயல்பட்டேன். தமிழ்ச் சமூகத்திற்கு எதிராக என்னிடம் எதுவும் இல்லை. துரதிஷ்டவசமாக, LTTE யில் 99 சதவீதம் தமிழர்களாக இருந்தனர். பயங்கரவாதத்தை முறியடிக்க நாங்கள் சில விடயங்களைச் செய்ய வேண்டியிருந்தது.... ஒரு போர்ச் சூழலில் இருக்கும் போது, நீங்கள் செய்ய வேண்டிய சில விடயங்கள் உள்ளன. போர் முடிந்ததும், நீங்கள் அதையே திரும்பத்திரும்பச் செய்யாதீர்கள். ஒரு போர் சூழலில் ஒரு நபர் என்ன செய்தார் என்பதை வைத்து நீங்கள் மதிப்பிட முடியாது. எனக்கு அரசாங்கத்தால் சில பொறுப்புகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதன்படி நான் செயல்பட்டேன்.*[37]

### மறுசீரமைப்பு

பாதுகாப்புப் படைகளை மறுசீரமைப்பதிலும், வாராந்திரக் கூட்டங்களில் கலந்துகொள்வதிலும், விவரங்களை விவாதிப்பதிலும் கோத்தபாய ராஜபக்ச எவ்வாறு முக்கியப் பங்காற்றினார் என்பதை, போர்க்கால 53ஆவது படைத் தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணரத்தின, ஊடகவியலாளர் ஒருவருக்கு விளக்கினார்.[38] இதனை இலங்கை உளவுத்துறை நிபுணர் பேராசிரியர் றொகான் குணரத்தின உறுதிப்படுத்தினார்:

*முந்திய பாதுகாப்புத்துறை செயலாளர்களைப் போல் அல்லாமல், அனைவருடனும் இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை கோத்தபாய ராஜபக்ச புரிந்துகொண்டார். இராணுவம், கடற்படை, விமானப்படை, உளவுத்துறை, காவல்துறை, வெளியுறவு அமைச்சகம் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் உள்ள தலைவர்களைக் கொண்டுவந்து முதல் தரமான குழுவை உருவாக்கினார்.*[39]

போருக்குப் பின்னர், ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் கோத்தபாய ராஜபக்சவிற்கும் இடையிலான உரசலின் உச்சக்கட்டத்தில், 'போரை முடிவுக்குக் கொண்டுவர தேவையான ஆதரவு அளித்ததற்காக' பொன்சேகா, கோத்தபாய ராஜபக்சவுக்கு நன்றி தெரிவித்தார், இலங்கைப் பத்திரிகை வர்ணனையாளர் ஒருவர் எழுதினார்: 'இது மிகவும் நியாயமற்றது, ஏனெனில் இறுதிக்கட்ட போரை நடத்துவதில் கோத்தபாய ராஜபக்சவின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தை அது மதிக்கத் தவறிவிட்டது.[40]

---

35 https://www.facebook.com/437355006429820/posts/1275498389282140?sfns=mo His Facebook page.
This is corroborated by Gota's war page 291, "Gota had decided to give the opportunity to Sarath Foneseka".

36 Transcript- Gotabaya Rajapaksa, LLRC.

37 How can there be freedom without discipline ? – Gotabaya, 12 Feb 2019, Daily Mirror,http://www.dailymirror.lk/article/How-can-there-be-freedom-without-discipline-Gotabaya-162220.html

38 "கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போது, நாட்டின் உளவுத் துறையை மறுசீரமைக்க மாபெரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்னர், உளவுத்துறையினரிடையே நல்ல ஒருங்கிணைப்பை ஏற்படுத்தினார். போர் நடந்து கொண்டிருந்த போது, அவர் மிகவும் ஓய்வின்றி உழைத்த போதிலும் ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் ஒவ்வொரு உளவுப் பிரிவையும் சந்தித்தார். உளவுப் பிரிவினர் அளித்த தகவலை அவர் எளிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவற்றின் மீது அதிகக் கவனம் செலுத்தினார்." https://divaina.com/sunday/index.php/visheshanga1/12431-2019-11-29-04-42-90 interview with Manoj Abeydheera in Divaina published on 1st December 2019:

39 https://lrrp.wordpress.com/2009/03/08/gotabhaya-rajapakse-is-the-key-behind-current-military-success-says-global-terror-expert/

40 'லெப்டினன்ட் கேணல் (பணி ஓய்வு) ராஜபக்ச பற்றி அவர் கூறியது அவர் (பாதுகாப்புத்துறை செயலாளர்) செய்தவற்றுடன் அறவே ஒத்துப்போகவில்லை மிகவும் தெளிவாகத் தெரிகிறது. சில உண்மைகள் நன்றாகத் தெரிந்தவை, அதேவேளையில் மற்றவை குறைவாகத் தெரிந்தவை. பதவியேற்ற முதல் ஆண்டில், ஜெனரல் பொன்சேகாவை மாற்றுவதற்கு ஜனாதிபதி ராஜபக்ச விரும்பினார். அவருக்குப் பதவி நீட்டிப்பு வழங்கக் கூடாது என கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் பாதுகாப்புச் செயலாளரே பலமுனைப் போராட்டத்தை மேற்கொண்டார். தனது சகோதரர் பசில் ராஜபக்சவின் ஆதரவுடன் ஓர் அணியை அமைப்பதில் முக்கியப் பங்காற்றிய பாதுகாப்புச் செயலாளரால் கடுமையாக வேலைசெய்து இந்தியாவை அவர்கள் பக்கம் திருப்ப முடிந்தது. தளபதியுடன் நேரடித் தொடர்பைப் பெறவும், ஆயுதப் படைகளின் சார்பில் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைக்கவும் அவரால்தான் முடிந்தது. வெளி

### ஆயுத வலிமையைப் புதுப்பித்தல்

நாட்டிற்கு மிகுந்த செலவை ஏற்படுத்திய போதிலும், வெற்றிபெற இராணுவத்தின் ஆயுத பலத்தை மீண்டும் வலிமையாக்குவதில் கோத்தபாய முக்கிய பங்காற்றினார். LTTE யின் ஆயுதங்கள் அடைய முடியாத எல்லைக்கு வெளியில் இருந்து தாக்குவதற்குரிய ஏவுகணைகளை இராணுவத் தளபதி கோரியபோது, கோத்தபாய அவற்றை வழங்கியதாகக் கூறப்படுகிறது.[41] உடல் கவசங்கள் வாங்க கூடுதல் நிதி கோரப்பட்டபோது கோத்தபாய அதையும் கையாண்டார்,[42] கோத்தபாய ராஜபக்ச, 'எதிரிகளின் இலக்குகளைத் தரைமட்டமாக்க' லேசரால் வழி காட்டப்படும் ஆயுதங்களை இராணுவத்திற்காக வாங்கினார் என்று கமால் குணரத்தின எழுதுகிறார், ஏனெனில் அவர் *'லேசர் வழிகாட்டி குண்டுகளின் விலைகளைப் பற்றி விவாதித்து நேரத்தை வீணடிக்கவில்லை, சரியான நேரத்தில் அவற்றைப் பெற்றார்'. 'குறுகிய காலத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவரக் கூடுதல் தொகையைச் செலவழித்து எதிர்காலத்திற்காகப் பெரும் தொகையைச் சேமித்து விடுங்கள்'* என்பது கோத்தபாயவின் பொன்மொழி என்று குணரட்ண கூறுகிறார். இந்த வகையில், நிதியமைச்சர் மகிந்தவின் சகோதரர் என்பதாலும் 2004-8 மற்றும் 2009-15 காலகட்டங்களில் இருந்த நிதி அமைச்சகம் மற்றும் கருவூலச் செயலாளரான பிபி ஜெயசுந்தேரா ராஜபக்சவுக்கு விசுவாசமானவராக இருந்ததாலும் (இவரை ராஜபக்ச ஜனாதிபதி ஆனவுடன் தன் செயலராக நியமித்துக் கொண்டார்) கருவூலத்தை மேலாதிக்கம் செலுத்தும் அணுகல் கோத்தபாயவுக்குக் கிடைத்தது.[43]

### அரசியல் அதிகாரத்துக்கும் இராணுவத்திற்கும் இடையில் இடைமுகமாகச் செயல்பட்டார்

ஒரு முன்னாள் இராணுவ வீரரான கோத்தபாய இராணுவம் மற்றும் காவல் துறைத் தலைவராய் இருந்தார். கோத்தபாய ராஜபக்ச தனது சகோதரரான சிறிலங்கா ஜனாதிபதியுடனான உறவின் அடிப்படையில் அரசியல் மற்றும் இராணுவத் தலைமைகளுக்கு இடையில் ஒருங்கிணைக்கும் தனித்துவமான நிலையைக் கொண்டிருந்தார்.[44] இந்த வகையில் அவரது முக்கிய பங்கை அவரது அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாற்றாசிரியர் சி. ஏ சந்திரபிரேமா,[45] எடுத்துக் காட்டினார், அவர் அவரை ரஞ்சன் விஜேரத்னேவுடன் ஒப்பிட்டார் - அவர் பல்லாயிரக்கணக்கான தன் எதிரிகளைக் கொன்றதற்குக் காரணமாக இருந்தவர்:

---

அழுத்தங்களுக்கு ஜனாதிபதி அடிபணிந்துவிடாமல் பார்த்துக்கொண்டார்.. பாதுகாப்புச் செயலர் போரை முடிவுக்குக் கொண்டுவர "தேவையான ஆதரவை" வழங்கியதாகக் கூறுவது முற்றிலும் நியாயமற்றது. அவர் இன்னும் அதிகமாகச் செய்தார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. போர் முயற்சிகளுக்குத் தேவையான அனைத்தும் - ஆட்கள் மற்றும் பொருள் - பாதுகாப்புச் செயலாளரால் வழங்கப்பட்டது. ஜனாதிபதியின் சகோதரர் என்ற முறையில் அவரது செல்வாக்கு சிறிலங்காவிலும் வெளிநாட்டிலும் அவருக்குக் கதவுகளைத் திறந்து கொடுத்தது. போருக்குத் தேவையான பொருட்கள் இடையூறு இல்லாமல் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக அவர் வெளிநாடுகளில் பல ரகசிய பணிகளை மேற்கொண்டார். இது மட்டும் இல்லாமல் இருந்தால் வெற்றி ஒரு புறம் இருக்க, பிரிவினைவாதக் கலகத்தை எதிர்த்துப் போரிடுவது என்பது சாத்தியமில்லாத ஒன்று. கொரில்லாக்களை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதில் ஆற்றிய பங்கிற்காக ஆயுதப்படை தளபதிகளுக்கு வெகுமதி அளிக்கப்படுவதில் அவர் முக்கியப் பங்கு வகித்தார். ஹீரோவில் இருந்து ஜீரோ வரை: பொன்சேகாவின் வீழ்ச்சி, 18 அக்டோபர் 2009, சண்டே டைம்ஸ் லங்கா, http://www.sundaytimes.lk/091018/Columns/political.html

41 "சந்தை விலைப்படி ஏவுகணைகள் மிகவும் விலை உயர்ந்தவை என்றாலும், போர்முனையின் தேவைக்கு முன்னுரிமை அளித்த கோத்தபாய, பாகிஸ்தானின் பக்தர் ஷிகான் ஏவுகணைகளையும், சீனாவின் கிரீன் அரோ ஏவுகணைகளையும் இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல் இராணுவத்திற்கு வழங்கினார். பக் 83 கோத்தபாய என்ற நூலில் கமல் குணரட்ண (மொழிபெயர்க்கப்பட்டது).

42 ibid, p110

43 2008 ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கான ஒரு பெரிய ஒப்பந்தத்தை வழங்கியதில் நடைமுறைகளை மீறியதற்காக அவர் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார். அவர் எந்த ஒரு பொது பதவியையும் வகிக்கக் கூடாது என்று நீதிமன்றம் தடை விதித்தது. 2009 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அழைப்பின் பேரில் பி.பி. ஜயசுந்தரா மீண்டும் கருவூலச் செயலாளராகப் பதவியேற்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை சமர்ப்பித்தார். அது புதிதாக நியமிக்கப்பட்ட தலைமை நீதிபதியால் விசாரிக்கப்பட்டது. அவர் முந்திய முடிவை செல்லாததாக்கி, ஜயசுந்தராவை கருவூல செயலாளராக மறு அமர்த்தம் செய்ய அனுமதி அளித்தார். 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்படுவதற்கு முந்தைய நாள், ஜயசுந்தரா நாட்டை விட்டு வெளியேறி சிங்கப்பூர் சென்றார். 2008-9 காலப்பகுதியில் பி.பி. ஜயசுந்தராவுக்குப் பதிலாகப் பணியமர்த்தம் பெற்றவர் சுமித் அபிசிங்கே. இதில் இருக்கும் முரண் என்னவென்றால், தற்போது, பொதுத் தொழில்நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களுக்கான தகுதிகள் கொண்ட நபர்களை நியமிக்க புதிதாக அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக இவர் இருக்கிறார். https://www.newsfirst.lk/2019/11/28/committee-appointed-to-recommend-names-for-state-bodies/
https://en.wikipedia.org/wiki/P._B._Jayasundera#cite_note-5 and https://books.google.co.uk/books?id=TJ1mpwPqZmcC&pg=PA562&lpg=PA562&dq=P.B.+Jayasundera+Supreme+Court+of+Sri+Lanka&source=bl&ots=zH6m9HeK4-&sig=FhMQqvfku13RpfyMnuOxByqV1kU&hl=en&sa=X&ei=O2G3VOC-E4mLuAT5z4LABg&redir_esc=y#v=onepage&q=P.B.%20Jayasundera%20Supreme%20Court%20of%20Sri%20Lanka&f=false
'ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள். விடுதல் அல்லது தவறுதலால் ஏற்படும் முறைகேடுகள் ஆகியவற்றைப் பற்றிய அறிக்கைகள் தற்போது காளான் போல வெடித்து வருகின்றன' https://www.nation.lk/2006/12/31/busi6.htm

44 "பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்புப் படையினரின் ஒருங்கிணைந்த நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை உறுதி செய்வதற்காக அதிக நேரம் உழைத்ததன் மூலம் ஜனாதிபதியின் நிலை பலப்படுத்தப்பட்டது. இராணுவத் தலைமைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் வலுவான தொடர்பைப் பேணுவது கஜபா படைப்பிரிவின் வீரருக்குக் கடினமான பணியாக இருந்தது."

45 https://itjpsl.com/assets/press/Chandraprema-PRESS-RELEASE-english.pdf

*JVPயின் இரண்டாவது கிளர்ச்சியை எடுத்துக் கொண்டால் ரஞ்சன் விஜேரத்னே இல்லாமல் எதுவும் நடந்திருக்காது. இங்கேயும் அதே. கோத்தபாய ராஜபக்ச இல்லாமல் எதுவும் நடந்திருக்காது. ஏனென்றால், உங்களுக்குத் தெரிந்ததுபோல் அரசியல் அதிகாரம் ஒரு முடிவை எடுக்க முடியும், ஆனால் அது நடைமுறையில் ஒரு நடவடிக்கையாக செயலாக்கப்பட வேண்டும், மேலும் அந்த முழு செயல்முறையும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். உதாரணமாக, இராணுவத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையில் இடைமுகமாக செயற்பட்டவர் ரஞ்சன் விஜேரத்னே. இங்கும் கோத்தபாய ராஜபக்சவே 'இராணுவத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையில் இடைமுகமாகச் செயற்பட்டவர். நிச்சயமாக, அவர் ஜனாதிபதியின் சகோதரன் என்ற சாதக நிலையைப் பெற்றிருந்தார், அது அவரை அரசியல் அதிகாரத்திற்கு நெருக்கமாக வைத்தது, நிச்சயமாக அது முழு விடயத்திற்கும் உதவி அவற்றை எளிதாக்கியது.*[46]

கோத்தபாய ராஜபக்சவின் நியமனம் போர் வெற்றிக்கு முக்கியம் என்று டாக்டர் றொகான் குணரத்தின கருதினார். அவரை 'மிக உறுதியான மற்றும் உறுதியான தொழில்முறை போராளி' என்று வர்ணித்தார். இந்த முன்னாள் இராணுவ அனுபவம், இராணுவத்தையும் காவல்துறையையும் உளவுப் பிரிவுகளையும் ஒருங்கிணைக்க கோத்தபாயவுக்கு உதவியதாக அவர் மேலும் கூறினார்.[47] எண்பதுகளில் இலங்கையின் வடக்குப் பகுதியை கோத்தபாய ராஜபக்ச நன்கு அறிந்திருந்தார். கோத்தபாய ராஜபக்சவின் கீழ் பணியாற்றிய 2009 காலகட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் தனது அர்ப்பணிப்பு மற்றும் அறிவை முக்கியமாகக் காண்பித்தார்.[48]

பல ஆண்டுகளாக இது வெல்ல முடியாத போர் என்று நம்பியிருந்த பாதுகாப்புப் படைகளின் மன உறுதியை உயர்த்தியதே அவரது வெற்றியின் ஒரு பகுதியாகும். 2007 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சகம், ஆயுதப் படைகளுக்குப் புத்துயிர் அளித்ததில் கோத்தபாயவின் பங்கை கௌரவித்தது:

*கோத்தபாய ராஜபக்ச, கடந்த சில மாதங்களாக, இலங்கை இராணுவ அலுவலகத்தில் இருப்பது இராணுவ வீரர்களுக்கு மனஉறுதியை ஏற்படுத்தியதால், அவர் விடுதலைப் புலிகளால் மிகவும் அஞ்சப்படும் எதிரியாக மாறிவிட்டார். பாதுகாப்புத்துறை செயலாளர் துணிச்சலான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் பாதுகாப்புப் படைகளுக்குப் புத்துயிர் அளித்தார். நாட்டின் உண்மையான வீரர்களாகப் படைவீரர்கள் தங்கள் பெருமையைத் திரும்பப்பெற்றதே சமீபத்திய இராணுவ வெற்றிக்குக் காரணம் என பல இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.*[49]

**சிறந்த உளவுத்திறன், கண்காணிப்பு மற்றும் மோதலைப் பற்றிய பிம்பத்தைப் பெற நவீனப்படுத்துதல்**

கண்காணிப்பை மேம்படுத்தி, நிகழ்நேர ஆளில்லா வேவு விமானக் காட்சிகளை ஒழுங்கமைத்து, போரில் தரைப்படைத் தளபதிகளுக்கு அதைக் கிடைக்கச் செய்த பெருமையையும் பெற்றவர் கோத்தபாய ராஜபக்ச. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) இணைப்பு 2, 2009 ஜனவரி 1 முதல் 27 மே 27 வரையிலான காலகட்டத்தில் எடுக்கப்பட்ட கண்காணிப்புக் காட்சிகளின் எண்ணிக்கையைப் பட்டியலிட்டுள்ள சிறிலங்கா விமானப் படையின் கடிதம் உள்ளது - இது 147 நாட்களில் 2334 மணிநேரம் அல்லது ஏறக்குறைய சராசரியாக ஒரு நாளுக்கு 16 மணிநேரம் ஆகும்.

| Type of Aircraft | Operational Hours |
|---|---|
| Searcher MK II UAV | 681.55 Hrs |
| Blue Horizon II UAV | 525.00 Hrs |
| B 200 Beechcraft | 1128.53 Hrs |

கிடைக்கும் 'நிகழ் நேர' உளவுத்தகவல் பற்றி கருத்துரைத்த போர்காலத்து விமானப் படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் குணதிலகே கூறினார்:

*..நான்காம் ஈழப் போரின் போது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் அறிவுறுத்தலின் பேரில், களத் தளபதிகளுக்கு 'நிகழ்நேர' உளவுத் தகவலை வழங்குவதற்கான பொறிமுறையை நாங்கள் அமைத்தோம். எங்கள் தரைப்படைத் தளபதிகள் தேவைக்கேற்ப வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்களுக்கு அழைப்பு விடுக்கும் 'நிகழ் நேர' உளவுத் தகவலை சாதகமாகக் கொண்டிருந்தனர்.*[50]

தன்னைப் போன்ற கோட்டப்பிரிவுத் தளபதிகளுக்கும் இந்தத் தகவல்கள் கிடைப்பதை கோத்தபாய உறுதிப்படுத்தியதாகவும் உயர் இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்தார்:

---

[46] https://www.colombotelegraph.com/index.php/the-author-on-gotas-war/

[47] "...இன்னொரு கூறு கோத்தபாய ராஜபக்ச (பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்) அவர் ஒரு மூத்த இராணுவ அதிகாரி ஆவார், அவர் முந்தைய போர்களில் பங்கேற்று நடத்தினார். அவர்கள் ஒரு தனித்துவமான கூட்டை உருவாக்குகிறார்கள், அதைக் கலைப்பது கடினம்." https://lrrp.wordpress.com/2009/08/

[48] *"...LTTE* யை எவ்வாறு நசுக்குவது என்பதில் அர்ப்பணிப்பும் அறிவும் சமமாகக் கொண்ட தற்போதைய செயலாளர் கோத்தபாய ராஜபக்சவைப் போன்ற ஒரு பாதுகாப்புச் செயலாளர் இதுவரை எவரும் இருக்கவில்லை". http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/

[49] MOD site, 7 Jan 2007, War veteran survives the suicide attack: The Army Commandos foil LTTE's cowardly attempt on the Secretary Defence.

[50] The Island, 18 Sep 2012, RG on SLAF's pivotal role in Eelam War IV with strap line SLAF Chief steps down after illustrious career-The Island Feb 25, 2011, http://slwaronterror.blogspot.com/2012/09/a-delayed-build-up-of-lethal-offensive.html

*போரை நடத்தும் இராணுவத் தளபதியும் கோட்டத் தளபதிகளும் ஆளில்லா உளவு விமானக் காட்சிகளை நேரடியாக பார்வையிடுவதற்கு உதவும் வசதிகளைக் கோத்தபாய வழங்கினார். விமானப்படை போர் கட்டளை மையத்தில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டவைகளை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் ரோஷன் குணதிலகேவினால் கோத்தபாயவிடம் காண்பிக்கப் பட்டது. தேவையான உயர் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்க கோத்தபாய ஏற்பாடு செய்தார்.*[51]

கமால் குணரத்தினவின் கூற்றுப்படி, இறுதிப் போரின் போது விமானப்படைக்குக் கண்காணிப்பு விமானங்கள் தேவைப்பட்டன. அவர்கள் அதைப் பெற்றுக்கொள்வதை கோத்தபாய உறுதி செய்தார்.[52] டிவிசன் தளபதிகளும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் இந்தக் காட்சிகளைக் கண்டார்கள்:

*லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு இராணுவத் தலைமையகத்தில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்து முன்னணியில் என்ன நடக்கிறது என்பதைக் கண்காணிக்கவும், டிவிசன் தளபதிகளுடன் விடயங்களைப் பற்றி விவாதிக்கவும் வாய்ப்பு கிடைத்தது. அதன்பின், போருக்குத் தலைமை தாங்கும் கோட்டத் தளபதிகளுக்கு, போர் நடக்கும் பகுதியில் நடக்கும் அனைத்தையும் கண்காணித்து, பிரச்சினை ஏற்படும் போது அல்லது பிரச்சினை வரவிருக்கும் போது, உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க உதவியாக, இந்த வசதி வழங்கப்பட்டது. கூடுதலாக, இதன் தனித்துவமான சாதகம் என்ன வென்றால் பொதுமக்கள் இருக்கும் பகுதிகளைத் துல்லியமாகக் கண்காணிக்கும் திறன் இதற்கு இருந்தது.*[53]

தாங்கள் குண்டு வீசி தாக்கும் பகுதிகளில் பொதுமக்கள் இருந்ததை தளபதிகள் அறிந்திருந்தனர் என்பதை கோத்தபாயவுக்குக் கிடைத்த உண்மையான நேரலைக் காட்சிகள் உறுதிப்படுத்தின.

## C. நிழல் (சட்டபூர்வமற்ற) அதிகாரக் கட்டமைப்பு

அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் கோத்தபாய ராஜபக்ச திறம்பட பயன்படுத்தினார். இராணுவ நடவடிக்கைகளையும் காவல்துறை விசாரணைகளையும் ஒதுக்கீடு செய்வதிலும் மேற்பார்வையிடுவதிலும் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டார். பணியமர்த்துவதையும் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதையும் மேற்பார்வை செய்தார். தனக்கு விசுவாசமில்லாமல் நடந்துகொள்கிறார்கள் என்று சந்தேகிக்கப்படும் அதிகாரிகளைத் தண்டித்தார். நம்பிக்கையானவர்களுடன் அதிகாரத்தின் நேரடித் தொடர்புகளைப் பராமரித்தார். பெரும்பாலும் இடைத் தரகர்களைத் தவிர்த்து தனது உள் வட்டத்துடன் நெருக்கமாகப் பணியாற்றினார்.

### மற்ற செயலாளர்களைவிட அதிக சக்திவாய்ந்தவர்

கோத்தபாய ராஜபக்ச முன்னிருந்த அல்லது அவருக்குப் பின்னிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களை விட அதிக அதிகாரத்தைப் பெற்றிருந்தார். கமால் குணரத்தின அவரது வாழ்க்கை வரலாறான 'கோத்தபாய' வில் 2002 ஆம் ஆண்டில் இருந்து நோர்வேயின் நடுவர் சமாதானப் பேச்சுகளின் போது பாதுகாப்புப் படைகளின் தரம் இறக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் (பாதுகாப்புத் துறை செயலாளர் ஆஸ்டின் பெர்னாண்டோ சிவில் ஊழியராக இருந்தபோது):

*இதுவரை பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் எவரும் இராணுவ உறுப்பினர்களுக்காகப் பேசவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். ஆயினும், அவர்கள் அந்தப் பதவியில் இருந்தாலும், பதவியின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை அல்லது எந்த அங்கீகாரத்தையும் அவர்கள் பெற்றிருக்க வில்லை என்பதால் அவர்களைக் குறைகூற முடியாது. இராணுவத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் மகிழ்ச்சியடைந்தனர், ஏனென்றால் முன்னிருந்த பாதுகாப்புச் செயலாளர்களுக்கு இல்லாத அதிகாரத்தை அவர் பயன்படுத்தினார், மேலும் அவர் பதவிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி படைகளை வழி நடத்துவதற்கான சூழலை உருவாக்குவார்.*[54]

### தான் வகித்த முக்கியப் பங்குக்காகப் பொதுவெளியில் அங்கீகரிக்கப்பட்டார்

2009 ஆம் ஆண்டு மே மாதம் போரில் அடைந்த வெற்றியைத் தன்னுடைய சகோதரனாகிய ஜனாதிபதியிடம் முப்படைத் தளபதிகளுக்கு முன் தலைமை தாங்கி வந்து முறைப்படி அறிவித்ததன் மூலம் போர் வெற்றியை அடைந்ததில் கோத்தபாய ராஜபக்சவின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது.[55] இது

[51] P110, Kamal Gunaratne book on Gotabaya (translated from Sinahala)

[52] "இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்திய கோத்தபாய, தொடர்ச்சியாக ஐந்து மணி நேரத்துக்கு மேல் வானத்தில் தொடர்ந்து பறக்கக்கூடிய பீச்கிராப்ட் விமானங்களை வழங்கி உதவியதன் மூலம் விமானப்படையின் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தார். விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு பீச்கிரா்ப்ட் விமானங்கள் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் சேவைக்கு கொண்டு வரப்பட்டன. புதிதாக இன்னொன்று வாங்கப்பட்டது. எனவே, போர்க்களத்தில் நிலைமை திருப்திகரமாக இல்லாதபோது அல்லது சண்டை மூளுவதற்கு முன், 25,000 அடி தூரத்தில் இருந்து படம்பிடிக்கக்கூடிய உயர்சக்தி கேமரா பொருத்தப்பட்ட இந்த விமானங்களை பறக்கவிட்டு இராணுவத்திற்கு நிகழ்நேர உளவுச்செய்தியை விமானப்படையால் வழங்க முடிந்தது. இந்த விமானங்களின் ஐந்து மணி நேரம் தொடர்ந்து பறக்கும் திறன் பெரிதும் உதவியாக இருந்தது." P110, கோத்தபாய பற்றிய கமல் குணரட்ணயின் புத்தகம் (சிங்கள மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது)

[53] P110, Kamal Gunaratne book on Gotabaya (translated from Sinahala)

[54] Pg 69. Kamal Gunaratne, Gotabaya, (translated from Sinhala).

[55] "மாலை 6.35 மணியளவில் முப்படைகளின் தளபதிகளுக்குத் தலைமைத் தாங்கிய பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய

அவரை நாட்டின் மிக முக்கிய இராணுவப் பிரபலமாக பொதுவெளியில் அங்கீகரிக்கிறது. இதற்கு முன் பாதுகாப்புத்துறை செயலாளர்களாகப் பதவி வகித்த பொது ஊழியர்களில் இருந்து இவர் முற்றிலும் வேறுபட்டவர் என்பதைக் காட்டுகிறது.



பயங்கரவாதத்தை அழித்தொழிக்கும் பணி வெற்றிகரமாக முடித்துவைக்கப்பட்டதாக பாதுகாப்புப் படைத் தளபதி மகிந்த ராஜபக்சவுக்கு தகவல்செல்லும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்புப் படைகளின் பிரதானி எயார் சீவ் மார்சல் டெனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, விமானப் படைத் தளபதி எயார் சீவ் மார்சல் றொசான் குணதிலக, காவல்துறை மாஅதிபர் ஜயந்த விக்கிரமரட்னெ, குடியியல் பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் றியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோர். படங்கள் சுதத் சில்வா மற்றும் AFP.[56]

2018 ஆம் ஆண்டு ஓர் சிறிலங்காப் பத்திரிகையில் வந்த கட்டுரை ஒன்று இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத் தளபதியின் கட்டளையின் பொறுப்பையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கட்டளைப் பொறுப்பையும் ஒப்பிட்டு ஆராய்ந்து, அவர்கள் இருவரையும் நேர்காணல் செய்தது (தடித்த எழுத்து சேர்க்கப்பட்டது):

*ராஜபக்சவால் குறிப்பிடப்பட்ட* ***வாராந்த உளவுத்துறைக் கூட்டம் என்பது முப்படைகளின் இயல்பான கட்டமைப்புகளுக்கு மாறாக நம்பிக்கைக்கு உரியவர்களை மட்டுமே கொண்ட தனித்தனியான தொடர் கட்டளைகள் மூலம்,*** *பாதுகாப்பு அமைச்சகத்தில் இருந்து கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள அனைத்து உளவுத்துறை நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட பயன்படுத்தப்பட்டது என்று பொன்சேகா குறிப்பாகக் குற்றம் சாட்டினார். முன்னாள் இராணுவத் தளபதியின் கூற்றுப்படி, இந்தக் குழுவின் மூலமாகவும், முன்னாள் LTTE உறுப்பினர்களுடன் சேர்ந்தும் இரு ராஜபக்சக்களும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இலக்குகள் என்ற போர்வையில், ஊடகவியலாளர்கள் மேலும் பிறர் மேலும் பெருமளவில் பொதுமக்கள் கவனத்தைக் கவரும் அளவிலான தாக்குதல்கள், கடத்தல்கள் மற்றும் கொலைகளைத் திட்டமிடுவதற்கு ஒரு பிரிவை உருவாக்கினார்கள். 'இராணுவ உளவுப் பிரிவு நேரடியாக இராணுவத் தளபதியின் கீழ் இருந்த போதிலும், பாதுகாப்புத்துறை செயலாளர் கொழும்பு புலனாய்வு நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமற்ற முறையில் பாதுகாப்பு அமைச்சிலிருந்து கையாண்டார். வெள்ளை வேன் கலாச்சாரம் உட்பட பல்வேறு நேர்மையற்ற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்' என பொன்சேகா கூறினார். ராஜபக்ச, ஹெந்தவிதர்னா உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பாக கொழும்பில் இருந்த உளவுப் பிரிவுகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கக் கூடிய 'விதிகளுக்குப் புறம்பான பகுதி' இருந்தது என்ற கூற்றைத் தற்போதைய மற்றும் முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள் பலர் உறுதிப்படுத்துகின்றனர்.*[57]

இராணுவ உளவுப் பிரிவு நேரடியாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கீழ் வந்தது. ஆனால், 'கொழும்பு உளவு நடவடிக்கைகளுக்கு கோத்தபாய ராஜபக்ச அதிகாரபூர்வமற்ற முறையில் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தில் இருந்து கட்டளையிட்டார்' என்றும், கடத்தல் சம்பவங்களில் கோத்தபாய ஈடுபட்டார் என்றும் பொன்சேகா குற்றஞ்சாட்டினார்.[58]

### நியமனங்கள் மீதான அதிகாரம்

எண்பதுகளில் இருந்து யாழ்ப்பாணத்தில் தன்னோடு இராணுவத்தில் பணிபுரிந்த தன் தோழரான சரத் பொன்சேகாவை 2005 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின் ஜனாதிபதியும் தன் சகோதரருமான மகிந்தாவிடம் இராணுவத் தளபதியாக நியமிக்கக் கூறினார் என்பதை கோத்தபாய ராஜபக்சவே கூறி இருப்பதால் நியமனங்களில் அவருக்கு இருந்த செல்வாக்கு

ராஜபக்ச தமிழீழ LTTE களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதி இராணுவ நடவடிக்கை LTTE களின் தோல்வியுடன் அதன் முடிவை எட்டியது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குத் தெரிவித்தார்."

Mission accomplished, Daily News, 19 May 2009, On file.

56 Ibid.

57 http://www.dailymirror.lk/expose/Gota-and-Fonseka-trade-charges-on-who-attacked-Lasantha-and-Keith/333-149720

58 *http://www.dailymirror.lk/expose/Gota-and-Fonseka-trade-charges-on-who-attacked-Lasantha-and-Keith/333-149720*

தெரிகிறது.[59] ஜகத் டயஸ்[60] (57 டிவிசன்) மற்றும் சவேந்திர சில்வா[61] போன்ற கடந்த காலத்தில் தம்முடன் இணைந்து போரில் ஈடுபட்ட தமக்கு மிகவும் நம்பிக்கையாக இருந்த அதிகாரிகளைப் பதவி உயர்வு செய்வதிலும் அவர் கவனமாக இருந்தார் (58 டிவிசன்). JVP கலகத்தின் போது மாத்தளையில் கொலைகளும் வெகுஜனங்களை பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல்களும் நடந்த[62] இரக்கமற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டபோது இந்த அதிகாரிகளில் பலர் கோத்தபாயவுடன் இருந்தவர்கள் மேலும் வன்னியில் இராணுவத் தாக்குதலில் முக்கியப் பங்குகளை ஆற்றுவதற்காக அவர்கள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது தற்செயலான ஒன்றல்ல. கோத்தபாயவின் உத்தரவுகள் சட்டவிரோதமாக இருந்தாலும் கூட இந்த அதிகாரிகள் கேள்வி கேட்காமல் நிறைவேற்றுவார்கள் என்று ஓர் இராணுவ அதிகாரி ITJP யிடம் கூறினார்:

*கோத்தபாயவும் டயஸூம் சில்வாவும் அவர்கள் இராணுவத்தில் வேலைபார்த்த நாட்களில் நெருக்கமாக இருந்தவர்கள். அதிகாரிகளின் எதிர்காலத்தை கோத்தபாயவால் தீர்மானிக்க முடியும். போர்க் குற்றமாகும் அளவுக்கு இருந்தாலும் கோத்தபாய கட்டளை இட்டால் டயஸூம் சில்வாவும் வாதாட மாட்டார்கள்.*[63]

**ஆட்சேர்ப்பில் ஈடுபட்டமை**

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தை நடத்த கோத்தபாய ராஜபக்சவே 300,000 பேரை இராணுவத்துக்குத் திரளாகப் பணியமர்த்தம் செய்தார்.[64] மூன்றே ஆண்டுகளில் இது இராணுவத்தின் அளவை மும்மடங்கு ஆக்கியது.[65] ஏப்ரல் 2010 இல் வெளியிடப்பட்ட நேர்முகத்தில் பாதுகாப்புத் துறை செயலாளர் கூறிய புள்ளி விவரம் பின்வருமாறு: 2005 ஆம் ஆண்டில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றில் மொத்தம் 125,000 பேர் இருந்தனர். 2009 இல் இது திகைக்கவைக்கும் அளவுக்கு 450,000 பேர் ஆக மாறியது. இதில் இராணுவத்தின் வலிமை 300,000 ஆகும்.[66] அவரது மேற்பார்வையில் இராணுவ சம்பளமும் அதிகரித்தது.[67] படைவீரர் எண்ணிக்கையை உயர்த்தியது கோத்தபாயவின் ஆலோசனைதான் என்பதில் ஊடகம் தெளிவாக இருந்தது.[68]

கமால் குணரத்தின தனது 'கோத்தபாய' என்ற புத்தகத்தில் எழுதுகிறார்: மேலும் போர் அனுபவம் வாய்ந்த கடற்படை அதிகாரிகளை நெருக்கத்தில் இருந்து விடுவித்து போரை நடத்த பத்தாயிரம் புதிய ஆட்களைக் கடற்படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் திட்டமாகும், மேலும் கோத்தபாய கடற்படைத் தளபதிக்கு இதற்கு இணங்க கட்டளையிட்டு, படைகளை. உரிய இடங்களில் நிறுத்தும் விவரங்களைப் பற்றிய விவாதங்களில் கலந்துகொண்டார்.[69] இராணுவத்தைப் பெரிதாக்குவதில்

---

59 CEYLON WEEK interview.
“ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சரத் என்னிடம் அது பற்றிய தகவல்களைக் கேட்டுக்கொண்டிருந்தார். நாங்கள் [தேர்தலில்] வெற்றி பெற்று நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஆன பின் சரத் ஓய்வு பெற இரண்டு வாரங்களே இருந்தன. ‘கோதா, சாந்தாவை இடமாற்றம் செய்து சீக்கிரம் வேலை கொடுங்கள்’ என்று சரத் என்னைத் தொடர்ந்து தொந்தரவு செய்தார். நான் மூத்த சகோதரர் மகிந்தவைச் சந்தித்து, ‘இனி நாம் போருக்குச் செல்ல வேண்டும். அதற்கு சரத் பொன்சேகா சிறந்த நபர். அவரைத் தளபதியாக்குவோம். அப்போது மூத்த சகோதரர் மகிந்த கூறுகையில், ஷாந்த கொத்தேகோடவுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டு பணிக்காலம் மீந்திருக்கிறது. காரணமே இல்லாமல் அவரை எப்படி நீக்கப் போகிறோம்?’. ஜனாதிபதி என்ற ரீதியில் அண்ணன் மகிந்த கடும் சவாலை எதிர்கொண்டிருந்தார். இதைச் செய்ய வேண்டும் என்று நான் தொடர்ந்து அழுத்தம் கொடுத்தேன். ”

60 https://itjpsl.com/reports/jagath-dias-dossier

61 https://itjpsl.com/reports/shavendra-silva

62 ITJP அறிக்கை 1989 பெரும் அட்டூழியங்களில் கோத்தபாய ராஜபக்சயின் பங்கு. 10 மே 2022,https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities மேலும் வலுக்கட்டாயமாக அல்லது பலவந்தமாகக் காணாமல் போக்கடித்தல் பற்றிய பணிக்குக் குழுவின் ஐ.நா. ஆணை; தன்னிச்சையாகத் தடுத்துவைத்தல் குறித்த பணிக்குழு; நீதிக்குப் புறம்பான, விசாரணயற்ற அல்லது தன்னிச்சையான மரணதண்டனை பற்றிய சிறப்பு அறிக்கை அளிப்பவர் மற்றும் உணமை, நீதி, இழப்பீடு மற்றும் திரும்ப நடைபெறாது என்பதற்கான உத்தரவாதம் ஆகியவற்றை ஊக்குவிப்பது குறித்து அறிக்கை அளிப்பவர் Ref.: AL LKA 3/2022 https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadPublicCommunicationFile?gId=27621

63 Testimony on file.

64 “படை வீரர்களின் எண்ணிக்கையை 300,000 பேராக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி (மகிந்த) எனக்கு அதிகாரங்களை வழங்கினார். போரில் வெற்றி பெறுவதற்குப் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதிக்கு எடுத்துக் காட்டினோம். எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று ஜனாதிபதி உடனடியாகக் கூறினார். ” https://www.medaperadiga.com/%E0%B6%BA%E0%B7%94%E0%B6%AF%E0%B7%8A%E0%B6%B0%E0%B6%BA-%E0%B6%AF%E0%B7%92%E0%B6%B1%E0%B7%94-%E0%B7%84%E0%B7%90%E0%B6%A7%E0%B7%92-%E0%B6%9A%E0%B7%92%E0%B6%BA%E0%B6%B1-%E0%B6%9C%E0%B7%9D%E0%B6%A8/

65 §170 Paranagama Report.

66 V.K. Shashikumar, “Winning wars: political will is the key”, *Indian De- fence Review* 25, no. 2 (April-June 2010). ICG

67 “இராணுவத்தில் ஊதியங்கள் அதிகரிக்கப்படுவதையும், பல்வேறு பதவிநிலைகளில் இருக்கும் வீரர்களுக்கு இவை இரட்டிப்பாக்கப்படுவதையும், அத்துடன் புதிய உபகரணங்கள் வழங்கப்படுவதையும் பாதுகாப்பு அமைச்சகம் உறுதி செய்தது.” §171, Paranagama Report

68 The Island, 28 Aug 2012, “இராணுவத்தை விரிவாக்குவது ஓர் அரசியல் முடிவு என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார். 100,000 அதிகாரிகள் மற்றும் ஆட்கள் மூலம் இராணுவத்தை விரிவாக்குவதற்கு ஜனாதிபதி அனுமதியளித்தார், அதுவே எமது வெற்றிக்கான திறவுகோல் என கஜபா ரெஜிமென்ட் படைவீரர் தெரிவித்தார். ”

69 “கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கரன்னாகொட, கடற்படையில் 10,000க்கான வெற்றிடங்கள் இல்லை என்றும், அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பிவிட்டதாகவும், எனவே,

மாற்றங்களைக் கொண்டுவருவதில் கோத்தபாயவின் தனித்துவமான அதிகார ஆதாரம் அவருக்கு உதவியது என்று எழுதுகிறார் குணரட்ண:

படைகள் புதிய பட்டாலியன்கள், பிரிகேடுகள் மற்றும் டிவிசன்களாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அந்த நேரத்தில், ஒரு பட்டாலியனை உருவாக்குவது கூட பெரும் நேரத்தை எடுத்துக்கொள்ளும் பணியாக இருந்தது. பல்வேறு தரப்பிலிருந்தும் அங்கீகாரம் பெற வேண்டிய இந்தச் செயற்பாட்டிற்கான பெரும் தாமதத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்ட கோத்தபாய, புதிய படைப்பிரிவுகளை நிறுவுமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டு, தேவையான அனுமதியைப் பெறுவதற்குத் தன்னிடம் பின்னர் தெரிவிக்குமாறு பணித்தார். இது 70 க்கும் மேற்பட்ட பற்றாலியன்களை நிறுவ இராணுவத்திற்கு உதவியது.[70]

### தனிப்பட்ட அதிகாரிகளைத் தற்காலிகமாக இடமாற்றுவதில் கட்டுப்பாடு

குடிமக்கள் பாதுகாப்புப் படையை (ஊர்க்காவல் படையினர்) மாற்றியமைக்க கோத்தபாய முடிவு செய்தபோது, அதற்குத் தலைவராகக் கடற்படைத் தளபதி சரத் வீரசேகரவாகத்தான்,[71] இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார், அவரை அந்தப் பதவிக்கு நியமித்து அவரை அந்தப் பணியை ஏற்றுக்கொள்ளச் செய்தார்.[72] குடிமக்கள் பாதுகாப்புப் படையின் முன்னாள் பொது இயக்குநர், ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ், 2012 ஆம் ஆண்டு குடிமக்கள் பாதுகாப்புத் திணைக்களத்தை எவ்வாறு தான் பொறுப் பேற்றுக்கொண்டார் என்பதை விவரித்தார். தீவின் வடக்கில் உள்கட்டமைப்புகளை வழங்கவும், முன்னாள் LTTEகளுக்கு[73] புனர்வாழ்வு அளிக்கவும் கோத்தபாய ராஜபக்ச தனக்கு அறிவுறுத்தியதாக அவர் கூறினார். இராணுவத்திற்கு உதவுவதற்காகத் தமிழர்களை அமர்த்துவதில் பீரிஸ் பிரச்சினைகளை எதிர்கொண்ட போது, தனக்கு உதவ ஒரு குறிப்பிட்ட அதிகாரியை நியமிக்குமாறு கோத்தபாய ராஜபக்சவிடம் கேட்டுக் கொண்டார்.'[74] இது கோத்தபாய ராஜபக்சவிடம் இருந்த அதிகாரத்தையும் அதை அவர் எவ்வளவு நுணுக்கமாகச் செயல்படுத்தினார் என்பதையும் விளக்குகிறது.

2009 ஆம் ஆண்டு போரில் ஈடுபடுத்த ரெஜிமென்ட் அதிகாரிகளைத் தான் ஒவ்வொருவராகத் தேர்ந்தெடுத்ததாக கோத்தபாய கூறினார் என்று இந்திய இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்:

*இந்த அதிகாரிகளை நான் தேர்வு செய்யவில்லை, ஏனென்றால் அவர்கள் இளைஞர்கள். ஆனால் அவர்கள் போருக்குத் தலைமை தாங்க சிறந்தவர்கள் என்று நான் நினைத்தபடியால் அவர்கள் நியமிக்கப்பட்டனர். நான் படை வரிசைகளுக்குச் சென்று திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்தேன். போரை வழிநடத்தும் திறன் குறைவாக இருந்தவர்களை நான் கைவிட வேண்டியிருந்தது. அவர்களில் சிலர் நிர்வாக நடவடிக்கைகள் போன்ற பிற வேலைகளுக்குச் சிறந்தவர்களாக இருந்தனர். எனவே, இந்தப் போரை வழிநடத்த நல்ல தளபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படை வீரர்களுக்குச் சரியாகக்*

கடற்படையில் பயிற்சிக்கு ஆட்களைப் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். விரைந்து நடவடிக்கை எடுத்த கோத்தபாய, கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிடம் 10,000 பேரை சேர்த்து, கடற்படைக்குத் தேவையான எண்ணிக்கையைத் தக்கவைத்துக்கொண்டு, மீதமுள்ளவர்களை மேலதிக நடவடிக்கைகளுக்காகத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கூறினார். வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு வழங்குவதற்காக அவர்களை இராணுவத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார், இதனால் பாதுகாப்பு வழங்கும் அனுபவம் வாய்ந்த இராணுவ வீரர்களைப் போருக்கு அனுப்ப முடியும். ”

[70] Pg 75. Gotabaya, by Kamal Gunaratne.

[71] Dossier on him at - https://itjpsl.com/assets/press/rear-admiral-sarath-weerasekera.pdf

[72] “இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு மிகவும் பொருத்தமான நபராக ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவைத் தெரிவு செய்த கோத்தபாய, அவரை இப்பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். ஆனால், ஆரம்பத்தில் சரத் வீரசேகர இது கோத்தபாயவின் வழக்கமான கடற்படைப் பாதையில் இருந்து அகற்றும் திட்டமாக நினைத்தார். எனவே, அவர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். இருந்தபோதிலும், போரில் தீவிரமாகப் பங்களிப்பதற்காக பயனற்ற அமைப்பாக இருந்த CDF ஐ மறுசீரமைக்க வேண்டிய காலத்தின் தேவையை கோத்தபாய விளக்கியபோது, அவர் (சரத் வீரசேகர) அதை அங்கீகரித்து ஒப்புக்கொண்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முப்படையைச் சேர்ந்த எந்த ஒரு மூத்த அதிகாரியையும் அத்தகைய பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் இருந்தபோதிலும், அவர்களின் அனுமதியின்றி அந்தப் பதவிக்கு ஒருவரை நியமிப்பதன் மூலம் தனது நோக்கம் நிறைவேறாது என்பதை கோத்தபாய அறிந்திருந்தார். P130, கோத்தபாய பற்றி கமல் குணரட்ண (சிங்களத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது)

[73] “புனர்வாழ்வு அளிக்கப்பட்ட மற்றும் வடக்கின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடாதவர்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையில் இதனைச் செய்யுமாறு கோத்தபாய சார் அறிவுறுத்தினார். ” பிரகீத் சம்பத் கருணதிலகா மௌபிமா செய்தித்தாளுக்கு அளித்த ஒரு நேர்முகத்தில், கோத்தபாயவுக்கு ஆதரவான ஒரு முகநூல் பக்கத்தில் 24 ஜூன் 2018 அன்று வெளியிடப்பட்டது.

[74] “வேலைத்திட்டம் தோல்வியடைந்ததால், கோத்தபாய சாரிடம் ஒரு புத்திசாலியான அதிகாரியைக் கோரினேன். எனக்குக் கிடைத்த புத்திசாலி அதிகாரி லெப்டினன்ட் கேணல் ரத்னப்ரியா*. CDF கல்கிரியாவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அதிகாரியாக அம்பாறையைச் சுற்றியுள்ள முகாமில் இருந்தார். அவர் கெட்டிக்காரர். ஆனால் இதுபோன்ற பணிகளை செய்ததில்லை. நேர்காணல் கேள்வி: லெப்டினன்ட் கேணல் ரத்னபிரியா இந்தப் பணிக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டார்; அவருக்கு ஒரு திட்டம் கொடுக்கப்பட்டதா அல்லது சுதந்திரமாக வேலை செய்ய அனுமதிக்கப்பட்டதா? இல்லை. முதலில், இராணுவம் அவரை CDF க்கு விடுவிக்க விரும்பவில்லை. பின்னர், கோத்தபாய ஐயாவிடம் பேசி, இந்தப் புத்திசாலி அதிகாரியிடம் கோரிக்கை வைத்தேன். கோத்தபாய சார் அந்த அதிகாரியை என்னிடம் கொடுத்தார். ...அதுதான் கோத்தபாய சாரின் வெற்றி. பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்களைத் தேர்ந்தெடுத்தார். .. கோத்தபாய சாரால் ஒருவரின் உள்ளத்தைப் பார்க்க முடியும். இந்த வேலை இந்த மனிதருக்கு வழங்கப்பட்டால் அவர் அந்த வேலையைச் சரியாக செய்வார் என்பது கோத்தபாய சாருக்குத் தெரியும்.

*பின்னர் தமிழர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பியதாகக் கூறப்படுகிறது

-http://www.sundayobserver.lk/2018/06/17/news-features/behind-fond-farewell-vishwamadu

*கட்டளையிட முடியாவிட்டால், பணி மூப்பு வரிசையால் எந்த முக்கியத்துவமும் இல்லை என்று நினைத்தேன்.*[75]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சில சமயங்களில் அதிகாரிகளின் பதவி மூப்பு நிலையைப் புறக்கணித்து, போரை நடத்துவதற்கு அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தார் என்று கமால் குணரத்தினதனது கோத்தபாய பற்றிய புத்தகத்தில் உறுதிப்படுத்துகிறார்.[76]

**தன் அமைச்சரவைக்கும் அப்பாற்பட்ட செல்வாக்கு - இராஜதந்திர பணியமர்த்தங்கள்**

வெளிவிவகாரத்துறை அமைச்சராக இல்லாவிட்டாலும் கூட, முன்னர் பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரி மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட தூதரகப் பதவிகள் மீதும் கோத்தபாய ராஜபக்சவுக்கு உண்மையில் கட்டுப்பாடு இருந்தது. 2019 ஏப்ரலில் அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கோத்தபாய ராஜபக்சவே இந்தச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டார்.

2010 டிசம்பரில், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களைக் காவல்துறை நெருங்கியது. விரைவில், இந்த வழக்கு வேறொரு காவல்துறை பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது, பின்னர் தேர்தல்கள் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரக்கூடும் என்ற அச்சத்தில், சந்தேகத்திற்குரிய மேஜர் புலத்வத்தவுக்கு தாய்லாந்தின் பாங்காக்கில் தூதரகப் பணியை வழங்குமாறு கோத்தபாய ராஜபக்ச வெளியுறவு அமைச்சகத்திற்கு உத்தரவிட்டார்.[77] 26 ஜனவரி 2010 அன்று ஜனாதிபதி தேர்தலில்[78] மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றதை அடுத்து அந்தப் பதவி நீக்கப்பட்டது. புலத்வத்த 2019 ஆம் ஆண்டு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.[79]

2018 ஆம் ஆண்டு ஒரு நேர்காணலில் கோத்தபாய, 'அவரது பதவிக் காலத்தில் சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் மேஜர் புலத்வத்தவின் குழுவை நேரடியாகத் தொடர்புபடுத்தியதா என்பதை நினைவுபடுத்த முடியவில்லை' என்று கூறியதாகக் கூறப்படுகிறது.[80] எவ்வாறாயினும், 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற்று ஒரு மாதத்திற்குப் பின்னர், புலத்வத்தை லெப்டினன்ட் கர்னலாக 2014 ஜூலை 15 முதல் பின்தேதியிட்டு பதவி உயர்வு அளித்து பணியமர்த்தினார்.[81] 2008 ஆம் ஆண்டு மற்றுமொரு ஊடகவியலாளர் கீத் நொயாஹரை தாக்கிய வழக்கில் சந்தேகத்துக்கு உரிய நபராக 2017 பிப்ரவரி 18 ஆம் தேதி புலத்வத்த கைது செய்யப்பட்டிருந்த போதிலும் இது நடந்தது.[82] கீத் நொயாரை சித்திரவதை செய்து மற்றும்/அல்லது அவர் மேல் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைகளைப் பிரயோகித்து அல்லது தண்டனை போன்ற மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக 2022 ஆம் ஆண்டு அமெரிக்க அரசாங்கம் மேஜர் புலத்வத்தேவின் மீது குற்றம் சுமத்தியது குறிப்பிடத்தக்கது.[83]

கோத்தபாய தனது எதிரிகளின் இராணுவத்தில் தனக்கு வேண்டாதவர்களை நீக்கும் ஆற்றல் பெற்றவராகவும் கருதப்பட்டார். 2010 ஆம் ஆண்டு ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிளவைத் தொடர்ந்து கோத்தபாய இராணுவத்தில் இருந்து தனக்கு வேண்டாதவர்களை அகற்றுவார் என்ற அச்சத்தை விக்கிலீக்ஸில் இருந்து அமெரிக்கத் தூதரகம் கசிய விட்டது - மேலும் அவர் தனது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத வெளியுறவு அமைச்சகத்தில் இருந்தும் தனக்கு வேண்டாதவர்களை அகற்றுவார் என்பதைப் பற்றிய கவலைகள் இருந்தன.[84]

---

75 http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/

76 "போரை முன்னெடுப்பதற்கு ஒவ்வொரு மட்டத்திலும் சரியான தலைமை இருக்க வேண்டும் என்று தீர்மானித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இராணுவத் தளபதியும் பதவி மூப்புப் பட்டியலைப் புறக்கணித்துத் திறமையான அதிகாரிகளைத் தெரிந்தெடுக்கும் நடவடிக்கையைத் தொடங்கினர். பக்கம் 78, கமல் குணரட்ண எழுதிய கோத்தபாய.

77 Referenced in complaint by Ahimsa Wickremetunge in US case.

78 http://www.ft.lk/news/Alleged-death-squad-leader-reinstated-in-special-team-under-Army-Chief/56-678065

79 மனித உரிமைக் குழுக்களின் எதிர்ப்பையும் மீறி மேஜரை மறு அமர்த்தம் செய்வதை சிறிலங்கா இராணுவம் நியாயப்படுத்துகிறது, 16 மே 2019, https://www.reuters.com/article/us-sri-lanka-blasts-army/sri-lankan-army-defends-rehiring-major-amid-outcry-from-rights-groups-idUSKCN1SM1UY

80 Gota and Fonseka trade charges on who attacked Lasantha and Keith, 10 May 2018,

81 http://www.dailynews.lk/2019/12/17/local/205909/promotions-63-army-officers BWDMRPSSBD Bulathwaththa RSP Isc MI (064206).

82 https://www.colombotelegraph.com/index.php/sri-lankan-army-reinstates-official-suspected-in-lasantha-murder-and-other-attacks-rights-groups-condemn/ https://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/CPA_Criminal-Justice.pdf

83 Combating Global Corruption and Human Rights Abuses, US State Department, 9 December 2022, https://www.state.gov/combating-global-corruption-and-human-rights-abuses/

84 "ஜனவரி 26 ஆம் தேதி நடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கோத்தபாய ராஜபக்ச (ஜனாதிபதியின் சகோதரர்) மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் ஜெனரல் பொன்சேகாவுக்கு விசுவாசமானவர்கள் எனக் கருதப்படும் மூத்த இராணுவ அதிகாரிகளை மாற்றுவதற்கு விரைவாக முயன்றனர்.... தேர்தலுக்குப் பின் மூத்த இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெற்றனர். இந்தக் களையெடுப்புக்கு மாநில உளவு சேவையின் தலைவர் மற்றும் தேசிய உளவுத்துறை தலைவர் தலைமை காவல்துறை மூத்த துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (டிஐஜி) தலைமைத் தாங்கியதாகக் கூறப்படுகிறது. 150-க்கும் மேற்பட்ட காவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், பொன்சேகாவிற்கு விசுவாசமான அல்லது ராஜபக்சவின் பிரச்சார நடவடிக்கையைத் தடுக்கும் தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஆர்வமாக

மேலும், ஜனாதிபதியுடனான உறவின் காரணமாக, கோத்தபாயவும் அவரது சகோதரர் பசிலும் வெளி நாடுகளுக்குத் தூதரகப் பயணங்களை மேற் கொண்டனர். இது பொதுவாக வெளிவிவகார அமைச்சருக்கான கடமை. இது கூடுதல் அரசியல் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியது.[85] பல ஆண்டுகாலம் இராணுவத்தில் தன் தோழனாக இருந்த சவேந்திரா சில்வாவை நியூயார்க்கின் ஐ.நா. துணைப் பிரதிநிதியாக வெளிவிவகாரத் துறை அமைச்சகத்தால் நியமிக்கப் படுவதற்கு கோத்தபாயதான் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார் என்று ஊடக அறிக்கைகளும்கூட கூறுகின்றன.[86]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையில், கோத்தபாய ராஜபக்ச மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிற்கு அறிவுரைகளை வழங்கும் அளவுக்கு அதிகாரம் மிக்கவராக இருந்தார் என்று விக்கிலீக்ஸ் அமெரிக்க அரசின் தொலைநகல்கள் தெளிவு படுத்துகின்றன.[87]

அரசாங்க ஊழியராக இருந்தபோதிலும், இராணுவத்தின் மீது அரசாங்க அமைச்சர்களுக்குக் கூட இல்லாத அதிகாரம் கோத்தபாயவிடம் இருந்ததாக அவரது அதிகாரத்தின் கீழ் பணியாற்றிய இராணுவ அதிகாரிகளின் கூறுகின்றனர்:

*கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது, பாதுகாப்புப் படையினருக்கு இடையூறு செய்ய யாரையும் அவர் அனுமதிக்கவில்லை. அரசாங்கத்தில் உள்ள பலம் வாய்ந்த அமைச்சர்கள் கூட பாதுகாப்புப் படையினருக்கு ஆலோசனை வழங்கவோ, வேறு எந்தப் பணியிலும் அவர்களை ஈடுபடுத்தவோ முடியாது. சில பலம் வாய்ந்த அமைச்சர்கள் மாறுபட்ட கருத்தோடு இருந்தபோதும் கோத்தபாயவிடம் எந்த மாற்றத்தையும் கொண்டுவர அவர்களால் முடியவில்லை.*[88]

ஓர் இந்திய இராணுவக் கருத்துரையாளரின் கூற்றுப்படி, அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் இடையிலான இணைப்பாக கோத்தபாய மாறினார், மேலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை வகித்த பல அரசு ஊழியர்களைப் போலல்லாமல் அவர் தளபாடங்களை வழங்க முடியும் என்பதால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்:

*...அரசியல் அமைப்பிற்கு ஏறக்குறைய எங்கிருந்தோ வந்த கோத்தபாய, ஜனாதிபதி ராஜபக்சவின் அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையிலான பாலமாக விரைவில் மாறினார். ராஜபக்ச சகோதரர்கள் முன் நிர்ணயித்த இராணுவ இலக்கிற்கு அரசியலை இணைத்தனர். அவர் (கோத்தபாய) இராணுவத்தினரால் அரவணைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டார் மற்றும் அவர் இராணுவத்தில் ஒரு சட்டபூர்வமான குரல் என்று ஜனாதிபதி அலுவலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இராணுவத் தேவைகளை - ஆட்கள், பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் - கோத்தபாய அரசாங்கத்திடம் தெரிவித்தார்.*[89]

## D. அவரது அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

பின்வரும் காரணிகளின் ஒரு தனித்துவமான சேர்க்கையின் மூலம் 2009 ஆம் ஆண்டு போர் மண்டலத்தில் இருந்த பிரிகேடியர்களுக்கு கோத்தபாய ராஜபக்சவால் நேரடியாகக் கட்டளைகள் இட முடிந்தது:

(a) மொத்தத்தில் இராணுவத்தின் தலைவராக இருக்கும் அவர்தான் ஜனாதிபதியின் சகோதரர்;[90]

இருப்பதாகக் கருதப்படும் காவல்துறை அதிகாரிகள் இடமாற்றம் அல்லது ஓரங்கட்டப்பட்டதை போஸ்டின் உள்ளூர் பாதுகாப்பு ஆய்வாளர் உறுதிப்படுத்தியுள்ளார். ஒரு மூத்த MFA அதிகாரி தனது பதவி பற்றிய கவலையைத் தெரிவித்துள்ளதால், நம்பிக்கைக்கு உரியவர்கள் இல்லை என்று கருதப்படும் அரசாங்க அதிகாரிகளைப் பாதுகாப்புப் படைகள் மட்டுமல்லாமல் அதற்கு அப்பாலும் அகற்றப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் பிப்ரவரி 2 ஆம் தேதிக்குள் தெரிந்தன."
https://wikileaks.org/plusd/cables/10COLOMBO81_a.html

85 "இந்தியாவிற்கு அதிகாரபூர்வமான வருகையை மேற்கொண்டுள்ள ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ச எம்பி, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் அடங்கிய இலங்கைத் தூதுக்குழுவினர் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்விஜய் சிங் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாகத் தெரிகிறது." 27 ஜூன் 2009, https://lrrp.wordpress.com/2009/06/27/many-want-to-emulate-lanka's-success-story-against-terrorism/

86 http://www.salem-news.com/articles/january302012/lanka-war-crim.php Alleged War Criminal Appointment - a Ministerial Power Struggle
Salem-News.com, 30 Jan 2012.

87 "மே 13 [2009] அன்று காலை நேரத்தில், பேரிடர் மேலாண்மை மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் சமரசிங்கவை அழைத்து, பசுமைப் பெருங்கடலின் செயல்பாடுகளில் மற்றொரு நாள் தாமதம் ஏற்படுவதால் ஏற்படும் மனிதாபிமான விளைவுகள் குறித்துக் கடுமையான கவலையை வெளிப்படுத்தினார். இராணுவம் ஏவுகணைத் தாக்குதல்களில் ஈடுபடாது என்றும் உணவுப் பொருட்களைப் படகில் இருந்து இறக்கலாம் என்றும் இராணுவத்தின் முழுமையான உறுதிமொழியை *ICRC* யின் தூதுக்குழு தலைவர் பால் காஸ்டெல்லாவிடம் வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச (பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் இருந்தவர்) இன்று காலை தனக்கு அறிவுறுத்தியதாக சமரசிங்க கூறினார். கப்பலில் ஏற்றப்பட்ட பயணிகளை.... நாளை மே 14 அன்று ராஜபக்சவும் காஸ்டெல்லாவும் சந்திப்பது உதவியாக இருக்கும் என்று சமரசிங்க கூறினார்."
https://wikileaks.org/plusd/cables/09COLOMBO522_a.html 09COLOMBO522_a

88 *(The book in Sinhala 'Gotabaya' by Kamal Gunaratne pg 243)* .

89 http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/

90 "கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நேர்காணலில், அவர் தன்னை உயர்ந்தவர் மட்டுமல்லாமல் சூப்பர் செயலாளர் என்றும் அழைத்துக்கொண்டார். உடன்பிறந்தவர் என்ற முறையில் தன்னால் மட்டுமே எந்த நேரத்திலும் ஜனாதிபதியை அணுக முடியும் என்று வாதிட்டார். அவரால் மட்டுமே நள்ளிரவு 12 மணிக்கு ஜனாதிபதியை அழைக்க முடியும் அல்லது

(b) கமல் குணரட்ணவின் கூற்றுப்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பாதுகாப்பு விடயங்களில் தன் அதிகாரத்தை கோத்தபாயவிடம் அளித்துள்ளார்: *'கோத்தபாய பாதுகாப்புத் துறைச் செயலாளர் பதவியை ஏற்றுக் கொண்டவுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சராகத் தனக்குள்ள அதிகாரத்தைச் செயல் படுத்தும் மற்றும் முடிவெடுக்கும் உரிமையை கோத்தபாயவுக்குக் கையளித்தார்.*[91]'

(c) அவரே 20 ஆண்டுகள் அனுபவம் கொண்ட இராணுவத் தளபதி[92] மேலும் 'நிலப்பகுதிகள் குறித்த சிறந்த அறிவு அவருக்கு இருந்தது',[93] புதுப்பிக்கப்பட்ட தாக்குதலை வடிவமைத்தவர், வெற்றிக்காகப் பாதுகாப்புப் படைகளை மறுசீரமைத்தவர் (மேலே பார்க்கவும்) மேலும் அவர் கொழும்பு செயல்பாட்டு அறையில் இருந்துகொண்டு அவரே தொடர்ந்து கண்காணித்து முன்னேற்றங்களை ஒருங்கிணைத்-துக்கொண்டிருந்தார்;

(d) கமல் குணரட்ண, சவேந்திர சில்வா, ஜெகத் டயஸ் மற்றும் சரத் பொன்சேகா போன்ற முக்கியத் தளபதிகளுடன் தனிப்பட்ட உறவை அவர் வைத்திருந்தார், ஏனெனில் இவர்கள் யாவரும் எண்பதுகளில் ஒன்றாகப் போரிட்டவர்கள். சில்வா, டயஸ் மற்றும் குணரட்ண அவருக்கு ஜூனியர்கள். முதல் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு கட்டளைகளைப் பிறப்பிக்கும் அளவுக்கு அவர்களோடு இவருக்கு உறவு இருந்தது;[94]

(e) அதிகாரிகளின் மாற்றம், பதவி உயர்வு மற்றும் தண்டனை உள்ளிட்ட இராணுவ நியமனங்களைச் செய்வதில் கட்டுப்பாடு கொண்ட (மேலே பார்க்கவும்) பாதுகாப்புத் துறை செயலாளராக விளங்கினார்;

(f) அவரது வாக்கின் படியே, அவர் போர்க் காலத்து இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவுக்குப் பதவி உயர்வு அளித்து அவரை நன்றிக்கடன் பட வைத்தார் (இருந்தாலும் போருக்குப் பின் இருவரும் பிரிந்தனர்);

(g) ராஜபக்சவின் குடும்பத்தில் உள்ள பல உறுப்பினர்களும் அரசில் முக்கியப் பதவிகளை வகித்து உண்மையில் அரசை முற்றிலும் ஒரு குடும்ப வணிகம் ஆக்கினார்கள்;[95] இந்தக் கால கட்டத்தில் சிறிலங்கா வரவுசெலவில் 75% க்கு ராஜபக்சவின் குடும்பத்தினரே பொறுப்பாக இருந்தனர் என்று BBC குற்றம் சாட்டியது.[96]

(h) தளபதிகளுக்குத் தேவைப்படும் ட்ரோன்கள், விமானப்படை ஆதரவு மற்றும் உபகரணங்கள் அனைத்தையும் அனுப்பும் திறமை கோத்தபாயவுக்கு இருந்தது;[97]

---

உயிரிழப்புகள் அல்லது பிற பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான உண்மையான நிலைப்பாட்டை அவருடன் விவாதிக்க முடியும் என்றார்."

http://www.thesundayleader.lk/20080203/spotlight.htm

[91] P66 Kamal Gunaratne's Book *Gotabaya* in Sinhala

[92] இந்தியக் கருத்துரையாளர் ஒருவர் கூறியது போல், "கோத்தபாய, பொன்சேகாவைச் சந்தித்து, "நீங்கள் வெற்றி பெற முடியுமா" என்று கேட்டார். போரினால் வலுப்பெற்றிருந்த அந்த மூத்த போர்வீரர் "ஆம், ஆனால் எனது சொந்த அணியை தேர்வு செய்ய நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்" என்றார். கோத்தபாயவும் மகிந்தவும் ஒப்புக்கொண்டனர். "அரசியல் ரீதியாக நாங்கள் இராணுவத்தை அதன் வேலையைச் செய்ய விடுவோம், நாங்கள் அரசியல் ரீதியாக அரணாக நிற்போம்," என்று அவர்கள் பொன்சேகாவிடம் தெரிவித்தனர். கோத்தபாய மற்றும் பொன்சேகா ஆகிய இருவரும் ஒரே நேரத்தில் இராணுவத்தில் சேர்ந்து பதவிகளைப் பெற்றிருந்ததால் இந்த சாதுரியமான அரசியல் ஏற்பாடு வேலை செய்தது. "
http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/

[93] Lalith Weeratunga, Secretary To The President, https://www.businesstoday.lk/article.php?article=7101

[94] He acknowledged he spoke to ground commanders in this Business Weekly interview in June 2009."I spoke to the ground Commanders…"

[95] See infographic *The Rajapaksas: keeping it in the family* at https://www.google.com/url?sa=i&rct=j&q=&esrc=s&source=images&cd=&ved=2ahUKEwir1Nmo2ZTnAhUNrxoKHTdPDooQjB16BAgBEAM&url=https%3A%2F%2Fw மேலும் "நாட்டின் பொருளாதாரத்தில் 80 வீதத்தைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ள நான்கு சகோதரர்கள் மற்றும் 128 க்கும் மேற்பட்ட உறவினர்கள் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிற முக்கியத் துறைகளில் பல்வேறு முக்கியப் பதவிகளில் நியமிக்கப்பட்டு, பொது நிதியில் இருந்து பணம் பெற்றனர்"
http://www.thesundayleader.lk/20080203/spotlight.htm
www.colombotelegraph.com%2Findex.php%2Finfographic-rajapaksa-family-and-nepotism%2F&psig=AOvVaw2zorQ6-BQ5ordSJEqzB7zV&ust=1579696267641801

[96] https://www.youtube.com/watch?v=rouIimgl-Wc, BBC

[97] "போர்முனையில் நிற்கும் வீரர்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்ற கோத்தபாய நடவடிக்கை எடுத்தார். ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வாங்க கருவூலத்தில் இருந்து பணம் ஒதுக்குவது மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது. கருவூலச் செயலாளர் டாக்டர் பி.பி. ஜயசுந்தர விவாதங்களில் பங்கேற்பதற்கு கோத்தபாய நடவடிக்கை மேற்கொண்டார். இது பெரும் உதவியாக இருந்தது. பாதுகாப்புச் சபையில் பேசப்பட்ட பல்வேறு விடயங்களையும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது இராணுவம் எதிர்கொள்ளும் கடுமையான நிலைமைகளையும் குறித்து நன்கு அறிந்திருந்த பி.பி. ஜயசுந்தர கடுமையான பிரச்சினைகள் எழுந்தவுடன் பாதுகாப்புத் துறைச் செயலாளரின் தேவைகளை நிறைவேற்ற பணத்தை ஏற்பாடு செய்ய முற்றிலுமாக உறுதிபூண்டிருந்தார். மேலும், இந்தக் கடுமையான பிரச்சினைகள் எழுப்பப்பட்ட உடனேயே சகல தேவைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பி.பி. ஜயசுந்தரவுக்கு அறிவுறுத்தியது நன்மையாக இருந்தது. இதற்கும் மேலாக, பி.பி. ஜயசுந்தராவைச் சந்திக்க தளபதிகளுடன் கோத்தபாய சென்ற போதெல்லாம் வெறுங்கையுடன் திரும்பவில்லை. இந்த மாபெரும் பணியை. நிறைவேற்றுவதற்காக அளித்த உதவிக்காக இன்றும் கூட கோத்தபாய பிபி ஜயசுந்தரவைப் பற்றி மிகுந்த மரியாதையுடன் பாராட்டியே பேசுகிறார்.
இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான உபகரணங்களும் ஆயுதங்களும் விரைவாக வாங்கப்பட்டன. எப்போதும் இந்த ஒப்பந்தங்களில் ஈடுபடும் "இடைத்தரகர்களை" கோத்தபாய அகற்ற விரும்பினார். ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் ஒப்புதலுடன் "லங்கா லாஜிஸ்டிக்ஸ் அண்ட் டெக்னாலஜிஸ்" நிறுவனத்தை நிறுவியதன் மூலம், இடைத்தரகர்களின் கைகளுக்குச் செல்லும்

(i) பல்வேறு பாதுகாப்பு அலகுகளின் நிதியாதாரங்கள் மீது அவருக்கு முழு கட்டுப்பாடு இருந்தது; அவர் தனது அமைச்சகப் பணியாளர்களிடம் செல்வாக்கு பெற்றவர்/அவர்களில் சிலர் பின்னர் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளனர்.

(j) அவர் கொலைப் படைகளை இயக்கியதாகக் கூறப்பட்டதால் அவருக்குப் பயந்தார்கள்;[98]

(k) எதிரிகளையும் சேவையில் இருப்பவர்களையும் அச்சுறுத்தும் வகையில் கோப்புகளை வைத்திருப்பதாகக் கூறப்படும் உளவுத்துறை சேவைகளைக் கட்டுப்படுத்தினார்.[99]

---

பெரிய அளவிலான அரசு நிதியைச் சேமித்து மேலும்மேலும் போருக்காக ஆயுதங்களையும் உபகரணங்களையும் வாங்க கோத்தபாயவால் முடிந்தது.."

பக்கம் 80 - 81. கோத்தபாய (சிங்களத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது) கமால் குணரட்ண.






98 https://www.aljazeera.com/news/2017/3/20/ex-leaders-brother-led-death-squad-in-sri-lanka

99 "உளவுத்தகவல் சேகரிப்பதே STF யின் கடமைகளில் ஒன்று. அவர்கள் கோத்தபாயவின் வழிகாட்டுதலின்படி இதை நடத்தினர். STF மற்றும் NIB போன்ற பிற குழுக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச நபர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும். அவர்கள் அரசுக்கு எதிராகப் பிரச்சினைகளை உண்டாக்கும்போது இந்தத் தகவல்கள் அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும். அரசின் விருப்பங்களுக்கு இணங்காவிட்டால் விலைமகள்கள் போன்ற பெண்கள் தொடர்பு பிரச்சினைகள் வெளிப்படுத்தப்படும் என்று அரசால் XXX [மறைக்கப்பட்டது] மிரட்டப்பட்டார் என்று எனக்குத் தெரியும்." ITJP சாட்சி.

# கோத்தபாயவுக்கும் அவரது போர்க்காலத் தளபதிகளுக்கும் இருந்த படையணி மற்றும் பழைய பாடசாலைத் தொடர்புகள்

## 2009




| | ஜே.வி.பி. கால நடவடிக்கைகள் | 1980களில் யாழ். நடவடிக்கைகள் | கஜபா ஜெறிமென்ட் | ஆனந்தா கல்லூரி | ராஜரட்ட ரைபிள்ஸ் றெஜிமென்ட் |
|---|---|---|---|---|---|
|  | X | X | X | X | X[1] |
|  | X | X | X | | |
|  | * | X | X | X | X |
|  | X | X[2] | X | X | |
|  | X | X | X | | X[3] |
|  [4] | X[6] | X[7] | X | 5 | |
|  | X | X | 8 | X | |
|  | | X | | X | |
|  | X | X[9] | X | X | |
|  [10] | X[12] | X[13] | 11 | | |

* இவர் பங்குபற்றியதை உறுதிப்படுத்த தகவல்கள் போதாமல் உள்ளன.

## இன்று

**முன்னாள் ஜனாதிபதி**
கோத்தபாய ராஜபக்ச

**பாதுகாப்புப் படைகளின் பிரதானி**
ஜெனரல் சவேந்திர சில்வா

**பாதுகாப்பு அமைச்சின் செயலர்**
ஜெனரல் கமால் குணரட்னெ

**பணி நிறைவு; முன்னாள் ஜனாதிபதியின் விஜத்மகா இயக்கம்**
மேஜர் ஜெனரல் சாகியெ பமொட கலகே

**2019–21 விவசாய அமைச்சின் செயலர்**
மேஜர் ஜெனரல் A.K சுமேத பெரேரா

**பணி நிறைவு**
மேஜர் ஜெனரல் உதய (GVDUA) பெரேரா

**பணிநிறைவின் பின்னர் அரசியல்**
பீல்ட் மார்ஸல்
சரத் பொன்சேகா

**பணிநிறைவின் பின்னர் அரசியல்**
RADM. சரத் வீரசேகெரா

**பணிநிறைவின் பின்னர் அரசியல்**
மேஜர் ஜெனரல் N A ஜகத் C. டயஸ்

**பணிநிறைவு**
மேஜர். ஜெனரல் றால்வ் நுகேரா

1. https://slasc.blog/uniforms-and-equipment-throughout-the-ages/

2. https://www.ft.lk/Opinion-and-Issues/Tribute-to-a-legendary-comrade-in-arms/14-662363

   https://www.sundaytimes.lk/180902/sunday-times-2/tribute-to-a-legendary-comrade-in-arms-309551.html

   https://island.lk/chagie-issues-dire-warning-as-country-celebrates-independence/

3. https://slasc.blog/uniforms-and-equipment-throughout-the-ages/

4. Ganegama Vithanage Don Udaya Annesly Perera

5. https://alt.army.lk/gajabaregiment/content/major-general-gvdua-perera-rwp-rsp-vsv-usp-usawc-psc-accorded-military-salute

6. Ibid

7. “He was a veteran Infantryman, who pioneered the 3rd Battalion the Gajaba Regiment from 1996 to 1998.” https://alt.army.lk/gajabaregiment/content/major-general-gvdua-perera-rwp-rsp-vsv-usp-usawc-psc-accorded-military-salute

8. Sinha Regiment.

9. https://alt.army.lk/gajabaregiment/10-gajaba-regiment

10. https://www.sundaytimes.lk/200705/sunday-times-2/tribute-to-intake-21-of-sri-lanka-army-as-they-cherish-35-years-of-service-to-the-nation-408217.html

11. St Peter’s college/SL Light Infantry – Retired April 2019

12. SLLI https://www.army.lk/news/major-general-ralf-nugera-relinquishes-duties-sfhq-kln

    Disappeared: SPA Priyantha (9458) M/C Matara B823/99

    Disappeared: Sunil Santha[1] AAH (file number 9555) MC Matara Case 109/98

    Disappeared:  AP Jagath Chaminda (2304)Matara High Court 171/98

    Disappeared Sepala SH (8050) HC Matara – no ref..

13. Operation Balavegaya I

# 2009 வன்னி நடவடிக்கையின்போது இருந்த சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பு

பாதுகாப்புச் செயலர்
கோத்தபாய ராஜபக்ச

இராணுவத் தளபதி
ஜெனரல் சரத் பொன்சேகா[2]

- யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் — மேஜர் ஜெனரல் GA சந்திரசிறி 2005-9[3]
  - 53 டிவிசன் — பிரிகேடியர் கமால் குணரட்ண
    - Air Mobile பிரிகேட் — லெப். கேணல் திலக் சங்கலிபொல[8]
    - கனரக காலாட்படைப் பிரிகேட் — பிரிகேடியர் AMSB அத்தபத்து[9]
    - 53.3 பிரிகேட் — கேணல் ஜயநாத் ஜயவீர[10]
  - 55 டிவிசன் — பிரிகேடியர் பிரசன்னா டி சில்வா[11]
    - 55.1 பிரிகேட் — லெப். கேணல் வசந்த அப்றி[12]
    - 55.2 பிரிகேட் — கேணல் கபில உடலுப்பொல[13]
    - 55.3 பிரிகேட் — லெப். கேணல் மகிந்த வீரசூரிய[14]
- கொமாண்டோ றெஜிமென்ட் — கேணல். ரால்வ் நுகேரா[4]
- ஆட்லறி பிரிகேட் — பிரிகேடியர் பிரியந்த நபகொட[5]
- விசேட படைகளின் றெஜிமென்ட் — கேணல் அத்துல கொடிப்பிள்ளை[6]
- SFHQ Vanni — மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய[7]
  - 57 டிவிசன் — மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ்[15]
    - 57.1 பிரிகேட் — லெப். கேணல் கரந்திரா ரணசிங்கெ[16] / கேணல் அருண விஜெவிக்ரம[17]
    - 57.2 பிரிகேட் — கேணல் WGHA செனரத் பண்டார[18]
    - 57.3 பிரிகேட் — WPAK திலகரத்தின[19]
    - 57.4 பிரிகேட் — லெப். கேணல் செனக விஜெயசூரிய[20]
  - 58 டிவிசன் — பிரிகேடியர் சவேந்திர சில்வா
    - 58.1 பிரிகேட் — கேணல் அனுரா தேசப்பிரிய குணவர்த்தன[21]
    - 58.2 பிரிகேட் — கேணல் சஞ்ஜய வணிகசிங்கெ[22]
    - 58.3 பிரிகேட் — லெப். கேணல் ரமேஸ் பெர்ணாண்டோ[23]
  - 59 டிவிசன் — மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தவும் 2009 மே 10 முதல் பிரிகேடியர் சாகியெ கலகே[24]
    - 59.1 பிரிகேட் — லெப். கேணல் அருணா ஆரியசிங்க[25]
    - 59.2 பிரிகேட் — லெப்.கேணல் எச். மனீச பீற்றர் டி சல்வா[26]
    - 59.3 பிரிகேட் — லெப். கேணல் சுஜீவ செனரத் யாபா[27]
    - 59.4 பிரிகேட்* — கேணல் ஜலிய சேனரத்தின[28]*
  - தற்காலிக இடுபணிப் படை (TF)
    - (இடுபணிப் படை 1 -58 டிவிசனாக மாற்றப்பட்டது)
    - இடுபணிப் படை 2 — பிரிகேடியர் றொகான பண்டார
    - இடுபணிப் படை 3 — பிரிகேடியர் சத்தியபிரிய லியனகே
    - இடுபணிப் படை 4 — கேணல் நிசாந்த வன்னியாராஜ்ஜி
    - இடுபணிப் படை 8 — கேணல் G.V ரவிப்பிரிய[29]

(OISL இன் படவரைபின் அடிப்படையில்)

*ஐ.நா. படவரைபில் காணவில்லை

1. OISL.
2. கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்திற்குப் பொறுப்பாக பாதுகாப்புப் படைகளின் பிரதானி செயற்பட்டார். இவருக்கு பாதுகாப்புப் செயலர் பொறுப்பாவார். (OISL §111-112)
3. https://alt.army.lk/sfhqj/past-commanders and Unprecedented Glorious Victory, Daily News, 3 June 2009, http://archives.dailynews.lk/2009/06/03/supstory.asp?id=s01; The valiant men who led ground troops, 15 May 2009, Sunday Observer, http://archives.sundayobserver.lk/2011/05/15/victory.asp?id=s06
4. Ibid
5. Ibid
6. Ibid
7. OISL § 115
8. https://web.archive.org/web/20090516024456/http://www.thebottomline.lk/2009/05/13/defence_col.htmP The Nation, 16 May 2009, Army at doorstep of last Tiger stronghold, reporte https://web.archive.org/web/20090516024456/http://www.thebottomline.lk/2009/05/13/defence_col.htm Miracle workers graphic from state run paper.
9. https://alt.army.lk/mech/former-brigade-commander (from Feb 2009)
10. பாதுகாப்பு அமைச்சின் நிலவர அறிக்கை 16.02.2009, 17.02.2009. *https://blacklightarrow.wordpress.com/2009/01/14/an-incomplete-sl-army-order-of-battle-for-mullaitivu/*
11. https://alt.army.lk/sfhqj/55-division; The valiant men who led ground troops, 15 May 2009, Sunday Observer, http://archives.sundayobserver.lk/2011/05/15/victory.asp?id=s06. Also http://archives.dailynews.lk/2009/01/17/fea04.asp "பிரிகேடியர் கமால் குணரட்ண கட்டளைத் தளபதியாக இருந்த 53ஆவது டிவிசனில், 3 பிரிகேட்கள் இருந்தன. 533வது பிரிகேட் லெப். கேணல் ஜயனத் ஜயவீரவின் கீழும், எயார் மொமைல் பிரிகேட் சாந்த திஸ்ஸநாயக்காவாலும் அண்மையில் உருவாக்கப்பட்ட கனரக வாகன காலாட்படை லெப். கேணல் லலந்த கமகேவாலும் வழி நடத்தப்பட்டன."
12. Miracle workers graphic from state run paper.Jan 2009 Daily News:"Divers&#39 சிறப்புப் படையின் 8 பேர் கொண்ட அணி, சிறப்புப் படை 2வது பற்றாலியனின் ஒரு அணி, கொமாண்டோ பிரிகேட்டின் முதலாவது பற்றாலியனின் அணியொன்று ஆகியவை நாகர்கோவிலுக்குத் தெற்கே அமைந்துள்ள மாமுனையில் தரையிறங்கிய அதேநேரத்தில், லெப்.கேணல் வசந்த அப்றூவின் தலைமையில் 551 பிரிகேட்டைச் சேர்ந்த 1வது பற்றாலியன் பளை–சோறன்பற்று ஆகிய இடங்களைக் கைப்பற்றும் தங்களது தாக்குதலை சமநேரத்தில் ஆரம்பித்தது. -in state run newspaper http://archives.dailynews.lk/2009/01/17/fea04.asp
13. Miracle workers graphic from state run paper. "கேணல் கபில உடலுப்பொல தலைமையிலான 552வது பிரிகேட் யாழ்ப்பாண மாவட்டத்தின் எஞ்சியிருந்த இறுதி எல்லைகளையும் கைப்பற்றியது." https://prasannadesilva.wordpress.com/2009/06/21/ltte-plays-its-final-trump/
14. http://archives.sundayobserver.lk/2009/02/08/sec04.asp "கேணல் மகிந்த வீரசூரிய தலைமையிலான 553ஆவது பிரிகேட் . ." https://prasannadesilva.wordpress.com/2009/06/21/ltte-plays-its-final-trump/
15. Unprecedented Glorious Victory, Daily News, 3 June 2009, http://archives.dailynews.lk/2009/06/03/supstory.asp?id=s01; The valiant men who led ground troops, 15 May 2009, Sunday Observer,http://archives.sundayobserver.lk/2011/05/15/victory.asp?id=s06
16. Miracle workers graphic from state run paper. And https://alt.army.lk/sfhqmlt/571-brigade ; Photo in Daily News 5 January 2009, 2009 ஏப்ரல் 10 முதல் மே 18 வரை தான் வெளிநாட்டில் இருந்ததாக அவர் கூறுகின்றார். போரின் மிக முக்கியமான இக்காலகட்டத்தில் அவரில் இடத்திற்கு யார் நிய மிக்கப்பட்டார் என்பது பற்றிய எந்தத் தகவலும் இல்லை. https://www.youtube.com/watch?v=W6kJGPwZOKU ; யுத்தத்தின் பின்னர், அருணா எஸ். விஜெ விக்கிரமா (Armoured Corp)யுத்தம் தொடர்பான சனல்–4 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு என நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணை நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார். - https://www.army.lk/news/army-court-inquiry-channel-4-allegations-referred-llrc-report-submits-its-findings-commander.
17. After the war Aruna S. Wijewickrema (Armoured Corp) was appointed to an Army Court of Inquiry to investigate Channel 4 allegations about the war - https://www.army.lk/news/army-court-inquiry-channel-4-allegations-referred-llrc-report-submits-its-findings-commander.
18. Miracle workers graphic from state run paper. https://archives.sundayobserver.lk/2008/09/21/sec01.asp; VIPs advised to strictly adhere to security measures https://web.archive.org/web/20090210090937/http://www.sundayobserver.lk/2008/10/12/sec03.asp https://prasannadesilva.wordpress.com/2009/06/21/ltte-plays-its-final-trump/ Also https://alt.army.lk/sfhqmlt/572-brigade from 22 Feb 2009. Before that Lieutenant Colonel APGN JAYASUNDARA RWP RSP MIR
19. Miracle workers graphic from state run paper. Also https://prasannadesilva.wordpress.com/2009/06/
20. Miracle workers graphic from state run paper. https://archives.sundayobserver.lk/2008/09/21/sec01.asp; http://archives.dailynews.lk/2009/06/19/sec03.asp http://www.srilankaguardian.org/2008/12/wanni-army-graveyard.html 574ஆவது கலாட்படை பிரிகேட், ஆரம்பத்தில் அதாவது 2009 மார்ச் 13ம் திகதி இடுபணிப் படை 3 இன் கீழ் 633வது பிரிகேட்டாக கொக்காவில் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டது. 2009 ஓகஸ்ற் 12ஆம் திகதி இதற்கு 632ஆவது பிரிகேட் எனப் பெயர் மாற்றப்பட்டது. http://archives.dailynews.lk/2008/12/02/sec01.asp லெப். கேணல் செனக விஜெசூரிய தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்ட 574 வது பிரிகேட்டும், லெப். கேணல் பிரதாப் தில்லெகெரட்ணவின் தலைமையின் கீழான 573வது பிரிகேட்டும் இரணைமடுவுக்கு தெற்காக, மாங் குளத்திலிருந்து முறிகண்டி வரையான யாழ்ப்பாணம் – கண்டி ஏ–9 சாலையின் சமாந்தரமாக உள்ள பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளன. https://web.archive.org/web/20081013203125/http://www.dailynews.lk/2008/10/10/fea03.asp By May 2009 he is described as 592. http://archives.sundayobserver.lk/2009/05/24/imp10.asp. https://archives.sundayobserver.lk/2011/06/12/fea02.asp
21. https://web.archive.org/web/20090516024456/http://www.thebottomline.lk/2009/05/13/defence_col.htm; Miracle workers graphic from state run paper. Kamal Gunaratne's book; also named in The Nation on 26 April 2009.
22. L A N S Wanigasinghe named in http://archives.sundayobserver.lk/2009/03/08/sec03.asp https://web.archive.org/web/20090516024456/http://www.thebottomline.lk/2009/05/13/defence_col.htm கமால் குணரட்ணவின் புத்தகம்; 26 April 2009 The Nation இலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
23. Miracle workers graphic from state run paper. http://twonationsoneisland.blogspot.com/2012/02/extermination-of-eelam-tamils-of-vanni.html SECURITY FORCES POISED FOR VICTORY By Tissa Ravindra Perera , The Nation,

https://atrocityarchives.weebly.com/uploads/1/2/0/7/120745407/nation-2009-05-17-security_forces_poised_for_victory.pdf
http://www.warwithoutwitness.com/journalist-name-command-officers-involved-in-killing-surrendering- combatants-in-sri-lanka/
Photo at http://archives.dailynews.lk/2009/05/01/sec03.asp

24. OISL § 116; The valiant men who led ground troops, 15 May 2009, Sunday Observer, http://archives.sundayobserver.lk/2011/05/15/victory.asp?id=s06, 7 May-20 July 2009 according to http://slwaronterror.blogspot.com/2018/09/chagie-im-designated-as-war-criminal.html

25. Miracle workers graphic from state run paper. Also TENURES OF BRIGADE COMMANDERS says from 24 Nov; 2007 until 26 Oct 2010 in charge, http://archives.dailynews.lk/2008/06/13/fea03.asp; https://alt.army.lk/sfhqmlt/591-brigade Retired 2020, Sri Lanka Artillery Regiment; https://www.army.lk/news/artillery-regiment-bids-farewell-major-general-aruna-ariyasingha; http://archives.dailynews.lk/2009/06/19/sec03.asp

26. Miracle workers graphic from state run paper. Also, TENURES OF GENERAL OFFICERS COMMANDING on file. O/ 60633 Col HMP De Silva was appointed as the first brigade commander from 29 Dec 2007 till 28 Feb 2010. https://alt.army.lk/sfhqmlt/592-brigade

27. 592 Brigade Commander army website page says Lt Col. DGS Senarath Yapa was in command from 15 Feb 2009 till 15 Oct. 2010. Army at doorstep of last Tiger stronghold, The Nation, https://web.archive.org/web/20090516024456/http://www.thebottomline.lk/2009/05/13/defence_col.htm இவரது கட்டுப்பாட்டின் கீழ் மூன்று பற்றாலியன்கள் இருந்ததாக இது கூறுகின்றது. says he had with three battalions under his command, 11 (GR) commanded by Major W.M.D.S. Gunawardane, 4 (SR) Sinha Regiment commanded by Major I.K. Lokukatagoda, 16 (SLLI) commanded by Major B.J. Lekamge. Miracle workers graphic from state run paper. He is in video from May 2009 https://www.youtube.com/watch?v=zO3G7__fV8k 2022 appointed Deputy Chief of Staff, Gajaba Regiment, https://www.army.lk/news/major-general-sujeewa- senarath-yapa-new-deputy-chief-staff-takes-over-duties

28. *Not in UN diagram; Miracle workers graphic from state run paper. Acting commander in 2008 according to http://archives.dailynews.lk/2008/06/13/fea03.asp; GajabaRegiment https://alt.army.lk/gajabaregiment/content/brigadier-wmjrk-senaratne-appointed-new-centre-commandant- gajaba-regimental-centre

29. OISL § 119, The valiant men who led ground troops, 15 May 2009, Sunday Observer,http://archives.sundayobserver.lk/2011/05/15/victory.asp?id=s06

### கீழ்ப்படியப்பட்ட நேரடிக் கட்டளைகளைப் பிறப்பித்தார்

ஐலண்ட் பத்திரிகையின் இராணுவ நிருபர் ஷமிந்த பெர்னாண்டோ போன்ற இராணுவக் கருத்துரை-யாளர்கள், சாதாரண அலைவரிசைகளைத் தவிர்த்து கோத்தபாய வன்னியில் உள்ள தனது களத் தளபதிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களுக்குக் கட்டளைகள் கொடுத்தார் என்பதை உறுதிப் படுத்துகின்றனர்.[100] இராணுவத்தை வழிநடத்து-வதையும் எப்படிப் போரை நடத்த வேண்டும் என்பதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்து கட்டளைகள் பிறப்பித்ததை கோத்தபாயவே தெளிவாக்கியுள்ளார்.[101] போர்க்கால இராணுவத் தளபதியும் வான் மற்றும் கடற்படைத் தளபதிகளும் தான் கேட்டதைச் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.[102]

2009 ஆம் ஆண்டு வன்னி செயல் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரியாவும்,[103] கோத்தபாய இடும் கட்டளைகளுக்குக் கள அதிகாரிகள் கீழ்ப்படிந்தார்கள் என்று விவரித்தார்:

> *போர்க்களத்தில் அனுபவம் பெற்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வழங்கிய வழிகாட்டல்களுக்கு எமது தலைவணங்குகின்றோம். களத்தில் இருந்த திறமையான அதிகாரிகள் மூலம் செயல்படுத்தப்பட்ட அவரது கட்டளைகளை மறக்க முடியாது.*[104]

100 “போர்நடைபெற்ற காலம் முழுவதும் கடுமையாகப் பேசும் இயல்புடைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆற்றிய பங்குதான் நிச்சயமாக மிக முக்கியமான காரணியாக இருந்தது. அவருக்கு முன் இருந்தவர்களைப் போல் அல்லாமல் இந்த கஜபா ரெஜிமெண்ட் வீரர் முக்கியச் சூழல்களில் முப்படைகளும் இணைந்து பணியாற்றுவதற்கு உதவ வேகமாகவும் தீர்க்கமாகவும் செயல்பட்டார். உதாரணமாக, ஓர் இணைச் சேவையில் இருந்து உதவி பெற்ற ஒரு குறிப்பிட்டச் சேவையினர் *பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்*தலையிட வேண்டும் என்று முயற்சி செய்தனர். வன்னி போர்முனையில் இருக்கும் தளபதிகள் வழக்கத்துக்கு மாறாக தன்னோடு நேரடியாகப் பேச அனுமதி அளிக்கும் அளவுக்குச் சென்றார் பாதுகாப்புத்துறை செயலாளர்” http://slwaronterror.blogspot.com/2012/09/fac-role-in-battle-off-mullaitivu.html

101 “அன்றைய தினம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் எனது நாட்டிற்காக வழங்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் 100% நிறைவேற்றினேன். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்என்ற முறையில் முப்படைகளையும் உளவுப் பிரிவினரையும் இரண்டரை ஆண்டுகளில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு வழிகாட்ட என்னால் முடிந்தது என்பது உங்களுக்குத் தெரியும். 19 அக்டோபர் 2019, பெலியத்த தேர்தல் பிரச்சாரக் கூட்டம், https://www.youtube.com/watch?v=BdtQ-E5sBPw 10’47”-11’37.

102 “நான் அவரிடம் எதிர்பார்த்ததை அவர் (சரத் பொன்சேகா) நிகழ்த்திக் காட்டினார். அவர் மட்டுமல்ல, எனக்கு வசந்த கரன்னாகொட மற்றும் ரொஷான் குணதிலக்க (2009 போரில் கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள்) ஆகியோர் உதவி வழங்கினார்கள். அதனால்தான் நாம் அத்தகைய வெற்றியை அடைய முடிந்தது (சிலோன் வீக், நேர்முகம்).

103 In 2017 the ITJP filed cases against him in Latin America. https://itjpsl.com/reports/the-case-against-jagath-jayasuriya

104 https://lrrp.wordpress.com/2009/10/

**தினசரி அடிப்படையில் நேரடியாக முடிவெடுக்கும் அணுகுமுறை - கள செயல்பாடுகள் பற்றிய விவரமான அறிவு அவருக்கு இருந்தது**

2006 ஆம் ஆண்டு தம்மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சி பற்றிப் பேசும்போது, போரின் தொடக்க காலத்தில் இருந்து தளபதிகள் தம்மிடம் நேரடியாகச் சந்தித்து அறிக்கை அளித்ததை கோத்தபாய உறுதிப்படுத்துகிறார், மரபான அதிகாரப் படிநிலையைத் தவிர்த்து களத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்துத் தினசரி தளபதிகள் அவரைச் சந்தித்துப் பேசினார்கள்.[105] கோத்தபாயவின் கூற்றுப்படி, இந்த அணுகுமுறை போருக்குப் பின்னரும் தொடர்ந்தது:

*என்னைப்போல் யாரும் கூட்டங்கள் நடத்தியதில்லை. நகர்ப்புற மேம்பாடு குறித்த வாராந்த கூட்டங்களில் கட்டிடக் கலைஞர்கள், பொறியாளர்கள், இயக்குநர்கள் மற்றும் கீழ்நிலை அதிகாரிகளிடமும் பேசினேன். நான் எனது உத்தரவுகளை வழங்கவில்லை, ஆனால் ஒரு கூட்டு அணுகுமுறைக்காக அவர்களது கருத்துகளையும் முன்னேற்ற அறிக்கைகளையும் கேட்டேன். போர்க் காலத்தில் என்னைப் போன்று பாதுகாப்புப் படையினரைக் குறிப்பாக உளவு அமைப்புகளை யாரும் ஒருங்கிணைக்க வில்லை. முதன் முறையாகப் பாதுகாப்புப் படையின் அனைத்து உளவுப் பிரிவுகளையும் ஒன்றிணைத்தேன். நான் அவர்கள் சொல்வதை எப்போதும் கேட்டுக் கொண்டிருந்தேன். நடவடிக்கை எடுப்பதற்கு முன்கள உண்மைகள் பற்றிய அவர்களின் கருத்துகளைப் பெற்றேன். உதாரணமாகக் கொழும்பு பாதுகாப்பை எடுத்துக்கொள்ளுங்கள். நான் காவல்துறை, இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொதுமக்கள் தற்காப்புப் படைகளுடன் ஒருங்கிணைத்து அவர்களுடன் தொடர்ந்து சந்திப்புகளை நடத்தினேன். நான் எப்பொழுதும் அவர்கள் சொல்வதைக் கேட்டு, என் உத்தரவுகளை வழங்குவதற்கு முன் அவர்களுடன் விவாதித்தேன்... வேறு எந்த அரசு ஊழியரும் என்னைப் போல இப்படிக் கையாண்டதாக நான் நினைக்கவில்லை.*[106]

உத்திகளை ஒருங்கிணைக்கவும், செயற்பாடுகளைத் திட்டமிடவும், அறிக்கைகளைப் பெறவும் கோத்தபாய தனது துணை அதிகாரிகளுடன் வழக்கமான சந்திப்புகளை நடத்தியதாக கோத்தபாயவின் சக ஊழியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.[107] மே 6, 2009 அன்று ஒரு நேர்காணலில், கொழும்பில் உள்ள ஒரு மூத்த காவல்துறை அதிகாரி, பாதுகாப்புப் படைகளைக் கண்காணிப்பதில் கோத்தபாயவின் முக்கிய வகி பாகத்தினை விளக்கினார்.[108] ஓர் இந்தியக் கருத்து-ரையாளர் மணி நேர அடிப்படையில் போர்முனையில் இருந்து அனைத்துத் தகவல்களையும் கோத்தபாய எவ்வாறு கண்காணித்தார் என்பதை விவரித்தார்:

*தாம் [சிறிலங்கா ஆயுதப் படைகள் - இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை] உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நாளும் போர் நடவடிக்கைகளைப் 'படித்து' ஆய்வு செய்ததாக கோத்தபாய கூறுகிறார். 'தேவை மற்றும் இன்றியமையாத வற்றை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எந்தவொரு இராணுவத் தளபதியும் எல்லாவற்றையும், சாத்தியமான ஒவ்வொரு ஆயுதத்தையும், சாத்தியமான ஒவ்வொரு பொருளையும் கேட்பார். முன்னுரிமைகளைப் புரிந்து கொள்வதும், வெற்றிக்கு உண்மையில் தேவையான வற்றின் அடிப்படையில் அந்த முன்னுரிமைகளைப் பகுத்தறிவுடன் ஒழுங்கமைப்பதும், எங்கள் நோக்கங்-களுக்கு முற்றிலும் பொருந்தாத தேவைகள் மற்றும் இன்றியமையாதவற்றை அகற்றுவதும் எனது பணியாக இருந்தது.*[109]

கோத்தபாய 'போர்த் திட்டங்களில் தீவிரமாக இருந்தார்' என்றும் 'போர் முன்னேற்றத்தில் கோத்தபாய தீவிரமாக ஈடுபட்டார்' என்றும் கூறும் போது களத்தில் இருந்த இலங்கை இராணுவ அதிகாரிகளும் இதை உறுதிப் படுத்துகின்றனர்'.[110]

போரின் போது ஒரு திட்டபணியை நடத்துவது குறித்து இரு உயர் அதிகாரிகளுக்கு நடுவில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது அவர் களத்தில் இருந்ததாகச்

---

105 "இந்தத் தாக்குதல் டிசம்பர் 1, 2006 அன்று தொடங்கப்பட்டது. முந்தின நாள் எனக்கு உடல்நிலை சரியில்லை. அதனால், அன்று நான் பணிக்குச் செல்லவில்லை. ஆனால், முதல் நாள் வழக்கம் போல் பணிக்குச் செல்லத் தயாரானேன். அதிகாலையிலேயே தயாராகிவிட்டாலும், புறப்படுவதற்கு எனக்கு ஏறக்குறைய 10.30 வரை ஆகும். அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. போர் ஏற்கனவே தொடங்கிவிட்டதால் எனக்குப் பல அழைப்புகள் வந்தன. தளபதிகள் என்னை அழைத்து பல பிரச்சினைகள் பற்றி கூறினார்கள் (லங்காதீப நேர்முகம் 16 டிசம்பர் 2012)

106 21 May 2015 Interview with Shanika Sriyananda, http://www.ft.lk/article/423001/FT-EXCLUSIVE--%E2%80%9CI-am-a-very-religious-person--the-truth-will-prevail%E2%80%9D--Gotabaya

107 See Business Today, Deputy Inspector General of Police – Sisira Mendis [Interview], April 28, 2009, http://www.businesstoday.lk/printarticle.php?articleid=23

108 "உண்மையில், கொழும்பில் சிறந்தமுறையில் பாதுகாப்பை உறுதிசெய்வதில் முக்கியப் பொறுப்பில் இருந்தவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கோத்தபாய ராஜபக்ச ஆவார். எங்கள் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் அவருக்குத் தகவல் அளிக்க வேண்டும். மேலும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தினமும் விசாரணையைப் பற்றி தொடர்ந்து கேட்கிறார். மூத்த DIG நிமல் மெதிவகே எங்களுக்கு மிகுந்த ஆதரவை வழங்குகின்றார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்தான் எங்களுடைய பலம்; அவர் எங்கள் அனைவரையும் ஒரு குழுவாக ஒன்றிணைப்பதில் வெற்றி பெற்றுள்ளார், இது எங்கள் உளவுப்பணி வெற்றிக்கு வழிவகுத்தது. பிசினஸ் டுடே, மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் - அனுர சேனாநாயக்க [நேர்காணல்], மே 6, 2009, http://www.businesstoday.lk/printarticle.php?articleid=201.4 Business Today, Defense Secretary Gotabaya Rajapaksa: The Will [Interview], May 2, 2010, http://www.businesstoday.lk/printarticle.php?articleid=2434.

109 "Winning wars: political will is the key", Indian Defence Review, op. cit. V.K. Shashikumar, "Lessons from the War in Sri Lanka", Indian Defence Review 24, no. 3, July-September 2009

110 Statement on file.

சாட்சி ஒருவர் தெரிவித்தார். கோத்தபாயவுக்கு நெருக்கமானவர் என்று அறியப்பட்ட ஓர் அதிகாரி, 'அவருக்கு கோத்தபாயவிடம் இருந்து உத்தரவு இருந்ததாகவும், அவர்கள் அனைவரும் ஒரே அரசாங்கத்தில் பணியாற்றுவதாகவும் வலியுறுத்தினார். அனைவர் முன்னிலையிலும் கோத்தபாயவை அழைத்து ஒரு பெரிய காட்சியை அவர் உருவாக்கினார், மேலும் சம்பந்தப்பட்ட பிரிவு 'அதைச் செய்ய மறுக்கிறது' என்று கூறினார். வழக்கமான கட்டளைக் கட்டமைப்பைத் தவிர்த்து, களத் தளபதிகள் நேரடியாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் அறிக்கை செய்ததை இது சுட்டிக் காட்டுகிறது. அவரது சக ஊழியர்களின் அறிக்கைகளின்படி, கோத்தபாய தனது துணை அதிகாரிகளுடன் உத்திகளை ஒருங்கிணைக்கவும், நடவடிக்கைகளைத் திட்டமிடவும் மற்றும் அறிக்கைகளைப் பெறவும் வழக்கமான சந்திப்புகளை நடத்தினார்.[111] மே 6, 2009 இல் கொழும்பில் ஒரு நேர்முகத்தில் முதுநிலை காவல்துறை அதிகாரி பாதுகாப்புப் படைகளை மேற்பார்வை செய்யும் கோத்தபாயவின் பங்கை விளக்கினார்.[112]

### நுண் இயக்கக் கட்டுப்பாடு

கோத்தபாய ராஜபக்ச தாக்குதல்களை மட்டுமே ஒருங்கிணைக்கவில்லை ஆனால் குறிப்பிட்ட போர்கள் அல்லது நடவடிக்கைகளின் போது விளைவைப் பாதிக்கும் படியான குறிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

ஓர் ஆளில்லா விமானத்தை அதன் இயக்க நேரம் முடிந்த பின்னரும் தொடர்ந்து இயக்குமாறு விமானப்படைக்கு கோத்தபாய உத்தரவிட்டார். இது தரைவழி நடவடிக்கை களின் நுணுக்கமான விவரங்களில் அவரது ஈடுபாட்டைச் சுட்டிக் குறிக்கிறது.

*ஒரு கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஒரு விலைமதிப்பற்ற ஆளில்லா உளவு விமானத்தை அதை இழப்பதாக இருந்தாலும் பரவாயில்லை என்று தரைப்படைகளுக்கு ஆதரவாக இயக்கும்படி SLAF க்கு உத்தரவிட்டார்.* [113]

சிறிலங்காவின் கிழக்குப் பகுதியில் 2006 ஆம் ஆண்டு மாவிலாறு மீதான தாக்குதலுக்கு கோத்தபாய இரண்டு நிமிடங்களில் ஒப்புதல் அளித்ததாக கோத்தபாய ராஜபக்சாவின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்:[114]

*நான் கோத்தபாயவை அழைத்து இது பற்றி (மாவிலாறு) கேட்டேன், மாவிலாறு (புலிகளால்) தடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்... நாங்கள் தாக்குவதற்குத் தயாராக உள்ளோம் என்றேன். இன்னும் 2 நிமிடத்தில் மீண்டும் அழைப்பேன் என்றார். மகிந்த ராஜபக்சவிடம் பேசி முன்னோக்கிச் செல்லுமாறு கூறினார்.*[115]

2007 ஆம் ஆண்டு தொடக்கத்தில், கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் அவரது மெய்க் காப்பாளர்களை கொன்ற வான்வழித் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது, கோத்தபாய ராஜபக்ச, உளவுத் தகவலை அணுகுவதில் தனக்கு இருக்கும் அசாதாரண தொடர்புகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிற தலைவர்களின் இருப்பிடங்கள் குறித்து விரிவான தகவல் இருப்பதாகக் கூறினார்:

*அவர்களது தலைவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும் என்பது வெறும் ஒரு செய்தி மட்டுமே. எல்லா தலைவர்களின் இருப்பிடங்களையும் நான் அறிவேன், நாம் விரும்பினால் அவர்களை ஒவ்வொருவராகக் கொல்ல முடியும். எனவே அவர்கள் தங்கள் மறைவிடங்களை மாற்ற வேண்டும்,' என்று அவர் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறினார். 'நேரம் வரும்போது மட்டும், நாங்கள் அவர்களை ஒவ்வொருவராகக் கொல்வோம்.*[116]

---

[111] See Business Today, Deputy Inspector General of Police – Sisira Mendis [Interview], April 28, 2009, http://www.businesstoday.lk/printarticle.php?articleid=2.

[112] "உண்மையில், கொழும்பில் சிறந்த பாதுகாப்பை உறுதிசெய்வதில் முக்கியப் பொறுப்பில் இருந்தவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆவார். எங்கள் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் அவருக்குத் தகவல் அளிக்க வேண்டும். மேலும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தினமும் விசாரணையைப் பற்றி தொடர்ந்து கேட்கிறார். மூத்த *DIG* நிமல் மெதிவகே எங்களுக்கு மிகுந்த ஆதரவை வழங்குகின்றார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்தான் எங்களுடைய பலம்; அவர் எங்கள் அனைவரையும் ஒரு குழுவாக ஒன்றிணைப்பதில் வெற்றி பெற்றுள்ளார், இது எங்கள் புலனாய்வு வெற்றிக்கு வழிவகுத்தது. பிசினஸ் டுடே, மூத்த காவல்துறைக் கண்காணிப்பாளர் - அனுர சேனாநாயக்க [நேர்காணல்], மே 6, 2009, http://www.businesstoday.lk/printarticle.php?articleid=201.4 Business Today, Defense Secretary Gotabaya Rajapaksa: The Will [Interview], May 2, 2010, http://www.businesstoday.lk/printarticle.php?articleid=2434.

[113] The Island, 24 Dec 2012, http://slwaronterror.blogspot.com/2012/12/ltte-checkmated.html

[114] "ஜூலை 2006 இல், திருகோணமலைக்கு தென்மேற்கே மாவிலாறு பகுதியைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் நீர் வழங்கலுக்கு முக்கியமாக இருந்த நீர்த்தேக்கத்தின் மதகை மூடி, திருகோணமலை கடற்படைத் தளத்தின் மீது தாக்குதல்களை நடத்தினர். இதன் மூலம் கிழக்கில் இறுதி யுத்தம் ஆரம்பமானது. §66, OISl, 2015.

[115] Published 5 April 2019 (Date that he spoke in parliament to be checked) https://newstube.lk/news/6001-2019-04-05-08-29-12

[116] *https://www.reuters.com/article/idINIndia-30292520071102*

கோத்தபாயவின் அதிகாரபூர்வமான வரலாற்று ஆசிரியரான சி.ஏ, சந்திரபிரேமா வெடிபொருள் இருப்புக் குறித்த அணுகலிலும் இருந்தார்:

*போரின் போது, இராணுவ இயக்க இயக்குநர் உதய பெரேரா, கோத்தபாயவுடன் [கோத்தபாய ராஜபக்ச தொடர்ந்து தொடர்பில் இருந்து வெடிமருந்து இருப்புக் குறித்து அவருக்குத் தெரியப்படுத்தினார்.* [117]

## E. பிரச்சாரப் போரையும் கட்டுப்படுத்துதல்

இராணுவத்திற்குக் கட்டற்ற சுதந்திரத்தை வழங்குவது, சர்வதேச சமுதாயத்தின் அழுத்தங்களை எதிர்ப்பது, போரை நிறுத்த அல்லது பேச்சுவார்த்தை நடத்த மறுப்பது,[118] ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது (அல்லது அவர் கூறிவது போல், 'போர்த் தகவல்களின் ஒரு திசை ஓட்டத்தை' உறுதிப்படுத்துவது) கோத்தபாயவின் உத்தியாக இருந்ததாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர். கோத்தபாய போர் தொடர்பான பிரச்சாரம் அல்லது விளம்பரப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டார், இது தாக்குதலை நிறுத்துவதற்கான சர்வதேச அழுத்தத்தை எதிர்ப்பதற்கு இலங்கைக்கு இன்றியமையாததாக இருந்தது. அப்போது *ஜனாதிபதி*யின் செயலாளர் லலித் வீரசிங்க தெரிவித்தார்:

*கோத்தபாய அரசின் விளம்பர வல்லுநரின் வேலையை ஏற்றுக்கொண்டார். ஒரு பொது ஊழியரும், இராணுவ அதிகாரியுமான ஒருவர் இவ்வளவு சிறப்பாகச் செய்வதை என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.*[119]

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்றுவரும் போரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை சமாளிப்பதில் கோத்தபாய ராஜபக்ச திறமையாகச் செயல்பட்டார். போர் நிறுத்தம் அவர்களுக்குப் புதிய வாழ்வை அளிப்பதோடு அவர்களின் தோல்வி அடையும் காலத்தை நீட்டிக்கும் அல்லது வாய்ப்பைக் குறைக்கும் என்று அவர் அஞ்சினார்.

அறிக்கைகளை வெளியிடுவதில் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொண்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரும் என்று 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் குறிப்பாக ஜெர்மனி மற்றும் சுவிஸ் நாட்டுத் தூதர்களையும் பெரிய செய்தி நிறுவனங்களையும் அவர் எச்சரித்தார்.[120] ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் போர்நிறுத்தம் என்பது ஒரு நகைச்சுவை என்று கூறினார்.[121] மேலும் மனிதாபிமான கவலைகள் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் காப்பாற்றும் ஒரு தந்திரம் என்றார்.[122] 2009 ஆம் ஆண்டு மே மாத வாக்கில், கோத்தபாய ராஜபக்ச போர்நிறுத்த யோசனையை நிராகரித்ததோடு மூன்றாம் தரப்பினரின் முன்னிலை இல்லாமல் சரணடைவது பற்றி மட்டுமே பேசினார். இது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவை நீதிக்குப் புறம்பான முறையில் கொலை செய்தது உட்பட விதி மீறல்களோடு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு வழிவகுத்தது.[123] கதைகளைப் புனையவும், 'மனிதப்

117 P219 Gota's War.

**118** விடுதலைப் புலிகள். ஆனால் வெற்றி நெருங்கியபோது, அவர்கள் உத்தரவுகளை மாற்றியமைத்து, மனிதாபிமான நெருக்கடி மற்றும் பொதுமக்கள் உயிரிழப்புகள் பற்றிய சர்வதேச கவலைகள் காரணமாக நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்குமாறு இராணுவத்திற்கு அறிவுறுத்தினர். எனவே நாங்கள் ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதை உறுதி செய்ய வேண்டும். சர்வதேச சமூகம் எங்கள் மீது சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கட்டாயப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை, "என்று பெயர் வெளியிட விரும்பாத ஜனாதிபதி அலுவலகத்தில் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகிறார். http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/

119 *https://www.businesstoday.lk/article.php?article=7101*

120 1 பிப்ரவரி 2009: *கோத்தபாய ராஜபக்ச* "பொறுப்பற்ற முறையில் செயல்படும் தூதர்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும் INGO க்கள் "மோசமான விளைவுகளை" சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தார்: "மிகுந்த இழப்புகளோடு பாதுகாப்புப் படைகள் இறுதி மரண அடியைக் கொடுத்துக்கொண்டிருக்கும்போது LTTE பயங்கரவாதிகளுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுக்க (அவர்கள் முயன்றால்) அவர்கள் வெளியே துரத்தப்படுவார்கள்," என்று அவர் கூறினார். சில தூதுவர்கள், குறிப்பாக ஜெர்மனி மற்றும் சுவிஸ் நாட்டுத் தூதுவர்கள் மற்றும் சில செய்தி நிறுவனங்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதாக *கோத்தபாய* மேலும் தெரிவித்தார். *கோத்தபாய*, CNN, அல்-ஜசீரா மற்றும் BBC யை "பொறுப்புடன் செயல்படுங்கள் அல்லது துரத்த நேரிடும்" என்று பெயர்சொல்லி அழைத்துக் கூறினார். தி ஐலண்ட், 1 பிப்ரவரி 2009 http://www.island.lk/2009/02/01/news1.html

121 26 ஏப்ரல் 2009: ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய *கோத்தபாய ராஜபக்ச*, போர்நிறுத்தம் குறித்த ஆலோசனையைக் கேட்டுச் சிரித்தார்: "அது ஒரு நகைச்சுவை. அவர்கள் எங்களுடன் சண்டையிடவில்லை, அவர்கள் எங்களைக் கண்டு ஓடினார்கள். போர் நிறுத்தம் தேவையில்லை. அவர்கள் சரணடைய வேண்டும்." https://www.reuters.com/article/us-srilanka-war/sri-lanka-rejects-tamil-tiger-ceasefire-idUSTRE53P0RV20090426

122 உள்ளூர் நாளிதழ் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போது, போரில் கொல்லப்பட்டது இலங்கைப் படையினரும் பொதுமக்களும்தான், எனவே விடுதலைப் புலிகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகக் கூறிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது வார்த்தைகளை விழுங்கவில்லை மனிதாபிமானம் பற்றிய கவலைகள் போரில் சிக்கி இருந்த பிரபாகரனையும் அவரது உயர்மட்டத் தலைவர்களையும் விடுவிப்பதற்காக சிலர் கையாண்ட தந்திரம் மட்டுமே என்று அவர் கூறினார், பிரபாகரன் கொல்லப்படும் வரை, அல்லது உயிருடன் பிடிக்கப்படும் வரை போர் நிற்காது என்று *கோத்தபாய* மிலிபான்ட் மற்றும் குஷ்னரிடம் கூறினார், http://www.island.lk/2009/04/30/news18.html 30 April

123 1 May 2009: "...பொதுமக்களை விடுவிப்பதற்காக இந்தக் கட்டத்தில் போரை நிறுத்த வேண்டிய அவசியமில்லை அமெரிக்கா முன்வைத்த ஆலோசனையைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச முற்றிலுமாக நிராகரித்தார். சரணடைவது என்றால் விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையிடமே அடைய வேண்டுமே தவிர எந்த ஒரு மூன்றாம் தரப்பினர் முன்னிலையில் அல்ல என்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச. LTTE பிளவுபட்டது, பெரும்பான்மையினர் சரணடையவும் சிறுபான்மையினர் தொடர்ந்து போரிடவும் விரும்பினர், 1 மே 2009, டெய்லி நியூஸ்.

பேரழிவுக் காட்சியைக் வடிவமைக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு ஊடகங்கள் உட்பட சர்வதேச அமைப்புகளுக்குள் ஊடுருவி உள்ளது என்ற அளவுக்கு கோத்தபாய ராஜபக்ச குற்றஞ்சாட்டினார்.'[124]

**மறுப்பு: பொதுமக்கள் யாரும் கொல்லப்படவில்லை**

அண்மை ஆண்டுகளில் நடந்த பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட மிகக் காட்டுமிராண்டித்தனமான போர் ஒன்றில்[125] அரசின் எண்ணப்படி உண்மையிலேயே ஒரு மனிதாபிமான மீட்புப் பணியை நடத்துவது உட்பட 'பொதுமக்களில் ஒருவரும் சாகக் கூடாது' என்ற கொள்கையைப் பராமரித்ததாக நம்புவதற்கு இயலாத கூற்றைத் தொடர்ந்து பேணுவது ராஜபக்ச பிரச்சார உத்தியின் வெற்றியாக உள்ளது வியப்பிற்குரிய ஒன்றாகும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ச 'பொதுமக்கள் யாரும் சாகக் கூடாது' என்பதே நோக்கம் என்று ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறினார்.[126] ஆனால் இது உண்மைக்கு முற்றிலும் நேர்மாறானது என்பது இந்த இந்திய இராணுவ ஆய்வாளரின் கூற்று:

*பொதுமக்கள் உயிரிழப்புகள் ஏற்படும் என்று கூறப்பட்டதோடு ராஜபக்ச பழியைச் சுமக்கத் தயாராக இருந்தார். இது இராணுவத்திற்கு மிகுந்த நம்பிக்கையை அளித்தது. இது படைகளுக்குச் சிறந்த மன உறுதியை அளித்தது,' என்று இந்த மேற்கோள் குறிப்பிடப்படாமல் இருக்க விரும்புகின்ற ஓர் சிறிலங்கா அமைச்சர் கூறுகிறார்.[127]*

உலகச் சமுதாயத்தால் இப்படிப்பட்ட ஓர் அப்பட்டமான மறுப்பை எதிர்த்து சவால்விட முடியவில்லை என்று தோன்றுகிறது. ஐ.நா. சார்லஸ் பெட்ரி உள்ளன மீள்பார்வை அறிக்கை விவரிக்கிறது:

*ஐ.நா-வின் கடிதங்களுக்கு அரசு குறைவாகவே பதில் அளித்தது, மேலும் பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றிய ஒவ்வொரு குறிப்பையும் மறுப்பதில் கவனம் செலுத்தியது. மார்ச் 13 அன்று, USG-OCHA விடம் இருந்து மார்ச் 10 ஆம் தேதி ஜனாதிபதி ராஜபக்சவுக்கு அனுப்பிய கடிததத்திற்குப் பதிலளிக்கும் விதமாக, பேரிடர் மேலாண்மை மற்றும் மனித உரிமைகளுக்கான அமைச்சர் இவ்வாறு எழுதினார்: '...பாதுகாப்புத்துறை அமைச்சகச் செயலாளர் உங்களிடம் கூறிய கொள்கையை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். எங்களது பாதுகாப்புப் படையினர் போர்த்தடை மண்டலத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடத்துவதில்லை என்றும், பொதுமக்கள் வாழும் பகுதிகளில் கனரக ஆயுதங்களைப் பயன் படுத்துவதில்லை என்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகச் செயலாளர் உங்களிடம் கூறிய கொள்கையை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.[128]*

உயிரிழப்புகள் குறித்து செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர்களும் மருத்துவ நிபுணர்களும் தாக்கப்பட்டனர். ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் கூறுவது என்றால் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம், உயிரிழப்பு விவரங்களை வெளியிட வேண்டாம் என்று அரசிடம் இருந்து உத்தரவு பெற்றதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தில் இருந்த உதயன் பத்திரிகையின் அலுவலகம் கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது.[129]

**கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியதை மறுத்தல்**

இராணுவம் இன்னும் கனரக ஆயுதங்களை அதிகமாக மக்கள் தொகை கொண்ட இடங்களில் பயன்படுத்தி வந்தது வெளிப்படையாகத் தெரிந்துவிட்டதால் முற்றிலும் பொதுமக்களுக்கு உயிரிழப்பு இல்லை என்ற கொள்கையை வலியுறுத்தி வந்த பிரச்சாரத்தைத் தொடர்ந்து பராமரிப்பது அரசுக்குக் கடினமாகிவிட்டது. பாதுகாப்புப் படைகள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்ற வாதத்தை மறுத்துச் செய்யப்பட்ட பிரச்சாரத்தில் கோத்தபாய ராஜபக்ச முக்கியப் பங்கு வகித்தார். அவர் பின்னர் படித்த பாடங்கள் மற்றும் சமரச ஆணையத்தில் பின்வருமாறு சாட்சியம் அளித்தார் அதாவது:

---

[124] "அரசையும் பாதுகாப்புப் படையினரையும் இழிவுபடுத்துவதற்கும், போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த அழுத்தம் கொடுப்பதற்கும் சர்வதேச அமைப்புகளிலும் ஊடக நிறுவனங்களுக்குள்ளும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஊடுருவிய புலிகளின் முகவர்களால் நன்கு திட்டமிடப்பட்ட பிரச்சாரம் நடக்கிறது. LTTE யிடம் ஊதியம் பெறுகிறவர்கள், மனிதப் பேரழிவுக் காட்சியை உருவாக்குவதற்காகக் கதைகளைப் புனைந்து பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர்" என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார். குடிமக்களின் நிலை : முழு உண்மையையும் சொல்லுங்கள் - *பாதுகாப்பு அமைச்சின்* செயலாளர். INGOs, international media should not hide main fact - LTTE keeping civilians hostage, 7 FEB 2009, DAILY NEWS, ON FILE.

[125] https://itjpsl.com/reports/war Exhbition of photos of 2009 war by ITJP entitled War on Civilians.

[126] https://lrrp2.wordpress.com/2008/08/31/human-suffering-looms-large-in-the-wanni/

[127] http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/

[128] Petrie p 34, https://digitallibrary.un.org/record/737299?ln=en

[129] https://www.tamilnet.com/art.html?catid=13&artid=28822

TamilNet, Tuesday, 24 March 2009, 23:57 GMT]
யாழ்ப்பாணத்தில் இருந்த உதயன் தமிழ் நாளிதழின் முக்கிய அலுவலகம் செவ்வாய்க்கிழமை இரவு 11.10 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியதாகப் பத்திரிகை நிர்வாகம் கொழும்பில் ஊடகங்களுக்குத் தெரிவித்தது. வன்னியில் பொதுமக்கள் உயிரிழந்தது தொடர்பான செய்திகளை வெளியிடவோ அல்லது LTTE யின் தலைவர்கள் செய்தி நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகளின் உள்ளடக்கங்களை மீண்டும் வெளியிடவோ கூடாது என *ராஜபக்ச* அரசின் உயர் அதிகாரிகள் வாய்மொழியாக அறிவுறுத்தியதை அடுத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தமிழ் ஊடக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. வன்னியில் 'பாதுகாப்பு வளையத்திற்குள்' இலங்கைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட சிறுவர்களின் புகைப்படங்களை உதயன் மற்றும் வலம்புரி நாளிதழ்கள் அண்மையில் வெளியிட்டுள்ளன.

*கனரக ஆயுதப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது அடுத்த முக்கியவிடயமென நான் எண்ணுகிறேன். பிந்திய கட்டங்களில், பொதுமக்கள் மற்றும் மிகவும் நெருக்கமான சிறிய பகுதிகள் காரணமாக, மறைமுகத் துப்பாக்கிச் சூடு, பீரங்கி, மோட்டார் மற்றும் வான்வழித் தாக்குதல்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தலாம் என்று ஜனாதிபதி முடிவு செய்தார், மேலும் படை வீரர்கள் இலக்கைக் கண்டறிந்து சுட வேண்டும். தனிப்பட்ட ஆயுதங்கள் மூலம் மட்டுமே. அதைச் செய்ய வேண்டி இருந்ததால் நாங்கள் அதிக உயிரிழப்புகளைச் சந்தித்தோம் என்று என்னால் கூறமுடியும்...*

தமிழ் மக்கள் காயமடைவதைத் தடுக்கும் முயற்சியினால் இராணுவத்தினர் உயிரிழப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார். [130]

இருந்தாலும், ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை இரண்டு சந்தர்ப்பங்களை மேற்கோள் காட்டியது: அரசு கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்று கூறியது, ஆனால் அவற்றை அடிக்கடி பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.[131] 2015 ஐ.நா. அறிக்கை ஏப்ரல் 2009 இன் பிற்பகுதியிலும் கனரக ஆயுதங்கள் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறியது.[132] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (HRW) மே 2009 இல் கனரக ஆயுதங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதைப் பற்றி அறிக்கை அளித்தது.[133] மேலும் இது மார்ச்,[134] ஏப்ரல் மற்றும் மே 2009 இல்[135] அமெரிக்க அரசால் விக்கிலீக்ஸில்[136] காணப்படும் டெலக்ஸ்களின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்திடம் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. பல மாதங்களாகக் கனரக ஆயுதத் தாக்குதலின் மத்தியில் இருந்த பலரின் சாட்சியமும், போரின் இறுதி சில நாட்களாகக் குறுகிய இடத்தில் பொதுமக்கள் நெருக்கமாக இருக்கிறார்கள் என்று இராணுவத்துக்குத் தெரிந்திருந்தும் அவர்களுக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்தால் திரளாக உயிரிழப்பு நிகழும் என்று அறிந்தும் மல்டி பேரல் ராக்கெட் லாஞ்சர்களைப் பயன்படுத்தியதற்கான பல சாட்சியமும் தப்பிப் பிழைத்தவர்களிடம் இருந்து ஏராளமாக ITJP யால் சேகரிக்கப்பட்டது.

---

[130] UNPOE, para 101, quoting PRIU.

[131] para 101 regarding 25 Feb and 27 Apr 2009.

[132] "ஏப்ரல் 27 அன்று, போர் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளதாகவும், "பொதுமக்கள் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய கனரகத் துப்பாக்கிகள், போர் விமானங்கள் மற்றும் வான்வழி ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு" பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது. இருப்பினும், குண்டு வீச்சு நிறுத்தப்படவில்லை. மேலும் சில ஆதாரங்கள் கூறுவது போல அது மேலும் தீவிரமடைந்தது. பாரா91

[133] https://www.hrw.org/news/2009/05/12/sri-lanka-satellite-images-witnesses-show-shelling-continues

[134] "பாதுகாப்பு மண்டலத்தில் அரசு குண்டு வீசுவதைப் பற்றி எதிர்ப்புத் தெரிவிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சயைத் தூதர் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்தது."

https://wikileaks.org/plusd/cables/09COLOMBO277_a.html, 09COLOMBO277_a

[135] மே 9 மற்றும் 10 ஆம் தேதி மோதல் மண்டலத்தில் அதிக குண்டுவீச்சு இருந்ததால் குறைந்தபட்சம் பல நூறு பொதுமக்கள் இறந்தனர்.

https://wikileaks.org/plusd/cables/09COLOMBO514_a.html

"முன்னதாக அந்த நாளில், பேரிடர் மேலாண்மை மற்றும் மனித உரிமைகள் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ச ஆகியோர் கலந்துகொண்ட மனிதாபிமான உதவிக்கான ஆலோசனைக் குழுவின் (CCHA) கூட்டத்தில், இந்தக் குற்றச்சாட்டில் அமெரிக்காவின் தீவிரமான அக்கறையை வலியுறுத்தினார். போரின் மனிதாபிமான விளைவுகள் மற்றும் பாதுகாப்பான மண்டலத்தில் பேரளவில் பொதுமக்கள் உயிரிழப்புகள் பற்றிய அறிக்கைகள். உண்மையானால், கனரக பீரங்கிகளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுவது ஜனாதிபதியின் உறுதிமொழிகளை மீறுவதாக அவர் குறிப்பிட்டார், மிக சமீபத்தில் மே 7 அன்று தூதரக சமூகத்திடம். பாதுகாப்பான மண்டலத்தில் அரசு கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை சமரசிங்க திட்டவட்டமாக மறுத்தார்."

[136] https://wikileaks.org/plusd/cables/09USUNNEWYORK494_a.html

ஏப்ரலிலும்: "பாதுகாப்பு மண்டலத்தில் இரு தரப்பினரும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகத் தூதரகம் தொடர்ந்து குழப்பமான அறிக்கைகளைப் பெற்று வருவதாகத் தூதர் மேலும் கூறினார்." மேலும் "NFZ இன் தெற்குப் பகுதியின் மேல்பகுதியில் கடும் ஷெல் தாக்குதல் ஏப்ரல் 22 அதிகாலையில் பதிவாகியிருந்தது."

https://search.wikileaks.org/plusd/cables/09COLOMBO454_a.html

https://wikileaks.org/plusd/cables/09COLOMBO479_a.html 09COLOMBO479_a

# 2. இறுதிப் போரில் நடந்த குறிப்பிட்ட நிகழ்வுகள்

போர் முடிந்த பின் குறிப்பிட்ட நிகழ்வுகளில் கோத்தபாய ராஜபக்ச வகித்த பங்கும், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவற்றை அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பாதுகாப்புப் படைகள் மீறியதைப் பற்றிய அவரது அறிதலும் குறித்து இந்தப் பகுதி கவனம் செலுத்துகிறது. மேலே கோடிட்டுக் காட்டியது போல, மரபான அதிகாரப் படிநிலையைக் காற்றில் பறக்கவிட்டு களத்தில் இருந்த தளபதிகளுக்கு நேரடி உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு ராஜபக்ச கருவியாக இருந்தார் என்பது தெரிகிறது. வன்னியில் இருந்த பொதுமக்கள் உணவும் மருந்தும் இல்லாமல் பட்டினியிலும் உயிர்வாழத் தேவையான இன்றியமையாத பொருள்கள் மறுக்கப்பட்ட நிலையிலும் இருந்ததனால் நூற்றுக்கணக்கானோர் இறந்த மனிதாபிமான சிக்கல் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. கூடுதலாகப் பொருள்களை அனுப்புவதைத் தடைசெய்வதற்குப் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் (MOD) ஒப்புதல் தேவை என்றும் அதை வழங்கும் அதிகாரம் கோத்தபாய ராஜபக்சயிடம்தான் இருந்தது என்றும் அறிக்கைகள் கூறுகின்றன. ஐ.நா. முகமையங்களையும் உதவிப் பணியாளர்களையும் செப்டம்பர் 2008 இல் போர் மண்டலத்தில் இருந்து விலகிச்செல்லும்படி எடுக்கப்பட்ட சர்ச்சைக்குரிய முடிவு கோத்தபாய ராஜபக்சவால் எடுக்கப்பட்டது மட்டுமல்லாமல் அரசு சாரா அமைப்புகளுக்கும் ஐ.நா.-வுக்கும் வாய்மொழியாகவும் எழுத்து பூர்வமாகவும் தெரிவிக்கப்பட்டது. ஐ.நா. மற்றும் உதவிப் பணியாளர்களை அகற்றியதுதான் வெகுஜனத்தின் மீது நடத்தப்பட்ட அட்டூழியங்களுக்கு முன்னோடியாக இருந்து சுதந்திரமான சர்வதேச மேற்பார்வையையும் புலனாய்வுக்கு சாத்தியமான சான்றுகளையும் இல்லாமல் செய்தது.

## கிழக்குப் பகுதி

சிறிலங்காவின் கிழக்குப் பகுதியில் முதன்முதலில் போர் மீண்டும் தொடங்கியது, கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தார். 2006 ஆம் ஆண்டு கோத்தபாய ராஜபக்ச பதவியேற்ற சிறிது காலத்திலேயே நோர்வே போர்நிறுத்த மத்தியஸ்தர்கள் அவரைச் சந்தித்தனர், மேலும் கோத்தபாய ஏற்கனவே இராணுவத் தீர்வுக்குத் தயாராகி வருவதாகத் தாக்குதல் பற்றிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.[137] 2008-9[138] இல் கிழக்கில் நடந்த போர் வடக்கில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கான சோதனை ஓட்டமாக இருந்தது மேலும் *சிறிலங்கா* அரசாங்கம் பெரிய அளவில் சர்வதேச விமர்சனங்களை எதிர்கொள்ளவில்லை என்பதும் வடக்கில் போருக்கு அவர்களை உற்சாகப்படுத்தியது. 2009 ஆம் ஆண்டு வடக்கில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு முன்னோடியாக கிழக்கில் முகாம்களிலும் மருத்துவ மனைகளிலும்[139] இருந்த பொதுமக்கள் மீது இராணுவம்[140] குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. வாகரைப் போரைப் பற்றி எழுதிய ஜே.எஸ் திசைநாயகம் போன்ற பத்திரிகையாளர்கள் பின்னர் தடுத்து வைக்கப்பட்டு அதுபற்றி அவர்கள்

---

[137] ஏப்ரல் 6, 2006 அன்று ஹான்சன்-பவுரும் பிராட்ஸ்கரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்*சவை* பதட்டத்துடன் சந்தித்தனர். இலங்கையின் இன மற்றும் அரசியல் பிரச்சினைகளை இராணுவத்தின் மூலம் தீர்க்க முடியுமா என்ற கேள்விக்கு *கோத்தபாய* 'ஆம்' என்று பதில் அளித்தார்." https://www.oecd.org/countries/srilanka/49035074.pdf

[138] "கிழக்குப் பகுதியைக் கைப்பற்றியதில் கற்றுக்கொண்ட படிப்பினைகள் பின்னர் வடக்குப் பகுதி போரின் போக்கை வடிவமைத்து. இராணுவத் தளபதிக்கு இராணுவ ரீதியான வெற்றியில் அதிக நம்பிக்கையை அளித்தன. வடக்கில் நடைபெற்ற போரைப் போலவே, அரசு கிழக்குப் பகுதியில் நடந்த போரையும் மனிதாபிமான நடவடிக்கையாக முன்வைத்தது மேலும் இராணுவத் திட்டமிடல் பொதுமக்களின் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டது என்று வலியுறுத்தியது." §69 OISL இருந்தாலும், உயிரிழப்புகள் குறைவாக இருந்ததற்காக இராணுவத்தை அமெரிக்க அரசு பாராட்டியது, இது வடக்கிலும் பெரிய அளவில் அதே தந்திரோபாயங்களை மீண்டும் கடைப்பிடிப்பதற்கான களத்தை அமைத்தது.

"ஆரம்ப குண்டு வீச்சு சம்பவத்துக்குப் பின், இவ்வளவு குறைந்த பொதுமக்கள் உயிரிழப்போடு வெற்றிகரமான போரை நடத்தியதற்காகச் செயலாளரைத் தூதர் பாராட்டினார்." https://wikileaks.org/plusd/cables/07COLOMBO214_a.html 07COLOMBO214_a

[139] https://reliefweb.int/report/sri-lanka/over-100-civilians-dead-and-injured-school-and-hospital-hit-sri-lankan-army-attack

[140] "தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பமைப்பு 12 சாட்சிகளிடம் விசாரணை நடத்தியது. குண்டுகள் எச்சரிக்கை ஏதுமின்றி விழுந்தன என்று எல்லோரும் கூறினார்கள். பொதுவாகப் புலிகள் அடிக்கடி அப்பகுதியைச் சுற்றுவது உண்டு என்றாலும், தாக்குதல் நடந்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்னரோ IDP முகாமில் அல்லது அதற்கு அருகில் LTTE எவரும் இருக்கவில்லை என்றும் அனைவரும் கூறினர். இடம்பெயர்ந்தவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காக, முகாம் பகுதியில் LTTE காவலர்களை வைத்திருந்தனர், ஆனால் LTTE யின் இராணுவத் தளம் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கரையோரத்தில் உள்ள சின்னகங்கை முகாமாகும். நேர்காணலுக்கு வந்தவர்களில் எவரும் அன்றைய தினம் குண்டு வீச்சுத் தாக்குதலைக் காணவில்லை அல்லது கேட்கவில்லை." https://www.hrw.org/reports/2007/srilanka0807/4.htm

எழுதியதற்காகக் குற்றம் சாட்டப்பட்டார்கள்.[141] இதில் வேடிக்கை என்ன வென்றால் 'பொதுமக்கள் உயிரிழப்புகள் இல்லை' என்ற முழக்கம் முதன்முதலில் கிழக்கில் இராணுவத்தால்[142] உருவாக்கப்பட்டு அதை யாரும் எதிர் கேள்வி கேட்காமல் அது தொடர்ந்தது.

அன்றைய கடற்படைத் தளபதியாக இருந்த வசந்த கரன்னாகொட எழுதிய புத்தகத்தின்படி, 2006 ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் சிறிலங்காவின் கிழக்கில் சம்பூர் மீதான தாக்குதலுக்கு உத்தரவிட்டவர் கோத்தபாய ராஜபக்ச [போர் நிறுத்தத்தை அப்பட்டமாகப் புறக்கணித்து][143] சம்பூரை தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது நாட்டின் மிக முக்கியமான கடற்படைத் தளமான திருகோணமலைக்கு ஆபத்தாக இருக்கிறது என்பது அரசின் நம்பிக்கை. 2006 ஆம் ஆண்டு சம்பூர் மீது தாக்குதல் நடத்த கருணாவின் கீழ் பிரிந்து சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைப் படைகளைப் பயன்படுத்துமாறு கோத்தபாய ராஜபக்சவிடம் இருந்து உத்தரவைப் பெற்றதை வசந்த கரன்னாகொட நினைவு கூர்ந்தார்.[144]

## வடக்குப் பகுதி

### மன்னார் மாவட்ட மடு

நாட்டின் மிக முக்கியமான கத்தோலிக்க தேவாலயம் இருக்கும் மேற்குக் கடற்கரையில் கிளேமோர் குண்டுத் தாக்குதல்களைப் பயன்படுத்தி மடு பகுதியில் பொதுமக்கள் மீது இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அலகுகள் தாக்கியது குறித்து 2006 மே மாதம் கத்தோலிக்க சபை கோத்தபாய ராஜபக்சவுக்கு நோட்டிஸ் அனுப்பியது.[145] தேவாலயத்தால் எச்சரிக்கப்பட்ட போதிலும், மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலக்குகளுக்கு எதிரான வழக்கமான தாக்குதல்கள் தொடர்ந்தன.[146] இந்தத்

---

[141] "2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிழக்கில் வாகரையில் இராணுவத் தாக்குதல் பற்றிய கட்டுரையின் ஒரு பகுதியும் திஸ்ஸநாயகத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அடங்கும், அதில், "பொதுமக்களுக்கு எதிரான இத்தகைய தாக்குதல்கள், உணவு மற்றும் மருந்து மற்றும் எரிபொருளை மறுத்து மக்களை பட்டினி போட்டு வாகரை மக்களை விரட்டியடித்து, மக்கள்தொகையைக் குறைக்கும் நம்பிக்கையுடன் செய்யப்படும் முயற்சிகளாகும். இந்த நிகழ்வு எழுதப்பட்டு வரும் நிலையில், வாகரைத் தீவிர எறிகணை மற்றும் வான் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது."

https://www.hrw.org/news/2009/01/22/letter-president-mahinda-rajapakse-sri-lanka-free-journalists-unfairly-held

[142] எங்களுக்குச் செய்தி கூறும் 23வது இராணுவப் பிரிவின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் ஆர்.எம்.டி. ரத்மயகே, வாகரையில் இராணுவத்தின் இலக்கு "பொதுமக்கள் உயிரிழப்புகள் இல்லை" என்பதை வலியுறுத்தினார். (குறிப்பு: வாகரைப் போரின்போது தூதுவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுடன் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பேசி, சிறிலங்கா அரசாங்கத்தின் சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு உயிரிழப்புகள் நடந்தது போல் அல்லாமல் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்கு விதிவிலக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் GSL.)

https://wikileaks.org/plusd/cables/07COLOMBO302_a.html

[143] Sri Lanka: LTTE's moment of truth at Sampur - Update 101, South Asia Analysis Group,
By Col R Hariharan (retd.) who was *the Head of Intelligence of the Indian Peace Keeping Force in Sri Lanka, 1987-90.*https://web.archive.org/web/20070706090043/http://www.saag.org//notes4/note331.html

[144] 'மறுநாள் *பாதுகாப்பு அமைச்சின்* செயலாளரைச் சந்திக்கச் சென்றேன்.
"சார், சம்பூர் குண்டுவீச்சால் ஒரு சிறிய பிரச்சினை இருக்கிறது."
சம்பூரில் குண்டுவீசச் சொன்னது நீங்கள்தானே, இப்போது என்ன பிரச்சினை?"
"சார், போர் ஆரம்பித்தால் முதலில் சம்பூரைத் தாக்குவோம் என்பது LTTE க்குத் தெரியும். எனவே, அப்பகுதியை வலுப்படுத்த முயற்சி செய்வார்கள். சார் எனக்கு அனுமதி வழங்கினால், நான் திருகோணமலைக்குச் சென்று, LTTE யிடம் இருந்து பிரிந்து வந்த எமது நண்பர்களை LTTE களுக்கு எதிராகப் பயன்படுத்தி சம்பூரைச் சீர்குலைக்க முடியும்.
"வசந்தா, உங்கள் திட்டம் நன்றாக உள்ளது. அவ்வாறு செய்யவும். திருகோணமலை 22 பிரிவுக்குச் சொல்கிறேன். கமாண்டர் (22வது டிவிஷன் கமாண்டர்) உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்.".
"நன்றி சார்."'
P279, Adhishtanaya - Memoires by Admiral Wasantha Karannagoda. (translated from Sinhala).

[145] https://lrrp2.wordpress.com/2006/05/31/stop-madhu-attacks-mannar-bishop/ "காட்டுப் பகுதிகளில் இருந்து பொதுமக்களைக் கொன்று குவிக்கும் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பேராயர் ராயப்பு ஜோசப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்குக் கடிதம் எழுதியுள்ளார். கடந்த சில வாரங்களில் கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலில் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாகப் பேராயர் கூறினார். "பாதுகாக்கப்பட்ட பகுதியில் இராணுவத் தாக்குதல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு *பாதுகாப்பு அமைச்சின்* செயலாளரிடம் கோரிக்கை வைத்துள்ளேன்" என்றார் பேராயர் ராயப்பு ஜோசப். ஆழமாக ஊடுருவுதல்: மடு ஒரு புனிதமான பகுதியாகக் கருதப்படுவதாகவும், ஆண்டு முழுவதும் ஏராளமான புனிதப்பயணிகள் இங்கு வருகை தருவதாகவும் பிஷப் விளக்கினார். கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு LTTE யே பொறுப்பு என்று தெரிந்த நிலையில், *பாதுகாப்பு அமைச்சின்* செயலாளருக்கு பேராயர் கடிதம் எழுதியது ஏன் என வினவியபோது, இராணுவத்தின் ஆழமாக ஊடுருவித்தாக்கும் பிரிவுகளே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று கூறினார். இந்தத் தாக்குதல்கள் அவர்களால் நடத்தப்படவில்லை என்றும், பாதுகாப்பு அமைச்சகத்தின் நேரடி அறிவுறுத்தலின் பேரில் காடுகளில் சுற்றித் திரியும் விரைவுப் படைகள்தான் இந்தத் தாக்குதல்களை நடத்துகின்றன'

[146] *பாதுகாப்பு அமைச்சின்* செயலாளருக்கு பேராயர் எச்சரிக்கை அளித்த பின்னர் நடந்ததாக அறிவிக்கப்பட்ட சம்பவங்களில் (ஊடக ஆதாரங்கள் மற்றும் ITJP சாட்சி அறிக்கைகளில் இருந்து) தேர்வுசெய்யப்பட்டவை:

29 **ஏப்ரல்** 2006: இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் பிரிவினால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் தமிழர் ஒருவர் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்ததாக தமிழ்நெட் செய்தி வெளியிட்டுள்ளது [146].

22 **மே** 2006: மடுவில் சிறிலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் பிரிவினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக தமிழ்நெட் செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதல்கள் யாவும் இலங்கை இராணுவத்தின் வடபகுதித் தாக்குதலின் தொடக்கத்தில் நிகழ்ந்ததால், இந்தத் தாக்குதல்களில் எதுவும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை மற்றும் இன்றுவரை சர்வதேச விசாரணைகளின் கவனம் 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரத்தக்களரியான இறுதி மாதங்களிலேயே இருந்தது.

அப்போது கேணல் ஜி.வி. ரவிப்பிரியா தலைமையிலான 571 வது படையணியின் உதவியுடன் 572 வது படைப் பிரிவினருக்கு[147] மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுவைக்[148] கைப்பற்றும் பணி வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த இரண்டு படைப்பிரிவுத் தளபதிகளும் நேரடியாக ஜகத் டயஸிடம் தெரிவித்ததோடு, கோத்தபாய ராஜபக்சவின் கூற்றுப்படி, முப்படைத் தளபதிகள் வரை, கட்டளை படிமுறை திறம்பட வேலை செய்தது.[149]

24 ஏப்ரல் 2008 அன்று படைத் தளபதிகள் மடு தேவாலயத்தைக் கைப்பற்றினர்.[150] LTTE, சிறிலங்கா இராணுவம் ஆகிய இரண்டும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயத்தின் மீது அல்லது அதில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்துவதாக ஒன்றையொன்று குற்றம் சாட்டின. தேவாலயத்திற்கு அருகில் போர் நடந்ததால், பொதுமக்கள் வெளியேறினர், ஆனால் கன்னி மேரியின் விலைமதிப்பற்ற சிலையைப் பாதுகாப்பதற்காகப் பாதிரியார்கள் அங்கேயே தங்கி இருந்தனர், மேலும் துப்பாக்கிச் சூடு மிகவும் தீவிரமாக இருந்ததால் பதுங்கு குழிகளில் பதுங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று அவர்கள் விவரிக்கிறார்கள்.[151] இருந்த போதிலும், கோத்தபாய ராஜபக்ச பின்னர் ஜகத் டயஸின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டார்:

*ஜெனரல் ஜகத் டயஸ் 57 ஆவது பிரிவிற்குத் தலைமை தாங்கினார். கிளிநொச்சியை மீட்பது அவரது பொறுப்பு*

---

29 ஜனவரி 2008: மன்னாரில் ஒரு பள்ளியில் இருந்து 6 முதல் 15 வயது வரையிலான சுமார் 50 பள்ளி மாணவர்களுடன் பயணித்தப் பேருந்து மீது மடுவுக்கு அருகில் நடந்த கிளைமோர் தாக்குதலில். அனைத்துக் குழந்தையும் ஒன்றில் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர். இதில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டனர்

அமெரிக்க (US) வெளியுறவுத்துறையின் அறிக்கை இதே நிகழ்வைக் குறிப்பிடுகிறது: ஜனவரி 28 அன்று, LTTE யின் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு பகுதியான மடுவுக்கு அருகில், கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதலில் 9 பள்ளி மாணவர்கள் உட்பட 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் இராணுவம் இல்லை என்று இராணுவச் செய்தித் தொடர்பாளர் மறுத்துள்ளார்.

**ஏறத்தாழ ஜூன்** 2008: மலங்கர்வி மருத்துவமனையில் இருந்து பல்லமடம் மருத்துவமனைக்குப் பயணித்தபோது, வேன் ஒன்று கிளைமோர் கண்ணிவெடியால் வெடித்துச் சிதறியது. ஒரு மூத்த LTTE போராளி, சில பொதுமக்கள் உட்பட சுமார் 3 பேர் கொல்லப்பட்டனர்.

2008 **இன் பிற்பகுதி**: துணுக்காய்க்கும் வெள்ளாங்குளத்திற்கும் இடையில், மருத்துவரின் வாகனம் கிளைமோர் கண்ணிவெண்டி குண்டுகளால் தாக்கப்பட்டதில், வாகனத்தில் பயணித்த கத்தோலிக்க பாதிரியார் ஒருவரும், சுகாதார ஊழியர் ஒருவரும் கொல்லப்பட்டு, ஓட்டுநரும், மருத்துவ ஊழியர் ஒருவரும் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் ஓட்டுநர் குமார் பலத்த காயம் அடைந்தார்.

27 **நவம்பர்** 2008: கிளிநொச்சிக்கு தென்மேற்கே ஐயங்கன்குளத்திற்கு அருகில் கிளைமோர் வெடிகுண்டு தாக்குதல் நடைபெற்றது. இது LTTE களின் தியாகிகள் தினம். ஹெல்த் டெவலப்மென்ட் கவுன்சில் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 13 அல்லது 14 முதலுதவிப் பணியாளர்களை ஓர் ஆம்புலன்ஸ் ஏற்றிச் சென்றது; அவர்கள் LTTE யுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. முதலுதவிப் பணியாளர்களில் சிலர் பள்ளிக் குழந்தைகள். 11 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் அல்லது இருவர் மட்டுமே தாக்குதலில் இருந்து தப்பினர்.

[147] அப்போது 572 ஆம் பிரிவு கேணல் செனரத் பண்டாரவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அவர் பின்னர் ஊடகவியலாளர் ஒருவரிடம் கூறினார்: "ஏப்ரல் 25 அன்று நாங்கள் அந்தப் பகுதியை விடுவித்தோம், ஆனால் அதைப் பயங்கரவாதிகளற்ற பிரதேசமாக உறுதிப்படுத்த வேண்டும் என்ற இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்புத் தளபதி வன்னி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரியாவின் அறிவுறுத்தலின்படி அதை அறிவிக்க மேலும் 72 மணிநேர அவகாசம் எடுத்துக்கொண்டோம்.". நான்கு இராணுவ அதிகாரிகள் மடு தேவாலயத்தைப் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிப்பதாகச் சபதம் செய்தபோது, ஷனிகா ஸ்ரீயானந்தா, Sunday Observer, 9 ஆகஸ்ட் 2009

[148] Ibid.
Also the Lessons Learned and Reconciliation Report (LLRC, 2011) (a government-appointed Commission) places some of the 57 Division in Madhu. Para 3.13.

[149] "எங்களிடம் மன்னார்-பூநகரி போர்முனையில் இயங்கும் அதிரடிப்படை 1, மடு-துணுக்காய் போர்முனையில் 57வது பிரிவு, மாங்குளம் அச்சில் இயங்கும் அதிரடிப்படை 2 மற்றும் வெலிஓயா அச்சில் 59வது பிரிவு உள்ளது. மேலும், எதிரிகளை அச்சுறுத்தும் வகையில் முகமாலையில் இரண்டு பிரிவுகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில், முப்படைத் தளபதிகளின் பங்கு முக்கியமானது ஆகும். பணியில் சேர்ந்ததில் இருந்து எதிரியை எதிர்கொண்ட படைத்தளபதிகள் நமக்குக் கிடைத்தது இதுதான் முதல் முறையாகும். அவர்கள் அனைவரும் முக்கிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இருந்தனர் மற்றும் அந்த அனுபவத்தையும் அறிவையும் புதிய ஆலோசனையாகக் கொண்டு வந்துள்ளனர். அவர்களால் போரைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் அனைவரும் உயர்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள், அதிக உந்துதல் மற்றும் விதிவிலக்கான திறன்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களின் திறன்களைப் பற்றி நன்குப் புரிந்து கொண்டுள்ளனர், எனவே குறிப்பிட்ட பணிகளைச் செய்ய சரியான அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க முடிகிறது. (*கோத்தபாய ராஜபக்ச*) நாட்டின் பாதுகாப்பு வியூகத்தின் பின்னால் உள்ள மனிதர், *கோத்தபாய ராஜபக்ச*வுடன் பிசினஸ் டுடே பேட்டி. அணுகல்
http://www.businesstoday.lk/cover_page.php?issue=201

[150] *Madhu where the LTTE began its retreat,* Shamindra Ferdinando, 14 JUNE 2011, THE ISLAND NEWSPAPER.
The offensive involved 572 Brigade Commander Lt. Col. Senarath Bandara, 7 CLLI Lt. Col. Ranjith Abeywardena, 10 CLLI Lt. Col. Jagath Kodditiwakku and 7SR Lt. Col Kithsiri Liyanage, according to: *When four military officers vowed to free Madhu Church of terrorists,* Shanika SRIYANANDA, Sunday Observer, 9 August 2009.
*"The liberation of Madhu by the 57 Div was the first significant victory achieved by the Army on the Vanni front."* Ibid.

[151] *Shell fire hits Madhu Shrine,* Amantha Perera, The Sunday Leader, accessed at http://www.thesundayleader.lk/archive/20080406/defence.htm

*என்பதால் அவர் ஒரு மகத்தான பணியைச் செய்தார். மனிதாபிமான நடவடிக்கைகளின் ஆரம்பம் முதல் கடைசி நிமிடம் வரை அங்கேயே இருந்தார்.*[152]

### கொழும்பு

2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொழும்பில் உள்ள லாட்ஜ்கள் என அழைக்கப்படும் மலிவான விடுதிகளில் இருந்து திடீரென வெளியேற்றப்பட்டு, காவல்துறையினரின் பாதுகாப்புடன் பஸ்களில் தீவின் வடகிழக்குப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.[153] கொழும்பில் உள்ள தமிழர் பகுதிகளில் உள்ள தங்கும் விடுதிகளில் ஆயுதம் ஏந்திய காவல்துறை அதிகாரிகள் நுழைந்து 376 பேரை வெளியேற்றினர். இவர்களில் 291 ஆண்கள்/ 85 பெண்கள் அடங்குவார்கள் என விவரங்கள் உறுதிப் படுத்துகின்றன.[154] கோத்தபாய ராஜபக்ச இந்த வெளியேற்றங்களுக்கு ஒப்புதல் வழங்கவில்லை. ஆனால் உண்மையில் அவர்களுக்கு உத்தரவிட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன[155] இது குறித்து நீதிமன்றத்தில் ஓர் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் பிரதமர் மன்னிப்பு கோரியதால் ஓரளவு தீர்வு காணப்பட்டதாகத் தெரிகிறது. கொழும்பில் இருந்து தமிழர்களை வெளியேற்றவோ அல்லது கொழும்பின் எந்தப் பகுதியிலும் அவர்கள் நுழைவதையும், தங்குவதையும் தடுக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என காவல்துறை மா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் ஏற்கனவே இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது.[156] மன்னிப்புக் கேட்கப்பட்ட போதிலும், ஓர் ஆண்டு கழித்து, செப்டம்பர் 2008 இல், கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்பு பிரச்சினையை ஏற்படுத்துவதால் கொழும்பில் லாட்ஜ்களிலும் பிற இடங்களிலும் வசிக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கையின் கிழக்கில் உள்ள தங்கள் கிராமங்களுக்குத் திரும்ப வேண்டும் என்று அரசுக்குச் சொந்தமான ஒரு செய்தித்தாளிடம் கூறினார்.[157]

## மனிதாபிமான உதவி

### மனிதாபிமான உதவி பற்றிய ஆலோசனைக் குழு (CCHA).

போர் நடக்கும் பகுதிகளில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நிலைமைகள் குறித்து கோத்தபாய ராஜபக்ச நன்கு அறிந்திருந்தார். உள்நாட்டுப் பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவான LRRC க்கு அவரே சாட்சியமளித்தார், 'முதல் CCHA [மனிதாபிமான உதவிக்கான ஆலோசனைக் குழு] கூட்டம் பாதுகாப்பு அமைச்சகத்தில்[158] (14 அக்டோபர் 2006 அன்று) நடை பெற்றது, மேலும் இந்தக் கூட்டங்கள் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பாதுகாப்பு அமைச்சகத்தில்' எப்போதும் நடைபெற்றன. அவர் மேலும் கூறும்போது, 'இந்தக் குழுவில் அரசு தரப்பில் இருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எல்லா நேரத்திலும் இருந்தார்'. கூட்டங்களில் முக்கிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அடங்குவார், அதாவது வன்னிக்குள் இருந்த உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் அளவு, பெருமளவில் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் காயமடைந்தவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய சர்ச்சை ஆகியவற்றைப் பற்றி கோத்தபாய நன்கு அறிந்திருந்தார். மேலும், ஐ.நா, அரசு சாரா நிறுவன அதிகாரிகள் மற்றும் தூதர்களின் பரந்த அளவிலான கூட்டங்களில் கலந்துகொண்டதாக அவரே கூறுகிறார்.[159]

---

152 *Military transformed from victor to reconciler*, By Dhaneshi Yatawara, 8 September 2013, The Sunday Observer Lanka, http://archives.sundayobserver.lk/2013/09/08/sec03.asp
*DEFENCE SECRETARY GOTABAYA RAJAPAKSA SALUTES THE WAR HEROES,* Business Today, accessed at:http://www.businesstoday.lk/cover_page.php?article=891&hl=JAGATH%20DIAS

153 The United States condemns the forced removal of Tamils, 8 June 2007, https://web.archive.org/web/20091105131731/http://srilanka.usembassy.gov/pr-08june2007.html

154 28.29, https://www.refworld.org/pdfid/4a55cf0d2.pdf

155 '"நம்மை நாமே தற்காத்துக்கொள்ள வேண்டும். நான் பயங்ரவாதிகளைப் பற்றிப் பேசுகிறேன். எதுவுமே நியாயமானது," என்று *கோத்தபாய ராஜபக்ச* ராய்ட்டர்ஸ் மற்றும் பிபிசியிடம் ஜூன் 2007 சர்ச்சையின் போது கூறினார். வெளியாட்கள் கொழும்பிலிருந்து வெளியேறியதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தமிழ்நெட், சனிக்கிழமை, 13 செப்டம்பர் 2008. https://www.tamilnet.com/art.html?catid=13&artid=26933
"கடந்த ஆண்டு ஜூன் 4 ஆம் தேதி, கொழும்பில் உள்ள ஒட்டுமொத்த நடவடிக்கைக் கட்டுபாட்டுத் தலைமையகத்தில் நடைபெற்ற இரகசியக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கொழும்பில் உள்ள தங்கும் விடுதிகளில் இருந்து தமிழர்களை வெளியேற்றுமாறு தனிப்பட்ட முறையில் உத்தரவு பிறப்பித்தார். அவர், 'கொழும்பில் லட்சக்கணக்கான தமிழர்கள் உள்ளனர். அவர்களில் சரியான காரணமின்றி கொழும்பில் இருந்த 300 பேரை நாங்கள் திருப்பி அனுப்பினோம். கோத்தாவை சந்திக்கவும் - தி அக்ளி அமெரிக்கன், 27 JAN 2008, SUNDAY LEADER, http://www.thesundayleader.lk/20080203/spotlight.htm

156 Ibid 28.28 para.

157 Outsiders quit Colombo, tells Defence Secretary, TamilNet, Saturday, 13 September 2008. https://www.tamilnet.com/art.html?catid=13&artid=26933

158 அதன் பின்னர் MOD இல் "கூட்டம் பாதுகாப்பு அமைச்சகத்தில் நடத்தப்பட்டதால் அது அமைச்சரின் தலைமையில் நடத்தப்பட்டாலும், பாதுகாப்பு அமைச்சகத்துடன் தொடர்புடைய பெரும்பாலான பிரச்சினைகள் மக்களைச் செல்ல அனுமதிப்பது அல்லது அத்தியாவசியப் பொருட்களை அனுமதிப்பது, வெளியேற்றம் ஆகியவற்றைப் பற்றியதாக இருந்ததால் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் இருந்தேன்."
மேலும் OISL §106 கூறுகிறது, "இராணுவ நடவடிக்கைகளில் அதன் பங்கிற்கும் கூடுதலாக, 2006 முதல், வன்னியில் அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகளின் உயர்மட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் பாதுகாப்பு அமைச்சகத்தில் நடைபெற்றன."

159 "வெளிவிவகாரத்துறை பிரதிநிதிகள் கலந்துகொண்டனர், இலங்கையில் உள்ள அனைத்து ஐ.நா. முகமை நிறுவனங்களின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர், UNHCR, ICRC, WFP, UNICEF, UNDSS ஆகியவற்றின் தலைவர்கள், இந்த அனைத்து அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் தலைவர்கள் எல்லா நேரத்திலும் கலந்து கொண்டனர். ஐரோப்பிய

*CCHA பற்றிய இன்னொரு முக்கியக் காரணி என்னவென்றால், முதலில் நாங்கள் அந்த ஆணையம் விவாதிக்கக் கூடிய அனைத்துக் குறிப்புகளையும் எடுத்தோம். இந்த விடயங்களைப் பற்றி எவ்வளவு விரிவாக நாங்கள் விவாதித்து இருக்கிறோம் என்பதையும் முதலில் இருந்து அவற்றைக் கவனத்தில் கொண்டிருக்கிறோம் என்பதையும் நீங்கள் பார்க்கலாம். இரண்டு வாரங்களுக்கு மட்டுமல்ல, 2006 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பித்து நாங்கள் தொடர்ந்து சந்தித்து, விவதித்து இந்தக் கூட்டங்களில் கவனத்துக்கு வந்த அனைத்தின் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.*

மனிதாபிமான உதவிக்கான அணுகலை மறுப்பதில் கோத்தபாய ஒரு தீர்க்கமான பங்கை ஆற்றினார் என்பது ஆரம்பத்தில் இருந்தே தெளிவாகத் தெரிகிறது - இருதரப்பு நன்கொடையாளர்கள் குழு (BDG) மற்றும் மனிதாபிமான உதவிக்கான ஆலோசனைக் குழு கூட்டம் (CCMHA) ஆகியவற்றின் கூட்டங்கள் குறித்து ஒரு விக்கிலீக்ஸ், அமெரிக்கத் தூதரக டெலக்ஸை நவம்பர் 2006 இல் கசியவிட்டது. அது கூறியது:

*BDG உறுப்பினர்கள், UN, ICRC மற்றும் EU ஆகியவை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் மேம்பட்ட அணுகலுக்கான அழுத்தம் கொடுக்கும்போது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தயக்கம் காட்டுகிறார்.*

மேலும், போர்ப் பகுதிக்குக் கூடுதல் மருந்துகளை அனுப்புமாறு கோத்தபாயவுக்கு வேண்டுகோள் விடுக்கும் ஐ.நா.வின் கடிதப் பரிமாற்றம் நகலெடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு கடிதத்தில், 'அன்டிபயாடிக்குகள், டிரஸ்ஸிங், தையல் மற்றும் கிருமி நாசினிகளின் அவசரத் தேவை' அடையாளம் காணப்பட்டது'.[160] வன்னியில் உள்ள மருத்துவர்கள் 26 ஜனவரி 2009 இல் இலங்கை அரசாங்கம், ஐ.நா., ICRC மற்றும் சர்வதேச சமூகத்திடம் மருத்துவப் பொருட்களுக்காகக் கெஞ்சி, 24 மணி நேரத்திற்குள் அவை கிடைக்கவில்லை என்றால் காயமடைந்தவர்களில் பலர் இறந்து விடுவார்கள் என்றும் எச்சரித்தனர்.[161] அரசாங்கம் பின்னர் பற்றாக்குறை பற்றி தெரியவில்லை என்று மறுத்தாலும், 2015 இல் ஐ.நா. விசாரணை (OISL,§994) அதைக் கண்டறிந்தது, 'ஐக்கிய நாடுகளின் முகவரமைப்புக்கள், மனிதாபிமான அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் உணவுப் பற்றாக்குறை மற்றும் போர் மண்டலத்தில் உள்ள பொதுமக்களின் அவல நிலையை அரசுடன் இரகசிய விவாதங்களிலும் பொது அறிக்கைகள் மூலமும் தொடர்ந்து எழுப்பின.' வன்னியில் பணிபுரியும் உள்ளூராட்சி அதிகாரிகளும் மனிதாபிமான அமைப்புகளும் பல மாதங்களாக எச்சரிக்கை அளித்தன. மேலும் 2009 மார்ச் மாதக் தொடக்கத்தில் பல முதியவர்கள் பட்டினியால் இறந்ததாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.[162] மருத்துவர் டி வரதராஜாவிடம் இருந்து வந்த இந்தக் கடிதத்தை ஐ.நா.-வின் சார்லஸ் பெட்ரியும் மேற்கோள் காட்டுகிறார். பின்னர் வரதராஜா சிறையிலடைக்கப்பட்டு, நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டார்.

*2 மார்ச் 2009 அன்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் இயக்குநர் அலுவலகம், முல்லைத்தீவு அரசாங்க முகவருக்கு எழுதிய கடிதத்தோடு, சுகாதாரத்துறை அமைச்சகத்தின் செயலாளர், ICRC மற்றும் WFP ஆகியோருக்கு நகல் அனுப்பியது. அதைத் தொடர்ந்து நடந்த போரின் விளைவாக ... பெரும்பாலான மக்கள் இலைகளைச் சாப்பிடுகிறார்கள்... ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் தெரியாத இலைகளைச் சமைத்துச் சாப்பிட்டு வாந்தி எடுத்த பின்னர் மயக்கமான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர்.[163]*

---

ஆணைக்குழுவின் தூதுக்குழு மற்றும் ஜெர்மனிக்கான தூதுவர் மற்றும் அனைத்துத் தூதர்களும் கலந்து கொண்டனர், அமெரிக்காவுக்கான தூதுவர், இங்கிலாந்திற்கான தூதர், ஜப்பானிய தூதுவர், அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் குழுவின் தலைவர்களும் மாவட்டங்களில் உள்ள அரசாங்க அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர், சுகாதாரத்துறை அமைச்சகத்தின் செயலாளர் கூட்டம் முழுவதும் இருந்தார். LRRC சாட்சியம்.

26 பிப்ரவரி 2020 அன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளியுறவுத்துறை அமைச்சர் மீண்டும் அழுத்தமாகக் கூறினார் "இணைத் தலைவர்கள் கலந்துகொண்ட மனிதாபிமான உதவிக்கான ஆலோசனைக் குழுவின் (CCHA) கூட்டங்களின் பதிவுகள், சமாதான முன்னெடுப்புகள் மற்றும் ஐ.நா. முகமையங்கள் உட்பட ஏனைய சர்வதேச பங்குதாரர்கள், மனிதாபிமான நடவடிக்கையின் போது, இலங்கை அரசு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கும், போர் நடக்கும் மண்டலத்தில் உள்ள பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கும் சகல முயற்சிகளையும் மேற்கொண்டது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. கோப்பில் உயர்நிலை பிரிவுப் பேச்சு..

160 Correspondence from the Office of the UNR/HC to Basil Rajapaksa, Special Advisor to the President, dated 26 February 2009. Cited in footnote 943, PIAC, Island of Impunity report.

161 Letter on file entitled "Humanitarian Catastrophe and Medical Emergency in the Vanni".

162 OISL §992 மேற்கோள்: வட்டார சுகாதார இயக்குநரின் கடிதம், 2 மார்ச் 2009. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உள்ள கடிதம் ITJP இல் கோப்பில் உள்ளது. கடிதத்தில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன: இறப்பு விவரங்கள்:

| | | |
|---|---|---|
| 1. பொன்னையா தர்மலிங்கம் | ஆண் | 65வ |
| 2. பொன்னையா ரத்னேஸ்வரி | பெண் | 65வ |
| 3. எஸ்.ஜெயந்தினி | பெண் | 17வ |
| 4. சந்தானம் விசாலக்ஷ்மி | பெண் | 72வ |
| 5. ஆறுமுகம் ராசையா | ஆண் | 66வ |

சில தெரியாத இலைகளை உட்கொண்ட பின் அனுமதிக்கப்பட்டவர்களின் விவரங்கள்.

| | | |
|---|---|---|
| 1. சின்னத்தம்பி வசந்தபாலன் | ஆண் | 46வ |
| 2. வி.பத்மாதேவி | பெண் | 38வ |
| 3. வி.பவித்திரன் | ஆண் | 14வ |
| 4. வி.சத்யா | பெண் | 13வ |
| 5. வி.சமர்வேந்தன் | ஆண் | 06வ |
| 6. வி.கீர்த்திகா | பெண் | 06வ |

163 Petrie Annex iii B c §103, Unredacted version, on file.

5 மார்ச் 2009 அன்று வன்னியின் முல்லைத்தீவில் உள்ள பிராந்திய சுகாதாரச் சேவைகள் இயக்குநர் அலுவலகம் பகிரங்கமாக வெளியிட்ட அறிக்கையை UN பெட்ரி அறிக்கையின் இணைப்பு மேற்கோள் காட்டியுள்ளது, அதில் 'ஒரு மனிதாபிமான பேரழிவு' அங்கு நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது: 'மயக்க மருந்துகள், அறுவைச் சிகிச்சைப் பொருட்கள், IV திரவங்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் தடுப்பூசிகள் உட்பட மருந்துகளின் கடுமையான பற்றாக்குறையை அறிக்கை விவரிக்கிறது. அதில், 'கழிவறை கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் கிடைக்காததால், பெரும்பாலான மக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.'

UN பெட்ரி அறிக்கையின் இணைப்பு (§104) மேலும் 16 மார்ச் 2009 அன்று முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி சுகாதார சேவைகளின் பிராந்திய இயக்குநர்கள் சுகாதாரத்துறை அமைச்சகத்தின் செயலாளருக்கு அனுப்பிய திறந்த கடிதத்தை மேற்கோள் காட்டியுள்ளது. 'கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டு மற்றும் இந்த ஆண்டின் முதல் காலாண்டிற்கான மருந்துகள் மற்றும் ஆடைகள் ஒதுக்கீட்டில் இதுவரை எங்களுக்கு 5 சதவீதத்துக்கும் குறைவாகவே அனுப்பப்பட்டுள்ளன. நாங்கள் பலமுறை கோரிக்கை விடுத்தும் நினைவூட்டியும், **பாதுகாப்பு அமைச்சின்** பாதுகாப்பு அனுமதியை எதிர்நோக்கி வவுனியாவில் வைக்கப்பட்டுள்ள எஞ்சிய பெரும்பகுதியின் கதி என்ன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்'. 2009 ஜனவரி மற்றும் மார்ச் நடுப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மருத்துவமனைகளில் 500 இறப்புகளில் பெரும்பாலானவை 'அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கப் பெற்றிருந்தால் தடுக்கப்பட்டிருக்கலாம்... எங்களிடம் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் இல்லை, மயக்க மருந்துகளும் இல்லை, ஒரு IV திரவ பாட்டில் கூட வழங்கப் படவில்லை' என்று அந்தக் கடிதம் கூறுகிறது'.

பொருட்களைக் கொண்டுவர வேண்டிய ICRC கப்பல்கள் அருகில் கடுமையான *எறிகணை* தாக்குதலை எதிர் கொண்டதால் அவை திரும்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. UN பெட்ரி அறிக்கை இணைப்பு (§105) ஐ.நா. சர்வதேச ஊழியர் ஒருவர் கூறியதை மேற்கோள் காட்டியுள்ளது: அவர் வன்னியில் உள்ள மருத்துவர்கள் 2009 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நள்ளிரவில் பல முறை அவரை அழைத்ததாகக் கூறினார். அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான வழிகள் இல்லை.' பெட்ரி அறிக்கையில் மருந்து பற்றாக்குறையைப் பற்றி போர் நடைபெறும் இடத்தில் உள்ள உள்ளூர் UN ஊழியர்களிடமிருந்து வரப்பெற்ற சமகால எஸ்எம்எஸ் செய்திகளும் அடங்கும்.

UN விசாரணை, OISL (§1169), பின்வருவனவற்றைக் கண்டறிந்தன:

> *..சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களின் உண்மையான மனிதாபிமானத் தேவைகளைப் போர் நடக்கும் பகுதியில் உதவிகளை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்த அரசின் அதிகாரிகள் உட்பட அரசு அறிந்திருந்தது அல்லது அறிந்துகொள்வதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. அது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது. நிவாரணம் மற்றும் மனிதாபிமான பணியாளர்களின் சுதந்திரமான இயக்கத்தைக் கட்டுப் படுத்தியது. இது வெளிப்படையாக வன்னியில் உள்ள பொதுமக்கள் உயிர்வாழ்வதற்குத் தேவையான போதிய அடிப்படை உணவுப் பொருட்களையும் மருத்துவப் பொருட்களையும் பெற முடியாமல் செய்தது, இது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.*

உணவு மற்றும் மருந்து தட்டுப்பாட்டால் பொதுமக்கள் உயிரிழக்கும் கடுமையான ஆபத்தில் உள்ளனர். OISL (1169) 'பட்டினியால் இறந்ததாகக் கூறப்படுகிறது'.[164] பாதுகாப்பு அமைச்சகம் உட்பட சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பற்றாக்குறைகள் மற்றும் அவற்றின் தாக்கம் குறித்து பலமுறை தெரிவிக்கப்பட்டது. இதனால் கோத்தபாய ராஜபக்ச தான் கலந்துகொண்ட மனிதாபிமான கூட்டங்களின் வாயிலாகப் பற்றாக்-குறைகள் பற்றி அறிந்திருப்பார். அந்த நேரத்தில் அவர் குடிமக்களுக்கு அதிகப் பொருட்களை அனுமதிக்கும் அதிகாரம், ஆற்றல் மற்றும் திறனைக் கொண்டிருந்தார், ஆனால் வேண்டுமென்றே செயல்படவில்லை.

## செப்டம்பர் 2008 இல் ஐ.நா.-வையும் அரசு சாரா நிறுவனங்களையும் வெளியேற்றுதல்

### கோத்தபாயவின் உத்தரவின் பேரில்

2008 செப்டம்பர் முதல் 2009 வரையிலான காலப் பகுதியில் சர்வதேச ஊடகங்கள் மற்றும் உதவிப் பணியாளர்களை வேண்டுமென்றே போர் நடக்கும் பகுதிகளுக்கு அனுமதிக்க மறுத்ததால், சிறிலங்கா சில சமயங்களில் சாட்சியமில்லாத போரை நடத்தியது என்று குறிப்பிடப்படுகிறது. 2008 செப்டம்பரில் போர் மண்டலத்தில் இருந்த கிளிநொச்சியை விட்டு வெளியேறுமாறு சர்வதேச உதவிப் பணியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டதும் இது தொடங்கியது. பெரும் பாலானவர்கள் தயக்கத்துடன் வெளியேறினார்கள். உதவிப் பணியாளர்கள் வன்னியில் தங்கியிருப்பது பாதுகாப்பற்றது என்பதே இந்த உத்தரவின் பின்னணியில் இருக்கும் அரசாங்கத்தினால் கூறப்பட்ட நியாயமாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சம்பவத்தில் ACF ஐச் சேர்ந்த 17 உதவிப் பணியாளர்கள் தூக்கிலிடப்பட்டதற்குப் பாதுகாப்புப் படையினரே

[164] "சாட்சியங்கள் மற்றும் பிற ஆவணங்கள் குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூடு ஆகியவற்றால் கொல்லப்பட்டவர்களைத் தவிர, பட்டினி, சோர்வு அல்லது மருத்துவப் பற்றாக்குறையால் பலர் இறப்பதைக் குறிக்கிறது" என்று OISL (§982) கூறியது."

பொறுப்பு[165] என்று கூறப்பட்ட போதிலும், மூதூரில் ACF ஊழியர்களுக்கு என்ன நடந்தது என்ற உதாரணம் மேற்கோள் காட்டப்பட்டது. ACF ஊழியர்களின் கொலைகளுக்கு யாரும் பொறுப்பேற்க- வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வன்னியில் உதவிப் பணியாளர்கள் பாதுகாப்பற்றவர்களாக இருந்ததற்கு பாதுகாப்பு அமைச்சு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை ஐ.நா.வை எடுத்துச்செல்ல அனுமதி மறுத்ததே ஒரு காரணமாக அமைந்தது.[166]

கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சு வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட ஒரு நேர்காணலில், இராணுவம் இயங்கும் பகுதிகளில் அரசு சாரா நிறுவனங்களின் மீது தனக்குக் கட்டுப்பாடு உண்டு என்பதை உறுதிப்படுத்தினார்.[167]

2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் போர் மண்டலத்தில் இருந்து அவர்களது ஊழியர்கள் வெளியேற வேண்டும் என்று உதவி அமைப்புக்களுக்கும் ஐ.நா.விற்கும் அரசாங்கத்தின் உத்தரவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவினால் கையொப்-பமிடப்பட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. [168]

மனிதாபிமான அமைப்புகளை உள்ளடக்கிய மனிதாபிமான உதவிக்கான ஆலோசனைக் குழு (மேலே பார்க்கவும்), கோத்தபாயவின் அலுவலகத்தில் மாதமிருமுறை கூடியது; அவர் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டார். 2008-9 இல் வன்னியில் பெருமளவில் மோசம் அடைந்த மனிதாபிமான நிலைமை அவருக்கு நன்கு விளக்கப் பட்டிருக்கும், இதில் பொதுமக்கள் பட்டினியால் இறந்தனர், மருத்துவப் பொருட்களும் சிகிச்சைகளும் கிடைக்காமல் இறந்தனர். அதுமட்டும் அல்லாமல் தனது உத்தரவை நேரில் தெரிவிக்க அரசு சாரா நிறுவனங்களைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேருக்கு நேர் சந்தித்ததாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் அறிவித்தது:

*திங்கள் மதியம் மனிதாபிமான உதவித் தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே நேரடியாகத் தெரிவித்தார்.*

கோத்தபாய ராஜபக்சவிடம் இருந்து பெறப்பட்ட ஒரு எழுத்துபூர்வமான வழிகாட்டுதலை உதவி முகமையங்கள் குறிப்பிட்டுக் காட்டின:

*பாதுகாப்புத்துறை, பொது பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைச்சகத்தின் செயலாளர் தனது 05/09/2008 தேதியிட்ட SMOD/320/DEM/GEN(45) என்ற எண் கொண்ட கடிதத்தில், இந்த அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அரசு சாரா நிறுவனங்களிலும் தற்காலிக வெளிநாட்டு ஊழியர் அல்லது ஓர் அரசு சாரா நிறுவனத்தால் பணிக்கு அமர்த்தப்பட்ட எந்த ஒரு நபரும் வேலைசெய்ய வன்னியில் அமர்த்தப்பட்டிருந்தால் தற்போது நிலவும் பாதுகாப்புத்துறை சூழலை*

---

[165] வன்னியில் இருந்து சர்வதேச உதவிப் பணியாளர்களை அகற்ற காரணம் காட்டுவதற்காக மூதூர் உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்டதை கோத்தபாய ராஜபக்ச, செப்டம்பர் 2008 இல் MOD இணையத்தளத்திற்கு வழங்கிய நேர்காணலில், "அடுத்து மிக முக்கியமானது பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆகும்.. மூதூரில் நடந்ததைப் பார்க்கும் போது இது தெளிவாகத் தெரிகிறது" என்றார்.

https://web.archive.org/web/20080923065349/http://www.defence.lk/new.asp?fname=20080919_05

IIGEP அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுவிட்டதால் மூதூர் ACF கொலைகள் பெரும்பாலும் அவரது அரசாங்கத்தால்தான் செய்யப்பட்டிருக்கக் கூடும் என்பதை அவர் அறிந்திருந்தார், ஏனெனில் IGGEP அறிக்கை இவ்வாறு கூறியது: "ACF நேர்விலும், திரிகோணமலை நேர்விலும், பொத்துவில் நேர்விலும் கொலைகள் நடந்தபோது கொலை நடந்த இடத்தின் அருகில் அரசின் பாதுகாப்புப் படையின் உறுப்பினர்கள் இருந்தார்கள்." பக்கம் 6, கொடையாளர்களுக்கான IIGEP அறிக்கை, கோப்பில். 14 மே 2007 இல் நடந்த ஆணையத்தின் பொது விசாரணை தொடக்க அறிக்கையில், ஆணையத்தின் வழக்குரைஞர் குழுவின் தலைமை வழக்கறிஞராகவும் செயலாற்றிய துணை சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கொடகொடா, குட்டூர் நகர மையத்தை ஒரு குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் தங்கள் கட்டுப்பாட்டில் யார் வைத்திருந்தார்களோ அவர்களே கொலையாளிகள் - அந்த நாளில் LTTE யைக் கொலைக்குக் காரணம் என்றோ அவர்களே சந்தேகத்துக்குரிய கொலையாளிகள் என்றோ சந்தேகிக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. ஆணையத்தின் மூடிய அரங்கு விசாரணையின் போது குறிப்பிட்ட நேரத்தில் முட்டூர் LTTE களின் கட்டுப்பாட்டத்தில் இருந்ததை நிறுவும் வண்ணமே கேள்விகள் வடிவமைக்கப்பட்டு அதன் மூலம் அவர்களையே குற்றவாளிகள் என்று தீர்க்கும்படி கேட்கப்பட்டன. குறிப்பிட்ட நேரத்தில் முட்டூரை GoSL அதிரடிப்படையும் பிற பாதுகாப்பு படைகளுமே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன என்பதையே அவருக்குக் கிடைத்த ஒவ்வொரு சான்றும் மெய்ப்பித்தன. இதில் குறிப்பிட்ட நேரத்தில் இராணுவமே உண்மையில் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது என்பதை அறிவிக்கும் ஓர் அதிகாரபூர்வமான GoSL பத்திரிகைக் குறிப்பும் அடங்கும்."

[166] "பாதுகாப்பு அமைச்சகத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை வன்னிக்குள் கொண்டு செல்வது ஐ.நா-வுக்குக் கடினமாக இருந்தது. இது போன்றே 2008 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், ஊழியர்களுக்குக் குறைந்த எண்ணிக்கையில் பதுங்கு குழிகளையும் பாதுகாப்பு அறைகளையும் கட்டுவதற்கான பொருள்களையும் அவசரகாலத்தில் வழங்குவதற்கான எரிபொருள் சேமிப்பையும் சிரமத்துடன்தான் ஐ.நா.-வால் உள்ளே கொண்டுவர முடிந்தது", ப 14, சார்லஸ் பெட்ரி அறிக்கை, இணைப்புகள்.

[167] "Again NGOs are not my subject except those in operational areas". 19 Sept. 2008, These are the best years of our forces -Secretary Defence, MOD, https://web.archive.org/web/20080923065349/http://www.defence.lk/new.asp?fname=20080919_05

[168] "2008 செப்டம்பரில், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனிதாபிமான முகமை நிலையங்களை வன்னியை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார். முற்றுகையிடப்பட்டு, இடம்பெயர்ந்து, தடுத்து வைக்கப்பட்டு, இலங்கையின் வன்னிப் பிராந்தியத்தில் பொதுமக்களின் அவலநிலை, 23 டிசம்பர் 2008, https://www.hrw.org/report/2008/12/23/besieged-displaced-and-detained/plight-civilians-sri-lankas-vanni-region

Also actually from the Minister of Human Rights and Disaster Management too.

*கருத்தில்கொண்டு ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அப்பால் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார் என்று தெரிவிக்கிறார்.* [169]

மேலும் வன்னியில் இருந்த பணியாளர்களும் நேரடியாக சிறிலங்கா இராணுவத்திடம் இருந்து அறிக்கை பெற்றனர்:

*அன்றிரவே, வன்னியில் உள்ள உதவிப் பணியாளர்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்க முடியாது என்றும், எந்தவொரு இயக்கத்தின் பாதுகாப்பும் அவர்களது சொந்த பொறுப்பைச் சார்ந்ததே என்றும் இலங்கை இராணுவத்திடம் இருந்து UNHCR மற்றும் WFP க்கு எழுத்துப்பூர்வ தகவல் கிடைத்தது.* [170]

ஐ.நா.விற்கும் அரசுக்கும் இடையிலான உடன் படிக்கையின்படி 'போர் அற்ற பகுதி' என்று கூறப்படும் 'கிளிநொச்சி பகுதியில்' இருந்த ஐ.நா. தளங்களின் மீது வான்வழி குண்டுவீச்சுடன் வெளியேறுவதற்கான அறிவிப்பும் இருந்தது. கிளிநொச்சி பகுதியில் ஐ.நா. தளங்கள் மீதான தாக்குதல்கள் பற்றிய ஐ.நா. உள்ளக ஆய்வு (பெட்ரி) அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்ட பட்டியல் கீழே உள்ளது:

**27 நவம்பர் 2007 அன்று**, கிளிநொச்சி பகுதியில் உள்ள WFP அலுவலகங்கள் மற்றும் FORUT என்ற அரசு சார்பற்ற நிறுவனத்தின் கிளிநொச்சி பகுதியில் உள்ள அலுவலகங்கள், அரசின் வான்வழித் தாக்குதல்களால் சேதமடைந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் அலுவலகங்களை குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.[171]

**3 செப்டம்பர் 2008 அன்று**, பல பீரங்கி குண்டுகள் கிளிநொச்சி பகுதி ஐ.நா வளாகத்திற்கு அருகில் வீசப்பட்டன - பீரங்கி தாக்குதல் அரசப் படைகளால் நடைபெற்றதாக ஐ.நா ஊழியர்கள் நம்பினர்.[172]

**9 செப்டம்பர் 2008 அன்று** மற்றொரு பீரங்கி *எறிகணை* WFP சுற்றுச்சுவரைத் தாக்கியது.[173]

**10 செப்டம்பர் 2008** - கிளிநொச்சியில் அரசாங்கத்தின் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது.[174]

**3 அக்டோபர் 2008** - கிளிநொச்சியில் உள்ள ஐ.நா. அலுவலகங்கள் 3 அக்டோபர் 2008 அன்று அரசாங்கத்தின் வான் குண்டுத் தாக்குதலின்[175] போது மீண்டும் கணிசமாகச் சேதமடைந்தன'.

கிளிநொச்சியில் உள்ள ஐ.நா. தளங்களுக்கான ஜி.பி.எஸ் ஒருங்கிணைப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த விமானப்படைக்கு நன்குத் தெரியும். கோத்தபாய ராஜபக்சவுக்குத் தெரியாமல் இவ்வளவு தாக்குதல்கள் நடந்திருக்கக்கூடும் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியாது - உண்மையில் ஐ.நா அரசாங்கத்திற்கு இதை எழுத்துப்பூர்வமாக அறிவித்ததோடு அவை ஊடகங்களிலும் தெரிவிக்கப்பட்டன.[176] என்ன நடந்தது என்பது குறித்து கோத்தபாய ராஜபக்ச எந்த விசாரணையையும் தொடங்கியதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

கோத்தபாய LLRCக்கு 2010 ஆம் ஆண்டு அளித்த சாட்சியத்தில் விமானப்படை மீது குண்டுவீசியது தொடர்பாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதைத் தாம் அறிந்திருப்பதாகக் கூறினார்: 'விமானப்படையின் குண்டுவீச்சு மற்றும் வான்வழித் தாக்குதல்களுக்காக நாங்கள் பெரும்பாலும் குற்றம் சாட்டப்பட்டோம்', என்று அவர் கூறினார். அரசாங்கத்தின் இலக்கின் துல்லியம் மற்றும் இலக்கைத் தாக்குவதற்கான ஒப்புதலை வழங்கும் செயல்முறை விமானப்படைத் தளபதி வரை சென்றதோடு டிஜிட்டல் வரைபடங்கள், வான்வழிப் புகைப்படங்கள், UAV, கண்காணிப்பு விமானக் காட்சிகள் ஆகியவற்றின் பேரளவிலான தகவலை அடிப்படையாகக் கொண்டது. வான்வழித் தாக்குதல்கள் அனைத்தும் தேசிய பாதுகாப்புப் பேரவையால் மதிப்பாய்வு செய்யப்பட்டதாக அவர் கூறுகிறார், அதன் கூட்டங்களுக்கு அவர் அடிக்கடி தலைமைத் தாங்கினார்:

*விமானப்படைத் தளபதியின் ஒப்புதலுக்குப் பின்னரே எந்தவொரு வான்வழித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எங்களிடம் மிகத் தெளிவான செயல்முறை இருந்தது. கோரிக்கை வரும்போது அது விமானப்படைத் தளபதி வரை செல்லும், நாங்கள் இலக்கைத் திட்டமிடும் போது எங்களிடம் தெளிவான நடைமுறை இருந்தது.... எனவே இந்த இலக்குகள் அனைத்தும் அப்பகுதியின் முழுமையான கண்காணிப்புக்குப் பின் குறிக்கப்பட்டன. அனைத்துத்*

[169] https://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-un-ngos-pull-out-north

[170] Charles Petrie report, Annexes, P14.

[171] Charles Petrie report, Annexes.

[172] Charles Petrie report, Annexes, P14.

[173] "பின்னர் அன்றைய தினத்தில் பொதுச்செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஓர் அறிக்கையை வெளியிட்டார், அதில் அவர் "ஐ.நா. மனிதாபிமான ஊழியர்களை இடமாற்றம் செய்வதற்கான அரசின் கோரிக்கை" மற்றும் அனைத்துத் தரப்பினரின் IHL கடமைகளையும் குறிப்பிட்டார், ஆனால் குண்டு தாக்குதலுக்கு அரசின் பாதுகாப்புப் படைகள்தான் காரணம் என்று தோன்றுவதாகக் குறிப்பிடவில்லை." சார்லஸ் பெட்ரி அறிக்கை, இணைப்புகள், P15.
"பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பொறுப்பில் இருந்த பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியால் JoH கட்டளையிடப்பட்டது என்று ஐ.நா. கூறுவதைக் கவனத்தில் கொள்ளவும்".

[174] Charles Petrie report, Annexes, P15.

[175] Charles Petrie report, Annexes, P17.

[176] "அக்டோபர் முதல் டிசம்பர் வரை, பாதுகாப்புத்துறை அமைச்சர், பாதுகாப்புப் படைத் தலைவர், கருவூலத்தின் துணைச் செயலாளர் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையர் ஜெனரல் மற்றும் . பேரழிவுகள் மற்றும் மனித உரிமைகள் துறை அமைச்சர் ஆகியோருக்குத் தொடரணிகள் தொடர்பாக RC தொடர்ச்சியான கடிதங்களை அனுப்பியது." Petrie Report Annex, P21.

*தாக்குதல்களும் விமானங்களால் படமாக்கப்பட்டன, மேலும் இந்தத் தாக்குதல்கள் அனைத்தையும் நாங்கள் பாதுகாப்புப் பேரவையில் ஒவ்வொரு வான்வழித் தாக்குதலாக மதிப்பாய்வு செய்துள்ளோம், அதனால்தான் எங்கள் விமானிகள் நன்றாகப் பயிற்சி பெற்றிருந்தனர். அவர்கள் ஊசிமுனை இலக்குகளையும் தாக்கும் திறன் பெற்றிருந்தனர்...*

வன்னியில் இருந்து வெளியேற ஐ.நா.-வுக்கும் உதவி முகமையங்களுக்கும். உத்தரவு இடும் முடிவின் மூலம் வரவிருந்த IHL மற்றும் ICL மீறல்களுக்கு இருந்த உலக அளவிலான சாட்சிகள் திறமையான முறையில் நீக்கப்பட்டன. போர் மண்டலத்திற்கு வெளியில் தகவல் கசிவதைத் தடுப்பதில் இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. கோத்தபாய ராஜபக்ச தனது நடவடிக்கைகளின் சாத்தியமான விளைவாக இது இருக்கும் என்பதை அறிந்திருப்பார். மூன்று மாதங்களுக்குப் பின்னர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கை இவ்வாறு கூறியது:

*சிறிலங்கா அதிகாரிகள் அண்மை மாதங்களில் வெளி நிறுவனங்களுக்கும் மனிதாபிமான பணியார்களுக்கும் எதிராக வெளிப்படையாக விரோதப் போக்கைக் காட்டியுள்ளனர், அரசியல் கருத்தாடல்கள் அல்லது சுதந்திரமான கண்காணிப்பாளர்களை சம்பவ இடத்திலிருந்து அகற்றுவதற்கான விருப்பமும் இந்த வெளியேற்றத்தின் பின்னணியில் இருந்திருக்கலாம் என்று தெரிவிக்கிறது.*[177]

2008-9 இல் தாக்குதலில் ஓர் அங்கமாக இருந்த ஓர் இராணுவ அதிகாரி இதை உறுதிப்படுத்தினார். அவர் பின்வருமாறு சாட்சி அளித்தார்:

*கோத்தபாய அவர்களை வன்னியில் இருந்து வெளியேற்ற விரும்பினார். ஏனெனில் அதன்பின் போர் மண்டலத்தில் என்ன நடக்கிறது என்பதை அவர்களால் தெரிவிக்க முடியாது. சர்வதேச அமைப்புகளை வெளியேறுமாறு கோத்தபாய கட்டளை இட்டதற்கு அடிப்படைக் காரணம் தனது கட்டளையைத் தனது தளபதிகள் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகதான்.*

பின்னர் கோத்தபாய LLRC க்கு அளித்த சாட்சியத்தில் இப்படிக் கூறினார்: 'இந்தப் பகுதிகளில் நாங்கள் மறைத்து வைப்பதற்கு எதுவும் இல்லை என்பதை நான் காட்ட விரும்புகிறேன், நாங்கள் எப்போதும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க விரும்புகிறோம்.' பத்திரிகையாளர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள் போர்ப் பகுதிக்குள் நுழைவதை அவர் கட்டுப் படுத்தியதால் நிலை அவ்வாறு இல்லை. 2009 ஆம் ஆண்டு போர்முனையில் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தங்கள் வருகை கோத்தபாய ராஜபக்சவால் கூட அங்கீகரிக்கப்பட்டதாக விளக்கம் அளித்தனர்.[178]

*மேலும், வெளியேற்றும் முடிவு, போர்ப் பகுதியில் இருந்த பொதுமக்களின் துன்பத்தை மிகவும் அதிகப்படுத்தியது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2008 இல் ஓர் அறிக்கையில் இவ்வாறு கருத்து தெரிவித்தது.*[179]

உதவும் முகமையங்களை அகற்றுவதற்கான முடிவு, வரவிருக்கும் 8 மாதங்களில் (அக்டோபர் 2008-மே 2009) போர்ப் பகுதியில் உள்ள நூறாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்ய - உணவு மற்றும் மருந்து - *சிறிலங்கா* அரசு மறுப்புத் தெரிவிப்பதற்குப் பங்களித்தது. ஐ.நா.வின் *விசாரணை* (OISL, §983 on) உணவு மறுக்கப்பட்டதால் ஏற்பட்ட பட்டினிச் சம்பவங்கள் மற்றும் அரசின் அமைச்சகங்களால் போதிய மருத்துவப் பொருட்கள் அனுப்பப்படாததால் ஏற்பட்ட இறப்புகள் குறித்து அறிக்கை அளித்தது. ஐ.நா. மற்றும் பிற சர்வதேச உதவிப் பணியாளர்களைப் போர் நடக்கும் பகுதியில் இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க அனுமதித்திருந்தால், பொதுமக்களின் மனிதாபிமான அவலங்கள் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பரவலாகப் புகார் அளிக்கப்பட்டிருக்கும், மேலும் மக்கள் தொகை புள்ளிவிவரங்களைத் திரித்து பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துகளை மறுப்பது என்பது அரசுக்குக் கடினமானதாக இருந்திருக்கும்[180] இரண்டு மாதங்களுக்குப் பின்னர், 2008 நவம்பரில், வெளிவிவகாரத்துறைச் செயலாளர் பாலித கோகன்ன, வன்னியில் வெறும் 100,000 பேர் மட்டுமே தங்கியிருந்ததாகக் கூறினார். இது ஓர் அதிர்ச்சியூட்டும் அளவிற்குக் குறைவான மதிப்பீடு. ஏனெனில், இடைப்பட்ட காலத்தில் இறந்துபோனவர்களின் எண்ணிக்கை போக, 2009 ஆம் ஆண்டு உயிரோடு

[177] Besieged, Displaced, and Detained
The Plight of Civilians in Sri Lanka's Vanni Region, 23 Dec 2008,
https://www.hrw.org/report/2008/12/23/besieged-displaced-and-detained/plight-civilians-sri-lankas-vanni-region

[178] "ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இளைய சகோதரரும், நான்காம் ஈழப் போரில் அரசாங்கத்தின் வெற்றிச் சிற்பிகளில் ஒருவருமான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் இந்த வருகைக்கு உதவியுள்ளனர் ."
*2 November 2007 Reuters On the killing of Tamilselvan* https://frontline.thehindu.com/static/html/fl2612/stories/20090619261200900.htm

[179] Besieged, Displaced, and Detained
The Plight of Civilians in Sri Lanka's Vanni Region, 23 Dec 2008,
https://www.hrw.org/report/2008/12/23/besieged-displaced-and-detained/plight-civilians-sri-lankas-vanni-region

[180] இது பற்றிய தகவலுக்கு சார்லஸ் பெட்ரி அறிக்கையைப் பார்க்கவும். அவர் எழுதுகிறார்: "குறைந்த மக்கள்தொகை எண்ணிக்கை, வழங்கப்பட்ட உணவு மற்றும் பிற மனிதாபிமான உதவிகளின் அளவு போதுமானது என்று வாதிட பயன்படுத்தப்பட்டது; மோதலின் போது குறைந்த எண்ணிக்கையைப் பயன்படுத்தி பொதுமக்கள் இறப்பு எண்ணிக்கை பற்றிய குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டன. இணைப்பு II. 2008 இலையுதிர்காலத்தில் வன்னியில் 70,000 பேர் இருந்ததாக அரசாங்கம் கூறியது. உண்மையில் குறைந்தது 360,000 பேர் இருந்ததாகத் தெரிகிறது."

அங்கிருந்து வெளியேறின மக்களின் எண்ணிக்கையே 282,000 ஆகும்.[181]

2008-9 இல் வன்னிக்குள் நுழைந்த ஐ.நா மனிதாபிமான வாகனத் தொடரணிகள் மீது அரசுப் படைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நடத்திய தொடர் தாக்குதல்கள் OISL (§961 on) மற்றும் சார்ஸ் பெட்ரியின் ஐ.நா. உள்ளக மீள்பார்வை போன்ற ஐ.நா. அறிக்கைகளில் விரிவாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்கள் குறித்து கோத்தபாயவின் துணை அதிகாரியான பாதுகாப்புப் படைகளின் தலைவர் டொனால்ட் பெரேராவிடம் ஐ.நா. அறிக்கையிட்டது. [182]

## போர்த்தடை மண்டலங்கள் (NFZ)

சிறிலங்கா அரசால் மூன்று போர்த் தடை மண்டலங்கள் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டன. அனைத்து இடங்களிலும் அரசுப் படைகள் கனரக ஆயுதங்களால் தாக்கின். இருந்தாலும், பாதுகாப்புக்காக இந்த மண்டலங்களுக்குச் செல்லுமாறு இராணுவம் பொது மக்களை அறிவுறுத்தியது, பின்னர் கொடூர மனம் கொண்டு தாக்கின.

முதல் NFZ ஐப் பொறுத்தவரையில் அப்போதிருந்த ஐ.நா. ஊழியர்கள்[183] போர்முனைப் பகுதிகளுக்கு மிக அருகில் இருந்த அதைக் கண்டுபிடிப்பது சிக்கலானது என்பதை அறிந்திருந்தனர், அதே நேரத்தில் பின்னர் ஐ.நா-வின் விசாரணை இது பொதுமக்களுக்குச் சில தப்பிக்கும் வழிகளை வழங்கியது என்று கூறியது (§803 UN OISL):

> *NFZ களின் அமைவிடங்களின் பின்னணி தர்க்கரீதியாக மிகவும் கேள்விக்குரியதாக இருந்தது. முன்னர் அங்கிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ நிலைகள் இருந்த இடங்களிலேயே அவை இருந்தன. அந்தப் பகுதிகளில் இருந்து அவை முன்கூட்டியே அகற்றப்படவில்லை.[184] கிளிநொச்சியில் இருந்து புதுக்குடியிருப்பையும் (PTK என்று அறியப்பட்டது) முல்லைத்தீவையும் நோக்கிச் செல்லும் A35 நெடுஞ்சாலையில் SLA செல்லும் முக்கிய அச்சில் முதல் NFZ அமைந்திருந்தது. புதுக்குடியிருப்பில் தங்கள் வலிமையைப் பாதுகாக்க தமிழீழ விடுதலைப் புலிகள், முதல் NFZ இருந்த பகுதியில்தான் SLA வைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதிக அளவில் போர் நடக்க வாய்ப்புள்ள ஒரு பகுதியில் 'ஒரு போர்த்தடை மண்டலத்தை' நிறுவியது கேள்விகளை எழுப்புகிறது. (§756 UN OISL)*

2011 ஆம் ஆண்டு கோத்தபாய தனது பாதுகாப்பிற்காகப் போர் தடை மண்டலத்தை அமைத்தார், இருப்பினும் சில பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஒப்புக்கொண்டார்; இவ்வாறுதான் அவரது கருத்துக்கள் பதிவாகியுள்ளன:

> *இராணுவத்தின் சர்ச்சைக்குரிய இந்தச் செயலை நியாயப்படுத்தி ஜனாதிபதியின் சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, 'பாதுகாப்பான பகுதிகளையும் போர்த்தடை பகுதிகளையும் உருவாக்குவதன் மூலம் போர் நடக்கும் பகுதியில் பொதுமக்களைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப்பட்டதாக' ஓர் உணர்ச்சிதததும்பும் அறிக்கையை அளித்தார்.[185]*

NFZகள் பாதுகாப்பானவை என்று உறுதி அளிக்கப்பட்டாலும், அவை திரும்பத்திரும்பக் குண்டுவீசி தாக்கப்பட்டன என்று UN விசாரணை கூறுகிறது:

> *கனரக பீரங்கி ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதை அரசு மறுத்தாலும், ஜனவரி முதல் மே 2009 வரையிலான போரின் இறுதிக் கட்டத்தில் மூன்று NFZ களையும் சுற்றியுள்ள பகுதிகளில் SLA அப்படிப்பட்ட ஆயுதங்களை உடனடியாக நிலைநிறுத்தின. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவிற்கு வழங்கப்பட்ட செயற்கைக்கோள் படங்களின் பகுப்பாய்வின்படி, 'போரின் கடைசி இறுதி மாதங்களில் IDP திரளாக இருந்த பகுதிகளிலும் குறிப்பாகப் போர்த்தடை மண்டலங்களில் தொடர்ந்து இயங்கும் இராணுவத் திறன்களையும் ஏராளமான வெடி பொருட்களையும் குவித்ததற்கான உறுதியான சான்றாதாரங்கள் உள்ளன. மேலும் தொடர்ந்து போர்த்தடை மண்டலங்கள் குறிவைத்து தாக்கப்பட்டன. (OISL §762)*

### வான்வழித் தாக்குதல் குறித்துத் தெரிவிக்கப்பட்டது

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சியில் இருக்கும் ஐ.நா. தளங்கள் மீதான வான்வழித் தாக்குதல்களைத் தவிர, பொதுமக்களைத் தாக்கும் பல வான்வழித்

---

181 "மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாததால், போர் மண்டலத்தில் இடம்பெயர்ந்தவர்கள் குறித்த மதிப்பீடு எதுவும் இல்லை என வெளிவிவகாரத்துறைச் செயலாளர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.
"பல்வேறு முகமையங்களால் 2,30,000 முதல் 3,00,000 இடம்பெயர்ந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பது மிகைப்படுத்தப்பட்டதாக நாங்கள் நம்புகிறோம். இந்த எண்ணிக்கை சுமார் 1,00,000 ஆக இருக்கலாம் என்பது அரசாங்கத்தின் சொந்த மதிப்பீடு. " https://www.thehindu.com/todays-paper/tp-international/Aid-distribution-Red-Cross-India-differ-with-Sri-Lanka/article15377058.ece, Aid distribution: Red Cross, India differ with Sri Lanka, The Hindu, 21 Nov 2008.

182 "ஐ.நா.விடம் இருந்து அனுப்பப்பட்ட ஒரு மிகக் கடுமையான கடிதத்தில், டிசம்பர் 12 அன்று, RC [உள்ளுறை ஆணையர்] அரசாங்கத்தின் பாதுகாப்புத் தலைவரிடம் டிசம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் UN தொடரணிக்கு அருகில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அரசாங்கத்தின் குண்டுவீசி தாக்குதல் நடந்தது குறித்து புகார் அளித்தார்.: அந்தக் கடிதம் குண்டு தாக்குதலின் விவரங்களை வழங்கியதுடன், "குண்டு தாக்குதல் அரசாங்கப் படைகளால் நடத்தப்பட்டது" என்று குறிப்பிட்டு, ஐ.நா. ஊழியர்கள் தாக்கப்பட்டிருக்கலாம் என்று எச்சரித்தார். வன்னியில் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச ஊழியர்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் அடிக்கடித் தேடுதல்களை மேற்கொள்வது தொடர்பாக, டிசம்பர் 16 ஆம் தேதி, RC இரண்டாவது கடிதத்தைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பியது." *(Annexes P33)*

183 Testimony. OISL later.

184 UNOSAT satellite imagery seen by OISL.

185 https://www.smh.com.au/world/sri-lankan-civilian-deaths-unavoidable-20110802-1i9t9.html

தாக்குதல்கள் பற்றிய அச்சங்கள் ஐ.நா.வால் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது:

*17 டிசம்பர் [2008] இல் எழுதப்பட்ட கடிதம் ஒன்று, வட்டக்கச்சி மருத்துவமனைக்கு அருகில் இரண்டு வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தெரிவித்தது, நூற்றுக்கணக்கான மக்கள் வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்தனர், இரண்டு சிறிய குழந்தைகள் கொல்லப்பட்டனர் மற்றும் 13 பொதுமக்கள் காயம் அடைந்தனர். கடிதம் அரசாங்கத்தின் IHL கடமைகளை நினைவுபடுத்தியது...*[186]

*ஜனவரி 13 ஆம் தேதி, விசுவமடுவில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் 18 பேர் காயம் அடைந்ததையும், மேற்கோள் காட்டி, 'எறிகணை தாக்குதல்கள் மற்றும் வான் குண்டு வீச்சுகளின் விளைவாகப் பொதுமக்கள் அடைந்த காயங்கள் மற்றும் இறப்புகள் பற்றிய அறிக்கைகள்' குறித்து வதிவிட ஒருங்கிணைப்பாளர் அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதினார். புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் ஒருவர் மரணமும் ஆறு பேர் காயமும் அடைந்தனர், அத்துடன் மருத்துவமனை கணிசமான அளவில் சேதம் அடைந்ததாக அக்கடிதம் குறிப்பிடுகிறது.*[187]

கோத்தபாய ராஜபக்சவோ அல்லது அரசோ தங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய இந்தப் புகார்களைப் பற்றி ஐ.நா.விடம் விசாரித்ததாக எந்தத் தகவலும் இல்லை.

**வாகனத் தொடரணி 11**

ஜனவரி 2009 இல், 11வது மற்றும் கடைசி உணவு வாகனத் தொடரணியில் ஐ.நா. ஊழியர்கள் வன்னிக்கு அனுப்பப்பட்டு, புதுக்குடியிருப்புக்கு பயணம் செய்தனர். இதில் உணவுடன் கூடிய 58 டிரக்குகளும், நீண்ட தூர ரேடியோக்களுடன் கூடிய ஐந்து 4x4 இலகுரக வாகனங்களும் அடங்கும். டிரக் ஓட்டுநர்கள் தவிர, ஆறு சர்வதேச ஊழியர்கள் மற்றும் ஐந்து தேசிய ஊழியர்களும், அரசாங்க பீரங்கிகளால் (130 மி.மீ. குண்டுகள்) பலமுறை தாக்கப்பட்டதில் பொதுமக்கள் பலரும் இறந்தனர். சிறிலங்கா அதிகாரிகள் புறப்படுவதைத் தாமதப்படுத்தினர். அதன்பின்னர் LTTE யின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிக்குள் தங்கள் வீரர்களைக் கொண்டு செல்வதற்காக வாகனத் தொடரணியின் மறைவைப் பயன்படுத்தினர்.[188] வாகன அணி வெளியேற முயன்றபோது, LTTE உள்ளூர் ஊழியர்களை வன்னியை விட்டு வெளியேறுவதைத் தடுத்ததால், ஐ.நா.வின் 7 லாரிகளும், 2 சர்வதேச ஊழியர்களும் பின்தங்கினர். சர்வதேச ஊழியர்களில் ஒருவரை அவர் ஓட்டிக்கொண்டிருந்த இரண்டாவது 4x4 வாகனமான 4x4 வாகனத்தை விட்டுவிட்டு, இப்போது புறப்படும் வாகனத் தொடரணியில் உள்ள மற்ற டிரக்குகள் ஒன்றில் ஏறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். இருப்பினும், அவர் அவ்வாறு செய்ய மறுத்து, மீதமுள்ள ஊழியர்களின் தனிப்பட்ட விளைவுகளைப் பொருட்படுத்தாமல், புறப்பட்ட லாரிகளைத் தொடர்ந்து 4x4 ஐ ஓட்டிச் சென்றார். மீதமுள்ள UN தேசிய மற்றும் சர்வதேச ஊழியர்களிடம் நீண்ட தூர வானொலியுடன் கூடிய ஓர் இலகுரக வாகனம் மட்டுமே இருந்தது.

ஜனவரி 25 ஆம் தேதி இரவில், ஐ.நா.வின் சர்வதேச ஊழியர்கள் ஒரு பகுதியில் பெருங் குழப்பமாக இருப்பதாகக் கூறினர், அங்கு அவர்கள் 'மக்கள் கடல்' காணப்படுவதாகக் கூறினார்கள்.':

*'2200 மணி நேரத்தில், GA வளாகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குள் 130 மி.மீ. கனரக பீரங்கி வண்டிகள் சரமாரி வந்திறங்கின. எங்கள் பதுங்கு குழிகளுக்கு அருகில் வரவில்லை. நான் முன்னரே பாதுகாப்புப் படைகளுக்குக் கொடுக்கப்பட்ட புவி நிலைகாண் தொகுதி ஆள்கூறுகளால் குறிக்கப்படுவதாக விவரித்த தடங்களைச் சுற்றி இருக்கும் பகுதி அதன் தாக்கத்துக்குள்ளானது.' W168*

ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் கேத் க்ளக்மனுக்கு பலமுறை அழைப்பு விடுத்ததாகவும், அவர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி மற்றும் பாலித கொஹோன ஆகியோருடன் நேரில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாகவும், போர் தடை மண்டலத்தில் நடத்தப்படும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு கோரியதாகவும் ஐ.நா ஊழியர் ஒருவர் தெரிவிக்கிறார்.[189]

கள பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அதிகாரி (FSCO) தொடர்ந்து, இடர்காப்பு மற்றும் பாதுகாப்புத் துறையோடு (UN DSS) தொடர்பில் இருந்தார். நிலைமை பாதுகாப்பற்றதாக இருப்பதாகத் தெரிவித்தார். வாகன அணிவகுப்பின் புவி நிலைகாண் தொகுதி இருப்பிடம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பதால் அப்பகுதியைத் தாக்க வேண்டாம் என்று வவுனியாவில் இருக்கும் UNDSS சிறிலங்கா இராணுவத்தை அணுகி வேண்டிக் கொள்ளுமாறு கேட்டார்.[190] அடுத்து ஒரு குண்டு வீச்சுத் தாக்குதலை வாகன அணிவகுப்பு தாக்குப்பிடிக்காது என்று வவினியாவில் இருந்த UNDSS க்கு FSCO தெளிவுபடுத்தினார். வாகனத் தொடரணி புதுக்குடியிருப்புக்கு திரும்பிப் போகவோ அல்லது அடுத்த சில வாரங்களுக்கு போர்முனை வந்தடையாத கடற்கரைப் பகுதிக்கோ செல்ல ஒரு பாதுகாப்பான போகும் பாதை தேவை என வலியுறுத்தினார். UNDSS இரண்டு விருப்பத்தேர்வை FSCO வுக்கு வழங்கியது. ஒன்றில் FSCO மற்றும் UNOPS ஐ உள்ளடக்கிய அலுவலர்கள் ஓர் ஒற்றை இலகு ரக வாகனத்தில் திரும்பி புதுக்குடியிருப்புக்கு செல்வது. அல்லது இரண்டாம் விருப்பத்தேர்வின் படி சர்வதேச பணியாளர்களுடன் அனைவரையும் கூட்டிச் செல்வது. முதல் விருப்பத்தேர்வு என்பது ஒரு விருப்பத்தேர்வே

186 P 33 Petrie Annex, letter to MFA.
187 P 33 Petrie Annex, letter to MFA.
188 W168 on file, §89.
189 W168
190 Petrie Report

அல்ல என்று FSCO, UNDSS இடம் கூறியது. ஒரு பாதுகாப்பான போகும் பாதை கிடைத்தால் அனைவரும் ஒன்றாகப் போவதே சிறந்தது. தலைமையத்தில் இருந்த ஐ.நா. பணியாளர்கள் திரும்பத் திரும்ப தாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட போதும் பயனில்லாமல் போயிற்று. தூதர்கள் மூலமும் ஐ.நா. மூலமும் தெரிவிக்கப்பட்டிருந்ததால் தாங்கள் குண்டுகளை வீசுவது IDP களுக்குப் பேரழிவைத் தரும் என்பது சிறிலங்கா இராணுவத்துக்குத் தெரிந்தே இருந்தது.

அவர்களுக்கு அருகில் பேரழிவு நிகழ்ந்தது:

*...SE இல் இருந்து வீசப்பட்ட குண்டுகள் எங்கள் பதுங்கு குழியிலிருந்து 8 மீ. தொலைவில் இருந்த குறைந்தது 2 குடும்பங்களைக் கொன்றது, 7 பேர் இறந்தனர் 15 பேர் காயமடைந்தனர். மாலையில் நாங்கள் பேசிய 18 வயது மகளின் தலை துண்டிக்கப்பட்ட உடல் எங்கள் பதுங்கு குழியின் வாசலில் விழுந்தது. ஒரு WFP சாரதியின் தலையின் பின்பகுதியில் சிறு துண்டுகளால் தாக்கப்பட்டார் ... முதல் வெளிச்சத்தில் தெரிந்த காட்சி பேரழிவாக இருந்தது; நாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து 20 மீட்டருக்குள் 7 பேர் இறந்தனர் மற்றும் 15 பேர் படுகாயமடைந்தனர். மரத்தடியில் அடைக்கலம் புகுந்த ஒரு குடும்பத்தின் இறந்த குழந்தையின் உடல் அந்த மரத்தில் தொங்கியது. அடுத்த குழந்தையின் உடல் உடையார்கட்டு சுதந்திரபுரம் சந்திப்பில் சுற்றுக் கம்பி வேலியில் தொங்கிக்கொண்டு இருந்தது. அந்த ஒற்றை இலகு ரக வண்டி எங்கும் மனித உடல் பகுதிகளும் இரத்தமுமாக இருந்தது.*

*நாங்கள் அந்த இளம்பெண்ணின் உடலை பதுங்கு குழியின் நுழைவாயிலில் இருந்து இழுத்துச் சென்று வைக்கோல் தரை விரிப்பால் மூடினோம். வெடித்ததில் இருந்து 51 மீட்டர் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த UNDSS வாகனம் இரண்டு குடும்பங்களின் மனித சதை துண்டுகள் மற்றும் வெடித்த பிற குப்பைகளால் மூடப்பட்டிருந்தது.*

அந்த இரவில் நிலைமை இன்னும் மோசமானது:

*மோட்டார் குண்டுகள் ஏவப்பட்ட சத்தம் கேட்டபின்னர், நாம் பாதுகாப்புத் தேடிக்கொள்வதற்கு ஒரு சிறிய நேரம் பிடைக்கும். இந்த எறிகணைகள் அப்படி அல்ல. இவை எங்கள் பகுதிக்குள் வந்த வேகத்தைப் பார்த்து தலை சுற்றியது. அந்த எறிகணைகள் மிக அருகில் விழுந்தன. பதுங்கு குழி சுவர்களின் அதிர்வை என்னால் உணர முடிந்தது. வெளியில் மாட்டிக் கொண்டிருந்தால் உங்களுக்குப் பிழைக்க சாத்தியமே இல்லை. அது நம்ப முடியாத அளவுக்குப் பயங்கரமாக இருந்தது. இது வரை நாங்கள் அனுபவித்ததில் இதுதான் மோசமானது. இப்படிப்பட்ட எறிகணை பங்கரை உடைத்துக்கொண்டு வந்தால் எங்களால் தப்பிக்க முடியாது. 25 ஜனவரி நள்ளிரவு 0600 மணியில் இருந்து இடைவிடாது 130 மி.மீ ஆட்லறியில் இருந்து வெடித்தது. தெற்கில் இருந்தும் தென்கிழக்கில் இருந்தும் எங்கள் பகுதிக்குள் நிமிடத்துக்கு மூன்று குண்டுகள் வீதம் சரமாரியாக வந்து விழுந்துகொண்டே இருந்தன. பெரும்பாலான குண்டுகள் நாங்கள் இருந்த இடத்தில் இருந்து 500 மீட்டருக்குள்ளும் சில 50 மீட்டருக்குள்ளும் கூட விழுந்தன.*

இறுதியில் வாகனத் தொடரணி ஒரு வழியாக 'போர் நிறுத்த மண்டலத்தை' விட்டு தப்பிப் பிழைத்தபோது அவர்கள் ஒட்டுமொத்தப் பேரழிவைக் கண்டனர்:

*புதுக்குடியிருப்புக்கு இடைப்பட்ட எட்டு கி.மீ, தூரத்துக்குப் பெரும்பாலான சாலையை ஒட்டிய பகுதிகள் அழிந்துபோய்க் கிடந்த. உடையார்கட்டு, வள்ளிபுனம், கைவேலி ஆகிய பகுதிகள் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிந்தது. சாலையின் வடக்கு மற்றும் தெற்குப் பக்கங்களில் பல இறந்த மற்றும் கடுமையாகக் காயமடைந்த பொதுமக்களைக் கடந்து சென்றோம். சாலையோரத்தில் இறந்தவர்களில் பலர் பெண்கள். அனைவரும் புடவை அணிந்திருந்தனர், நிச்சயமாக LTTE அல்ல.*

*W168*

பெட்ரி அறிக்கை கூறுகிறது 'ஜனவரி 26 அன்று, UN வதிவிட ஒருங்கிணைப்பாளர் முந்தைய நாட்களின் நிகழ்வுகளைக் குறிப்பிட்டு அரசுக்குக் கடிதம் எழுதினார். ஐ.நா. ஊழியர்களுக்கு அருகில் நிகழ்ந்த பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் இறப்புகள் மற்றும் காயங்கள் ஆகியவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அக்கடிதம் விவரித்தது, 'எல்லா நிகழ்வுகளிலும் குண்டு தாக்குதல்களும் அரசாங்கத் தரப்பில் இருந்து வந்தவையே....[191]

### புதுக்குடியிருப்பு போர்: 2009 பிப்ரவரியின் தொடக்கத்தில்

புதுக்குடியிருப்பு என்ற அந்தச் சிறிய நகரம் NFZ-1 க்குச் சற்று வெளியே இருந்தது. இருப்பினும் மிதமான வசதிகள் கொண்ட மருத்துவமனைகள் அங்குதான் இருந்தன (புதுக்குடியிருப்பு மருத்துவமனை மற்றும் தனியார் பொன்னம்பலம் மருத்துவமனை ஆகியவை பிப்ரவரி 2009 தொடக்கத்தில் விமானத் தாக்குதல்களில் அழிக்கப்பட்டன). புதுக்குடியிருப்பில் உள்ள அரசு மருத்துவமனை தாக்குதலுக்குப் பின் வெளியேற்றப்பட்ட போது, எக்ஸ்ரே இயந்திரங்கள் போன்ற முக்கிய உபகரணங்களை விட்டுச்செல்ல வேண்டியிருந்தது. புதுக்குடியிருப்பை விட்டு வெளியேறிய பிறகு, சில மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சைக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல், பள்ளிக் கட்டிடங்களில் அமைந்துள்ள தற்காலிக மருத்துவ மனைகளில் பணிபுரிய வேண்டியிருந்தது.

UN பெட்ரி அறிக்கை கூறுகிறது (ப.18) கோத்தபாய ராஜபக்சவுக்கு நேரடியாக அறிக்கை அளித்த பாதுகாப்பு அமைச்சின் கூட்டு நடவடிக்கை தலைமையகம் (JOH),

[191] பந்தி **64**

புதுக்குடியிருப்பில் ஐ.நா. உதவி மையம் இருந்த இடத்தை அறிந்திருந்தது:

*இந்த மையத்திற்கான புவி நிலைகாண் தொகுதி ஆள்கூறுகள் UNDSS ஆல் கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் கூட்டு நடவடிக்கை தலைமை-யகத்திற்கும் வவுனியாவில் உள்ள பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்கும், புலிகளுக்கும் வழங்கப்பட்டது.*

சர்வதேச நெருக்கடிக் குழு 2010 (International Crisis Group) அளித்த போர்க் குற்ற அறிக்கையால் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, இது மைய ஒருங்-கிணைப்புகள் (hub coordinates) கூட்டுச் செயல்- பாட்டு தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது என்றுகூறுகிறது.[192]

ஐ.நா மற்றும் மருத்துவமனை புதுக்குடியிருப்பில் அமைந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும் என்றும் OISL அறிக்கை கூறுகிறது.[193] இருந்தாலும், புதுக்குடியிருப்பு மருத்துவமனை மிகவும் பாதிக்கப் பட்டுள்ள மருத்துவ வசதிகளில் ஒன்றாகும் என்று ஐ.நா[194] கூறியது. ஏறத்தாழ ஜனவரி 10, 2009 இல் தாக்குதல் தொடங்கி பிப்ரவரி 6 வரை தொடர்ந்தது. அப்போது கட்டிடத்தில் இருந்து யாவும் வெளியேற்றப்-பட்டது. புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் 10 முக்கிய கட்டிடங்களும் 20 க்கும் மேற்பட்ட துணைக் கட்டிடங்களும், ஒரு வளாகமும் இருந்தன. அதில் இருந்த செஞ்சிலுவைச் சங்கச் சின்னங்கள் விமானத்தில் பறக்கும்போதும் செயற்கைக் கோள் படங்களிலும் தெளிவாகத் தெரியும். மருத்துவமனை செயல்படுவதும், தாக்கப்படுவதும் அரசாங்கத்துக்குத் தெரியும் - ஐ.நா மற்றும் ஐ.சி.ஆர்.சி பிரதிநிதிகள் சமீபத்தில் விஜயம் செய்து காயமடைந்தவர்களை வவுனியாவிற்கு சாலை வழியாகக் கொண்டு வந்தனர்.[195] மருத்துவ மனையைத் தாக்க கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பின்னர் அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒப்புக் கொண்டார்.[196]

### பிப்ரவரி 2, 2009 கோத்தபாய ராஜபக்சவுடன் ஸ்கை டிவி நடத்திய நேர்முகம்

சரத் பொன்சேகாவின் இந்த அறிக்கைகள் ஒருபுறம் இருக்க, 2 பிப்ரவரி 2009 அன்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஒரு தொலைக்காட்சி செய்தி நேர்காணலில், புதுக்குடியிருப்பு மருத்துவமனை அரசாங்கத்தால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்ட NFZ க்கு வெளியே அமைந்துள்ளதால் அது ஒரு சட்டபூர்வமான இலக்கு என்று கூறினார்.[197] அவர் கூறினார்: 'போர்நிறுத்த மண்டலத்துக்கு' அப்பால் எதுவும் இருக்கக்கூடாது'. நேர்காணல் செய்பவர் 'NFZக்கு வெளியே இருந்தால் அது ஒரு முறையான இலக்கு என்று நீங்கள் கூறுகிறீர்களா' என்று கேட்டதற்கு, அவர் உறுதியுடன் பதிலளித்தார், 'ஆம், எந்த மருத்துவமனையும் அந்தப் பகுதியில் செயல்படக் கூடாது.'[198] குறிப்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது தாக்குதல்கள் நடந்தன என்பதை மறுக்கவில்லை.

பெரும் கவலையை வெளிப்படுத்திய ICRC, அப்போது வெளியிட்ட அறிக்கைகளில் இருந்து மருத்துவமனை மீதான தாக்குதல்கள் பற்றியும் அவர் அறிந்திருப்பார். 1 பிப்ரவரி 2009 அன்று, ICRC ஒரு அறிக்கையில் (ICRC Ref. 09/26) புதுக்குடியிருப்பு மருத்துவமனை இரண்டுமுறை நேரடித் தாக்குதலுக்கு உள்ளானதாகப் புகார் செய்தது; 4 பிப்ரவரி 2009 அன்று புதுக்குடியிருப்பு பற்றி மற்றொரு அறிக்கையை (ICRC Ref. 09/21) வெளியிட்டனர், 'மருத்துவ வசதி மீண்டும் ஒருமுறை நேரடியாகத் தாக்கப்பட்டதால் நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்'. இந்த அறிக்கைகள் சர்வதேச ஊடகங்களால்[199] பரவலாகக் கொண்டு போகப்பட்டன. போர் தொடர்பான சர்வதேச கருத்து-ரைகளில் விழிப்புடன் இருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு நிச்சயமாக அது வராமல் இருந்திருக்காது.

1 பிப்ரவரி 2009 ஞாயிற்றுக்கிழமை அன்று நாள் முழுவதும் பீரங்கி குண்டுகளால் மருத்துவமனை

---

192 http://responsibilitytoprotect.org/War%20Crimes%20In%20Sri%20Lanka.pdf Page 10

193 'ஐக்கிய நாடுகள் சபையின் மையப்பகுதி உட்பட (மேலே காண்க) முதல் NFZ க்குள் கடுமையான குண்டு தாக்குதல்கள் காரணமாக ஜனவரி 25 அன்று அதிகமான ஐக்கிய நாடுகளின் ஊழியர்கள் PTK க்கு இடம் பெயர்ந்தனர். மருத்துவமனை மற்றும் ஐக்கிய நாடுகளின் கட்டடங்கள் ஆகிய இரண்டின் GPS கோஆர்டிநேட்டுகள் அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தது. யுஏவிகளைப் பயன்படுத்தி பாதுகாப்புப் படையினரால் அடிக்கடி கண்காணித்து வந்ததாக சாட்சி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. எனவே, PTK இல் உள்ள மருத்துவமனை மற்றும் அருகிலுள்ள ஐக்கிய நாடுகளின் கட்டடத்தின் சரியான இருப்பிடம் குறித்து SLA அறிந்திருக்க வேண்டும். " *(OISL §823)*

194 §822 on. OISL.

195 *"PTK இல் உள்ள ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அமைப்புகள் மருத்துவமனை தாக்குதலுக்கு உள்ளாகிறது என்று பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கும் SLA க்கும் தெரிவித்தன"* (OISL §832).

196 Fonseka admits attacking a no /re zone with heavy weapons (video), 15 Nov 2015.

197 Sky News, 2 February 2009, "Packed Sri Lanka Hospital Shelled", <http://news.sky.com/story/667068/packed-sri-lanka-hospital-shelled>. Video footage available on https://www.youtube.com/watch?v=pKmM2qg95RO>

198 §832 OISL

199 S Lanka hospital 'attacked again', 3 Feb 2009, BBC http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/7866342.stm

eadly strike on S Lanka hospital, 2 feb 2009, BBC, http://news.bbc

euters - https://www.reuters.com/article/us-srilanka-war/sri-lanka

atients killed in cluster bomb attack on Sri Lankan hospital,The G

ttps://www.theguardian.com/weather/2009/feb/04/srilanka-terrorism

CMN, Sri Lanka hospital shelled for fourth time

https://edition.cnn.com/2009/WORLD/asiapcf/02/03/sri.lanka.fighting/

பலமுறை தாக்கப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்தியது என்று அசோசியேட்டட் பிரஸ் அறிவித்தது, 'நிரம்பி வழிந்த 30 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் விடுதி' தாக்கப்பட்டதாக அறிக்கை கூறியது.[200] அந்த அறிக்கைகளுக்கு கோத்தபாய ராஜபக்ச பதிலளித்ததாகத் தெரிகிறது; வார இறுதியில் சிறிலங்கா அரசின் செய்தி நிறுவனத்திடம் கூறியதாக CNN அறிவித்தது (அதாவது 31 சனவரி./1 பிப்ரவரி. 2009) 'LTTE யின் கட்டுப்பாட்டில் உள்ள எஞ்சிய பகுதிகளை விடுவிக்கும் வரை இராணுவத் தாக்குதலைத் தொடருவேன் என்று கூறியதாக CNN தெரிவித்தது'.[201] வன்னியில் நடந்த தாக்குதல்களின் தொலைக்காட்சி காட்சிகளை கோத்தபாய ராஜபக்ச மறுத்ததை மேற்கோள் காட்டி, 'இந்த வீடியோ கிளிப்புகள் குண்டுவீசுதல் அல்லது குண்டுவெடிப்பதைக் குறிக்கவில்லை'[202] என்று கூறிய அசல் அறிக்கை சண்டே ஐலண்ட் செய்தித்தாளில் வந்துள்ளது. தாக்குதல்கள் குறித்து செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர்களை அவர் அச்சுறுத்தியதாக அது மேலும் கூறுகிறது.

பின்னர் ஐ.நா. கூறியது:

> *1 பிப்ரவரி 2009 அன்று, புதுக்குடியிருப்பு மருத்துவமனை மூன்று தடவை குண்டுகளால் நேரடியாகத் தாக்கப்பட்டது, ஒட்டுசுட்டானைச் சுற்றியுள்ள SLA நிலைகளில் இருந்து ஏவப்பட்டன, குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டனர் மற்றும் குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர். பிற்பகல் 3 மற்றும் 4 மணிக்கு இடையில், இரண்டு குண்டுகள் மருத்துவமனையைத் தாக்கின, இரண்டாவது குறைந்தது ஒருவரைக் கொன்றது. மூன்றாவது தாக்குதல், மாலைக்குப் பிறகு, பெண்கள் மற்றும் குழந்தைகள் இருந்த ஒரு வார்டில் குறைந்தது நான்கு நோயாளிகளைக் கொன்றது மற்றும் குறைந்தது 14 பேர் காயமடைந்தனர்.*[203]

பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் மருத்துவமனை மீதான தாக்குதல்கள் அன்றாட நிகழ்வாக இருந்தபோது, கோத்தபாய ராஜபக்ச புதுக்குடியிருப்புக்கு மேலதிக படைகளை அனுப்புவதில் முக்கியமானவராக இருந்தார்.

அப்போதைய 53 வது டிவிசன் தளபதியாக இருந்த கோத்தபாயவின் துணைத் தளபதிகளில் ஒருவரான கமால் குணரத்தின தனது சுயசரிதையில், தான் கொழும்பில் விடுமுறையில் இருந்தபோது, அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தன்னை அழைத்து, போர் கட்டுப்பாட்டை மீறியதாகவும் நீங்கள் உடனடியாகச் சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்றும் பாதுகாப்புத்துறை செயலாளர் கூறுகிறார் என்று கூறியதாக எழுதியுள்ளார்.[204] விமான நிலையத்துக்குச் செல்லும் வழியில் தனது கைபேசியில் கோத்தபாய தன்னைப் பேர்சொல்லி அழைத்துப் பேசியதாக மேலும் கூறுகிறார்:

> *பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தொலைபேசியில் அழைத்து, 'கமால் புறப்பட்டு விட்டீர்களா?' என்று கேட்டு முல்லைத்தீவில் சூழ்நிலை மிக மோசமாக இருக்கிறது என்று விவரித்தார்... மேலும் அவர் என்மேல் மிகவும் நம்பிக்கை இருப்பதாகவும், எனக்குச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் திறன் இருக்கிறதாகவும் கூறினார்.*

4 பிப்ரவரி 2009 அன்று, சுதந்திர தினத்தில் தாக்குதல்கள் பற்றி கேள்விப்பட்ட உடன் இராணுவ அணிவகுப்பில் கலந்துகொள்ளாமல் கோத்தபாய கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் இருந்தார்:

> *பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இரவு முழுவதும் செயல்பாட்டு அறையில் இராணுவத் தளபதியுடன் சூழ்நிலையைக் கண்காணித்துக்கொண்டு இருந்தார் என்று பின்னர் நான் அறிந்து கொண்டேன்.*[205]

அதாவது 2009 பிப்ரவரி 3 ஆம் தேதி இரவு புதுக்குடியிருப்பு மீது நடந்த தாக்குதலை கோத்தபாய கண்காணித்துக் கொண்டிருந்தார் என்று அர்த்தம். குறிப்பாக இந்த இரவுதான் அந்த மருத்துவமனையின் மீதான தாக்குதல் உச்சத்தை அடைந்தது என்று ஐ.நா. அறிக்கை (OISL,§828) கூறியது;

> *2009 பிப்ரவரி 3 ஆம் தேதி இரவு முழுவதும் தாக்குதல்கள் தொடர்ந்தன, மேலும் பிப்ரவரி 4 ஆம் தேதி காலையிலும் கடுமையாகக் குண்டு வீசித் தாக்குதல்கள் நடந்தன. மருத்துவமனை வளாகத்தில் குறைந்தது 50 குண்டுகள் விழுந்தன, இதனால் இறப்புகளும் காயங்களும் மருத்துவமனை கட்டிடங்களுக்கு விரிவான சேதமும் ஏற்பட்டது. மருத்துவமனை நுழைவாயில் அருகே குண்டுகள் விழுந்ததில் 5 பேர் உயிரிழந்தனர். ஒரு மருத்துவமனை ஊழியர் பிப்ரவரி 4 ஆம் தேதி மருத்துவமனையின் நிலைமையைக் கண்டு 'கொலை வெறி' என்று விவரித்தார், இது போன்றவற்றை அவர் இதற்கு முன்பு பார்த்ததில்லை. தொடர்ந்து வந்துகொண்டிருந்த நூற்றுக்கணக்கான காயமடைந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவ ஊழியர்கள்*

[200] Artillery attack on hospital in Sri Lanka's war zone kills 9 patients, Ap, 1 Feb 2009. https://www.cbc.ca/news/world/artillery-attack-on-hospital-in-sri-lanka-s-war-zone-kills-9-patients-1.835526

[201] CNN https://edition.cnn.com/2009/WORLD/asiapcf/02/03/sri.lanka.fighting/

[202] "Act responsibly or be chased out,'' Gota tells BBC & envoys http://www.island.lk/2009/02/01/news1.html (https://sunandadeshapriya.wordpress.com/2009/02/01/act-responsibly-or-be-chased-out-gota-tells-bbc-envoys/)

[203] §827.

[204] P661, The Road to Nandikadal.

[205] Repeated in this story http://island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=155173 "Gotabhaya Rajapaksa had been with Sarath Fonseka at the Army headquarters' Operations Room as fighting continued into the night. "

*போராடினார்கள், மருத்துவ உள்கட்டமைப்பு இடிந்த நிலையில் இருந்தது. மருத்துவமனை பணியாளர்கள் தொடர்ந்து எறிகணை தாக்குதலால் பதுங்கு குழிகளில் ஒளிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.*

கோத்தபாய ராஜபக்ச இராணுவக் கட்டுப்பாட்டு அறையில் இரவு முழுவதும் இருந்ததால், காயம் பட்டவர்களால் நிரம்பியிருந்த மருத்துவமனை மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றி முந்தைய ICRC அறிக்கையில் இருந்து மட்டுமல்லாமல் கள அறிக்கைகள் மற்றும் அந்தப் பகுதியின் கண்காணிப்பு காட்சிகளின் மூலமும் அவருக்கு நேரடியாகத் தெரிந்திருக்கும்.[206]

அதுமட்டும் அல்லாமல் இராணுவத்தில் இருந்த ஒரு நேரடி சாட்சி புதுக்குடியிருப்பு மருத்துவமனையைத் தாக்க கோத்தபாய ராஜபக்சதான் கட்டளையிட்டார் என்று கூறுகிறது:

*அவை மருத்துவமனைகள் என்று எங்களுக்கு ஏற்கெனவே தெரியாமல் இருந்திருந்தால், முடிவில் அவை ICRC என்று சந்தேகம் இல்லாமல் தெரிந்திருக்கும் மேலும் மருத்துவமனைகள், உணவு விநியோக மையங்கள் மற்றும் தற்காலிக மருத்துவமனைகளில் இருக்கும் தங்கள் ஒருங்கிணைப்புகளுக்கு ஐ.நா. எப்போதும் வானொலி மூலம் தொடர்புகொள்ளும். இவ்வாறு சுடுவதற்கு கோத்தபாய கட்டளை இட்டபோது ஆர்ட்டிலரி அப்பகுதியில் இருந்த மருத்துவமனையை நோக்கி மட்டுமல்லாமல் ICRC யையும் UN ஊழியர்களையும் நோக்கியும்தான் இருந்தது என்று அறிந்திருந்தார்.*[207]

புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் மருத்துவர்கள் சாட்சியமளிக்கையில், வளாகம் போர்நிறுத்த மண்டலத்தில் இல்லாவிட்டாலும் நோயாளிகள் குவிந்து வருவதாக சுகாதார அமைச்சகத்திற்குத் தெரிவித்தனர். 'NFZ இல் இருந்து சிகிச்சைக்காக மக்கள் வருகிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு அங்கு வசதிகள் இல்லை,' என்று டாக்டர் வரதராஜா (W143) கூறினார். மருத்துவ-மனையைச் சுற்றி 500 மீட்டர் தூரத்துக்கு பாதுகாப்பு மண்டலத்தைப் பேண சிறிலங்கா இராணுவம் ஒப்புக்கொண்டதாகவும், அந்த 500 மீட்டர் தூரத்துக்கு LTTE இல்லை என்பதை ICRC தொடர்ந்து சரிபார்த்து வருவதாகவும் அவர் கூறினார். இறுதியில் மருத்துவ ஊழியர்கள் உயிருடன் தப்பினர்.

காயம் அடைந்து மருத்துவமனையில் தஞ்சம் புகுந்தவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது மறுபடியும் காயம் அடைந்தார்கள். 2009 ஆண்டு பிப்ரவரி ஆரம்பத்தில் புதுக்குடியிருப்பு தாக்கப்பட்டபோது அங்கு இருந்ததாகக் கூறும் W372 என்ற சாட்சி விவரிக்கிறார்:

*எனது மாமியார் வைக்கப்பட்டிருந்த வார்டு முழுவதும் முற்றிலுமாக சேதமடைந்ததையும், எனது மாமியாருக்குப் பக்கத்தில் ஒரு சிறுவனும் தாயும் கொல்லப்பட்டதையும் பார்த்தேன். எனது மாமியார் தனது மகளுடன் படுக்கைக்கு அடியில் மயங்கிக் கிடந்தார், ஏனெனில் அவரால் நகர்ந்து செல்ல முடியவில்லை, மேலும் அவருக்கு சரிவர காது கேட்காது. ஆனால் வெளியே சுவர் சேதமடைந்ததால் மக்கள் பீதியடைந்து நாலாபுறமும் அலறியடித்து ஓடினர். மருத்துவமனை என்று தெரிந்தாலும், வேண்டுமென்றே குறிவைத்துத் தாக்கியுள்ளனர்.*

## புதுமாத்தளன்

### *பலமாத குண்டுவீச்சு*

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நீண்ட மணற்பாங்கான கடலோர நிலப் பகுதியான போர்நிறுத்த மண்டலத்துக்குள் ஊடுருவி, புதுமாத்தளன் மற்றும் முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவ மனைகளில் தஞ்சமடைந்திருந்த நூறாயிரக்கணக்கான பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதல்களைத் தொடுத்தது. புதுமாத்தளன் மீதான தாக்குதல்கள் பற்றி சிறிலங்கா இராணுவத்திற்கு நன்றாகத் தெரியும், ஏனெனில் (a) அவர்களிடம் UAV மற்றும் கண்காணிப்புக் காட்சிகள் இருந்தன, (b) தரைவழி ஊடுருவியவர்கள் மற்றும் (c) செயற்கைக்கோள் படங்கள் (d) தற்காலிக மருத்துவமனைகளின் ஆள்கூறுகள் (e) நீரேரி ஊடாக வெற்றுக்கண்களாலேயே மறுபக்கத்தினை தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. மற்றும் (f) அங்கு சிக்கியிருந்த மதகுருமார்கள், UN, ICRC, மருத்துவ ஊழியர்கள் மற்றும் பிறரால் அனுப்பப்பட்ட உதவிக்கான கோரிக்கை அறிக்கைகள் அவர்களுக்குக் கிடைத்தன.

### *18 ஏப்ரல் ஊடுருவல்*

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-21 ஆம் தேதிக்கு இடையில் நடைபெற்ற புதுமாத்தளன் மற்றும் *பொக்கணை* ஆகிய இடங்களிலுள்ள இரண்டாவது 'போர்நிறுத்த மண்டலத்திற்கு' சவேந்திர சில்வாவின் (58 பிரிவு) ஊடுருவலை கோத்தபாய ராஜபக்ச முன்மொழிந்த செய்தியை அரசின் செய்திப் பத்திரிகையில் வெளியிடப் பட்டுள்ள பின்வரும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*58 ஆவது படைப்பிரிவு வெள்ளிக்கிழமை அதிகாலையில் NFZ இல்*[208] *இருந்த இறுதி மண் திட்டைக் கைப்பற்றிய*

[206] மொத்தத்தில், கோத்தபாய ராஜபக்ச தொலைதூரத்தில் இருந்து போரைப் பார்த்துக்கொண்டிருந்த அந்த இரவில் PTK மருத்துவமனையில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்று சொல்வது கடினம். ஆனால் ஓர் அறிக்கை (சாட்சிகள் இல்லாத போர்) 3 பிப்ரவரி 2009 அன்று 100 பேர் கொல்லப்பட்டதாகவும், அதற்கு அடுத்த நாள் 51 பேர் PTK இல் கொல்லப்பட்டதாகவும் கூறுகிறது. மருத்துவ ஊழியர்களால் தொகுக்கப்பட்ட விபத்துப் பட்டியல்களில் பிப்ரவரியின் முதல் பன்னிரண்டு நாட்களுக்கு இடைவெளி காணப்படுகிறது, பெரும்பாலும் கட்டிடத்தை அழித்த தாக்குதல்களில் பதிவுகள் அழிக்கப்பட்டதாலும், ஊழியர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதிலும் புதிய தற்காலிகத் தளத்தை அமைப்பதிலும் மிகவும் மும்முரமாக இருந்தனர். துல்லியமான விரிதாள்கள் 12 பிப்ரவரி 2009 முதல் மீண்டும் தொடங்குகின்றன.

[207] On file. W70.

[208] This would be NFZ3.

*பின்னர், LTTE களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் பொதுமக்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு புதிதாக வரையறுக்கப்பட்ட NFZ வெள்ளிக்கிழமை அறிவிக்கப் பட்டது. எவ்வாறாயினும், முன்னதாக அறிவிக்கப்பட்ட NFZ இன் பெரும்பகுதி ஏற்கனவே ஏப்ரல் 20 க்குப் பின்னர் படையினரால் கைப்பற்றப்பட்டதால், பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புத்துறை சபைக் கூட்டத்தில் முன்வைத்த யோசனைக்குப் பின் புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்புத்துறை சபைக் கூட்டத்தில் NFZ ஐ மறுவடிவமைப்பு செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இருந்தாலும், LTTEயின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் படையினர் கொன்றோ அல்லது உயிருடனோ பிடிக்கும் வரை இராணுவ நடவடிக்கைகளுக்கு எந்தச் சூழலிலும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது என்ற தீர்மானத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சயும், பாதுகாப்புதுறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சயும் உறுதியாக இருந்தனர்.*[209]

பின்னர் கோத்தபாய சவேந்திர சில்வா போர் நடத்திய விதத்தைப் பாராட்டி அவர் ஓர் அற்புதமான வேலையைச் செய்தார் என்றார்.[210] புதுமாத்தளன் மீது ஏப்ரல் 2009 அன்று நடத்திய தாக்குதல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராலும் அவரது தளபதிகளாலும் முழு நாளும் நடைபெற்றது என்று ஊடக அறிக்கைகள் கூறுகின்றன.[211] மேலும், தன்னிடம் ட்ரோன் காட்சி அணுகல் இருந்தது என்றும், அந்தத் தாக்குதலைப் பற்றி கருத்துரைத்தபோது நேர்மையற்ற முறையில் அது ஒரு மனிதாபிமான மீட்புப் பணி எனக் கூறியதாகவும் *சவேந்திர* சில்வா ஓர் உள்நாட்டு ஆணையத்திடம் (LLRC) சாட்சியமளித்தார்.[212]

### *பொதுமக்கள் உயிரிழப்பு*

பல மாதங்களாக இடம்பெயர்ந்த மற்றும் பட்டினியால் வாடும் பொதுமக்கள் புதுமாத்தளனில் தஞ்சம் அடைந்து கொண்டிருந்தனர். படைகள் 20 ஏப்ரல் 2009 அன்று அதைச் சுற்றியுள்ள குறுகிய மணல் பகுதியில் போரிட்டன. இது முக்கியமாக பொதுமக்களுக்கு எதிரான தாக்குதலாகும், இதனால் பெரும் அளவில் உயிர் இழப்புகள் ஏற்பட்டன.

ஊடுருவல் 'பெரும் பொதுமக்கள் உயிரிழப்புகளை' ஏற்படுத்தியது என்பதை ஐ.நா. நிபுணர்கள் குழு அறிக்கை (§109) உறுதிப்படுத்தியது. ICRC அதை விவரித்தது, 'பேரழிவே தவிர இது வேறு எதுவுமில்லை'.[213] ஐ.நா-வின் OISL அறிக்கை (§848) சுட்டிக்காட்டியுள்ளபடி, 'பீரங்கி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ICRC கவலையை வெளிப்படுத்தியது, மேலும் இரு தரப்பையும் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தது. மிகவும் மக்கள்தொகை கொண்ட பகுதியில் இது நிகழ்கிறது. புதுமாத்தளனில் உள்ள மருத்துவமனை மற்றும் ஐ.நா. மையம் ஆகியவை இராணுவம் மற்றும் விமானப் படையினரால் தாக்கப்பட்டதற்கான ஏராளமான சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தும் செயற்கைக்கோள் படங்களையும் ஐ.நா ஆய்வு செய்தது. கிளஸ்டர் குண்டுகள் சுடப்பட்டதாகவும், RPG.கள் மிக நெருங்கிய வரம்பில் இருந்து இலக்குகளை நோக்கி கண்மூடித்தனமாக சுடப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப் பட்டது. 21 ஏப்ரல் 2009 அன்று, 'ஆட்லறித் தாக்குதல்களுடன் வான்வழித் தாக்குதல்களும் நடாத்தப் பட்டன ஐ.நா. மேலும் (§847) கூறுகிறது, மருத்துவ மனையில் நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் தங்கியிருந்த கூடாரங்களில் தீ பற்றியது. இதனால் கடலில் உள்ள மணல் பதுங்கு குழிகளுக்குத் தப்பி ஓடமுடிந்தவர்கள் ஓடினர்'.

சர்வதேசப் பிரச்சினைக் குழு போர்க்குற்ற அறிக்கை 2010 ம் கூறியது:

> *அதன் பின்னர் ஏப்ரல் 19 ஆம் தேதி முதல் - பாதுகாப்புப் படையினர் நீரேரியைக் கடந்து NFZக்குள் நுழைவதற்குத் தயாராகிக்கொண்டிருந்த போது - புதுமாத்தளனுக்கும் அம்பரன்பொக்கனிக்கும் இடையில் கடுமையான குண்டு*

---

[209] 10 May 2009, Daily News, Troops advance into last Tiger terrain on three fronts,

[210] "58 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் சவேந்திர சில்வா சிறப்பான பணியைச் செய்தார். மன்னாரில் இருந்து வடக்கை மீட்பதற்கான போரில் அவரது பிரிவு இணைந்தது. பரந்தன் வரை கைப்பற்றப்பட்ட பூனேரிக்கு அவர்கள் பொறுப்பு. பின்னர் பரந்தனில் இருந்து விஸ்வமடு, புதுக்குடியிருப்பு மற்றும் இறுதியில் புதுமாத்தளன் வரை, அது போர் தடை மண்டலத்தின் முடிவெல்லை. அவரது பிரிவினரும், வன்னிப் பிரச்சாரத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை ஈடுபட்டு, அவர்கள் மிக முக்கியமான இடத்தைக் கைப்பற்றினர். பிரிகேடியர் சவேந்திர சில்வா தனது பிரிவை மிகவும் திறமையாகவும் வெற்றிகரமாகவும் வழிநடத்தினார். பிசினஸ் டுடே, ஜூன் 2009, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச போர் வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினார். https://www.businesstoday.lk/cover_page.php?article=891&hl=Pudukudiyiruppu

[211] "ஞாயிற்றுக்கிழமை (19) இரவு தொடங்கிய LTTE களின் பிரிவினைக்கான போரின் இறுதிக்கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள் இந்த மனிதாபிமான மீட்பு நடவடிக்கையில் 24 மணி நேரமும் தொடர்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது." https://www.army.lk/news/worlds-biggest-rescue-operation-full-swing-president-personally-monitors

[212] "புதுமாத்தளனில் UAV படங்களால் காட்டப்பட்ட உலகின் மிகப்பெரிய மீட்புப் பணி என்று அறியப்படும் மிகப் பெரிய பொதுமக்கள் மீட்புப் பணியைச் செய்யும்படி தளபதி என்னைப் பணித்தார்... LTTE இருப்பிடங்களை அடையாளங்கண்டு, LTTE பதுங்கு குழிகளை அடையாளங் கண்டு 3 வாரங்களுக்கு மேல் புதுமாத்தளனில் ஒரு கிலோமீட்டர் அளவுக்கு இடைவெளியை எங்களால் நிரப்ப முடிந்தது. இந்த முழு நடவடிக்கைக்கும் உண்மையில் என் படைப் பிரிவு பணிக்கப்பட்டது. கமோண்டாக்களும், சிறப்புப் படைகளும் பின்னால் அணியணியாக வந்தனர்." சிறிலங்கா இராணுவத்தின் 58 வது படைப்பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா LLRC யிடம் கூறியது, 8 செப்டம்பர் 2010

[213] ICRC, 21 April 2009, News Release 09/81, "ICRC calls for exceptional precautionary measures to minimise further bloodshed in 'no-fire zone'"

*தாக்குதல்கள் நடைபெற்றன, ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 20 அன்று காலை மருத்துவமனை குண்டு வீச்சால் மோசமாக சேதமடைந்தது, பாதுகாப்புப் படையினரும் LTTE யும் அதற்கு முன்னால் சண்டையிட்டனர். பாதுகாப்புப் படையினர் LTTE யைப் பின்னுக்குத் தள்ளி, NFZ ஐ இரண்டாகப் பிரித்ததால், பல இறந்துபோன, இறக்கும் நிலையில் இருந்த பொதுமக்கள் மருத்துவமனையில் அல்லது அதற்கு அருகில் கைவிடப்பட்டனர். அடுத்த நாட்களில் சுமார் 100,000 பொதுமக்ககள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளுக்குள் சென்றதால் பெரும் விளைவுகள் ஏற்பட்டன. மருத்துவமனையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பெருமளவில் பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் மருத்துவப் பணியாளர்கள் மீண்டும் வெளியேற வேண்டியிருந்ததால் மருத்துவப் பொருட்களும் உபகரணங்களும் கைவிடப்பட்டு இழப்புகள் ஏற்பட்டன.*

### *கட்டளைப் படிமுறை*

இரண்டாவது 'போர்நிறுத்த மண்டலத்துக்குள்' ஊடுருவியதில் இருந்து பொதுமக்கள் உயிரிழப்பு எதிர்பார்த்தது போலவே மிக அதிகமாக இருந்தது. மார்ச் 2009 இல் (பெட்ரி இணைப்பு) போர் மண்டலத்தில் இருந்த குடிமக்களின் AGA புள்ளிவிவரங்கள் 300,000 ஆக இருந்தது, இது பிப்ரவரியில் மொத்தம் 14 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டிருந்தது. ஆனால் அளவு குறைந்து கொண்டே வந்தது. பெருமளவில் தாக்கப்பட்ட புதுமாத்தளன் தற்காலிக மருத்துவ மனையைச் சுற்றி பொதுமக்கள் குவிந்திருந்தனர்.[214] மருத்துவமனைதான் பல வாரங்களாக மீண்டும் மீண்டும் தாக்குதலுக்கு இலக்காகியது. காயம் பட்டவர்கள் இரத்தம் தோய்ந்த கட்டுகளுடன் தரையில் கிடந்ததால் அங்கு நிலைமை பயங்கரமாக இருந்தது. 21 ஏப்ரல் 2009 அன்று எடுக்கப்பட்ட காணொளி, காயங்களாலும் குண்டு தாக்குதலாலும் அதிர்ச்சிக்கு உள்ளான வயதான பெண்களையும் சிசுக்களையும் குழந்தைகளையும் முள்ளிவாய்க்காலுக்கு உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்வதைக் காட்டுகிறது.[215]

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் தேதி புதுமாத்தளன் மீது தாக்குதல் நடத்துவதற்கான உத்தரவை ஜனாதிபதி மட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் அங்கீகரித்திருக்க வேண்டும் என அரசின் ஊடகம் தெரிவித்தது:

> *அதனால்தான் இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா, போர் தடை மண்டலத்தில் சிக்கியுள்ள 1,20,000க்கும் மேற்பட்ட பொதுமக்களை மீட்கும் இந்த மிகப்பெரிய மனிதாபிமான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி ராஜபக்ச மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரின் முழு அனுமதியைப் பெற்றார்.*[216]

இரு ராஜபக்ச சகோதரர்களிடம் இருந்தும் அனுமதி பெற்ற பின்னர் தான், இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, 'போர் தடை மண்டலம்' என்று அழைக்கப்பட்ட இடத்துக்கு எதிரான தாக்குதலைத் தொடங்குவதற்கான உத்தரவை 58 வது படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வாவுக்குத் தெரிவித்தார்.[217] இதனை சிறிலங்கா அரசு நாளிதழ் உறுதி செய்துள்ளது:

> *புதுமாத்தளன் மற்றும் பொக்கணை மீதான சர்ச்சைக்குரிய தாக்குதலைத் திரும்பிப் பார்க்கும்போது: ஏப்ரல் 18 ஆம் தேதி அவர்களுடன் பல மணிநேர கலந்துரையாடல்களுக்குப் பின்னர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, ஆகியோரின் இறுதி அனுமதியை லெப்டினனட் ஜெனரல் பொன்சேகா பெற்றார். திட்டமிட்டபடி போரை முன்னெடுப்பதற்கு பச்சைக்கொடி காட்டினார்கள். போர் தடை மண்டலத்தின் அருகில் இருந்த 58 வது படைப்பிரிவின் படை வீரர்களுக்கு அந்தப் பணி ஒதுக்கப்பட்டது.*[218]

## முள்ளிவாய்க்கால் தாக்குதல் (NFZ 3)

### *பொதுமக்கள் மீது தொடர் தாக்குதல்*

மூன்றாவது 'போர் நிறுத்த மண்டலம்' மீதான தாக்குதல்கள் முந்தைய மாதங்களில் இருந்த அதே முறையைப் பின்பற்றின. செயல்படும் மருத்துவ மனைகள் மட்டுமே மீண்டும் மீண்டும் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளாகின. பொதுமக்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கடந்த பத்தாண்டில் பல NGO மற்றும் UN அறிக்கைகளில் படுகொலைகள் மற்றும் துன்பங்கள் நன்கு

---

214 https://groundviews.org/2012/09/12/the-end-of-war-in-sri-lanka-captured-for-posterity-by-google-earth/

215 On file.

216 Daily News, 26 April 2009

217 "வவுனியாவின் களத் தலைமையகத்தில் இருந்து, ஜெனரல் பொன்சேகா இலங்கையின் புகழ்பெற்ற போர்வீரர்களில் ஒருவரான பிரிகேடியர் சவேந்திர சில்வாவுடன் இராணுவ தொலைத்தொடர்புக் கருவியில் இணைந்தார். உலகின் மிகப் பெரிய பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையை தொடங்குவதற்கான திட்டம் இறுதியானது என்றும், அதை நிறைவேற்றும் பணி தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் பிரிகேடியர் சில்வாவிடம் தெரிவித்தார். 18 ஏப்ரல் 2009, http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/ Ibid. ஊடுருவலில் ஈடுபட்டுள்ள படைப்பிரிவுகள்: "9வது கெம்மு வாட்ச் பற்றாலியன், 8வது கஜபா பற்றாலியன், 11வது இலங்கை இலகுரக காலாட்படை பற்றாலியன், கேணல் ரால்ப் நுகேராவின் தலைமையில் 2வது கமாண்டோ பற்றாலியன் மற்றும் கொப்பிலி ஏத்துலா கட்டளையின் கீழ் 1வது சிறப்புப் படை பற்றாலியன் மீட்பு நடவடிக்கைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒரு துளி இரத்தம் சிந்தாத ஒருபோதும் நடந்திராத மிகப்பெரிய மனித நாடகம்: 120,000 பணயக்கைதிகளை விடுவித்தல், 3 மே 2009, டெய்லி நியூஸ்.

218 ஒரு துளி இரத்தம் சிந்தாத ஒருபோதும் நடந்திராத மிகப்பெரிய மனித நாடகம்: 120,000 க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகளை விடுவித்தல், 3 மே 2009, டெய்லி நியூஸ்.


ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சாட்சியங்கள் இங்கு மீண்டும் கூறப்படவில்லை. உதாரணமாக, OISL கூறியது:

*மே 8 மற்றும் 12 க்கு இடையில் SLA பீரங்கிகள், விமானப்படை மற்றும் கடற்படை (§878) ஆகியவற்றின் தீவிர தினசரி குண்டுவீச்சுக்கு NFZ-3 வந்ததால் பல சந்தர்ப்பங்களில் இந்த மருத்துவமனை எறிகணை தாக்குதல்களுக்கு உள்ளானது. NFZ பகுதிகளுக்குள் எறிகணைத் தாக்குதலால் நூற்றுக்கணக்கான மக்களின் இறந்த உடல்கள் சிதறிக்கிடக்கும் அழிவின் காட்சிகளைப் பல சாட்சிகள் விவரித்தனர். (§885)*

### பொதுமக்களுக்குத் தவறாக வழிநடத்தும் அறிவுறுத்தல்கள்

மே 2009 தொடக்கத்தில், போர்ப் பகுதியில் உள்ள தமிழர்களை நோக்கி வெளியேறும்படி இராணுவம் துண்டுப் பிரசுரங்களை வீசியதாகக் கூறப்படுகிறது, இந்தக் கட்டத்தில் மக்கள் கொல்லப்படாமல் வெளியேறுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்பதை இராணுவம் நன்கு அறிந்தே இருந்தது.[219]

வஞ்சகமாக, இராணுவம் 2009 மே 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் தமிழ் மக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களை வீசியது, குண்டுவீச்சின் கீழ் இருந்த போதிலும் பொதுமக்களை 'போர் நிறுத்த மண்டலம்' 3 இல் இருக்குமாறு அறிவுறுத்தியது. வட்டுவாகல் பாலத்திற்குத் தெற்கே செல்லுமாறு அறிவுறுத்தி, பொது மக்களை இராணுவம் ஏற்றுக்கொண்டு பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களை வேண்டுமென்றே துப்பாக்கிச் சூட்டுக்குள் கொண்டு நிறுத்தியது.[220]


A Special Notice to the Public

The Security Forces ask you, the public, to stay where you are at present and not to move to any other places, whether it be in the Northern or Eastern or Western regions(especially not to move to Vellai Mulli Vaikal). These measures are taken in order to ensure your safety. The area where you are allowed to stay is indicated through a picture taken from an airplane.

Security Forces

### பொதுமக்கள் மேல் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன

போர் மண்டலத்தில் இருந்து தப்பித்து ஓடிய அனைவரையும் அரசாங்கம் சோதித்துக் கணக்கிட்டது. ஆகவே கடைசி வாரத்தில் அதற்குள் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் இருப்பது அவர்களுக்கு முழுமையாகத் தெரியும்.[221] மே மாதம் 16 ஆம் தேதி வரை போரின் கடைசி வாரத்தில் ஒவ்வொரு நாளும் பொதுமக்கள் மிகவும் அதிகமாக இருக்கும் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் கடுமையாகத் தாக்கியதாகத் தப்பிப்பிழைத்தவர்கள் விவரித்தார்கள் (ITJP நேர்முகம்). இதுவே ஒரு குற்ற நடவடிக்கை. போர்க்குற்றமும் கூட. அந்தப் பகுதியில் பல்லாயிரக் கணக்காக காயம் பட்டவர்கள், இறந்துகொண்டு இருப்பவர்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள், பொதுமக்கள் இருந்தனர் என்பது அரசுக்குத் தெரியும். இன்னும் அங்கு சிக்கிக்கொண்டிருந்தவர்களிடம் இருந்தும் ஐ.நா.-விடம் இருந்து அரசு அழைப்புகளைப் பெற்றது. ஐ.நா.-வின் கணக்குப்படி அங்கு இன்னும் 30 இல் இருந்து 80 ஆயிரம் பொதுமக்கள் இருந்தனர்.[222]

2009 மே 12 அல்லது 13 தேதிகளில் வெள்ளாம் முள்ளிவாய்க்காலில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்ட காட்சியை சாட்சி W374 விவரித்தார்:

*சிறிலங்கா தாக்குதல் உலங்குவானூர்திகள் வந்து இவர்களைத் தாக்கியது. நானும் அந்த வரிசையில் நின்றிருந்தேன். தாழ்வாக வந்து தாக்குதல் நடத்திய உலங்கு வானூர்தியைப் பார்க்க முடிந்தது. உலங்கு வானூர்தியில் மனிதர்கள் இருந்து சுடுவதை நான் பார்க்கவில்லை. அவர்கள் பயன்படுத்தியது இயந்திர துப்பாக்கி என்று நினைக்கிறேன். பலர் காயம் அடைந்தனர். பாதுகாப்பிற்காகத் தரையில் படுத்தோம். MI24 போர் உலங்கு வானூர்தி புறப்பட்ட பிறகும், மக்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்து, காயங்களில் கட்டி இரத்தப்போக்கை நிறுத்தினர், அப்படியும் அவர்கள் பட்டினியில் இருந்ததால், உணவைப் பெற அலைமோதினர். இது 2009 மே மாதம், ஒருவேளை 12 அல்லது 13. 7 க்கும் மேற்பட்டோர் இறந்தனர் மற்றும் 25 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் - இருபால்*

---

219 "SLA பக்கம் வருமாறு பொதுமக்களைக் ராஜபக்ச கேட்டுக் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் வானில் இருந்து வீசப்பட்டதைச் சுட்டிக்காட்டிய மீட்புப் பணியாளர் ஒருவர் பொதுமக்களை நிர்ப்பந்திப்பதற்காகவே இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகக் கூறினார். இலக்கு வைத்து வீசப்பட்ட குண்டு வீச்சின் மூலம் மருத்துவமனையில் 64 பேரை SLA படுகொலை செய்தனர் 2 மே 2009, https://www.tamilnet.com/art.html?catid=13&artid=29240

220 தமிழிலும் சிங்களத்திலும் அன்று பாதுகாப்புப் படையால் வானில் இருந்து வீசப்பட்ட கைப்பிரதிகளின் மொழிபெயர்ப்பு *(LLRC Annex ii).*

221 "கடந்த மூன்று நாட்களில் 50,000க்கும் அதிகமானோர் போர் மண்டலத்தில் இருந்து வெளியேறியுள்ளதாக இலங்கை இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் மே 17 அன்று தெரிவித்தார்". https://www.refworld.org/docid/4a1d3e1023.html Sri Lanka military says all civilians escape war zone

222 "நாங்கள் புரிந்துகொண்ட வரையில், வியாழன் முதல் வெளியே வந்தவர்கள் சுமார் 20,000 பேர், ஐ.நா. மதிப்பீட்டின்படி, இன்னும் 30,000-80,000 பேர் போர் மண்டலத்திற்குள் உள்ளனர்" என்று வெயிஸ் கூறினார். "இது ஒரு சிறிய நிலப்பரப்பாக இருக்கலாம். சென்ட்ரல் பூங்காவின் அளவு மூன்றில் ஒரு பங்கு. இந்த நேரத்தில் அப்பகுதியில் மிகவும் கடுமையான போர் நடந்து வருகிறது. எனவே அந்தப் பகுதியில் இருந்து வெளியேறும் பொதுமக்களின் இறுதி எண்ணிக்கையைக் காண நாங்கள் உண்மையில் காத்திருக்கிறோம். கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்." கோர்டன் வெய்ஸ் in https://www.refworld.org/docid/4a1d3e1023.html

*குழந்தைகளும் பெரியவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் பொதுமக்கள். பகலில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே உணவு விநியோகிக்கப்பட்டது, மீதமுள்ள நாட்களில் மக்கள் பதுங்கு குழிகளில் இருப்பார்கள். ட்ரோன்கள் 24 மணி நேரமும் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துக்கொண்டிருந்தன.*

மே 10 முதல் 16 வரையிலான மூன்றாவது போர் நிறுத்த மண்டலத்தில் பலகுழல் பீரங்கித் (MBRL) தாக்குதல்கள் நடந்ததைப் பல சாட்சிகள் விவரிக்கின்றனர். மே 2009 இரண்டாவது வாரத்தில் முள்ளிவாய்க்கால் மருத்துவ மனையில் MBRL தாக்குதலை W374 விவரித்தார். மற்ற உயிர் பிழைத்தவர்கள் அந்த வாரத்தில் MBRL தாக்குதல்களைக் கண்டதாக விவரித்தனர், அது கடல்நீரேரியின் மறுபுறம் உள்ள கேப்பாப்புலவில் இருந்து நடந்தது:

*மே 10-15 க்கு இடையில் இரட்டைவாய்க்கால் மற்றும் முள்ளிவாய்க்கால் இடையே பொதுமக்கள் மீது நடந்த MBRL தாக்குதல்களை நானும் அனுபவித்தேன். இந்த MBRL தாக்குதல் கேப்பாபலாவில் இருந்து, கடலில் இருந்து, முல்லைத்தீவில் இருந்து வந்தது, எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்து கொண்டிருந்தது. இதன் விளைவாக துப்பாக்கிச் சன்னங்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் நான் கண்டேன். மே 15 அன்று காலை உழவு இயந்திரத்தின் கீழ் மறைந்திருந்த ஒரு குழந்தை உட்பட 5 பேர் கொண்ட குடும்பம் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் எனக்கு நினைவிருக்கிறது. MBRL குண்டு உழவு இயந்திரத்தின் மேல் விழுந்து மொத்த குடும்பமும் பலியாகியது. நான் பார்த்த மிக மோசமான விஷயம் இதுதான். கேப்பாபுலவிலிருந்து குண்டு வந்தது. கடைசி நாட்களில் பெரும்பாலும் கேப்பாபுலவில் இருந்து தாக்குதல் வந்தது, இல்லையெனில் இராணுவத்தின் தாக்குதல் தனது சொந்த படைகளையே தாக்கி இருக்கும்.*

*W383* [223]

14 மே 2009 அன்று பொதுமக்களுக்கு எதிராக MBRL பயன்படுத்தப்பட்டது W381.[224] W46 மற்றும் அவரது மருமகள் இருவரும் 15 மே 2009 அன்று பச்சை உண்டியல் பிள்ளையார் கோவில் மீதான மற்றொரு MBRL தாக்குதலை தனித்தனியாக விவரித்தனர். W46 இன் தாயைக் கொன்றது மற்றும் அவரது மருமகளைக் காயப்படுத்தியது. இது அன்று நடத்த ஒரு தாக்குதல் மட்டுமல்ல; W380 கூறினார்:

*15ஆம் தேதி இரவு அப்பகுதியில் குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டு, எங்களுக்குப் பக்கத்தில் இருந்த பதுங்கு குழியில் ஒன்று விழுந்தது, அங்கு LTTE மனநலம் குன்றிய குழந்தைகளை வைத்திருந்தனர். முன்னர் ஓர் அரசு சார்பற்ற நிறுவனம் வைத்திருந்த இந்தப் பராமரிக்கும் பொறுப்பை LTTE ஏற்றுக்கொண்டது. எத்தனை குழந்தைகள் இறந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. காட்சி குழப்பமாக இருந்தது, எல்லோரும் அலறி அழுகிறார்கள், அதனால்தான் நாங்கள் எங்கள் பதுங்கு குழியிலிருந்து நகர வேண்டியிருந்தது. கடந்த இரண்டு நாட்களாக, மற்றவர்களை யாரும் கவனித்துக் கொள்ளவில்லை, ஏனென்றால் அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். தாக்குதல் நடந்தால், காயமடைந்தவர்களுக்கு உதவாமல் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. இறுதி நாட்களில் இதுதான் நிலைமை. இது வெடிக்கும் சத்தத்தின் அடிப்படையில் PTK யில் இருந்து வீசப்பட்ட பீரங்கி குண்டு ஆகும். சில நேரங்களில் விஷயங்களை நினைவில் கொள்வது கடினம். குழப்பமாக இருந்தது. எல்லா இடங்களிலும் தாக்குதல்கள் நடந்தன. போரின் இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பது பற்றி எனக்கு இன்னும் கொடுங்கனவுகள் வருகின்றன.*

மே 16 ஆம் தேதி திரளாகப் பொதுமக்கள் குழுமி இருந்த ஒரு பகுதியில் நடத்தப்பட்ட இன்னொரு MBRL தாக்குதலை W384 பார்த்தார்:

*இரவு 8.00 மணியளவில் A35 இன் மறுபுறத்தில் பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றதை நாங்கள் கண்டோம். அடுத்தடுத்து பல வெடிச்சத்தங்களை நான் கேட்டேன், அதைத் தொடர்ந்து அலறல் சத்தம் கேட்டது... எங்களுக்கும் இலக்குக்கும் இடையே உள்ள தூரம் 90 மீட்டருக்கு மேல் இல்லை. சரணடைவதற்காகத் தெற்குப் பகுதிக்குத் தப்பிச் செல்லும் பொதுமக்களால் அப்பகுதியில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.*

பின்னர் மே 16 ஆம் தேதி அளவில் 17:30 மணிக்கு தான் 60 மி.மீ. பீரங்கிச் சூட்டால் வட்டுவாகலுக்கும் முள்ளிவாய்க்காலுக்கும் இடையில் காயம் அடைந்ததாக சாட்சி W379 கூறினார்:

*...திடீரென ஒரு சிறு பீரங்கிக் குண்டு கூடாரத்தின் முன் விழுந்து வெடித்தது, நான் மோசமாகக் காயமடைந்தேன், அந்தத் தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர், ஆனால் எத்தனை பேர் என்று எனக்குத் தெரியவில்லை. அந்த நேரத்தில் கூடாரங்கள் மிக நெருக்கமாக இருந்ததால், ஒரு முறை ஒரே மோட்டார் குண்டால் பலருக்குக் காயம் ஏற்பட்டது, ஏனெனில் அங்கு கூட்டம் அதிகமாக இருந்தது. ஒருவர் பார்வை இழந்தார், மற்றொருவர் கால் இழந்தார். எனக்குக் கை, முகம், கால், வயிற்றில் காயம் ஏற்பட்டது. அங்கிருந்த முதியவர்கள்,*

[223] மே 16 அன்று தொடர்ந்து குண்டு வீசித் தாக்குதல் நடந்தன மற்றும் ட்ரோன்கள் மேலே பறந்தன என்று W385 மேலும் கூறினார்.

[224] '14 மே 2009 க்குள், SLA கடற்கரைக்கு வருவதற்கு சற்று முன், அதே நாளில் இந்தப் பகுதியில் செரான் டிரேட் நிறுவனத்திற்குச் சொந்தமான ஓர் உணவு பாரஊர்தி நின்றது, அதில் டின் மீன் மற்றும் பிற உணவு பொருட்கள் இருந்தன. அந்த நேரத்தில் பொதுமக்களுக்கும் LTTE போராளிகளுக்கும் சாப்பிட எதுவும் இல்லை. அதனால் மக்கள் பாரஊர்தியில் இருந்து உணவைப் பெற அங்கு சென்றனர். அந்த நேரத்தில் குண்டு வீசித் தாக்குதல்கள் நடந்து பல பொதுமக்களையும் இரண்டு LTTE உறுப்பினர்களையும் கொன்றன. PTK வில் இருந்து கடல்நீரேரிக்கு குறுக்கே குண்டு வெடித்தது. அது MBRL மற்றும் குண்டுகள். மே 15 வாக்கில் நிலைமை குழப்பமடைந்தது அதுமட்டும் அல்லாமல் புலிகள் கிட்டத்தட்ட அனைத்துப் பகுதிகளிலும் கட்டுப்பாட்டை இழந்தனர். குண்டு வீசித் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது மேலும் பொதுமக்கள் எங்கும் செல்ல முடியவில்லை. வெவ்வேறு திசைகளில் இராணுவப் பகுதிக்குள் நகர்ந்தனர். சிலர் PTK வழியாக வடக்கே சென்றனர், மற்றவர்கள் கடல்நீரேரி வழியாகச் சென்றனர்.'

*குழந்தைகள், ஆண்கள் பெண்கள் ஆகிய 15க்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்தனர், எனக்குத் தெரிந்தவர்களில் ஒருவர் படுகாயம் அடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.*

மறுநாள் காலை வட்டுவாகல் பாலத்தில் சரணடைவதற்கு யாரோ அவளுக்கு உதவி செய்த நேரத்தில், எல்லா இடங்களிலும் தோட்டாக்கள் பறந்துகொண்டிருந்தன. அதனால் அவர்கள் மறைந்து கொள்ள வேண்டியிருந்தது: 'எறிகணை தாக்குதல் நடந்தது, ஆனால் அது எங்களுக்குப் பின்னால் வெடித்தது, ஆனால் நாங்கள் துப்பாக்கிச் சூட்டின் மத்தியில் இருந்தோம். தாக்குதல் A35 சாலையின் கடல் பக்கத்திலிருந்து வந்தது என்றாலும் நிலத்தில் இருந்து வந்தது. இந்தக் குறைந்த தூரத்தை நடந்து கடந்து பாலத்தை அடைய எங்களுக்கு இரவு முழுவதும் பிடித்தது. 17 ஆம் தேதி காலை வந்து சேர்ந்தோம்.'

இன்னொரு சாட்சியான W401 பாதுகாப்புப் படைகளுடன் முன்னணியில் நடந்துவரும் போது அந்த நேரத்தில் புதிதாகக் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான உடல்களைப் பார்த்தார்:

*அதே இடத்தில் ஆயிரக் கணக்கான சடலங்கள் தரையில் எங்கும் கிடப்பதையும், பொதுமக்களும் LTTE யும் ஒரே உடையில் இருப்பதையும் கண்டேன். மரணத்திற்கான காரணத்தை என்னால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை, அது பீரங்கி அல்லது துப்பாக்கிச் சூடுகளாக இருக்கலாம். என்னால் சொல்ல முடிய வில்லை, ஆனால் அவை சிதைந்த உடல்கள் அல்ல. அண்மையில்தான் இறந்திருக்கக் கூடும். இந்த ஏராளமான உடல்களை மே 15 மற்றும் 16 தேதிகளில் மட்டுமே பார்த்தேன். மே 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் நான் அங்கு இருந்தேன். சில இறந்த உடல்களும் இருந்தன, ஆனால் இரண்டு நாட்களுக்குப் பின் நான் SLA காவல் படையின் கீழ் திரும்பியபோது இல்லை.*

## தரைவழி இராணுவச் செயல்பாடு பற்றிய கோத்தபாயவின் அறிவு

ஆளில்லா விமானக் காட்சிகள் மற்றும் தனது தளபதிகளைத் தொலைபேசியில் அணுகுவதன் மூலம், கோத்தபாய ராஜபக்ச தலைநகர் கொழும்பில் இருந்தாலும்கூட முள்ளிவாய்க்கால் பகுதியில் இறுதிப் போர் மண்டலத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்திருந்தார். 13 மே 2009 அன்று பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு கோத்தபாய பொறுப்பேற்றார் என்றும், பாதுகாப்பு அமைச்சக ஊழியர்களுக்கு மட்டுமின்றி மற்ற அரசாங்க அமைச்சர்களுக்கும் உத்தரவுகளைப் பிறப்பித்ததாகவும் இந்த அமெரிக்கத் தூதரக டெலக்ஸ் காட்டுகிறது:

*மே 13 [2009] காலை நேரத்தில், பொறுப்பாளர் பேரிடர் மேலாண்மை மற்றும் மனித உரிமைகள்துறை அமைச்சர் சமரசிங்கவை அழைத்து, பசுமைப் பெருங்கடலின் (Green Ocean) செயல்பாடுகளில் மற்றொரு நாள் தாமதம் ஏற்படுவதால் ஏற்படும் மனிதாபிமான விளைவுகள் குறித்து கடுமையான கவலையை வெளிப்படுத்தினார். இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் தாக்குதல்கள் இடம்பெறாது, உணவுப் பொருட்களைப் படகில் இருந்து இறக்கலாம், பயணிகளை ஏற்றிக்கொள்ளலாம் என்ற இராணுவத்தின் முழு உறுதிமொழியை ICRC யின் தூதுக்குழு தலைவர் பால் காஸ்டெல்லாவிடம் வழங்குமாறு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபசவால் (பாதுகாப்புத்துறை சபையின் கூட்டத்தில் இருந்தவர்) இன்று காலை தனக்கு அறிவுறுத்தப்பட்டதாக சமரசிங்க கூறினார்..... நாளை மே 14 அன்று ராஜபக்சவும் காஸ்டெல்லாவும் சந்திப்பது உதவியாக இருக்கும் என்று சமரசிங்க பொறுப்பாளரிடம் கூறினார்.*[225]

இந்த நேரத்தில் போர் மண்டலத்தில் அதன் மூன்றாவது ஊழியர் கொல்லப்பட்ட பிரச்சினையைக் ICRC கையாண்டுகொண்டு இருந்தது.[226] 58வது டிவிசன் கமாண்டர் சவேந்திர சில்வா, (2019 ஆம் ஆண்டு வரை இலங்கை இராணுவத்தின் தளபதி) உள்நாட்டு ஆணைக்குழுவான LLRC க்கு சாட்சியமளிக்கையில், ட்ரோன் காட்சிகள் மூலம் தரையில் உள்ள அனைத்தையும் பார்க்க முடியும்; தாக்குதலுக்கு உள்ளானவர்களில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அடங்குவர் என்பதை அவர் அறிந்திருந்தார் என்றார்:

*இறுதிக் கட்ட நடவடிக்கையின் போது நாங்கள் கண்மூடித்தனமாகச் செல்லவில்லை. அனைத்துமே UAV படங்களின் மூலம் திட்டமிடப்பட்டது. பொதுமக்களும் LTTE யும் எங்கிருந்தார்கள் என்பதை நாங்கள் சரியாக அறிந்திருந்தோம், பொதுமக்கள் LTTE க்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறார்களா என்று சற்றுக் குழப்பம் அடைந்தோம். வேறு வழிகளைக் கையாண்டு இரு தரப்பாரையும் பிரிக்க எங்களுக்குக் கால அவகாசம் தேவைப்பட்டது.*

போர் முடிவடைந்து விட்டதால் 2009 மே 16-19 வரை சீனாவில் இருந்த இராணுவத் தளபதியைத் தவிர்த்துவிட்டு சவேந்திரவும் கோத்தபாயவும் நேரடித் தொடர்பில் இருந்தனர்.[227] உதாரணமாக, தனது சுயசரிதையில், 53 வது பிரிவின் படைத் தளபதி கமால் குணரத்தின பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து தொலைபேசி அழைப்புகளைப் பெற்றதை விவரிக்கிறார்:

*மே 14 அன்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் இருந்து எனக்கு அழைப்பு வந்தது, அவர் முதலில் போர்முனையின் நிலை குறித்து விசாரித்தார். பின்னர் அவர் போரை நிறுத்துமாறு*

[225] https://wikileaks.org/plusd/cables/09COLOMBO522_a.html 09COLOMBO522_a

[226] ICRC News Release No. 09/100, 13 May 2009, Sri Lanka: third ICRC staff member killed in conflict area

[227] Also Witness testimony regarding the conversations. Daily News, ACTING DEFENCE MINISTER, 15 May 2009. Mahinda Rajapaksa went to Jordan from 14-17 May. Maithri-Mahinda talk of forming caretaker grand coalition, 7 Oct 2018, Lanka Sunday Times.

*சர்வதேச சமூகத்திடம், குறிப்பாக அமெரிக்காவிடம் இருந்து பெரும் அழுத்தத்தை எதிர்கொள்வதாகவும் அதனால் அவர் நாங்கள் போரை விரைவாக முடிக்க வேண்டும் என்று விரும்புவதாகவும் கூறினார்.. நான்கு நாட்களுக்குள் அனைத்தையும் முடித்துவிடுவோம் என்று நான் நம்பிக்கையுடன் அவரிடம் தெரிவித்தேன், எனது பதிலில் அவர் மிகவும் திருப்தி அடைந்ததாகத் தோன்றியது. அதன் பின்னர் பிரிகேடியர் சவேந்திர சில்வாவிடம் இதே செய்தியைத் தெரிவிப்பதற்காக அவர் பேசியுள்ளார். எனக்கும் சவேந்திரவுக்கும் நெருங்கிய தொடர்பும் வேலை சம்பந்தப்பட்ட உறவும் இருந்ததால், போரை நான்கு நாட்களில் முடிக்கத் திட்டமிட்டோம்.*

### சர்வதேசக் கண்காணிப்பாளர்களுக்கு அணுகல் மறுப்பு

19 மே 2009 அன்று காயம் அடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ICRC போர் மண்டலத்தை அணுக வேண்டும் என்று விரும்பியதாகவும் ஆனால் கோத்தபாய ராஜபக்சவால் மற்றவர்களுடன் சேர்த்து அவர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது என்று என்று விக்கிலீக்ஸ் டெலெக்ஸ்கள் காட்டுகின்றன:

*பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ச மற்றும் களத்தளபதிகள் ஆகியோர் இதுவரை காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்வந்த ICRCயின் உதவியை ஏற்க மறுத்து இராணுவம் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் என்று வலியுறுத்தியதாக ICRC யின் தலைவர் பால் காஸ்டெல்லா (பாதுகாப்பு) DCM க்கு அறிக்கை அளித்துள்ளார். குடும்பங்களுக்கு அறிவிப்பதற்கு வசதியாக, இறந்தவர்களின் அடையாளத்தை மேற்பார்வையிட பாதுகாப்பான மண்டலத்திற்கு ICRC யின் அணுகலையும் காஸ்டெல்லா கேட்டுள்ளார். இதுவும் மறுக்கப்பட்டுள்ளது.*[228]

### ஒட்டுமொத்த படுகொலை

இராணுவத்தின் பக்கம் வர முயன்று சரணடைந்தவர்கள் பத்திரிகையாளர்கள் எவரும் பார்க்கவில்லை என்று உறுதியானதும் இறுதி நாட்களில் கொல்லப்பட்டனர் என்று ஒரு சிறிலங்கா படைவீரர் சாட்சியம் அளிக்கிறார்:

*அவர்கள் அனைவரையும் கொல்லுமாறு கோத்தபாய அவருக்கு நேரடியாக உத்தரவிட்டிருந்தார். அவர்களில் சிலர் சீருடை அணிந்திருந்தனர், சிலர் சிவில் உடையில் இருந்தனர். இந்த உத்தரவும் அதன் நிறைவேற்றமும் 2009 மே 16-19 தேதிகளில் வட்டுவாகல் பாலத்திற்கும் வெள்ளமுள்ளிவாய்க்காலுக்கும் இடைப்பட்ட மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் நடைபெற்றது. … சரணடைந்தவர்கள் மேல் இந்தத் துப்பாக்கிச் சூடு பல முறை நடந்ததை நான் பார்த்தேன். பல குழுக்கள், சில ஐம்பது, சில எழுபத்தைந்து, சில இருபத்தைந்துக்கு மேல் வருவார்கள், அவர்கள் அனைவரும் கொல்லப் படுவார்கள். அதில் குழந்தைகள், சிறு குழந்தைகள் பெண்கள் மற்றும் முதியவர்கள் அடங்குவர்.*

இந்தப் படுகொலைகள் நடத்தப்பட்டதைப் பல தப்பிப்பிழைத்தவர்கள் உறுதிப்படுத்தி அவற்றைப் பார்த்ததை விவரிக்கிறார்கள்:

**<u>15 மே 2009</u>**

*அவர்கள் என் கண் முன்னே சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டாம் என்று பெண் வீரர்கள் கத்திக் கொண்டிருந்தனர், ஆனால் இராணுவ வீரர்கள் தங்கள் ஏகே-47 தோட்டாக்களால் அவர்களைத் துளைத்தனர். திரும்பிப் பார்க்க வேண்டாம், சாலையில் முன்னோக்கிச் செல்லுங்கள் என்று வீரர்கள் எங்களிடம் சொன்னார்கள்.*

***W282***

**<u>16 மே 2009</u>**

*அன்று மட்டும், குறைந்தது நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிறிலங்கா படையினரால் நேரடியாக சுட்டுக் கொல்லப்பட்டதையும், சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல முற்பட்ட போது என் கண் முன்னே இறந்து போனதையும் நான் கண்டேன்.*

***W292***

*நிராயுதபாணியாக சாலையை நோக்கி ஓடும் பொதுமக்களை, குழந்தைகளைக்கூட சுடுவதை நான் பார்த்தேன். அவர்கள் தானியங்கித் துப்பாக்கிகள் மற்றும் 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டனர். ஒரு சிப்பாய் உருமறைப்பு சீருடையில் கழுத்தில் கறுப்பு துண்டு மற்றும் தலை முடியில் ஒரு கறுப்புத் துணியை இறுக்கி, பின்புறத்தில் கட்டியிருந்தார், அவர் மக்களை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தார். அவர் T56-2 துப்பாக்கியை எடுத்துக்கொண்டு 25 மீட்டர் தொலைவில் இருந்தார். ஒரே 50 காலிபர் இயந்திர துப்பாக்கியை அதே கறுப்பு துண்டு கட்டிய நபர் தரையில் வைக்கப்பட்டிருந்த கனமான முக்காலியில் துப்பாக்கியை வைத்து சுட்டுக்கொண்டிருந்தார். நான் அவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தேன். சுட வேண்டாம் என்று மக்கள் அழுது, சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். சட்டையை கழற்றி காற்றில் அசைத்து சரணடைவதாக அறிவித்து சாலையை மக்கள் நெருங்கினர். அவர்களிலும் சிலர் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.*

***W129 மாலை 3 மணிக்கு***

**<u>17 மே 2009</u>**

*A35 இன் கடல்நீரேரி பக்கத்தில் நான் ஒரு நிகழ்வைக் கண்டேன். ஒரு உழவு இயந்திரப் பெட்டியில் சீருடை இல்லாமல் இருந்த 8 அல்லது 9 LTTE போராளிகளை இராணுவம் சுட்டுக் கொன்றது. அவர்கள் அரை நிர்வாணமாக இருந்தனர். அவர்களது கைகள் முதுகுப்புறம் வைத்துக் கட்டப்பட்டிருந்தன.*

***W99***

228 https://wikileaks.org/plusd/cables/09COLOMBO543_a.html 09COLOMBO543_a

**18 மே 2009**

*அவர்கள் ஒரு துடைத்தகற்றும் செயல்முறையைச் நடத்தினார்கள் என்று நினைக்கிறேன். நான் ஏ 35 (சாலை) வழியாகச் சென்றபோது, இராணுவத்தினர் ஏகே 47 களால் சுட்டுக் கொன்றதையும், காயமடைந்த LTTE போராளிகளை சாலையோரத்தில் தூக்கிலிடுவதையும் கண்டேன். அந்த இடத்தில் LTTE யின் பெண் போராளிகளே அதிகம் இருந்தனர்... PTK மகா வித்யாலய பள்ளியில் என்னுடன் படித்த, LTTE உறுப்பினராக இருந்த ஒரு பெண் உட்பட 10 பேர் இவ்வாறு கொல்லப்பட்டதை நான் நேரில் பார்த்தேன். அந்த LTTE போராளியின் பெயர் நிலா; அவர் மருத்துவப் பிரிவில் இருந்தார்; அவருடைய உண்மைப் பெயர் அல்லது சொந்த ஊர் எனக்கு நினைவில் இல்லை. ஆனால் அவர் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தார் என்று நினைக்கிறேன். அவருக்கு என்ன நடந்தது என்று அவரது குடும்பத்தினரிடம் சொல்ல அவர்களை நான் தேடினேன். ஆனால் என்னால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.*

***W182***

## வெள்ளைக்கொடியுடன் சரணடைதல்

2008 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போர் முடிவடைவதற்கு முன்னர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, நிராயுதபாணியான LTTE உறுப்பினர்கள் 'பயங்கரவாதிகளாகக் கருத மாட்டார்கள், சாதாரண பொதுமக்களாகவே வரவேற்கப்படுவார்கள்' என்று கூறினார்.[229] மே 2009 இல் LTTE போராளிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை உண்மையில் நடத்தியதன் மூலம் இந்த உறுதிமொழி மீறப்பட்டது.

18 மே 2009 அன்று வட்டுவாகல் பாலத்திற்கு தெற்கே உள்ள LTTE யின் அரசியல் பிரிவுத் தலைவர்களைத் கொல்ல உத்தரவிட்டதில் கோத்தபாய ராஜபக்சவுக்கு இருந்த பங்கு குறித்து கணிசமான ஆய்வு நடத்தப் பட்டது. இந்த நிகழ்வு வெள்ளைக் கொடி நிகழ்வு என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் காயமடைந்து போர் செய்ய முடியாதவர்கள் சரணடையும் போது ஒரு வெள்ளைக் கொடியை ஏந்திவரும்படி அறிவுறுத்தப் பட்டிருந்தார்கள்.

2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா. விசாரணை, பல சாட்சியங்கள் மற்றும் சடலங்களின் புகைப்படங்-களின் தடயவியல் பரிசோதனையின் அடிப்படையில், 'LTTE யின் மூத்த அரசியல் பிரிவுத் தலைவர்களான பாலசிங்கம் நடேசன் மற்றும் சீவரத்தினம் புலித்தேவன் மற்றும் நடேசனின் மனைவி வினிதா நடேசன் ஆகியோர் மே 18 அன்று 06:00 மணிக்குப் பின் பாதுகாப்புப் படையினரால் கொலைசெய்யப்பட்டார்கள் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. ஆரம்பத்தில் சவேந்திர சில்வாவின் 58வது பிரிவு இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டது, பின்னர் MOD இன் வலைப்பக்கம் அந்தப் பதிவை நீக்கியது. மே 18 காலை வட்டுவாகல் பாலத்தில் சரணடைந்த LTTEயின் தலைவர்களுடன் சவேந்திர சில்வா கைகுலுக்கியதாக நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர். அன்றைய தினம் அவர் அப்பகுதியில் இருந்ததும், அங்கு பொறுப்பாளராக இருந்ததும் உறுதி செய்யப் பட்டுள்ளது.[230] இந்தச் சாட்சியம் நிகழ்வுகளைப் பற்றிய பல்வேறு அரசாங்கக் கூற்றுகளை மறுக்கிறது, அதில் ஒன்று LTTE யின் தலைவர்கள் சரணடைந்தபோது அவர்கள் தங்கள் சொந்த மக்களாலேயே முதுகில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதாகும்.

புலித்தேவனும் நடேசனும் சரணடையும் முடிவில் இருப்பது கோத்தபாய ராஜபக்ச, அவரது சகோதரர்கள் மகிந்த மற்றும் பசிலுக்குத் தெரியும்:

> *சரணடைய விரும்பிய LTTE தலைவர்களுக்கு வெள்ளைத் துணியை ஏந்தியவாறு வெளியில் வருமாறு வெளிநாட்டு இடையீட்டாளர்கள் மூலம் ஒரு செய்தியைத் தெரிவித்தது பசில் ராஜபக்சயுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சயும்தான் என்று தளபதி பொன்சேகா கூறினார். 'அது அவர்களின் யோசனை' என்றார்.*[231]

ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் விஜய் நம்பியார் சரணடையும் நிகழ்வில் பார்வையாளர்களாக இருக்க தாம் இருமுறை வேண்டியதாகப் பின்னர் விவரித்தார்.[232]

ஏராளமான வெளிநாட்டு இடையீட்டாளர்கள் உட்பட பலர் மூலம் பல நாட்களாக 'வெள்ளைக்கொடி' சரணடைதலுக்காகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக ஐ.நா. உறுதிசெய்கிறது:

> *...வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின் நிரந்தரச் செயலாளர் பாலித கொஹோன, ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கட்டத்தில் தகவல் தொடர்புகளில் பங்கேற்றவர்களில் மூத்த ஐ.நா. அதிகாரிகளும் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் போன்ற மற்றவர்களும் அடங்குவர்.*[233]

---

[229] (CPA: *A Profile of Human Rights and Humanitarian Issues in the Wanni and Vavuniya*, March 2009, p 31);

[230] Meeting in Canadian Mission, 2014, New York.

[231] Sunday Leader iv reproduced at http://www.elakiri.com/forum/archive/index.php/t-319553.html

[232] "போவதற்கு நான் கேட்டேன், இரண்டு முறை [அமெரிக்கத் தூதர்] பாப் பிளேக்கைத் தொடர்பு கொண்டேன், நாங்கள் இருவரும் செல்லத் திட்டமிட்டிருந்தோம்... ICRCயால் கடல் வழியாகச் செல்ல முடியவில்லை. அரசு எங்களுக்கு அனுமதி தர மறுத்தது. நாங்கள் வலுக்கட்டாயமாக உள்ளே செல்ல வழி இல்லை. நடந்த கொலைகள் பற்றி ஏன் பேசவில்லை என வினவிய போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சயுடன் பேசிய போது, சரணடைய விரும்பியவர்களை அவர்களது சொந்த மக்களே கொலை செய்திருக்கலாம் என கூறப்பட்டது.." நம்பியார் 'வெள்ளைக்கொடி' நிகழ்வு பற்றி பேசுகிறார், 25 பிப்ரவரி 2012, https://srilankabrief.org/2012/02/nambiar-speaks-up-about-white-flag-incident/

[233] OISL §292

சரணடையும் சமரசப் பேச்சுகளில் ஈடுபட்டவர்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு http://white-flags.org என்ற முகவரியில் ITJP அறிக்கையைப் பார்க்கவும்.

சிறிலங்காவில் ஒரு விவாதத்துக்குரிய செய்தித்தாள் நேர்முகத்தில் தளபதி பொன்சேகா பின்னர் கூறினார்:

*பின்னர், இந்தத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் பசில் தெரிவித்ததாக நான் அறிந்தேன் - அவர் இராணுவத்தின் 58 வது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வாவுடன் பேசி, சரணடைய முயற்சிக்கும் எந்தவொரு LTTE தலைவர்களுக்கும் இடமளிக்க வேண்டாம் என்றும் அவர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.*[234]

இருந்தாலும், தனது சகோதரர் 2009 மே 15 அன்று விடுமுறை எடுத்ததால் கோத்தபாயவுக்குத் தெரிவிக்கவில்லை என்று பசில் ராஜபக்ச கூறினார் - போர் உச்சக்கட்டத்தில் இருந்ததால், அதற்கு முந்தைய நாள் கமல் குணரட்ணவுக்கும், சில்வாவுக்கும் அதை முடிக்க வேண்டும் என்று கோத்தபாயவிடம் இருந்து அழைப்பு வந்ததாக இருவரும் கூறினார்கள். (மேலே பார்க்க):

*பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவைத் தொடர்பு கொள்ள நாங்கள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. வெள்ளியன்று நாங்கள் பாதுகாப்பு அமைச்சுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, திரு. ராஜபக்ச அந்த நாள் பணியில் இருக்கவில்லை என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவரது ஊழியர்கள் வேறு எந்தத் தொலைபேசி எண்ணையும் அளிக்க மறுத்துவிட்டனர்.*[235]

தன் சகோதரனின் கைபேசி எண் எதுவும் தன்னிடம் இல்லை என்று பசில் ராஜபக்ச கூறியதும் முரணாக இருக்கிறது.

## போரில் தப்பிப்பிழைத்தவர்களைத் தன்னிச்சையாகத் தடுத்துவைத்தல்

### பொதுமக்கள்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற பொறுப்பில் கோத்தபாய ராஜபக்ச, போரில் தப்பிப்பிழைத்தவர்களின் பராமரிப்பை நிர்வகிக்கும் பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைக்கும் கடமையில் இருந்தார். சரணடைந்த தமிழர்களுக்கு எதிரான இராணுவத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய அதே இராணுவ அதிகாரிகளை, அவர்கள் மீது குண்டுவீச்சு மற்றும் எறிகணை தாக்குதல்களை நடத்தும் பொறுப்பில் அவர் அமர்த்தினார். இவர்கள் பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் வேறுபாடு காட்டாத தளபதிகள் என்று அறியப்பட்டவர்கள். போருக்குப் பின் நிலவிய வெற்றிகரமான சூழ்நிலையில், தவறுகளை முழுமையாக மறுத்து, மனித உரிமைகள் மேலும் மீறப்படுவதை இது முன்னறிவித்தது.

போரின் முடிவில் வன்னியில் இருந்து தப்பிப்பிழைத்த 282,000 தமிழ் மக்களை காவலில் வைப்பதில் கோத்தபாய ராஜபக்சவின் முக்கிய பங்கை ஐ.நா விசாரணை(OISL §1074) எடுத்துக்காட்டியது:

*2009 ஆம் ஆண்டு ஏப்ரலில் வடக்கு மாகாணத்தில் IDP களுக்கு (உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள்) பொறுப்பான தகுதி வாய்ந்த அதிகாரியாக மேஜர் ஜெனரல் சந்திரசிறி நியமிக்கப்பட்டதன் மூலம் இடம்பெயர்ந்தோர் மீதான அரசாங்கத்தின் அணுகுமுறையின் இராணுவ மயமாக்கப்பட்ட தன்மை எடுத்துக் காட்டப்பட்டது. பின்னர் அவருக்குப் பதில் இறுதித் தாக்குதலில் ஈடுபட்ட மேஜர் ஜெனரல் கமால் குணரத்தினநியமிக்கப்பட்டார்.*[236] *IDP பிரச்சினைகளை நிர்வகிப்பதில் சிவில் அதிகாரிகளும் ஈடுபட்டிருந்தாலும்,*[237] *குறிப்பாக மண்டலங்கள் மற்றும் முகாம்களில் உள்ளேயும் வெளியேயும் செல்லும் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சகமும் SLA வும் முக்கியப் பங்கை ஆற்றின. இது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச LLRCக்கு அளித்த விளக்கத்தால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அதில் அவர் கூறினார்: 'முழுச் செயல்முறையையும் இராணுவமே கவனித்தது. பிற அரசு அதிகாரிகளும், முகமையங்களும் [sic] ஈடுபட்டது நிச்சயமாக உண்மைதான். ஆனல் பெரும்பாலான வேலைகள் [IDP முகாம்களை அமைத்தல்] இராணுவத்தால் செய்யப்பட்டது.*[238] *மனிக்பாமில் ஒவ்வொரு மண்டலத்திலும் இராணுவத் தளபதிகள் பலர் பொறுப்பில் இருந்தனர், மேலும் IDP களின் அன்றாட வாழ்க்கையை முறைப்படுத்த இராணுவ வீரர்கள் முகாம் முழுவதும் இருந்தனர்.*

### தேசியப் பாதுகாப்பு விவாதத்தை ஊழல் வலுவற்றதாக்குகிறது

விசாரணை நேர்காணலும் செயல்முறைகளும் - IDP களை (இடம்பெயர்ந்தவர்களை) முகாம்களை விட்டு வெளியேற அனுமதிக்காததற்கான முக்கிய உத்தியோக பூர்வமான நியாயப்படுத்துதல் - 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு முழுவதும் முகாம்களுக்குள் தொடர்ந்தது பொதுமக்கள் உடையில் இயங்கும் இராணுவப்

[234] http://www.thesundayleader.lk/2009/12/13/“gota-ordered-them-to-be-shot”---general-sarath-fonseka/

[235] http://www.thesundayleader.lk/2009/12/13/“gota-ordered-them-to-be-shot”---general-sarath-fonseka/

[236] Appointed as Secretary of Defence by Gotabaya in 2019.

[237] மீள்குடியேற்றம், பேரிடர் நிவாரணச் சேவைகள் துறை அமைச்சர் தலைமையிலான தேசிய வழிநடத்தல் குழுவில் மேலும் பல அமைச்சுக்கள் இடம்பெற்றுள்ளனர். மாவட்ட அளவில் அரசின் முகவரும் ஏனைய நிறுவனங்களும் இதில் ஈடுபட்டிருந்தன. (சிறிலங்காவின் மனிதாபிமான முயற்சி, வடக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான ஜனாதிபதியின் அதிரடிப் படை, 2011).

[238] Representation made by Mr. Gotabaya Rajapaksa, Secretary Ministry of Defence to the LLRC, 17 August 2010.

புலனாய்வு அதிகாரிகள் மற்றும் CID பணியாளர்கள் தேடுதல் உத்தியின் ஒரு பகுதியாக இருந்தனர். LTTE போராளிகளை அடையாளம் காணவும். LTTE போராளிகள் என சந்தேகிக்கப்படும் நபர்களைத் தேடி பாதுகாப்புப் படையினர் மக்களைச் சுற்றி வளைத்த போதிலும், பாதுகாப்புப் படையினரிடையே ஊழல் தலைவிரித்தாடுவதால் ஆயிரக்கணக்கான மக்கள் இலஞ்சம் கொடுத்து முகாமிலிருந்து தப்பிச் சென்றனர். தேசியப் பாதுகாப்பின் அடிப்படையில் போரில் தப்பிப்பிழைத்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற வாதத்தை கொள்ளை நோய் போன்ற ஊழல் வலுவிழக்கச் செய்தது. மானிக் பார்ம் முகாமில் இருந்து தப்பித்தல், சோதனைச் சாவடிகள் வழியாக கொழும்புக்குச் செல்வது, விருந்தினர் மாளிகையில் பதிவு செய்தல், புதிய பாஸ்போர்ட், விசா, விமான டிக்கெட் மற்றும் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்வது உள்ளிட்ட பேக்கேஜை வாங்குவது அப்போது சாத்தியமாக இருந்தது. இது சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினரால் குறிப்பாக CID பிரிவினரால் நிர்வகிக்கப்பட்டது, எனவே இது போல் நடப்பதை அவர்கள் அறிந்திருந்தனர். மற்ற சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினர் கண்ணை மூடிக்கொள்ள லஞ்சம் கொடுக்கப்பட்டது. LTTE யின் ஓர் உயர் மட்டத் தலைவரின் மனைவி தான் மயிரிழையில் தப்பிச்சென்று சென்னையை அடைந்த பின்தான் தொலைபேசி அழைப்பைப் பெற்றார் என்று அவர் அளித்த சாட்சியின் மூலம் மக்கள் தப்பிச் செல்வதை புலனாய்வு சேவைகள் அறிந்திருந்தனர் என்பது எங்களுக்குத் தெரிந்தது. அவர் தப்பிச் செல்ல உதவிய உளவுச் சேவைகள் அவர் உண்மையில் யார் என்பதை அறிந்தே இருந்தனர்.

### பாதுகாக்கத் தவறியமை

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத்தைப் பொதுமக்கள் மற்றும் மோதலில் ஈடுபடுவோர் பொறுப்பில் மட்டும் வைக்கவில்லை - தற்போதுதான் எதிர்த்துப் போரிட்டு எதிரியாகக் கருதும் இராணுவத் தளபதிகளை அவர்களது பொறுப்பின் கீழ் வைத்தார். இடம்பெயர்ந்தவர்களுக்காக எந்தவிதமான பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளும் இல்லாமல் மீறல்கள் - குறிப்பாக பாலியல் வன்முறை - நிகழும் என்பது முன்னரே கணிக்கும்படியாக இருந்தது. ITJP மனிக் பார்ம் 'IDP முகாமில்' இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும் மற்ற தடுப்புக்காவல் தளங்களில் இராணுவத்தினராலும் கூட்டுப் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களிடம் இருந்து சாட்சியங்களைச் சேகரித்துள்ளது - ITJP யால் நேர்காணல் செய்யப்பட்ட மிக இளம் வயதுடையவருக்கு அப்போது 14 வயது. தமிழர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை நிகழ்த்திய இராணுவத்தின் செயலைப் பார்க்கும்போது இது முற்றிலும் எதிர்பார்க்கக்கூடியதே. மனிக் பார்மில் சந்தேகப்படும் பெண்களை பெண் காவலர்கள் அல்லது இராணுவ அதிகாரிகள் மட்டுமே விசாரிப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற முறையில் கோத்தபாய ராஜபக்ச மேற்கொண்டிருக்க முடியும். அப்படிச் செய்திருந்தால் வன்புணர்வையும் பாலியல் வன்முறை சம்பவங்களையும் குறைத்திருக்கலாம்.

மாறாக, கோத்தபாய ராஜபக்ச உட்பட பல சிறிலங்கா அதிகாரிகள், படையினரால் தமிழ்ப் பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்ட குற்றச்சாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டினர். 2011 ஆம் ஆண்டில், இறுதிக்கட்ட போரில் சிக்கிய பிரித்தானிய தமிழ் உதவிப் பணியாளர் ஒருவரால் சுமத்தப்பட்ட வன்புணர்வு குற்றச்சாட்டுகள் குறித்து இந்திய தொலைக்காட்சி சேனல் ஒன்று கேட்டபோது, கோத்தபாய ராஜபக்ச அசாதாரணமான பதிலை அளித்தார், வெளிப்படையாக வாதிட்டார். அந்தக் கவர்ச்சிகரமான பெண் ஏன் தானே பலாத்காரத்துக்கு உட்பட்டு இருக்கக் கூடாது என்று கேட்டு அதனால் அந்தப் பெண்ணின் கூற்று தவறானது என்று அவரே முடிவுசெய்தார்.[239]

## முன்னர் மோதலில் ஈடுபட்டவர்கள்

ஆயிரக்கணக்கான[240] முன்னாள் LTTE உறுப்பினர்கள், தகவலறிந்தவர்களால் அடையாளம் காணப்பட்டு, 'புனர்வாழ்வு முகாம்கள்' என்று தவறாக வழிநடத்தப் படும் இடங்களில் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப் பட்டனர், சட்ட உதவி மற்றும் மேல்முறையீட்டு உரிமை யின்றி இரகசியமாக வைக்கப்பட்டனர். போருக்குப் பின்னர் ஆரம்ப ஆண்டுகளில் 'புனர்வாழ்வில்' இருந்த போது பல ஆண் மற்றும் பெண் கைதிகள் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். அரசாங்கம் இதை 'மனிதாபிமான பணி 2' என்று அழைத்தது.

2018ஆம் ஆண்டில், தன்னிச்சையான தடுப்புக்காவல் பற்றிய ஐ.நா. செயற்குழு (A/HRC/39/45/Add.2) சிறிலங்காவின் புனர்வாழ்வு செயல்முறை தன்னிச்சையான தடுப்புக்காவலை உருவாக்கியது மற்றும் தற்போதைய மற்றும் கடந்த கால கைதிகள் 'தவறாக சிறைத்தண்டனை பெற்றதாகப் பொது அங்கீகாரத்தைப் பெற வேண்டும் மேலும் இழப்பீடு மற்றும்/அல்லது திரும்பச் செய்யப்படாது என்பதற்கான உத்தரவாதத்தைப் பெற வேண்டும்....' என்று பரிந்துரைத்தது(§87b). அது இன்னும் நிறைவேறவில்லை.

'புனர்வாழ்வு' திட்டத்தின் கீழ் இருந்த நூற்றுக்கணக்கான மக்கள் தற்போது வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர், பலருக்குத் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது.

239 https://www.youtube.com/watch?v=HBEqqObGURg#t=191%20php/rajapaksa-%20promotes-instigator-of-channel-4-protests-to-cabinet/

240 அரசின் மதிப்பீடுகள் 11000 முதல் 14000 வரை வேறுபடுகின்றன. துல்லியமான மற்றும் நிலையான எண்ணிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை என்பது கவலை அளிக்கிறது.

குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பு மறுவாழ்வுத் திட்டத்தில் இருந்து கைதிகளை அவர்களது கிராமங்களில் மீள்குடியேற்றுவதில் பெரும் பங்கு வகித்தது. இதில் அவர்களது தளங்களில் இருந்து சோதனைக்காக நேர்காணல் செய்யும் அணுகலும் அடங்கும்.[241] அதன் பணிக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, நோர்வே, டச்சு மற்றும் ஜப்பானிய அரசாங்கங்கள் நிதியளித்தன. சில IOM 'பயனாளிகள்' இங்கிலாந்து மற்றும் ஹாலந்தில் 'புனர்வாழ்வு' திட்டத்தில் சித்திரவதை செய்யப்பட்டதன் அடிப்படையில் தஞ்சம் பெற்றுள்ளனர். அந்த அரசாங்கங்கள் IOM மூலம் இதற்கு நிதியுதவி அளித்தன. சிறிலங்காவின் 2015 ஆம் ஆண்டுக்கான நிலைமாறுகால நீதித் திட்டத்தில் இழப்பீடுகளுக்குப் பொறுப்பான முன்னணி அமைப்பாக IOM ஆனது.

கோத்தபாய ராஜபக்ச 'புனர்வாழ்வு முகாம்களுக்கு' சென்றார் (கீழே காண்க). அண்மையில் முடிவடைந்த போரின் போது LTTE யை நசுக்குவதற்கும் தமிழ் மக்களைக் கொல்வதற்கும் உறுதுணையாக இருந்த கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகள் நிதியமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தவர்கள் என்ற போதிலும் புனர்வாழ்வுத் திட்டத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டனர்.[242] புனர்வாழ்வுத் திட்டம் ஓர் ஆண்டு நடைபெற்று வந்தபோது சிறிலங்காவின் ஒரு மனித உரிமை ஆர்வலர் கோத்தபாய ராஜபக்ச இந்தச் செயல் முறையைத் திறம்பட கட்டுப்படுத்துவதாக நம்பினார்:

> *'மறுவாழ்வு உதவியைப் பெறுவதற்கான தகுதியைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் செயல்முறை பற்றி பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல்கள் எதுவும் இல்லை. இந்த முடிவை எடுத்தது யார் என்பதும், தீர்மானம் எடுப்பதற்கான அளவுகோல் என்ன என்பதும் எங்களுக்குத் தெரியாது. முடிவெடுக்கும் அதிகாரம் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செயலாளருக்கு மட்டும்தானா? செய்திக் கட்டுரைகளின் அடிப்படையில், LTTE என்று கூறப்படுபவர்களின் தலைவிதியைக் கட்டுப்படுத்துவது உண்மையில் செயலாளர், MOD மற்றும் ஜனாதிபதி என்று ஒருவர் கருதலாம். உதாரணமாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர், மக்கள் சமூகத்தில் மீள இணைக்கப் படுவதற்கு முன் ஒவ்வொரு முன்னாள் LTTE போராளிகளும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும் என தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். நாட்டின் வளர்ச்சிக்கு உழைக்கக்கூடிய அமைதியான மற்றும் பயனுள்ள குடிமக்கள். இதன் விளைவாக, 'பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. கோத்தபாய ராஜபக்சவின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் சிறிலங்கா அரசாங்கம் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நிறுவப்பட்ட புனர்வாழ்வு மையங்களில் அந்த முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்க விரிவான வேலைத்திட்டத்தை வடிவமைத்துள்ளது. இது நிறுவன செயல்முறைகளின் பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டுகிறது மற்றும் ஆயிரக்கணக்கான நபர்களின் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் இரண்டு நபர்களுக்கு மட்டுமே உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. அவர்கள் அதை ஆலோசனை அல்லது வெளிப்படைத்தன்மை இல்லாமல் செய்கிறார்கள்.[243]*

மேலும், 'புனர்வாழ்வு' முகாம்களில் இருப்பவர்கள் என்று அரசாங்கம் குறிப்பிட்டுக் காட்டிய எண்ணிக்கைகள் ஒருபோதும் சீரானதாக இல்லை. குறிப்பிட்டுக் காட்டப்பட்ட எண்களில் 3,310 நபர்களின் எண்ணிக்கை மாறுபடுகிறது.


---

[241] "IOM க்கு முன்னாள் LTTE பணியாளர்களை அணுக முடியுமா என்று கேட்டதற்கு, பாதுகாப்பு அமைச்சகமும் இராணுவத் தலைமையகமும் அந்தத் திட்டத்தை நடத்துபவர்களுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டதாக டான்சிகர் கூறினார். "உண்மையில், புனர்வாழ்வுக்குப் பின் விடுவிக்கப்பட்ட 11,000 நபர்களை நாங்கள் அணுகியுள்ளோம், இருப்பினும் இதுவரை சுமார் 8,000 பேருக்கு எங்களால் உதவ முடிந்தது," என்று அவர் கூறினார்.", Sri Lanka generous towards vanquished – outgoing IOM chief Post-war rehabilitation, The Island, April 10, 2013.
The IOM acknowledged that the government had given the agency direct access to ex-LTTE combatants held in several
facilities.", IOM clarifies role in reintegrating Tigers into society, 1 Dec 2011, https://thuppahi.wordpress.com/2011/12/01/iom-clarifies-role-in-reintegrating-tigers-into-society/

[242] "புனர்வாழ்வுத் துறைக்கான ஆணையாளர் நாயகம் பொறுப்பைத் தற்போது சேவையில் இருக்கும் ஓர் உறுப்பினரான மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்கே ஏற்பார் என்று சிறிலங்கா அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது. இருப்பினும் ஆணையாளர் நாயகம் நீதித்துறை அமைச்சரின் செயலாளர் சுஹதா கமலத்தின் மூலம் நீதித்துறை அமைச்சருக்கு அறிக்கை அளிப்பார்" https://wikileaks.org/plusd/cables/09COLOMBO773_a.html '
பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் நீதி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் BCGR அமைக்கப்பட்டது, இப்போது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.' On file.

[243] Reconciliation through 'Rehabilitation' & 'Reintegration' of Ex-LTTE members in Sri Lanka: Separating Fact from Fiction, 10/19.2010 Ambika Satkunathan, https://groundviews.org/2010/10/19/reconciliation-through-'rehabilitation'-'reintegration'-of-ex-ltte-members-in-sri-lanka-separating-fact-from-fiction/#_ftn9

# புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள்: முரண்பாடான தொகைகள்



1. p9, *Combatant' to 'Civilian': The Psychosocial Wellbeing of Ex-combatants in Kilinochchi and Mullaitivu, Sri Lanka*, 2019, https://www.ices.lk/publications-1/from-combatant-to-civilian-%3A-the-psychosocial-wellbeing-of-ex-combatants-in-kilinochchi-and-mullaiti citing Source: BCGR – Department of Government Information booklet (2013)'தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் அறிக்கைகள் முரணாக உள்ளன. நவம்பர் 2009 இல், புனர்வாழ்வுக்கான அப்போதைய ஆணையர் நாயகம் 10,992 'சரணடைந்தவர்கள்' அவரது காவலில் இருப்பதாகக் குறிப்பிட்டார். "2009 நவம்பர் 16இல், நீதியமைச்சு நடாத்திய கூட்டம் ஒன்றின்போது, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஜெனரல் தயா ரட்ணநாயக்காவால் 8,894 ஆண்கள், மற்றும் சிறுவர்கள் உட்பட 2,098 பெண்கள் உள்ளனர் எனக் கூறப்பட்டது. இதனையே 2010 இல், பக்கம் 10இல் ICG மேற்கோள் காட்டியது.'

2. ICG report, 2010, page 10,.Citing Asia Tribune, 5 December 2009, "The Elders statement on IDPs in Sri Lanka – Sadly outdated and inaccurate – Dr. Kohona", http://www.asiantribune.com/news/2009/12/05/elders-statement-idps-sri-lanka-sadly-outdated-and- inaccurate-%E2%80%93-dr-kohona (accessed on 27 July 2010). முன்னைய CGR மிக அண்மையில், அதாவது 2010 பெப்ரவரி 2இல், 12,000 பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

3. Satkunanathan, Ambika, 2018/12/01, The treatment of former combatants in post-war Sri Lanka: A form of arbitrary detention or rehabilitation? https://www.researchgate.net/publication/343046809_The_treatment_of_former_combatants_in_post-war_Sri_Lanka_A_form_of_arbitrary_detention_or_rehabilitation

4. http://news.bbc.co.uk/2/hi/south_asia/8450914.stm, 10 Jan 2010, BBC, Sri Lanka's Tamil Tiger suspects 'won't be freed soon'

5. p8 http://ices.lk/wp-content/uploads/2019/12/From-Combatant.pdf, citing BCGR.

6. http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/8450914.stm

7. Interviews with humanitarian aid workers, July 2010 cited by ICG report, P10.

8. http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/8450914.stm

9. http://archives.sundayobserver.lk/2010/02/28/fea03.asp, Businessmen, Tamil diaspora should help rehabilitation, by Shanika SRIYANANDA, 28 Feb 2010, Sunday Observer.

10. A/HRC/34/54/Add.2, 2016

11. https://ihl-databases.icrc.org/fr/customary-ihl/v2/rule128?country=lk

12. https://ihl-databases.icrc.org/fr/customary-ihl/v2/rule128?country=lk

13. *Reconciliation In Sri Lanka: Harder Than Ever*, Asia Report No 209, 18 Jul 2011

    2010 யூலை இறுதியில், விடுதலைப் புலிகளை சிறிலங்கா இராணுவம் தோற்கடித்து ஓராண்டுக்கும் அதிகமான பின்னர், 12 இற்கும் மேற்பட்ட 'புனர்வாழ்வு' நிலையங்களில் 8,000 வரையானனோர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என்னும் அடிப்படையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள். "தீவிர பற்றுள்ள உறுப்பினர்கள்" என்ற கூறி குறைந்தது மேலும் 1300 பேர் குற்றவியல் வழக்குகளை எதிர்கொள்வதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இவர்களின் 700 பேர் ஓமந்தையிலுள்ள சிறப்பு தடுப்பு முகாமில் உள்ளார்கள். ஏறத்தாழ 3,000 பேர் கடந்த ஆண்டு தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

14. https://www.army.lk/news/former-ltte-cadres-rehabilitation-last-stage

15. https://www.bbc.co.uk/news/world-south-asia-12108479 Tamil Tiger releases hit by rehabilitation problems, 3 Jan 2011, BBC

16. https://ihl-databases.icrc.org/fr/customary-ihl/v2/rule128?country=lk

17. https://www.lankaweb.com/news/items/2011/01/02/of-11696-ltte-personnel-taken-into-custody-5586-have-left-rehabilitation-centres-since-the-end-of-the-war/

    https://ihl-databases.icrc.org/fr/customary-ihl/v2/rule128?country=lk

18. https://timesofindia.indiatimes.com/world/south-asia/lanka-releases-1800-ex-ltte-guerrillas-after-rehabilitation/articleshow/10185260.cms, 30 Sep 2011, Lanka releases 1,800 ex-LTTE guerrillas after rehabilitation

    Read more at: http://timesofindia.indiatimes.com/articleshow/10185260.cms?utm_source=contentofinterest&utm_medium=text&utm_campaign=cppst

19. https://reliefweb.int/report/sri-lanka/rehabilitation-ex-ltte-cadres-final-stages

20. https://www.businesstoday.lk/article.php?article=3488, On file.

21. *From Vanni to Cinnamon Grand : Ex-fighters display dancing skills at IOM reception, 2011, available at https://realsrilankanman.blogspot.com/2011/05/from-vanni-to-cinnamon-grand-ex.html*

22. Turning Former LTTE Personnel into Sri Lankan Citizens?,https://groundviews.org/2011/10/28/turning-former-ltte-personnel-into-sri-lankan-citizens/ Footnote 1.

23. https://ihl-databases.icrc.org/fr/customary-ihl/v2/rule128?country=lk

24. https://ihl-databases.icrc.org/fr/customary-ihl/v2/rule128?country=lk

25. *Post-Conflict Reconciliation in Sri Lanka: A Time for Reflection Author(s): Rohan Gunaratna Source: Counter Terrorist Trends and Analyses*, Vol 4, No 4 (Apr 2012), pp2-7, International Centre for Political Violence and Terrorism Research

26. https://m.reliefweb.int/report/472295/sri-lanka/ex-cadres-reintegration-accelerated

27. p8 http://ices.lk/wp-content/uploads/2019/12/From-Combatant.pdf, citing BCGR. On file.

28. http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/8450914.stm

29. https://reliefweb.int/report/sri-lanka/rehabilitation-ex-ltte-cadres-nearing-completion

30. p9, *From 'Combatant' to 'Civilian': The Psychosocial Wellbeing of Ex-combatants in Kilinochchi and Mullaitivu, Sri Lanka*, 2019. ICES on file: அரசாங்க வட்டாரங்களிலிருந்து வெளிவந்த, "புனர்வாழ்வு வழங்கப்பட்ட மீளவும் இணைக்கப்பட்டார்கள்" என்று கூறப்பட்ட முன்னாள் போராளிகளின் எண்ணிக்கைகளில் தெளிவான முரண்பாடு காணப்படுகின்றது. அண்மையில் நடந்த செய்தியாளர் சந்திப்பொன்றில், முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமும் (2009 யூலை–2010 பெப்ரவரி) முன்னாள் இராணுவத் தளபதியுமான, தயா ரட்ணாயக்கெ, "கொலைகள், கொலை முயற்சிகள், வழிபாட்டுத்தலங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடாத்தியவர்கள் அல்லது அதற்கு உதவியவர்கள்  உட்பட 14,000 இற்கும் மேற்பட்ட புலிஉறுப்பினர்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டன. ஜனாதிபதியைக் கொலை செய்ய முயன்ற புலி உறுப்பினர்களுக்கும் (பொதுமுல்ல மற்றும் சஞ்சீவ 2009) ஜனாதிபதிப் பொதுமன்னிப்பு வழங்கப் பட்டுள்ளது" என கூறினார். முன்னாள் ஆணையாளரின் கருத்துப்படி, முன்னாள் போராளிகள் என்று சரணடைந்த, கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14,000 இற்கும் மேல். அத்துடன் அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பும் புனர்வாழ்வும் வழங்கப் பட்டுள்ளது. இது நாம் BCGR  இலிருந்தும் முன்னாள் போராளிகளும் தொடர்பானதும், மூத்த விடுதலைப் புலிப்போராளிகள்மீதான சட்டநடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் தொடர்பாக  அதன் வெளியீடுகளிலிருந்தும் நாம் பெற்றுக்கொண்ட எண்ணிக்கைகளிலிருந்து முற்றிலும் முரணானதாகும். இந்த முரண்பாடுகள் காரணமாக, எந்தத் தகவல் உண்மையைக் கொண்டுள்ளது என்பதைக் கண்டறிவது கடினம்.

31. Satkunanathan, Ambika, 2018/12/01, The treatment of former combatants in post-war Sri Lanka: A form of arbitrary detention or rehabilitation? https://www.researchgate.net/publication/343046809_The_treatment_of_former_combatants_in_post-war_Sri_Lanka_A_form_of_arbitrary_detention_or_rehabilitation

32. https://www.indiatvnews.com/news/world-594-child-soldiers-among-12-000-lttes-rehabilitated-by-sri-lanka-govt-454452

33. https://www.ices.lk/_files/ugd/fba0ea_7c56089ec9fe4c649c5f38c3764f52a6.pdf

34. https://www.un.int/srilanka/sites/www.un.int/files/Sri%20Lanka/2021/July/book.pdf

## தமிழ்த் துணை இராணுவத்தைச் சிறந்தமுறையில் இயக்கிக் கட்டுப்படுத்துதல்

கருணா மற்றும் அவரது கூட்டாளிகள் தலைமையிலான பிரிந்து சென்ற LTTE பிரிவுகளின் மீது கோத்தபாய ராஜபக்சவும் அவரது சகோதரர் பசிலும் எவ்வாறு கட்டுப்பாட்டைச் செலுத்தினார்கள் என்பதை இந்தப் பகுதி விளக்குகிறது. 2004 ஆம் ஆண்டு LTTE மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிலிருந்து விலகிய தமிழ்த் துணை இராணுவத்தினர் மனித உரிமை மீறல்களைச் செய்தனர் என்பது ஐ.நா-வால் நன்கு ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.[244] சட்டரீதியற்ற செயல்கள் மற்றும் பிறர்மீது பழிபோடும்படியான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய இந்தப் படைகளுக்கு இலங்கை அரசாங்கம் கட்டளையிட்டு, கட்டுப்படுத்தி, தங்க வைத்து, பாதுகாத்து, ஒத்துழைத்து நிதியும் ஆயுதமும் வழங்கியது.[245] 'கருணாவின் குழு பின்னர் பிள்ளையான் குழு, EPDP, PLOTE EPRLF போன்ற முன்னாள் LTTE போராளிகள் அனைவரும் நீண்ட காலம் அரசாங்கத்தை ஆதரித்தார்கள்' என்றும் அவர்கள் 'தங்கள் சொந்த பாதுகாப்புக்காக ஆயுதங்களை ஏந்த வேண்டியிருந்தது' என்றும் கோத்தபாய ராஜபக்சவே உள்நாட்டு ஆணைக்குழுவில் சாட்சியமளித்தார்'.[246]

2004 ஆம் ஆண்டுக்குப் பின், LTTE உடைந்தபோது, பிரிந்து சென்ற பிரிவு ஆயுதமேந்திய துணைப்படைகளாக மாறியது, போர் நிறுத்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ் அவர்கள் நிராயுதபாணியாக ஆக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தாலும், இலங்கை அரசாங்கம் வேண்டு மென்றே அவர்களை ஊக்குவித்து அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டன. ஏறத்தாழ 2004 ஆண்டு கருணா குழுவுடன் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட ஒத்துழைப்பும் LTTE யுடனான போர்நிறுத்த முறிவும் ஒரே நேரத்தில் ஏற்பட்டன.[247] இந்த அரசாங்கத்துக்கு சார்பான துணைப்படைகளும் தொடர்ந்து சிறுவர்களை இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு செய்து பயன்படுத்தினர் - இராணுவ முகாம்களுக்குள் சிறுவர்கள் படைவீரர்கள் காணப்படும் போதும் இலங்கை இராணுவம் அதை கண்டுகொள்ளவில்லை.[248] ஏப்ரல் 2006 இல், அமெரிக்க அரசாங்கம் போர்நிறுத்த மீறல்களின் கண்காணிப்பின் வலுவற்றதாக்கும் கோத்தபாயவின் முயற்சிகளை விவரித்தது. இதில் அரசாங்கத்தின் மீறல்கள் மற்றும் ஸ்காண்டிநேவிய கண்காணிப்பாளர்கள் தங்கள் ஆதாரங்களை இட்டுக்கட்டியதாகக் குற்றம் சாட்டி தமிழ் குழுக்களை நிராயுதபாணியாக்குவதில் தோல்வி ஆகியவை அடங்கும்.[249] மே 2006 இல், கருணாவுடன் இணைந்து ஆயுதப் படைகள் செயல்படுகின்றன என்ற உண்மையை அமெரிக்க தூதரக அதிகாரிகள் கோத்தபாய ராஜபக்சவிடம் கூறினர். அவர் அதை ஒப்புக்கொண்டு அதை நிறுத்துவதாக ஒப்புக்கொண்டார்.[250] அமெரிக்கத் தூதரகம் அதை நம்புவது போல் தோன்றினாலும், இது மிகவும் வெறுக்கத்தக்கது: *'குறிப்பாக கோத்தபாய ராஜபக்சவின் மாற்றத்தால் நாங்கள் அதிர்ச்சிக்கு உள்ளானோம். முன்னர் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் கருணாவின் குழுவிற்கும் இடையேயான தொடர்பை அவர் கடுமையாக மறுத்துவந்தார் - இப்போது இருக்கலாம் என்று ஒப்புக்கொள்கிறார்.'*

அக்டோபர் 2006 இல், பசில் ராஜபக்ச, தமிழ் குழுக்களின் (EPDP மற்றும் கருணா பிரிவு) கடத்தல்கள் தொடர்பாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் பேசினார்; இந்த உரையாடல் குறித்த டெலக்ஸ் செய்தி இப்படியாக உள்ளது:

> *தேவானந்தா மற்றும் கருணா அணி என்று அழைக்கப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகியோரிடம் தங்கள் உறுப்பினர்களைக் கட்டுப் படுத்துமாறு சிறிலங்கா அரசாங்கம் கோரியுள்ளதாகவும், TMVP விடயத்தில் 'மட்டக்களப்புக்குத் திரும்பிச் செல்லுமாறும் சிறிலங்கா அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. டக்ளஸ் மற்றும் கருணா ஆகியோரின் உறுப்பினர்களின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் தனிப்பட்ட*

---

[244] பந்தி 49, OISL 2015, "..கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு, குறிப்பாக தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை மற்றும் பல ஆயிரக்கணக்கில் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தல்களுக்குத் துணை இராணுவத்தினரும் பொறுப்பு ஆகும்.." பந்தி 143 இராணுவ தளங்களில் இருந்து செயல்படுவது EPDP யின் மறைமுக ஆதரவைக் குறிக்கிறது. மனித உரிமை மீறல்களில் அவர்களின் பங்கு குறித்து அறிக்கையில் பல குறிப்புகள் உள்ளன.

[245] "இந்தப் பிரிவுகள் இனி உண்மையில் சுதந்திரமான ஆயுதக் குழுக்கள் இல்லை, மாறாக, பாதுகாப்புப் படைகளிடமிருந்து வழிகாட்டுதலையும் உதவியையும் பெறுகின்றன என்பதற்கான வலுவான சான்றுகளும் உள்ளன. A/HRC/8/3/சேர்ப்பு.3 பந்தி 50. 2008 UN OISL "இராணுவ உளவுத்துறைக்கும் கருணாவின் குழுவிற்கும் EPDP க்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்புகளைப் பல சாட்சிகள் சுட்டிக்காட்டுகின்றனர்." பந்தி 130. போருக்குப் பிந்திய ஆயுதக் குழுக்கள் செய்த "தொடர்ச்சியாக மிரட்டிப் பணம் பறித்தல், கடத்தல் மற்றும் பிற குற்றச் செயல்கள்" தொடர்பாக LLRC யின் உள்நாட்டு ஆணையத்தையும் UN மேற்கோள் காட்டுகிறது. LLRC இறுதி அறிக்கை, பந்தி 9.73, பந்தி 9 http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201112/FINAL%20LLRC%20REPORT.pdf

[246] Transcript Testimony Gotabaya Rajapaksa, LLRC, Date: 17 August 2010

[247] W250.

[248] Witness Testimony. W141.

[249] "பிப்ரவரி மாதப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின், போர்நிறுத்த மீறல்கள் குறித்த தனிப்பட்ட வாராந்த முன்னேற்ற அறிக்கைகளை SLMM இரு தரப்பினருக்கும் அளித்துள்ளது, மேலும் சிறிலங்கா அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செயல்படும் குழுக்களை நிராயுதபாணியாக்கத் தவறிவிட்டதாக SLMM இன் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சயின் (ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இளைய சகோதரர்) கடுமையான வார்த்தைகளைக் கொண்ட குறிப்பு, பத்திரிகைகளுக்கு கசிந்து பின் ஏப்ரல் 2 அன்று அவர் அறிக்கை அளித்தார், வெளியில் செல்லும் SLMM தலைவர் ஹேகர்ப் ஹவுக்லேண்ட் (Hagrup Haukland) கிழக்கில் ஆயுதமேந்திய குழுக்களோடு தொடர்பு இருந்ததைப் பார்த்ததாக அறிக்கைகளை இட்டுக்கட்டுவதாக ஏறக்குறைய குற்றம்சாட்டினார்". https://wikileaks.org/plusd/cables/06COLOMBO592_a.html 06COLOMBO592_a

[250] https://wikileaks.org/plusd/cables/06COLOMBO872_a.html

*முறையில் பொறுப்பு என்று நாங்கள் தெளிவாக அறிவுறுத்தியுள்ளோம் எனவும் ராஜபக்ச கூறினார்.* [251]

தமிழ் துணைப்படைகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டதாக கோத்தபாய ராஜபக்ச LLRC க்கு சாட்சியம் அளித்ததை ஐ.நா. பின்னர் சுட்டிக்காட்டியது, ஆனால் அவர்கள் தங்கள் சொந்த பாதுகாப்பிற்காக ஆயுதங்களை எடுத்துச் செல்ல வேண்டி இருந்தது என்று வாதிட்டார். LTTE போராளிகள் மற்றும் சடலங்களை அடையாளம் காண்பதில் இராணுவம், கடற்படை மற்றும் STF ஆகியவற்றிற்கு 'கருணாவின் குழு' ஆற்றிய உளவுத்துறைப் பங்கை UN இன் OISL அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.[252]

இருப்பினும், US இல் இருந்து கசிந்த தொலைநகல்கள் [COLOMBO 00000728] வெளிப்படுத்துவதன்படி தமிழ் துணைப்படைகள் ஆற்றியது வெறும் உளவு பார்க்கும் பங்கை விட அதிகமாகும்; இது 2007 இல் இருந்து ஒன்று:

*இந்தக் குழுக்கள் கொழும்பில் LTTE யுடன் இணைந்து செயற்பட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களை கடத்திச் சென்று சில சமயங்களில் கொலை செய்வதன் மூலம் பாதுகாப்பை அதிகரிக்கின்றன. துணை இராணுவத்தால் அடிக்கடிக் கடத்தப்படுவது சிறிலங்கா அரசாங்கத்தை விமரிசிப்பவர்களை அச்சத்துடனும் அமைதியாகவும் வைத்திருக்கிறது.*[253]

டெலெக்ஸில் பெயர் திருத்தப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் தூதரகத்திடம், 'சர்வதேச கண்காணிப்பின் காரணமாக இராணுவத்தால் செய்ய முடியாத 'வேலையை' அவர்கள் செய்கிறார்கள் என்ற அடிப்படையில், துணை இராணுவத்தினர் நடவடிக்கைகளில் தலையிட வேண்டாம் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடமிருந்து தங்களுக்கு உத்தரவு உள்ளது' என்று கூறினார். 'இராணுவ உளவுத்துறை' நடவடிக்கைகளில் தலையிட வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சகம் அவருக்கு அறிவுறுத்தியுள்ளது.'[254] அதே ஆதாரம், 'பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, தமிழ் வர்த்தகர்களிடமிருந்து பணத்தை வசூலிக்க EPDP மற்றும் கருணாவுக்கு அதிகாரம் அளித்துள்ளார். வவுனியா மற்றும் கொழும்பில் பலரால் ஆவணப் படுத்தப்பட்டுள்ள சட்டவிரோதமான காரியங்கள், குறிப்பாகக் கப்பம் வசூலித்தல் மற்றும் கடத்தல் போன்றவை மிகவும் அதிகரித்திருப்பதற்கு இது காரணமாக இருக்கலாம். கருணா தரப்பினரால் தங்களுக்கு உயிருக்குப் பயம் இருப்பதாகப் பல எம்.பி.க்கள் டெலெக்ஸில் கூறியுள்ளனர். அது தொடர்ந்து கூறுகிறது, 'சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து கருணாவை ஆதரிப்பதை மறுத்தாலும், XXXXXXX கோத்தபாயவுடனான தனது நேர்காணலின் நாடாக்களைக் கேட்க போல்ஆ்ப் அனுமதித்தார். பாதுகாப்புத்துறை செயலாளர் கருணாவை மிகவும் புகழ்ந்து பேசினார் ...'.

அமெரிக்கத் தூதரகத்தின் கவலைகள் கோத்தபாய ராஜபக்சவிடம் தெரிவிக்கப்பட்டது தெளிவாகத் தெரிகிறது[255] மேலும் சுட்டிக்காட்டப் பட்ட அனைத்தையும் அமெரிக்கத் தூதரகம் நம்பியது:

*சிறிலங்கா அரசாங்கம் துணை இராணுவக் குழுக்களின் செயல்பாடுகளில் பல மட்டங்களில் உடந்தையாக இருந்தது. இந்த ஈடுபாடு இந்த அமைப்புகளின் மோசமான செயல்பாடுகளைக் கண்டும் காணாமலும் இருப்பதுக்கும் மேலானதாகத் தெரிகிறது. இன்னும் மோசமானது என்னவென்றால், பாதுகாப்பு அமைப்புகளின் உயர்மட்டத் தலைவர்கள் இந்தத் துணை இராணுவப் படையினருக்கு வழிகாட்டுதலை வழங்கியிருக்கக்கூடும் என்றும் இந்தச் செய்திகள் கூறுகின்றன.*[256]

தமிழ்த் துணைப்படைகளுக்குப் பல தடுப்புக்காவல் தளங்களோடு அணுகல் இருந்ததாகத் தெரிகிறது; சாட்சி

---

251 https://wikileaks.org/plusd/cables/06COLOMBO1622_a.html 06COLOMBO1622_a

252 OISL §142. Eg - "ஓமந்தையில் நான் கைது செய்யப்பட்டேன். என்னைக் கண்டவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் தகவல் கொடுத்தவர் கருணாவின் தரப்பிலிருந்து வந்தவர் என்று நினைக்கிறேன். LTTE அமைப்பில் இருப்பவர்கள் ஒரு பக்கமும் மீதியுள்ளவர்கள் இன்னொரு பக்கமும் செல்வதாக அறிவிப்புகள் வந்தன. நான் LTTE பக்கம் செல்லவில்லை, ஒருவர் வந்து என்னைக் காட்டி, மறுபக்கம் செல்லுங்கள் என்று நல்ல தமிழில் சொன்னார்." W129

253 https://www.tamilnet.com/img/publish/2010/12/WikiLeaks-Blake-01.pdf, 06 COLOMBO 000728

254 இந்த டெலெக்ஸ் பதிப்பில், "யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே. கணேஷ் எங்களிடம், மேஜர் ஜெனரல் சந்திரசிறி உட்பட சில இராணுவத் தளபதிகள் துணை இராணுவத்தினரை அடக்க விரும்புகிறார்கள், ஆனால் துணைப்படைகளுக்கு இடையூறு செய்யக் கூடாது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடமிருந்து உத்தரவு உள்ளது. சர்வதேச விசாரணையின் காரணமாக இராணுவத்தால் செய்ய முடியாத "வேலையை" அவர்கள் செய்கிறார்கள் என்பதுதான் அதற்குக் காரணம்." https://wikileaks.org/plusd/cables/07COLOMBO728_a.html

255 "இந்தத் துணை இராணுவத்தினரின் செயல்பாடுகளையும், மனித உரிமைகளை அவர்கள் அப்பட்டமாக மீறுவதையும் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தூதரகத்தின் முதன்மையான முன்னுரிமையாகும். இந்தக் குழுக்களை கட்டுப்படுத்தி கடத்தல், கொலைகள் மற்றும் பலவற்றை முடிவுக்கு கொண்டு வருவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகத் தூதுவர், DCM மற்றும் காவல்துறைத் தலைவர் ஆகியோர் ஜனாதிபதி, வெளிவிவகாரத்துறை அமைச்சர், வெளிவிவகாரத்துறைச் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, மனித உரிமைகள் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் பலரை பலமுறை சந்தித்துள்ளனர். மனித உரிமை மீறல்கள். தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் (SCA) ரிச்சர்ட் உட்பட வருகை புரியும் மூத்த US அதிகாரிகள், SIPDIS பவுச்சர் மற்றும் SCA வின் முதன்மை துணை உதவிச் செயலாளர் ஸ்டீவன் மான் ஆகியோர் சிறிலங்கா அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் பற்றிய கடுமையான செய்திகளை வழங்கியுள்ளனர், தொடர்ச்சியான துஷ்பிரயோகங்கள் பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பாதிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்." Ibid.

256 Ibid.

W76 நெல்லுக்குளத்தில் ஒரு 'புனர்வாழ்வு' முகாமில் இருந்தார், அங்கு கருணாவின் உறுப்பினர்கள் கைதிகளை விசாரிப்பார்கள். அவ்வாறே ITJP சாட்சியான W111, பிரிந்து சென்ற தமிழ் துணைப்படைத் தலைவர் கேணல் கருணா உயர் இராணுவ அதிகாரிகளுடன் வவுனியாவைச் சுற்றியுள்ள முகாம்களைப் பார்வையிட வந்ததாக விவரித்தார்.

கிழக்கில் உள்ள தமிழ் துணைப்படைகள், கோத்தபாய ராஜபக்சவின் திறமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்த காவல்துறையின் சிறப்பு அதிரடிப் படையுடன் (STF) நெருக்கமாகச் செயல்பட்டன. ஒரு சிங்கள முன்னாள் STF அதிகாரி (W251) தமிழ் துணை இராணுவத்-தினருக்கோ அல்லது அவர்களின் அரசியல் கட்சியான TMVP (தமிழ் மக்கள் விடுதலை புலிகள்) க்கோ இடையூறு செய்ய வேண்டாம் என்று கோத்தபாயவிடம் இருந்து வந்த உத்தரவைத் தனக்குத் தனது உயர் அதிகாரி பிறப்பித்ததை நினைவு கூர்ந்தார்:

*கருணாவின் ஆட்களை நிறுத்தவோ அல்லது தேடவோ அல்லது அவர்கள் செய்யும் எதிலும் தலையிடவோ வேண்டாம் என்று OIC (பெயர் மாற்றப்பட்டது) எங்களிடம் கூறினார். இந்த அறிவுறுத்தல் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்சவிடம் இருந்து வந்ததாக OIC தெரிவித்தார். அவர்கள் தைரியமாக ஆயுதங்களை ஏந்தியதையும், பைக்குகளில் ஆயுதம் ஏந்திச் செல்வதையும் பார்த்தேன். வேறு யாரும் ஆயுதங்களை வெளிப்படையாக எடுத்துச் செல்லத் துணிய மாட்டார்கள். TMVP மற்றும் இராணுவ வீரர்கள் தேடுதல் நடவடிக்கைகளின் போது கோத்தபாயவுடன் நேரடியாகப் பேசிக்கொண்டிருந்தனர். கோத்தபாய எஸ்பியை அழைத்து TMVPகாரர்கள் செயல்பாட்டில் தலையிட வேண்டாம் என்று கூறினார். ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் தலையிடவில்லை என்று தொலைபேசியில் வாக்குவாதம் ஏற்பட்டது. இது நான் பணியமர்த்தப் பட்டதில் ஆரம்பமானது, நாங்கள் சில TMVP உறுப்பினர்களை எங்கள் முகாமுக்கு அழைத்துச் சென்று அவர்களை சோதனை செய்தோம், ஆனால் கோத்தபாய SP யை அழைத்து, அவர்களை விடுங்கள், அவர்களின் நடவடிக்கைகளில் தலையிட வேண்டாம் என்று கூறினார். அந்தச் சிறிய TMVP பையன்களுக்கு கோத்தபாயவுடன் நேரடித் தொடர்பு இருந்ததால் எனது SP அவர்களிடம் பயந்தார்.*

TMVP முகாமில் தடுத்துவைக்கப் பட்டவர்களையும், ஆயுதங்களுடன் வயதுகுறைந்த போராளிகளையும் பார்த்ததாக அவர் கூறுகிறார்.

2007 ஆம் ஆண்டு TMVP பிளவுபட்டு, மிகவும் மூத்த நபராக இருந்த கேணல் கருணாவிற்குப் பதிலாக, 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பதவியேற்ற ஒரு முன்னாள் LTTE குழந்தைப் போர்வீரரான பிள்ளையான் என்று பொதுவாக அழைக்கப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டார். கோத்தபாய ராஜபக்ச உலங்கு வானூர்தியில் மட்டக்களப்பு இராணுவ முகாமிற்கு வந்து பிள்ளையானை சந்திக்க அவரது இல்லத்திற்குச் சென்றபோது வீதியோரமாக கடமையில் ஈடுபட்டிருந்ததை ஒரு STF உறுப்பினர் நினைவு கூர்ந்தார். மற்றொரு ITJP சாட்சியான W72, கோத்தபாயவின் சகோதரரான பசில் ராஜபக்ச பிள்ளையானின் பொறுப்பில் இருந்தாக விவரித்தார்.

இராணுவ முகாம்களுக்குள் தமிழ்த் துணை இராணுவத்தால் வயதுகுறைந்த உறுப்பினர்கள்[257] பயன்படுத்தப் படுவதைக் கண்ட ஊடகவியலாளர் ஒருவருக்குத் தொடர்ச்சியான மரண அச்சுறுத்தல்கள் வந்தன, பின்னர் அப்பகுதியில் உள்ள இராணுவத் தளபதிகள் கோத்தபாய ராஜபக்சவுக்கு சம்பவம் பற்றித் தெரிவிக்க கோத்தபாய ராஜபக்சவை அழைத்ததாக அவருக்கு செய்திதெரிவிக்கும் ஆதாரங்களின் மூலம் கேள்விப்பட்டார் (W141). அதாவது, கோத்தபாய ராஜபக்ச தனது கூட்டாளிகளால் சிறுவர்கள் போர்வீரர்களாகச் சேர்க்கப்பட்டு பயன்படுத்துவதை அறிந்திருப்பார். இராணுவ முகாம்களில் அவர்கள் இருந்ததன் மூலம் இராணுவமும் இதை அனுமதித்தது என்று அறியலாம். மேலும் இந்தச் சிக்கல் பற்றி மனித உரிமை மீறல் புகார்கள் எழுந்ததையும் அவர்கள் அறிந்தே இருந்தார்கள்.

மேலும், தமிழ்த் துணை இராணுவத்தினரால் கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதாகப் புகார்கள் எழுந்தன. 2008 டிசம்பரில் இனியபாரதியின் ஆட்கள் தங்கள் (வயது வந்த) குழந்தைகளை அல்லது கணவர்களைக் கடத்தியதாகவும், பின்னர் அவர்கள் காணாமல் போனதாகவும் குடும்ப உறுப்பினர்களின் ஆறு புகார்கள் ITJP வசம் உள்ளது.

2007 ஆம் ஆண்டு அமெரிக்காவில் கசிந்த டெலக்ஸ் ஒன்று, கேணல் கருணா பதினான்கு வயதுடைய குழந்தைகளைப் பயன்படுத்துவதாகக் கூறியது.[258] கருணாவின் அரசு சார்பு துணைப்படைகள் இடம் பெயர்ந்தோருக்கான பொருட்களைக் கொள்ளையடிக்க அனுமதிக்கப்படுவதையும் அது விவரித்தது மற்றும் அவரது பணியாளர்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்துகொண்டு விபச்சார வளையங்களை இயக்கி வருவதாகவும் விக்கிலீக்ஸ் குற்றம் சாட்டியது. ஆரம்பத்தில் பொருளாதாரப் பாதுகாப்பு வாக்குறுதிகளால் அவர்களை மயக்கி, EPDP குழந்தைகளை வலுக் கட்டாயமாக அழைத்துச் சென்று

[257] UNICEF says Karuna faction "not serious" about child releases, 27 Apr 2007, UN, https://www.unicef.org/media/media_39477.html
Sri Lankan rebels, breakaway faction still recruiting child soldiers – Ban Ki-moon, 28 Dec 2007, UN, https://news.un.org/en/story/2007/12/244632-sri-lankan-rebels-breakaway-faction-still-recruiting-child-soldiers-ban-ki-moon

[258] https://www.tamilnet.com/img/publish/2010/12/WikiLeaks-Blake-01.pdf COLOMBO 00000728

அடிமைகளாக விற்றதாகக் கூறப்படுகிறது.[259] இளம் பெண்கள் பாலியல் அடிமைத்தனத்திற்குத் தள்ளப்பட்டனர். ஒரே நேரத்தில் ஐந்து முதல் பத்து வீரர்களுடன் உடலுறவு கொள்ள கட்டாயப்படுத்தப் பட்டனர். இந்தியா, மலேசியாவிலும் EPDPயின் வலைப்பின்னல்கள் மூலம் இளம் பெண்கள் விபச்சாரக் கும்பலுக்கு விற்கப்பட்டனர். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க மற்றும் குடிவரவு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் சிறுவர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்குக் கடத்தப் படுவதாகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதற்கிடையில் கேணல் கருணா போலிப் பெயரில் வழங்கப்பட்ட ஓர் உண்மையான தூதரகக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இங்கிலாந்து சென்றார். அவர் நவம்பர் 2007[260] இல் இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார். லண்டனில் உள்ள நீதிமன்றத்தில் படிக்கப்பட்ட அறிக்கையில் தனக்குக் கடவுச்சீட்டை கோத்தபாய ராஜபக்சவே வழங்கியதாக கருணா கூறினார். BBC யின் அறிக்கை:

*இலங்கையின் சக்திவாய்ந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, தூதரகக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இங்கிலாந்துக்குத் தான் வருவதற்கு 'எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தார்' என கருணா பிரித்தானிய குடிவரவு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். திறந்த நீதிமன்றத்தில் கருணா அளித்த வாக்குமூலத்தைப் படித்த அரசுத் தரப்பு, LTTE அமைப்பில் இருந்து விலகியதில் இருந்தே, ஜனாதிபதி ராஜபக்சவின் இளைய சகோதரர் அவருக்குத் தெரிந்தவர் என்று கூறியதாக அரசுத் தரப்பு கூறியது... பிரிட்டன் செல்லும் விமானத்தில்தான் அவருக்கு பாஸ்போர்ட் வழங்கப் பட்டது.*[261]

கொழும்பு விமான நிலையத்தில் பணிபுரியும் ITJP சாட்சியமான W303, அப்போது ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த துமிந்த சில்வா (பின்னர் அரசியல் போட்டியாளரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்)[262] விமான நிலையப் பாதுகாப்பில் அதிகச் செல்வாக்குச் செலுத்தினார் என்றும் குறிப்பிட்ட ஒருவரைச் சோதனை செய்ய வேண்டாம் என்று விமான நிலைய மூத்த பாதுகாப்பு ஊழியர்களுக்கு அவரால் உத்தரவிட முடியும் என்றும் கூறினார். ஆகவே அவர்கள் இணங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

*பொதுவாக ஒரு நபரை விமானத்தில் ஏற்ற விரும்பினால் அவர்களால் அதைச் செய்ய முடியும். இதற்குப் பதிலாக மூத்த ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. எனது மட்டத்தில் எங்களுக்குப் பெரும்பாலும் எதுவும் தெரிவதில்லை, நாங்கள் லஞ்சம் எதுவும் பெறவில்லை. பொய்யான கடவுச்சீட்டில் கருணா அம்மான் நாட்டை விட்டு வெளியேற கோத்தபாய ராஜபக்ச அனுமதி வழங்கியுள்ளார். விஜபி ஓய்வறையில் காத்திருந்த அவர் கடைசி நேரத்தில் விமானத்தில் ஏறினார்.*

முன்னர் தடைசெய்யப்பட்ட பயங்கரவாதக் குழுவில் உறுப்பினராக இருந்த ஒரு நன்கு அறியப்பட்ட துணை இராணுவத் தலைவர், போர் உச்சக்கட்டத்தில் இருந்து பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட நேரத்தில் விமான நிலையப் பாதுகாப்பு, குடியேற்றம் மற்றும் விமானச் சோதனைகளைத் தாண்டி எப்படிவெளிவந்தார் என்ற கேள்வியை இது எழுப்புகிறது. எவ்வாறாயினும், குடிவரவுக்கான கறுப்புப் பட்டியல் கோத்தபாயவின் கட்டுப்பாட்டில் இருந்ததாக W224 பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்:

*போர் நடந்தபோது இந்தப் பட்டியல் குடிவரவுத் திணைக்களத்தால் கட்டுப்படுத்தப்பட்டது, ஆனால் கோத்தபாய அதை TID மற்றும் SIS உடன் பகிர்ந்து கொள்ள உத்தரவிட்டார்.*

கருணா லண்டனில் இருந்தபோது, அவர் கீழ் பணிபுரிந்த வீரா அவரது நடவடிக்கைகளை நிர்வகித்தார். ஒரு சாட்சியான W245, வீரா கருணாவின் ஆணையின் கீழ் இருந்ததாகவும், ஆனால் அவர் இல்லாத நேரத்தில் அவர் கோத்தயவுடன் நேரடி தொடர்பில் இருந்ததை அவர் நேரில் பார்த்ததாகவும், 'கோத்தாவின் கார்' வருவதைக் கண்டதாகவும் கூறுகிறார். ஒரு சட்டவிரோத நடவடிக்கையின் போது காவலர்கள் வந்ததாகவும், 'சிறிது நேரத்திற்குப் பின் சில சிங்களவர்கள் வந்து சில ஐடியைக் காட்டினார்கள், அவர் தொலைபேசியில் 'கோத்தபாய சார்' என்று குறிப்பிடுவதை நான் கேட்டேன்' என்றும் W245 கூறுகிறார் ' '.

கருணா லண்டனில் இருந்து இலங்கைக்கு திரும்பியதும், போர் முடிந்து ஆயிரக்கணக்கான முன்னாள் LTTE யினர் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கருணா தடுப்புக்காவல் நிலையங்களுக்கு சென்று தனது முன்னாள் தோழர்களைச் சந்தித்தார். ITJP தடுப்புக்காவலில் இருந்தவர்களிடம் இருந்து இதற்கான சாட்சியங்கள் உள்ளன. ITJP சாட்சியான W319, ஒரு நாள்

[259] **https://www.colombotelegraph.com/index.php/wikileaks-epdp-sold-jaffna-children-girls-to-prostitution-rings-and-boys-to-slavery/**

[260] Sri Lankan rebel breakaway leader Karuna held in UK, 3 Nov 2007, Reuters, https://www.reuters.com/article/idINIndia-30304420071103

[261] Gotabhaya 'gave me passport', BBC, 25 Jan 2008, https://www.bbc.com/sinhala/news/story/2008/01/080125_karunajail.shtml

[262] Courtroom drama as Duminda Silva faces death row, 14 Oct 2018,https://www.sundayobserver.lk/2018/10/14/news-features/courtroom-drama-duminda-silva-faces-death-row

கைவிலங்கிட்டு விசாரணை அறைக்குச் சென்றதாகவும், தற்போது அரசாங்க அமைச்சராக இருக்கும் கருணா அங்கு தனது மெய்காப்பாளர்களாகத் தோன்றிய இருவருடன் இருந்ததாகவும் கூறினார். W319 மண்டியிட்டுக் கொண்டிருந்த போது, கருணா அவரையும், அவரது மனைவி மற்றும் குழந்தைகளையும் மிரட்டினார்:

*நான் இரகசியமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன் என்றும், நான் கொல்லப்பட்டால் யாருக்கும் தெரியாது என்றும் அவர் எனக்கு நினைவுபடுத்தினார்... நான் கோத்தபாய ராஜபக்சவின் அதிகாரத்தின் கீழ் TID ஆல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அவர் என்னிடம் கூறினார்.*

தமிழ் துணைப்படைகள் STF யுடன் மட்டுமே வேலை செய்யவில்லை - அவர்கள் சிறிலங்காவின் கிழக்கில் நிலப்பகுதியில் உளவு வேலையில் ஈடுபட்டிருந்த கடற்படையுடன் ஒத்துழைத்தனர். ஒரு கடற்படை அதிகாரி W308, 2005 க்குப் பின் கிழக்கில் இருந்ததை நினைவு கூர்ந்தார் மற்றும் கருணாவின் வீரர்கள் தனது கடற்படைத் தளத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வந்துபோவதைப் பார்த்திருக்கிறார்:

*நான் அங்கு இருந்த காலத்தில், அவ்வப்போது இந்தத் தளத்தைப் பயன்படுத்திவந்த கருணாவின் குழுவைச் சேர்ந்த சுமார் 15 முதல் 20 பேர் கொண்ட குழுவிற்குக் கடற்படையினர் உணவு வழங்கினர். அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு XXX ஆக (திருத்தப்பட்டது) நான் நேரடியாகப் பொறுப்பேற்றேன். கருணாவின் தோழர்கள் இளைஞர்கள்; அவர்கள் 'சிறு பையன்கள்' (உருவத்தில்), ஆனால் அவர்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள்... கருணாவின் குழுவினர் சாதாரண உடைகள் அணிந்து கண்காணிப்பை மேற்கொள்வார்கள், ஆனால் அவர்கள் சில நடவடிக்கைகளில் ஈடுபடும்போது கடற்படை உருமறைக்கும் பொருட்களை அணிவார்கள்.*

மற்றொரு கடற்படை அதிகாரியான W250 2006 கடற்படை சீருடை அணிந்த கருணாவின் படையினரைப் பார்த்ததை நினைவு கூர்ந்தார்.

*சம்பூர் நடவடிக்கையின் போது கருணாவின் குழுக்கள் கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருடன் ஒத்துழைத்து LTTE யின் இலக்குகளை அடையாளம் காண உதவினர். சுமார் 2005 இல் புலிகளுடனான போர்நிறுத்த முறிவில் இருந்து கருணாவின் குழுவுடனான ஒத்துழைப்பு தொடங்கியது.*

கடற்படை அதிகாரியான டபிள்யூ 314, கருணா அணியுடன் இணைந்து பணியாற்றுமாறு கடற்படைத் தளபதியால் தனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறுகிறார்.:

*ஒரு சந்தர்ப்பத்தில் கரன்னாகொட எனது முகாமுக்கு வந்தபோது கருணாவையும் அவரது ஆட்களையும் சுதந்திரமாக நடமாட விடுங்கள் என்று என்னிடம் கூறினார். ஆயுதங்களையும் அளிக்கச் சொன்னார். அரசு உத்தரவிட்டதால் கையெறி குண்டுகள், வெடிமருந்துகள் உள்ளிட்ட ஆயுதங்களை தருமாறு கூறினார். என் கட்டளையில் இருந்தவர்கள் கருணாவின் கைகளில் இறந்துவிட்டார்கள், அவருடைய ஆட்களும் என் ஆட்களும் கோபமடைந்தார்கள். ..எனது பகுதியில் கருணாவும் அவரது ஆட்களும் என்ன செய்கிறார்கள் என்பது பற்றி மக்கள் ஒவ்வொரு நாளும் என்னிடம் கூறி வந்தனர். மக்களிடம் பணம் வசூலித்து வந்தார்கள். சில கடைகள் இருந்தன. அவருடைய ஆட்கள் இரவில் கடைகளுக்கு வந்து, உரிமையாளரை நோக்கி கைத்துப்பாக்கியைக் காட்டி, 'எல்லாவற்றையும் கொடு' என்று கூறிவிட்டு, அவர்கள் விரும்பியதை எடுத்துச் செல்வார்கள். கருணாவுடன் காட்டில் வாழ்ந்த பகுதித் தளபதிகள் இருந்தனர். தினமும் வந்தார்கள். மருத்துவமனைக்கு வந்து மருத்துவப் பொருட்களை எடுத்துச் சென்றனர். உணவைக் கொள்ளையடித்தனர். கருணா குழந்தைப் படையினரை நியமித்தார். அவர்கள் துப்பாக்கியை எடுத்துச் செல்லும் வயதுடையவர்களாக இருந்தால் பணியமர்த்தப்படுவார்கள். குழந்தைகளைத் தற்கொலைத் தாக்குதலைச் செய்யத் தூண்டுவது எளிது. இறந்த குழந்தைகளின் உடல்களை நான் பார்த்தேன் எனவே குழந்தை ஆட்சேர்ப்பு பற்றி எனக்குத் தெரியும். மேலும், தங்கள் குழந்தைகளை போருக்கு அழைத்துச் சென்றதாக புகார் அளிக்க பெற்றோர்கள் என்னிடம் வருவார்கள். கருணா வெளியில் நடமாடுவதைக் கண்டால் அவர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்பதால், தங்கள் குழந்தைகளை உள்ளே வைத்திருக்குமாறு நான் குடும்பங்களுக்கு அறிவுறுத்தினேன். இது தினமும் நடந்து வந்தது.*

# 3. விசாரணை செய்யாமை

**'மனித உரிமைகள் என்பதற்கு அர்த்தம் இல்லை. ஒரு போரில் ஈடுபடும்போது அதைப் பற்றி கவலைப்பட நாங்கள் விரும்பவில்லை. சர்வதேச வலியுறுத்தலினால் யாரையும் எங்களால் கைதுசெய்ய முடியாது. ஆனால் நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. நான் என்ன விரும்புகிறேனோ அதைச் செய்வேன்.'** [263]

**கோத்தபாய ராஜபக்ச**

பரவலான மனித உரிமை மீறல் நிகழ்வுகள் அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், செயல்படுவதற்கான சட்ட ரீதியான கடமை இருந்தாலும்கூட, செயல்படவும் தன் கடமையை ஆற்றவும் அவருக்குத் திறன் இருந்தபோதிலும் அவர் எதிர்வினை ஆற்றவில்லை; தான் செயல்படாமல் இருந்தால் ஏற்படும் விளைவுகளையும் சாத்தியமான தீங்கையும் அவர் நன்றாகவே அறிந்திருந்தார் என்ற குற்றச்சாட்டை இந்தப் பகுதி ஆராய்கிறது. இந்த மனித உரிமை மீறல்கள் அவருடைய கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, அவர் விசாரணை செய்ய அப்பட்டமாக மறுத்தார் அல்லது தவறு எதுவும் நடைபெறவில்லை என்று முடிவை முன்கூட்டியே நிதானித்தார்; பல நேர்வுகளில் அவர் விசாரணை செய்பவர்களைத் தடுத்தார், அல்லது விசாரணை செய்ய தன் நண்பர்களை நியமித்தார் மேலும் தன் அரசியல் எதிரிகளை மட்டுமே விசாரணைசெய்தார்; தன் கூட்டாளிகளின் மேல் கோரப்படும் விசாரணைஎன்பது அவர்களைப் பழிவாங்கும் அரசியல் நோக்கம் கொண்டது என்று கூறினார். அவர் சிறிலங்காவின் ஜனாதிபதி ஆனபோது அவர் ஓர் அரசியல் பழிவாங்கல் ஆணையத்தை அமைத்தார்; இது அவரது கூட்டாளிகளின் மேல் இருக்கும் முந்திய விசாரணையை இல்லாமல் ஆக்குவதற்கு அமைக்கப்பட்டதே.

### குற்றச்சாட்டுகளின் அளவு

பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செயலாளராக கோத்தபாய ராஜபக்ச பதவியில் இருந்த காலம் முழுவதும் பரந்த அளவில் குறிப்பாகப் பொதுமக்களுக்கு எதிராகத் தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையில் சிறிலங்கா இரண்டாவது இடத்தில் இருந்தது மற்றும் இங்கிலாந்தின் முக்கிய புனர்வாழ்வு தொண்டு நிறுவனத்தால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களில் அதிகமானோர் சிறிலங்காவில் இருந்து வந்தவர்களே.[264] 2015 ஆம் ஆண்டு ஐ.நா. விசாரணையில், கோத்தபாய பதவியில் இருந்த காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினரால் 'நிறுவனக் கொள்கையின்' (OISL 591) ஒரு பகுதியாக பாலியல் வன்முறை பயன்படுத்தப்பட்டதாகக் கண்டறிந்து கூறியது.

பெரிய அளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருவதாகக் குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன, அதில் கோத்தபாய ராஜபக்ச முக்கிய அங்கம் வகித்தார், பல சந்தர்ப்பங்களில் அவை அனைத்தையும் ஆவணத்தில் பட்டியலிட முயற்சி செய்தால் அது ஒரு மாபெரும் முயற்சியாக இருக்கும். அதிக எண்ணிக்கையிலான ஐக்கிய நாடுகளின் பொறிமுறைகள் மற்றும் சிறப்பு ஆணை வைத்திருப்பவர்கள் குற்றச்சாட்டுகளை விரிவாக ஆவணப்படுத்தினர், புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையை நிவர்த்தி செய்வதற்கான தெளிவான பரிந்துரைகளை வழங்கினர், மேலும் சில சந்தர்ப்பங்களில் சித்திரவதை, கொலை மற்றும் காணாமல் போனதற்குக் காரணமான நபர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றனர்.[265] தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டன அல்லது எதிர்கொள்ள முடியாதபோது, நம்பிக்கையான கூட்டாளிகள் அல்லது குற்றவாளிகளைக் கொண்ட விசாரணை அமைப்புகளை நிறுவினர். அவர்கள் ஒருபோதும் பாதிக்கப் பட்டவர்களுக்கு உண்மையையோ நீதியையோ வழங்க வில்லை. அதே நேரத்தில், நீதியை வழங்குவதற்கு சர்வதேச சமூகத்தின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு வடிவில் தொழில்நுட்ப ஆதரவு தேவை என்று அரசாங்கம் கூறியது - அடுத்தடுத்த அரசாங்கங்களால் மீண்டும் மீண்டும் இதையே செய்தனர். குற்றவாளிகள் தண்டனைக்குத் தப்பி வாழ்ந்தனர். ஆணைக்குழுக்களில் சாட்சியமளித்த அல்லது சர்வதேச அமைப்புகளுக்கு

---

[263] https://www.colombotelegraph.com/index.php/wikileaksthere-will-be-no-investigation-no-one-will-be-able-to-find-out-what-happened-to-keith-gota/?platform=hootsuite

[264] In 2015 for 4th successive year, Freedom from Torture, UN COMMITTEE AGAINST TORTURE, 59th SESSION submission, https://www.refworld.org/pdfid/58495d184.pdf

[265] Promotion and protection of all human rights, civil, political, economic, social and cultural rights, including the right to development : report of the Special Rapporteur on Torture and Other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment, Manfred Nowak, 26 Feb. 2008, for example.

தகவல்களை வழங்கி காணாமல் போனவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் பற்றி புகாரளிக்க முயன்ற குடும்ப உறுப்பினர்கள் பாதுகாப்புப் படையினரிடமிருந்து வன்முறையோடு கூடிய பழிவாங்கலை எதிர் கொண்டனர்.

வெளிநாட்டில் நடந்த விதிமீறல்கள் தொடர்பான புகார்கள் வந்தாலும், விசாரணை மற்றும் வழக்குத் தொடரப்படவில்லை. 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஹைட்டியில் இருந்து இலங்கை அமைதி காக்கும் படையினர் ஒரு ஐ.நா. விசாரணை அவர்களைத் தொடர் பாலியல் வன்முறையில் ஈடுபட்டதற்காகவும் குழந்தைகளைத் துஷ்பிரயோகம் செய்ததற்கும் திருப்பி அனுப்பப்பட்டனர். இவ்வளவு பெரிய குற்றத்திற்காகக் கூட யாரும் சிறையில் அடைக்கப்படவில்லை.[266] பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கோத்தபாய ராஜபக்ச இராணுவ நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டை வைத்திருந்தார். இன்றுவரை சிறிலங்காவால் ஆரம்பிக்கப்பட்ட நீதிச் செயற்பாடுகளில் தெளிவின்மையே காணப்படுகிறது, மிகவும் பாதிக்கப் படக்கூடிய சிறுவர்களுக்கு எதிராகப் பல ஆண்டுகளாக இழைக்கப்பட்டு வந்த மாபெரும் குற்றங்களுக்கு ஐ.நா. சபை இதுவரை சிறிலங்காவை அதன் உறுதிமொழிப்படி பொறுப்புகூறலுக்கும் உள்ளாக்கவில்லை.[267]

1989 ஆம் ஆண்டு மாத்தளை மாவட்டத்தின் அதிகாரத்தில் இருந்து கோத்தபாய ராஜபக்ச ஆற்றிய செய்கைகளுக்கு எந்தப் பொறுப்புகூறலும் இல்லை, அங்கு ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதோடு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப் பட்டனர்.[268] நவம்பர் 2022 இல், ஐ.நா நிபுணர்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது[269] என்று கேட்டு கடிதம் எழுதியுள்ளனர். இது ஒருபோதும் பொதுவெளியில் வெளியிடப்படாத ஒரு சிறிலங்கா அரசின் விசாரணையில் இருந்து கிடைத்த செய்தியின் அடிப்படையிலான ITJP யின் ஓர் அறிக்கையைத் தொடர்ந்து எழுதப்பட்டது.[270]

ராஜபக்சக்களின் அரசியல் ஆதரவை நம்பி ஆட்சியில் நீடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதாக உறுதியளித்த போதிலும் ஐ.நா.வுக்கு எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

**விசாரணை செய்யும் அதிகாரமும் வல்லமையும்**

2006 ஆம் ஆண்டிலேயே ராஜபக்ச அரசாங்கம், மனித உரிமை மீறல்களை விசாரிப்போம் என்று அமெரிக்க அரசுக்கு உறுதியளித்தது. மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர்கள் குழுவின் கீழ் செயல்படும் குழுவில் கோத்தபாய ராஜபக்ச இருந்ததாக வெளி விவகாரத்துறைச் செயலாளர் பாலித கொஹொன அமெரிக்க அரசாங்கத்திடம் கூறியதாக விக்கிலீக்ஸ் டெலக்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.[271]

விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, கோத்தபாய ராஜபக்ச அனைத்து விசாரணைகளையும் முடக்கினார். 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஓர் அமெரிக்க டெலக்ஸ், கடத்தல் மற்றும் மிரட்டி பணம் பறித்த குற்றச்சாட்டில் 433 காவல்துறை அதிகாரிகளும் வீரர்களும் கைது செய்யப்பட்ட போது, கோத்தபாய ராஜபக்ச விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து தூதரகத்திற்கு தெரிவிக்காமல் காவல்துறைத் தலைவரைத் தடுத்தார் என்று சுட்டிக்காட்டுகிறது.[272] அந்தத் தொலைநகல் பின்வரும் கருத்துரையுடன் முடிவடைகிறது:

*கணிசமான எண்ணிக்கையிலான கடத்தல்களுக்குத் தீர்வு காண முயற்சிக்கும் நல்ல நோக்குள்ள பொது ஊழியர்களை மௌனமாக்கும் ராஜபக்சவின் மற்றொரு தெளிவான முயற்சியை இது காட்டுகிறது.*

அறிவிக்கப்பட்ட காணாமல் போனவர்களைப் பற்றி விசாரணை செய்ய அதே ஆண்டின் மே மாதம் 'ஒரு நபர் ஆணையத்தை நியமிக்கப்பட்டதைப்' பற்றி யுஎஸ்

---

[266] https://itjpsl.com/assets/press/haiti-FINAL.pdf Let the Punishment Fit the Crime. Joint report with JDS. Also other reports.

[267] Press Statement: Haiti: More than a decade and still hiding, ITJP. https://itjpsl.com/assets/press/Press-Statement-haiti-f.pdf

[268] https://itjpsl.com/assets/ITJP_1989_mass_grave_report_v6_WEB.pdf

[269] https://itjpsl.com/assets/DownLoadPublicCommunicationFile.pdf

[270] GOTABAYA RAJAPAKSA'S ROLE IN 1989 MASS ATROCITIES, 10 May 2022, https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities

[271] "தூதருடனும் DCM உடனும் மே 25 [2006] நடத்திய உரையாடலில், வெளியுறவுத்துறைச் செயலாளர் H.G.M.S. பலிஹக்கார பாதுகாப்புப் படையின் மனித உரிமை மீறல்கள் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொள்வதில் ஜனாதிபதி ராஜபக்ச "மிகவும் ஆர்வமாக" இருப்பதாகக் கூறினார். அதற்காக, வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் பேரிடர்மேலாண்மை மற்றும் மனித உரிமைகள்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆகியோர் பின்னர் மே 25 ஆம் தேதி பாதுகாப்புப் படையின் நடத்தைகளை மேற்பார்வை செய்யும் மனித உரிமைகள் தொடர்பான மீள் அமைச்சகங்களுக்கு இடையிலான குழு ஒன்றின் முதலாவது கூட்டத்தை நடத்த இருந்தனர். 'ஏற்கனவே நடந்துள்ளவற்றை விசாரிக்கும் போது பாதுகாப்புப் படையின் தவறான நடத்தைகளைத் தடுக்க விரும்புகிறோம்' என பலிஹக்கார கூறினார். இந்தக் குழுவின் கீழ் சமரசிங்கவின் தலைமையில் முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் ச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, அரசின் தலைமை வழக்குரைஞர் மற்றும் பலர் அடங்கிய நிலையான செயற்குழு ஒன்று இருக்கும் 06COLOMBO872_a, https://www.wikileaks.org/plusd/cables/06COLOMBO872_a.html

[272] 06COLOMBO386_a , reproduced at https://www.colombotelegraph.com/index.php/wikileaks-stf-murdered-trinco-students-basil-to-us/

டெலக்ஸ் பேசுகிறது.[273] கொலை, காணாமல்போதல், கடத்தல் மற்றும் அடையாளம் தெரியாத இறந்த உடல்கள் பற்றி விசாரணை செய்ய அமைக்கப்பட்ட இந்த ஆணையத்தின் தலைவர் ஜனாதிபதியின் ஒரு நண்பனான மகானம திலகரத்னே ஆவார்.[274] அமெரிக்கத் தூதரகம் கருத்துத் தெரிவிக்கும்போது, 'இந்த முயற்சிகள் வெளிநாடுகளில் சிறிலங்காவின் பிம்பத்தை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகத் தோன்றுகின்றன, மேலும் மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் நிலைமையில் இன்னும் உறுதியான முன்னேற்றங்கள் உருவாக்கவில்லை'.

2006 நவம்பரில், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்துக்கு உதவுவதற்காக சர்வதேச சுதந்திரக் குழு (IIGEP) நிறுவப்பட்டது. மார்ச் 2007 ஆம் ஆண்டு இறுதியில், IIGEP கலைக்கப்பட்டது, ஏனெனில் பிரபல வல்லுநர்கள் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து தீவிரக் கவலைகளை வெளிப்படுத்தினர். IIGEP விசாரணை செய்த முக்கிய வழக்குகளில் ஒன்று 2 ஜனவரி 2006 அன்று திருகோணமலையில் 5 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டது ஆகும். அமெரிக்க தூதரகத்தின் டெலக்ஸ்கள் 2006 அக்டோபரில் சிறப்பு அதிரடிப்படை இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பு என்று கோத்தபாய ராஜபக்ச அறிந்திருந்ததாகவும், ஆனால் அதை மேலும் அறிவதற்கு அவருக்கு அதிகத் திறன் மேம்பாடு தேவை என்று அவர் கோரியதாகக் கூறுகிறது:

*வியக்கவைக்கும் வகையில் நேர்மையுடன் பேசிய ராஜபக்ச, சனவரி மாதம் திருகோணமலையில் ஐந்து மாணவர்களை சிறப்பு அதிரடிப்படை படுகொலை செய்ததை நிரூபிக்க சிறிலங்கா அரசாங்க முயற்சிகளை விளக்கினார்: 'STF அதை செய்தது எங்களுக்கு தெரியும், ஆனால் தோட்டா மற்றும் துப்பாக்கி ஆதாரங்கள் அவர்கள் செய்யவில்லை என்பதைக் காட்டுகிறது. ஒருவரைக் கொல்ல வேண்டும் என்றால் அவர்களிடம் தனித் துப்பாக்கிகள் இருக்க வேண்டும். எங்களுக்குத் தடயவியல் நிபுணர்கள் தேவை. அதை யார் செய்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும், ஆனால் அவர்கள் மீது வழக்கு தொடர முடியாது.*[275]

சில வேளைகளில் காவல்துறைக்கு விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் தனக்கு இருப்பதாகவும், அரசியல் போட்டியாளர்களை விசாரிப்பதில் எந்தக் கவலையும் இல்லை என்றும் கோத்தபாய தெளிவு படுத்தினார். தனது சகோதரரை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் வழக்கு (போருக்குப் பின்னர்) தொடர்பாக, காவல்துறை புலனாய்வுப் பிரிவுக்குத் தான் உத்தரவு பிறப்பித்ததாக கோத்தபாய ஒப்புக்கொண்டார்.

*அப்போதைய இராணுவத் தளபதி பிற்காலத்தில் எதிர் தரப்புக்குச் சென்ற பின்னர், தனிப்பட்ட காரணங்களுக்காக நாங்கள் அவரை வேட்டையாடவில்லை. முறையான குற்றச்சாட்டுகளுடன் மட்டுமே நாங்கள் அவரைப் பின்தொடர்ந்தோம். இந்த விடயங்கள் தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கோரினேன். அவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் இதுபோன்ற விசாரணைகளை மேற்கொண்டனர்.*[276]

2014ஆம் ஆண்டு அளுத்கமவில் நடந்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக தொழில்நுட்ப ரீதியாகக் காவல்துறை தனது கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும் காவல்துறைத் தலைவரையும் சிறப்பு அதிரடிப்படையினரையும் தன்னால் அனுப்ப முடியும் என கோத்தபாய தெரிவித்தார்.

*திரு அலி சப்ரி அந்த அளுத்கம சம்பவத்தைக் குறிப்பிட்டார். அந்த சம்பவம் நடந்தவுடனே அந்த இடத்திற்கு காவல்துறைமா அதிபரை அனுப்ப முடிந்தது. மேலும், அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த SDIG. யையும் STF ஐயையும் அனுப்பியதால் குறுகிய காலத்தில் அதைக் கட்டுப்படுத்த முடிந்தது.*[277]

### தண்டனையிலிருந்து விலக்களிக்கும் திட்டமும் விசாரணையாளர்களை விசாரணை செய்தலும்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின், ஜனாதிபதியிடம் அளிக்கப்பட்ட அறிக்கையில், சிறிலங்கா இராணுவத்துக்கும் உளவுப் பிரிவினருக்கும் எதிராக வழக்கு தொடுக்க தடை விதிக்கும் சட்ட விதியைக் கோத்தபாய முன்மொழிந்தார்.[278]

*அவர்களால் அதைச் செய்ய முடியாவிட்டால், அடுத்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது நான் அதைச் செய்வேன், 'என்று கோத்தபாய தனது வழக்கு நடவடிக்கை தடைத் திட்டம் குறித்து கூறியதாகக் கூறப்படுகிறது.* [279]

---

[273] https://wikileaks.org/plusd/cables/07COLOMBO728_a.html
[274] http://www.humanrights.asia/news/ahrc-news/AS-216-2007/
Himself arrested in 1998 https://www.sundaytimes.lk/981101/frontm.html and https://www.tamilnet.com/art.html?catid=13&artid=2056 ; http://www.janasansadaya.org/uploads/files/126-%20595-1998.pdf in what he said was “a case teeming with several unusual and strange features”.
[275] 06COLOMBO1622_a, https://wikileaks.org/plusd/cables/06COLOMBO1622_a.html
[276] 12 February 2019 Interview with Kelum Bandara of Daily mirror
http://www.dailymirror.lk/article/How-can-there-be-freedom-without-discipline-Gotabaya-162220.html
[277] 02 August 2018 Gota in Forum 5 21’56”-22’32”
[278] http://www.jdslanka.org/index.php/news-features/politics-a-current-affairs/882-sri-lanka-president-accepts-proposal-to-legalise-impunity-video
[279] http://www.sundayobserver.lk/2019/05/19/news-features/bulathwatte-bewilderment

2019 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து, முந்தைய சிறிசேனா அரசாங்கத்தின் கீழ் தொடங்கப்பட்ட ஊழல் குற்றவியல் விசாரணைகளை அரசியலாக்கியது குறித்து ஆராய்வதற்காக கோத்தபாய ராஜபக்ச ஒரு ஆணைக்குழுவை நியமித்தார்.[280] ஜனாதிபதியின் கூட்டாளிகள் பலர் 2015-19 க்கு இடையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கோத்தபாயவினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணை மற்றும் குற்றஞ்சாட்டப் பட்டவர்களுக்கான இழப்பீடுகளை பரிந்துரைத்தது. பல உயர் மனித உரிமை வழக்குகளில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக தலையிட்டதாக ஐ.நா. புகார் கூறியது.[281] மேலும் பின்னர் அது 'பல உருவகத்தன்மை கொண்ட மனித உரிமைகள் நேர்வுகளில் நீதித்துறை சார்ந்த நடவடிக்கைகளைத் தடுத்து அவற்றில் குறுக்கீடு செய்தது' என்று கூறியது'.[282]

**தடுக்கத் தவறியமை:**

கோத்தபாய பாதுகாப்புத்துறை அமைச்சகப் பொறுப்பில் இருந்த பத்தாண்டுகளில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சகத்துக்கு இருந்தது. அவர் பாதுகாப்புப் பயிற்சித் திட்டங்களையும் நிறுவனங்களையும் மேற்பார்வையிட்டார் என்று அதன் வலைத்தளம் பதிவுசெய்துள்ளது. காவல்துறையிலும் இராணுவக் கட்டமைப்புகளிலும் மனித உரிமைப் பிரிவுகள் இருந்தன. குறிப்பாக இராணுவத்திலும் காவல்துறையிலும் ஆணையிடும் நிலையில் இருந்த மூத்த அதிகாரிகள் விரிவான வெளிநாட்டு பயிற்சிகள் பெற்றிருந்தனர்.[283] கோத்தபாய பெருமையாகக் கூறிக்கொண்டார்:

> *மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமான சட்டம், ஆயுத மோதல் சட்டம், பொதுமக்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை முன்னிலைப்படுத்துவது ஆகியவை இலங்கை ஆயுதப்படைகளின் பயிற்சி பாடத்திட்டங்களில் பல ஆண்டுகளாக ஒருங்கிணைந்த பகுதிகளாக இருந்தன.*[284]

இங்கிலாந்து, ICRC, அமெரிக்கா ஆகியவற்றில் இருந்து பாதுகாப்புப் படைகள் விரிவான பயிற்சி பெற்றன. 1997 ஆம் ஆண்டு ICRC தனது ஆண்டு அறிக்கையில் 1997 இல் இராணுவக் கல்விக்கூடங்கள் 'போர் சட்டத்தை' தங்கள் பாடத்திட்டத்தில் இணைத்துக்கொண்டதாகக் கூறியது.[285] ஆகஸ்ட் 1998 இல், கல்கரி ஹெரால்ட் இலங்கை இராணுவம் (SLA) 'தனது படைவீரர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக 'மனித உரிமைகள் பிரிவுகளை' நிறுவியதாக அறிவித்தது. பயிற்சியில் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் (IHL) ஆகியவை அடங்கும்.[286] இதற்கு அர்த்தம் என்னவென்றால், தாங்கள் மனித, IHL மீறல்களில் ஈடுபடுகிறோம் என்பதும், குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் அறிந்திருந்தனர்.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் பேசும் போது இலங்கை கடற்படைக்கு மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனை இருப்பதாக கோத்தபாய ராஜபக்ச ஒப்புக் கொண்டதாகவும் ஆனால் குற்ற விசாரணைகள் அல்ல பயிற்சியே பிரச்சனையை சரிசெய்யும் என்று நம்புவதாகக் கூறியதாகவும் சொல்லப்பட்டது..

> *SLA இருந்த இடங்களில் அதைக் குறித்து எங்களுக்கு சில புகார்கள் வந்தன. ஆனால் எங்களுக்கும் SLN க்கும் சிக்கல் உள்ளது,' என்று ராஜபக்ச விளக்கினார். 'அவர்கள் பொதுமக்களுடன் பணியாற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை, அவர்கள் அதற்குப் பயிற்சி பெறவில்லை.' ஜனாதிபதி கடற்படைக்கு மனித உரிமைகள் பயிற்சி அளிக்க முன்னுரிமை அளித்துள்ளார்.*[287]

**2009 ஆண்டுப் போரை விசாரணை செய்ய மறுப்பு**

பிப்ரவரி 2010 இல் BBC தொலைக்காட்சிக்கு கோத்தபாய ராஜபக்ச அளித்த பேட்டியில், சிறிலங்காவில் நடந்த இறுதிக் கட்டப் போரைப் பற்றிய எந்த விசாரணையையும் அனுமதிக்கப் போவதில்லை என்றும், தவறு எதுவும் நடக்கவில்லை என்றும் கூறினார்.

> *அது ஐக்கிய நாடுகள் சபையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி, நாங்கள் - நான் இந்த நாட்டில் எந்த விசாரணையையும் அனுமதிக்கவில்லை. காரணம் எதுவும் இல்லை. இந்த நாட்டில் எந்தத் தவறும்*

---

280 https://www.presidentsoffice.gov.lk/wp-content/uploads/2020/02/2157-44_E.pdf
281 Para 50, A/HRC/51.5 2020.
282 A/ HRC/49/9 para 12.
283 Sri Lanka: The human rights training given to the police/army in the North and/or Colombo since January 1997, 1 Feb. 1999,https://www.refworld.org/docid/3ae6ac9a68.html%20[accessed%2013%20October%202023
Also Annex 2 of the ITJP's TID torture report at https://itjpsl.com/assets/press/ITJP_TID_report_final-_SINGLES.pdf lists training courses.
284 ON FILE Defence Secretary Spells Out How Political Will Brought Peace to Sri Lanka Inaugurating Seminar on 'Defeating Terrorism-Sri Lankan
285 International Committee of the Red Cross (ICRC). 1 July 1998. *Annual Report 1997*. "Sri Lanka."
286 *Calgary Herald.* 22 August 1998. Final Edition. Lynne Duke. "Sri Lanka Battle Rages Far From World's Spotlight: A Bloody Stalemate Has Come to Characterize This Island Nation's Punishing 15-Year Civil War." (NEXIS)
287 06COLOMBO1622_a, https://wikileaks.org/plusd/cables/06COLOMBO1622_a.html

*நடக்கவில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த நாட்டில் எதற்கும் விசாரணைகள் இருக்காது.* [288]

மேற்கத்திய நாடுகள் முதலில் தங்கள் போர்க்குற்றம் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்:

*பொதுமக்கள் உயிரிழப்புகளைப் பொறுத்தவரையில் உலகின் அனைத்து இடங்களிலும் உள்ள படைகளை விடவும் சிறிலங்கா இராணுவம் மிகவும் மேம்பட்டது - ஆரம்பம் முதல் இறுதி வரை பொதுமக்கள் உயிரிழப்பைத் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை-களும் எடுக்கப்பட்டன. எங்கள் இராணுவத்தைப் போர்க்குற்ற நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வது பற்றி யாராவது பேசினால், அதற்கு முன் நீங்கள் அமெரிக்க, இங்கிலாந்து படைகளையும் அவற்றின் தலைவர்கள் அனைவரையும் போர்க்குற்றங்களுக்கு உட்படுத்த வேண்டும்... இந்த மண்ணில் எந்த விசாரணையையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம், அவர்கள் அந்த நாட்டில் விசாரணைகளை நடத்த வேண்டும். எனவே இங்கு விசாரணைகள் பற்றி பேசுவதை விட ஐ.நா. அல்லது மனித உரிமை அமைப்புகள் அல்லது யாரேனும் முதலில் அந்த விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.*[289]

## காணாமல்போதல்கள்

### அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டவை

கோத்தபாய இராணுவத்தில் இருந்த JVP காலத்தின் போதும், பின்னர் அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது வடகிழக்கில் நடந்த போரின்போதும் உலகில் காணாமல் போனோர் எண்ணிக்கையில் சிறிலங்கா இரண்டாவது இடத்தில் இருந்தது. 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் ஐ.நா.வின் பலவந்தத்தின் காரணமாக மற்றும் விருப்பமின்றிக் காணாமல் போனோர் தொடர்பான செயற்குழுவின் (WGEID) அறிக்கையின்படி, இலங்கை இராணுவம், காவல்துறை (CID, TID, STF) மற்றும் தமிழ்த் துணை இராணுவக் குழுக்கள் ஆகியவை பெரும்பான்மையான காணாமல் போனதற்குக் காரணமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. (OISL 412). ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்த காலம் முழுவதிலும் WGEID இலங்கைக்கு வர அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐ.நா. கூறியது, *'இளம் தமிழ் ஆண்கள், அவர்களுக்கு LTTE களுடன் எந்த தொடர்பும் இருந்தாலும் இல்லாவிட்டாலும், குறிப்பாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யப்படுவதால் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள்' (OISL 408). பலவந்தமாக காணாமல் போகச்செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்தபோதிலும் ராஜபக்ச அரசு இந்த நிகழ்வை பெரும்பாலும் குறைத்து மதிப்பிட்டு, பாதுகாப்புப் படைகளின் பங்கை மறுத்தது என்று மொத்தத்தில் ஐ.நா கருத்து தெரிவித்தது.*[290]

2007 ஆம் ஆண்டில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களும் விருப்பத்திற்கு முரணாக காணாமல் ஆக்கப்பட்டவர்களும் தொடர்பான ஐ.நா. பணிக்குழு, 2006 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு அவசர முறையீடுகளாக 'காணாமல் போனோர்' தொடர்பான வழக்குகளை அனுப்பியதாகவும் இது உலகின் வேறு எந்த நாட்டையும் விட அதிகமாக இருப்பதாகவும் கூறியது.[291] மேலும் அதே ஆண்டு இதைத் தொடர்ந்து கூடுதல் அறிக்கைகளையும் அனுப்பியது.[292] அந்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினையை எழுப்பினார்.[293] அது தொடர்பாக மீண்டும் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார்.[294] மே 2007 இல் அமெரிக்க காங்கிரஸார் இந்தப் பிரச்சினையை எழுப்பினர்.[295] தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி வெளியுறவு செயலாளர் ரிச்சர்ட் ஏ.பௌச்சர் கொலைகள் மற்றும் கடத்தல்கள் அதிகரித்து வருவதாக அவரது கவலையைத் தெரிவித்தார்.[296] அதுபோல அரசியல் விவகாரங்களுக்கான துணை வெளியுறவு செயலாளர்

---

[288] BBC World News Asia Today, available at www.youtube.com/ watch?v=1DyFQ-xdD-U.

[289] VIDEO https://www.youtube.com/watch?v=Vtm54Y9USEg

[290] OISL, §396.

[291] A/HRC/10/9, para 366. https://www.ohchr.org/en/press-releases/2009/10/working-group-enforced-or-involuntary-disappearances-concludes-eighty-first

[292] The United Nations Working Group on Enforced or Involuntary Disappearances concluded its 82nd session," press statement, June 29, 2007, https://www.ohchr.org/en/statements/2009/10/united-nations-working-group-enforced-or-involuntary-disappearances-concluded
UN WORKING GROUP ON ENFORCED OR INVOLUNTARY DISAPPEARANCES CONCLUDES ITS 83RD SESSION, REVISES METHODS OF WORK AND ADOPTS ANNUAL REPORT, 30 Nov. 2007, https://www.ohchr.org/en/press-releases/2009/10/un-working-group-enforced-or-involuntary-disappearances-concludes-its-83rd

[293] UN, Sri Lanka should cooperate on human rights, High Commissioner says, 15 Oct. 2007, https://news.un.org/en/story/2007/10/235822

[294] Lanka rejects UN monitors again, 9 Dec. 2007, Referenced in https://www.sundaytimes.lk/071209/News/news0003.html

[295] Ackerman Calls for Increased U.S. Efforts in Sri Lanka, July 10, 2007, https://webharvest.gov/congress112th/20121231061610/http://ackerman.house.gov/2007-statements-remarks/ackerman-calls-for-increased-us-efforts-in-sri-lanka/

[296] Richard A. Boucher, Assistant Secretary of State for South and Central Asian Affairs
Remarks to the Press at the Cinnamon Grand Hotel Colombo, Sri Lanka
May 10, 2007, https://2001-2009.state.gov/p/sca/rls/rm/2007/84701.htm

ஆர். நிக்கோலஸ் பர்ன்சும், குடியரசு மற்றும் உலக விவகாரங்கள் துறை துணைச் செயலாளர் பவுலா டொப்ரியான்ஸ்கியும் அக்டோபர் 2007 இல் கவலை தெரிவித்தனர்.[297] சிறிலங்காவின் மோசமான மனித உரிமைகள் பதிவின் காரணமாக, சிறிலங்காவுக்கு இராணுவ உபகரணங்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதற்கு அல்லது மாற்றுவதற்கான உரிமங்கள் வழங்குவதை அமெரிக்கா நிறுத்தியது; நவம்பர் 2007 இல் அமெரிக்க செனட்டில் உரையாற்றிய செனட்டர் பேட்ரிக் லீஹி இலங்கையில் மனித உரிமைகள் பிரச்சனைகளின் தீவிரத்தை வலியுறுத்தினார்.[298] ஐரோப்பிய ஒன்றியமும் 2007 இல் இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினையை மீண்டும் மீண்டும் எழுப்பியது.[299]

மார்ச் 2008 இல் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (HRW)[300] ஒரு தேசிய நெருக்கடிக்கு சமமான பரவலான கடத்தல்கள் மற்றும் 'காணாமல் போனதற்கு' இலங்கை அரசாங்கமே பொறுப்பு என்று கூறியது. [301] 'பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க சார்பு ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்கள் செய்யும் முறைகேடுகளுக்காகத் தண்டனை பெறாமல் இருப்பதே' முக்கியமான காரணி என்று HRW அறிக்கை ஒரு முடிவு செய்தது.

2006-2010 காலப்பகுதியில் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்ட 475 புதிய சம்பவங்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு WGEID மூலம் அனுப்பப்பட்டது, அதில் இராணுவம், காவல்துறை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) ஆகியோரே குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகள் என 2011 இல் ஐ.நா. சித்திரவதைக்கு எதிரான குழு[302] தெரிவித்தது).[303]

2012 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கத்தின் சொந்த கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் (LLRC) போரின் முடிவில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த LTTE உறுப்பினர்கள் காணாமல் போனதாகக் கூறப்படும் எண்ணிக்கை குறித்து தனது 'கடுமையான கவலையை' (பாரா 4.318) வெளிப்படுத்தியது. LLRC மீண்டும் இலங்கை அரசாங்கத்திற்கு விசாரணை செய்ய வேண்டிய கடமையை நினைவூட்டியது (பாரா 4.319).

**காணாமல் போனாவர்கள் குறித்து கறைபடிந்த விசாரணை அல்லது விசாரணை இல்லாமை**

14 மே 2008 அன்று, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உலகளாவிய காலமுறை மீளாய்வுக்கான (Universal Periodic Review) நாட்டின் விளக்கக்காட்சியின் போது, அப்போதைய அரசின் தலைமை வழக்குரைஞர் சி.ஆர். டி சில்வா, முதற்கட்ட விசாரணைகளில் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட 355 காணாமற் போனதாகக் கூறப்படுபவர்களில் 12 பேர் நாட்டை விட்டு வெளியேறியதாகவும், 17 பேர் தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் வந்து வசித்து வருவதாகவும், மேலும் 11 இளைஞர்கள் 'ஓடிப்போய் விட்டனர்' என்றும் தெரிவித்தார். காணாமல் போனது தொடர்பாக விசாரிக்கப்படவில்லை என்ற நம்பந்தகுந்த பட்டியலில் எஞ்சிய 315 வழக்குகளுக்கு டி சில்வாவால் கணக்கு காட்ட முடியவில்லை.[304] 2008 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க வெளியுறவுத் துறை மனித உரிமைகள் அறிக்கை, 'இந்த ஆண்டில், எந்தவொரு இராணுவம், காவல்துறை அல்லது துணை இராணுவ உறுப்பினர்களுக்கும் எந்தவொரு உள்நாட்டு மனித உரிமை மீறல்களுக்கும் தண்டனை விதிக்கப் படவில்லை' என்று கூறியது.

11 ஆகஸ்ட் 2006 அன்று, அரசின் வேண்டுகோளின் பேரில் காணாமல் போனோர் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதை நிறுத்தியதாக உள்நாட்டு மனித உரிமைகள் ஆணையம் WGEID க்கு தெரிவித்தது.[305] இது ஆணைக்குழுவை B நிலைக்குத் தரமிறக்க வழிவகுத்தது. மனித உரிமை ஆணையம் ஒரு கைது அல்லது தடுப்புக்காவல் குறித்த புகாரைப் பெற்ற அதே நேரத்தில் காரணம் என்று கூறப்படும் நிறுவனத்துக்குள் இருக்கும் புலனாய்வுக்குப் பொறுப்பான நபர்களுக்கு அனைத்து விவரங்களும் அனுப்பப்பட்டது என்று ஐ.நா. அறிவித்தது. பொதுவாக அந்த நிறுவனம் எந்த பதிலையும் அனுப்பாது அல்லது கைதுசெய்யப்பட்ட மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட நபரைப் பற்றிய எதுவும் தங்களுக்குத் தெரியாது என்று பொதுவாக மறுக்கும் மேலும் வேறு எந்த தொடர் நடவடிக்கையும் இருக்காது.[306].

---

[297] Under Secretaries Burns and Dobriansky Meet With Human Rights Defenders, October 30, 2007, https://2001-2009.state.gov/r/pa/prs/ps/2007/oct/94376.htm

[298] CONGRESSIONAL RECORD — SENATE, Nov. 2007, S13723, https://www.govinfo.gov/content/pkg/CREC-2007-11-02/pdf/CREC-2007-11-02-pt1-PgS13723.pdf

[299] Footnote 335 and 336, HRW report, https://www.hrw.org/reports/2008/srilanka0308/8.htm#_ftn335

[300] https://www.hrw.org/news/2008/03/06/sri-lanka-disappearances-security-forces-national-crisis

[301] NGOs produced lists naming the disappeared such as this one for 2007 alone http://www.humanrights.asia/news/urgent-appeals/UP-157-2007/

[302] CAR/C?LKA/CO/3-4 https://digitallibrary.un.org/record/719227?ln=en Committee against Torture Forty-seventh session 31 October–25 November 2011 Consideration of reports submitted by States parties under article 19 of the Convention Concluding observations of the Committee against Torture

[303] CAR/C?LKA/CO/3-4

[304] https://www.refworld.org/country,,USDOS,,LKA,,49a8f151c,0.html – sourced from http://www.lankaweb.com/news/items08/140508-2.html

[305] OISL para 472.

[306] OISL, para 475.

2006 ஆம் ஆண்டில், 'கடத்தல்கள், காணாமல் போனவர்கள் மற்றும் கொலைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு' என்ற பெயரில் ஒரு விசாரணைக் குழு நிறுவப்பட்டது, பின்னர் மே 2007 இல் ஒரு தொடர்நடவடிக்கை ஆணைக்குழு நிறுவப்பட்டது. 2015 இல் வெளியிடப்படாத கண்டுபிடிப்புகளை ஐ.நா. மதிப்பாய்வு செய்து விசாரணையில் நம்பகத்தன்மையும் சுதந்திரமான புலனாய்வும் இல்லை என்பதைக் கண்டறிந்தது. 2007 ஆணைக்குழுவைப் பற்றி ஐ.நா பின்வருமாறு கூறியது, 'இந்த அறிக்கை முதன்மையாகக் காணாமல் போனவர்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை குறைமதிப்பிட்டு நிராகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டது' (OISL 490). கடத்தல் மற்றும் காணாமல் போனவர்கள் எங்கே என்று தெரிந்திருந்தும் காவல்துறையில் புகார் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வினோதமான முறையில் பரிந்துரைக்கப்பட்டு இருந்தது.

பாதுகாப்புத்துறை அமைச்சகத்திற்கு நேரடியாகப் புகார்கள் அனுப்பப்பட்டபோது, ஊழியர்கள் அவற்றை தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக, சிறிலங்கா சோசலிச சமத்துவக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் 2007 இல் இராணுவப் பகுதியில் பலத்த கட்டுப்பாட்டில் இருந்த இடத்தில் காணாமல் போயுள்ளதோடு அவர்களது வழக்கு உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தொலைநகல் மூலம் அறிவிக்கப்பட்டது (அமைச்சகத்தின் கூடுதல் செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டதாகக் கூறப் படுகிறது). ஆனால் உடனடி விசாரணை தொடங்கப்படவில்லை என்றும் அவர்களது புகார் சரியாக வாசிக்கப்பட்டதாகக் கூட தெரியவில்லை என்றும் ஊடகங்களிடம் அந்த அரசியல் கட்சி கூறியது.[307] உள்நாட்டு மனித உரிமைகள் ஆணையம் விசாரணையைத் தொடங்குவதற்கு பல மாதங்கள் ஆனது, ஆனால் அவர்கள் காணாமல் போன பகுதிக்குப் பொறுப்பான உள்ளூர் தளபதிகள் சாட்சியமளிக்க வர மறுத்துவிட்டனர்.[308] இந்த வழக்கு பல மாதங்களாக பரவலாக அறிவிக்கப்பட்டது. ஆணைக்குழு விசாரணைகளில் கலந்துகொள்ளுமாறு எந்தவொரு அதிகாரிக்கும் கட்டளையிட பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் இருந்த போதிலும் அவ்வாறு செய்யத் தவறியது

ஜூன் 2012 இல் காணாமல் போவது குறித்து கேட்கப்பட்டபோது அந்த பிரச்சினையைத் தான் விசாரணைசெய்ததாக கோத்தபாய ராஜபக்ச கூறினார்:

> *நான்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர். இது குறித்துப் விசாரணை செய்துள்ளேன். இந்த மக்களிடமிருந்து வார்த்தைகளைப் பிடுங்காதீர்கள். நான் கூறும் வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள்... இவை தவறான குற்றச்சாட்டுகள்.... நான் இந்த விஷயங்களை விசாரித்தேன். இவை சரியல்ல... இலங்கையைப் பற்றிய தவறான பிம்பத்தைக் கொடுப்பதற்காகப் புனையப்பட்ட பொய்கள்... வெளியில் இருந்துகொண்டு இலங்கையின் பிம்பத்தைச் சேதப்படுத்த முயற்சிசெய்யும் LTTE யால் சிறிலங்காவைப் பற்றி உருவாக்கப்படும் தவறான பிம்பம்.*[309]

மே 2012 இல், காணாமல் போனவர்கள் பலர் சிறிலங்காவை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும், பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் 'சிறிலங்காவைப் பற்றி தவறான பிம்பத்தைக் கொடுப்பதற்கான பொய்கள்.. LTTE யால் உருவாக்கப்படும் சிறிலங்காவைப் பற்றிய தவறான பிம்பம்' என்றும் அவர் கூறினார். வெளியில் இருந்துகொண்டு சிறிலங்காவின் பிம்பத்தைச் சேதப்படுத்த முயற்சிக்கிறார்கள்.[310]

மீண்டும் 2013 இல், கோத்தபாய ராஜபக்ச சிறிலங்கா அரசின் செய்தித்தாளிடம், ஆயுதப் படைகளிடம் சரணடைந்த எந்தவொரு LTTE உறுப்பினர்களும் பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யப்படவில்லை என்று கூறினார்.[311] அவர் எந்த விசாரணையை நடத்தினார் அல்லது எப்படி அவர் தனது முடிவுக்கு வந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை, அது உண்மைகளுக்கு முற்றிலும் புறம்பானதாக இருக்கிறது.

2014 இல், மனித உரிமைகள் குழுவிற்கான இலங்கையின் 5 வது கால அறிக்கையின் போது, 'வெள்ளை வான்கள்' காணாமல் போவதற்கு ஒரு காரணம் என்று குறிப்பிடுவது 'சில ஊடகங்களில் வெளிவந்த ஒரு பரபரப்பான குற்றச்சாட்டு, மாறாக யதார்த்தமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது அல்ல' என்று அரசு கூறியது. 'பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யும் சம்பவங்களில் இராணுவத்தின் பங்கு பற்றிய குற்றச்சாட்டுகளை சிறிலங்கா திட்டவட்டமாக நிராகரித்தது.[312]

---

[307] Sri Lankan defence ministry stalls on inquiry into missing SEP member, 28 March 2008 World Socialist Wen site ON ~FILE

[308] https://www.wsws.org/en/articles/2007/10/sril-o15.html

[309] https://groundviews.org/2012/06/02/gotabaya-rajapaksa-on-disappearances-in-sri-lanka/

And BBC https://www.youtube.com/watch?time_continue=73&v=WUQ7L_fOWJE&feature=emb_logo

[310] Gotabaya Rajapaksa: Sri Lanka north 'not just for Tamils', BBC, 28 May 2012, http://www.bbc.com/news/world-asia-18207198

[311] DEFENCE SECRETARY ANSWERS CRITICS - NO LTTE SURRENDEE WENT MISSING All 11,800 surendees integrated into society

Army submits recommendations to LLRC, Dharma Sri Abeyratne, 25 Jan 2013, The Daily News, on file.

[312] CCPR/C/LKA: மனித உரிமைகள் குழு, ICCPR இன் கீழ் சிறிலங்காவின் காலமுறை அறிக்கையின் பரிசீலனை, 7-8

2020 ஆம் ஆண்டில், கோத்தபாய ராஜபக்ச ஐ.நா. உள்ளுறை ஆணையரிடம் ஆயிரக்கணக்கான 'காணாமல் போனவர்கள்' இறந்துவிட்டார்கள் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். பெரும்பாலானவர்கள் LTTE யால் கைப்பற்றப்பட்டதாகவும் காணாமல் போயுள்ளதாகவும் அவர் கூறினார்.[313] பின்னர் அவர் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதாகத் தோன்றும் விவகாரம் குறித்தும் விசாரணை நடத்தப்படும் என்றார். சவேந்திர சில்வாவும் கமால் குணரத்தினவும் போன்ற பல முக்கிய நபர்கள் 2022 ஆம் ஆண்டு வரை அதிகாரத்தில் முக்கியப் பதவிகளில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

அக்டோபர் 2014 - மனித உரிமைகள் குழு எழுப்பிய கேள்விகளுக்கு சிறிலங்கா அரசின் தகவல், 'பிரச்சினைகளின் பட்டியலுக்கு' சிறிலங்கா அரசாங்கம் இதற்கு முன்னர் எழுத்துப்பூர்வமாக வழங்கிய பதிலுக்கும் மேலதிகமாக; 7 அக்டோபர் 2014, சிறிலங்காவின் நிரந்தரப் பிரதிநிதி, தூதுவர், H.E திரு ரவிநாத பி. ஆர்யசின்காவின் அறிமுக அறிக்கை. (§398 OISL)

313 First https://www.presidentsoffice.gov.lk/index.php/2020/01/17/un-resident-coordinator-delighted-with-presidents-sustainable-development-programs/?lang=en then: https://www.presidentsoffice.gov.lk/index.php/2020/01/24/death-certificates-for-missing-after-investigations/?lang=en
Also After the elections Gotabaya played down the issue of enforced disappearance. http://www.ddinews.gov.in/international/minority-tamils-misled-decades-politicians-sri-lanka-president-gotabaya-rajapaksa

# 4. சட்டப் பகுப்பாய்வு

**'மனித உரிமைகளும் சுதந்திரமும் நல்லவர்களுக்கானதே தவிர கெட்டவர்களுக்கானதல்ல.'[314]**

## சிறிலங்காவுக்குப் பொருந்தும் சட்டக் கட்டமைப்பு

சிறிலங்காவில் சர்வதேசத் தொடர்பற்ற ஆயுத மோதலுக்கு ('NIAC') பொருந்தும் அனைத்துலக வழக்குச் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ('IHL') சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவற்றை இந்தப் பகுப்பாய்வு சார்ந்திருக்கிறது.[315] மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள், இனப்படுகொலை, குற்றவியல் சித்திரவதை (தனித்து நிற்கும் குற்றத்தைப் போல்) போன்ற சர்வதேசக் குற்றங்களைத் தடைசெய்தல் அனைத்துலக வழக்குச் சட்டத்தின் நிலையை அடைந்துவிட்டன. இந்தக் குற்றங்களின் சில கூறுகள் சர்வதேச வழக்குச் சட்டத்தின் கீழ் வளர்ச்சி பெற்றுள்ளன.[316] 1949 ஜெனீவா மாநாடுகளின் மூன்று கூடுதல் நெறிமுறைகளுக்கு சிறிலங்கா ஓர் அரசுத் தரப்பு அல்ல.[317] ஆயுத மோதலின் போது பல சர்வதேச மனித உரிமைகள் உடன்பாடுகளில் சிறிலங்கா அரசுத் தரப்பாக இருந்தது.[318] 2016இல் சிறிலங்காவும் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்வதில் இருந்து அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கான சர்வதேச மாநாட்டுக்கு ஒப்புதல் அளித்தது.

### சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (ICC)[319]

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ('ICC') உரோம நியதிச் சட்டத்துக்கு சிறிலங்கா ஓர் அரசுத் தரப்பு அல்ல, ஆனால் மோதலின்போது சிறிலங்காவில் நடத்தப்பட்ட குற்றங்களின் மீது ஒன்றில் இலங்கையின் அதிகார வரம்பை ஏற்றுக்கொள்ளும் அறிவிப்பு,[320] ஒரு ஐ.நா. பாதுகாப்புக் குழு பரிந்துரை[321] மூலம் அல்லது ICC உரோம நியதிக்குக் கையொப்பமிட்டுள்ள நாட்டின் அல்லது ஓர் உறுப்பு நாட்டின்[322] பகுதியில் ஒரு குடிமகனால் செய்யப்பட்ட ஒரு குற்ற நேர்வில் ICC யால்

---

[314] https://www.news18.com/news/world/were-back-to-square-one-man-who-helped-defeat-ltte-flays-sirisena-govt-for-turning-blind-eye-to-intel-2116763.html

[315] விவரிக்கப்பட்டுள்ள வன்முறை நிகழ்வுகளின் கால அளவும் தீவிரமும், விடுதலைப் புலிகள் அமைப்பின் வெளிப்படையான நிலையும் சிறிலங்காவில் நடந்த மோதல் உள்நாட்டுத் தன்மையைக் கொண்டது என்ற முடிவுக்கு வர வைக்கிறது. இது வெறும் உள்நாட்டுக் குழப்பங்கள், பதட்டங்கள் அல்லது குற்றச் செயல்கள் அல்ல. முடிவாக இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள பெரும்பாலான வன்முறைத் தாக்குதல்களும் பிற நிகழ்வுகளும் ஆயுத மோதலினால் ஏற்பட்ட விளைவாகும்.

[316] 1949 நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளை 1959³ இல் சிறிலங்கா அங்கீகரித்தது. NIAC க்குப் பொருந்தும் அனைத்துலக வழக்குச் சட்டமாக அங்கீகரிக்கப்பட்ட நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளின் பொதுப் பிரிவு 3 க்கும் கட்டுப்பட்டது. சிறிலங்காவில் மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களுக்குப் பொருந்தும், குறிப்பாக வேறுபாடு, முன்னெச்சரிக்கை மற்றும் விகிதாசாரக் கொள்கைகளுக்குப் பொருந்தும் வழக்கமான சர்வதேச சட்டத்தின் பிற விதிகளுக்குக் கட்டுப்பட்டுள்ளனர். விவரிக்கப்பட்டுள்ள வன்முறை நிகழ்வுகளின் கால அளவும் தீவிரமும், LTTE அமைப்பின் வெளிப்படையான நிலையும் சிறிலங்காவில் நடந்த மோதல் உள்நாட்டுத் தன்மையைக் கொண்டது என்ற முடிவுக்கு வர வைக்கிறது. இது வெறும் உள்நாட்டுக் குழப்பங்கள், பதட்டங்கள் அல்லது குற்றச் செயல்கள் அல்ல. முடிவாக இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள பெரும்பாலான வன்முறைத் தாக்குதல்களும் பிற நிகழ்வுகளும் ஆயுத மோதலினால் ஏற்பட்ட விளைவாகும்.

குறிப்பாக, 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி ஜெனீவா உடன்படிக்கைகளின் கூடுதல் நெறிமுறை, மேலும் சர்வதேச ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு (நெறிமுறை I), 8 ஜூன் 1977; ஆகஸ்ட் 12, 1949 இன் ஜெனீவா உடன்படிக்கைகளுக்குக் கூடுதல் நெறிமுறை, மற்றும் சர்வதேச அல்லாத ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு (நெறிமுறை II), 8 ஜூன் 1977 ஆகியவற்றை சிறிலங்கா அங்கீகரிக்கவில்லை.

[318] சித்திரவதை, பிற கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறையில் நடத்தப்படுதல் அல்லது தண்டனைக்கு எதிரான மாநாடு (CAT) (1994 இல் அணுகப்பட்டது); இனப்படுகொலை குற்றத்தின் தடுப்பு மற்றும் தண்டனை பற்றிய மாநாடு (1950 இல் அணுகப்பட்டது), சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) (1980 இல் அணுகப்பட்டது); பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR) (1980 இல் அணுகப்பட்டது); பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாடு (1981 இல் அணுகப்பட்டது); அனைத்து வகையான இனப் பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சர்வதேச மாநாடு (CERD) (1982 இல் அணுகப்பட்டது); அனைத்துப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாடு (ICRMW) (1996 இல் அணுகப்பட்டது); குழந்தைகளின் உரிமைகளுக்கான மாநாடு (1991 இல் அங்கீகரிக்கப்பட்டது); ஆயுத மோதலில் குழந்தைகளை ஈடுபடுத்துவது குறித்த குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டிற்கான விருப்ப நெறிமுறை (2000 இல் அங்கீகரிக்கப்பட்டது) அல்லது குழந்தை விபச்சார விற்பனை மற்றும் குழந்தை ஆபாசப் படங்களை விற்பனை செய்வதில் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய மாநாட்டின் விருப்ப நெறிமுறை (2006 இல் ஏற்கப்பட்டது).

[319] UN பொது பேரவை, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம நியதி (கடைசியாகத் திருத்தப்பட்டது 2010), 17 ஜூலை 1998, ISBN எண் 92-9227-227-6, https://www.refworld.org/docid/3ae6b3a84.html [அணுகல் 27 டிசம்பர் 2023]

[320] பிரிவு 12(2) மற்றும் (3) ICC சட்டம்

[321] பிரிவு 13(b) ICC சட்டம்

[322] இந்த வழக்கில், சம்பந்தப்பட்ட அரசுத் தரப்பு ஒரு வழக்கை ICC சிக்கு அனுப்பலாம் அல்லது அரசுத்தரப்பு வழக்கறிஞர் ICC சட்டத்தின் பிரிவு 12(2), 13(a) மற்றும் (c) ஆகியவற்றைப் பார்க்கவும்.

சிறிலங்காவில் இன்னும் அதிகாரம் செலுத்தமுடியும். இரட்டைக் குடியுரிமை கொண்ட இலங்கைவாசிகள் மற்றும் ஐ.சி.சி உரோம நியதியின் அரசுத் தரப்பின் இரண்டாவது குடியுரிமை கொண்ட இலங்கையர்கள், சம்பந்தப்பட்ட நாடு ICC -க்கு வழக்கை அனுப்பினால் அல்லது ICC வழக்குரைஞர் தாமாகவே முன்வந்து செயல்பட்டால் ICC யின் முன் விசாரிக்கப்படலாம்.[323] மேலும், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரின் தனிப்பட்ட குற்றப் பொறுப்பு, அவர்களின் தேசிய சட்டத்தில்[324] உலகளாவிய அதிகார வரம்பு பற்றிய விதிகளை உள்ளடக்கிய நாடுகளால் அல்லது சிறிலங்காவில் போரின்போது நடந்த சர்வதேசக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரிப்பதற்காக நிறுவப்படக் கூடிய சிறப்பு அல்லது கலப்பு நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படலாம்.

சித்திரவதைக்கு எதிரான மாநாட்டின் அரசத் தரப்பினர் தங்கள் அதிகார வரம்பிற்குள் உள்ள எந்தவொரு பிரதேசத்திலும் சித்திரவதையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றவாளிகள் மற்றொரு நாட்டிற்கு நாடுகடத்தப்படாவிட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும்.[325] அதுபோல, அனைத்து நபர்களையும் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்வதில் இருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையானது, அரசு தரப்புக்கள் தங்கள் அதிகார வரம்பிற்குள் உள்ள எந்தவொரு பிரதேசத்திலும் பலவந்தமாகக் காணாமல் போகச்செய்ததாகக் கூறப்படும் குற்றவாளிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் இன்னொரு நாட்டில் அல்லது சர்வதேச நடுவர் மன்றத்தில் சரணடையாமலோ அல்லது நாடுகடத்தப் படாமலோ இருந்தால் அவர்கள் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.[326]

இருப்பினும், இலங்கையின் உடன்படிக்கையும் வழக்கமான சட்டக் கடமைகளும் அதன் உள்நாட்டுக் கடமைகளும் இருந்தபோதிலும், கடந்த மூன்று பத்தாண்டுகளாக சிறிலங்காவில் சர்வதேச மனித உரிமைகள் ('IHRL'), சர்வதேசக் குற்றவியல் சட்டம் (' ICL'), சர்வதேச மனிதாபிமான சட்டம் ('IHL') ஆகியவை முற்றிலுமாக மீறப்பட்டதுமல்லாமல் அது தொடர்பான குற்றங்கள் மே 2009 இல் முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னான காலகட்டத்திலும் இழைக்கப்பட்டன.

### கட்டளைக்கான பொறுப்பு

இனப்படுகொலை குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் நேரடியாக அல்லது அவர்களுக்கு அடிபணிந்தவர்களால் செய்யப்பட்ட குற்றங்களுக்காக இராணுவத்தின் உயர்மட்ட உறுப்பினர்களுக்குக் குற்றவியல் பொறுப்பை கட்டளைக்கான பொறுப்பு வழங்குகிறது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு மீறலும் ஒரு கீழ்நிலை அதிகாரியால் செய்யப்பட்டது என்பது கோத்தபயவுக்குத் தெரிந்திருந்தால், தனக்குக் கீழ் உள்ளவர்கள் அத்தகைய செயல்களைச் செய்யவிருக்கிறார்கள் அல்லது அவ்வாறு செய்தார்கள் என்பதை அறிந்து அத்தகைய செயல்களைத் தடுக்க அல்லது குற்றவாளிகளைத் தண்டிக்கத் தேவையான மற்றும் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருந்தால் அவர் குற்றப் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுவதில்லை.

கட்டளைக்கான பொறுப்பின் வளர்ச்சியானது குற்றங்களை நேரடியாக இழைக்கும் குற்றவாளிகளுக்கு அப்பாலும் வழக்குத் தொடர உதவுகிறது, ஏனெனில் அது இல்லாவிட்டால் மேலதிகாரிகள் எந்தவொரு தவறுகளில் இருந்தும் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள முடியும், எடுத்துக்காட்டாக, துணை அதிகாரிகள் குற்றங்களைச் செய்யும் போது கட்டளைகளைப் பின்பற்றவில்லை அல்லது அவர்கள் குற்றம் இழைக்கப்பட்டபோது அந்த இடத்தில் இல்லை என்று வாதிடுவதன் மூலம் இவ்வாறு செய்யலாம். கீழ்நிலை அதிகாரிகளின் செயல்கள் IHL, HRL மற்றும் ICL ஆகியவற்றை மீறும்போது தலையிடவும் அவற்றைத் தடுக்கவும் அல்லது ஒடுக்கவும் ஒரு தளபதி கடமைப்பட்டவர்.

உரோம நியதி பிரிவு 25 மற்றும் 28, ICC சட்டத்தின் கீழ் பொறுப்பு முறைகளை வரையறுக்கிறது.[327] பிரிவு 6-8.18 இல் குறிப்பிடப்பட்டுள்ள இனப்படுகொலை குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் போன்ற 'நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள' குற்றங்களுக்கான பொறுப்பின் ஒரு வடிவமாக ICC பிரிவு 28 வரையறுக்கிறது.[328]

ICC இன் 28(a) பிரிவு, குற்றம் சாட்டப்பட்டவர்களின் நிலை மற்றும் இராணுவ நிறுவனத்தின் செயல்பாட்டு படிநிலை அமைப்புக் கட்டமைப்புகள் தொடர்பான இரண்டு நிபந்தனைகளைக் கூறுகிறது. குற்றம் சாட்டப்பட்டவர் ‘ஓர் இராணுவத் தளபதி அல்லது இராணுவத் தளபதியாகத் திறம்பட செயல்படும் நபர்’ என்பது முதல் நிபந்தனை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இதற்கு ஒரு இராணுவத் தளபதியின் நடைமுறை அல்லது நீதித்துறை நிலை தேவைப்படுகிறது, இது அதிகாரங்களையும் கடமைகளையும் குறிக்கிறது, அதாவது குற்றவாளி ஓர்

[323] 12(2), 13(a) மற்றும் ICC சட்டத்தின் (c).

[324] பெல்ஜியம், டென்மார்க், ஜெர்மனி, நெதர்லாந்து, UK அல்லது சுவிச்சர்லாந்து.

[325] பிரிவு 7(1) CAT

[326] பலவந்தமாகக் காணாமல் போகச்செய்வதில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாக்கும் சர்வதேச மாநாட்டின் பிரிவு 9.

[327] ஐ.நா. பொதுச்சபை, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம நியதி *(கடைசியாகத் திருத்தப்பட்டது 2010)*, 17 ஜூலை 1998, ISBN எண். 92-9227-227-6, https://www.refworld.org/docid/3ae6b3a84.html [அணுகல்1 ஜன 2024]

[328] மேற்படி

இராணுவத் தளபதி அல்லது ஒரு இராணுவத் தளபதியாகத் திறம்பட செயல்படும் நபராக இருந்தவர்.

இரண்டாவது நிபந்தனை இராணுவ நிறுவனத்திற்குள் ஒரு செயல்படும் படிநிலை கட்டமைப்பு இருப்பது. அதில் 'படைகள் ஒரு தளபதியின் திறன்மிகு கட்டளை மற்றும் கட்டுப்பாடு அல்லது திறன்மிகு அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன'. இரண்டு நிகழ்வுகளிலும், கட்டளை மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட ஒரு முறையான இராணுவத் தளபதி மற்றும் அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டுடன் இராணுவத் தளபதியாகத் திறம்பட செயல்படும் நபர் ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடு காட்டப்படுகிறது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவை சட்டத்தை மீறாமல் இருப்பதை உறுதி செய்வதில் அவர்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளை விட மேலதிகாரிகளுக்கு அதிகப் பொறுப்பு உள்ளது. மேலதிகாரிகளுக்கு, படிநிலையில் அவர்களின் உயர்ந்த நிலை காரணமாக, IHL முறையாக மதிக்கப்படுவதையும், மீறல்கள் சரியான முறையில் கையாளப்படுவதையும் உறுதிசெய்யும் கடமை உள்ளது. அவ்வாறு செய்யத் தவறினால் அது, அவர்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களின் சட்டவிரோதச் செயல்களுக்கு ஒப்புக்கொள்வது, மேலும் மீறல்களை ஊக்குவிப்பது மற்றும் தண்டனையின்மை கலாச்சாரத்தை வளர்ப்பது என்று விளக்கலாம்.

ICC யால் இயற்றப்பட்டச் சட்டம் கூடுதல் கூறுகளை அறிமுகப்படுத்துகிறது. ஓர் இராணுவம் சாராத மேலதிகாரி கட்டளையிடும் பொறுப்பின் மூலம் குற்ற எண்ணத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும். மேலதிகாரி தனக்குக் கீழ் பணிபுரிபவர்களின் செயல்பாடு தொடர்பான தகவலை வைத்திருந்ததோடு வேண்டுமென்றே அத்தகைய தகவலைப் புறக்கணித்தது காட்டப்பட வேண்டும்.

### கோத்தபய ராஜபக்ச மீது சுமத்தப்பட்டுள்ள சர்வதேசக் குற்றங்கள்

2009 மே மாதம் முடிவடைந்த இறுதிக்கட்ட போரின் போதும் அதற்குப் பின்னான காலத்திலும் கோத்தபய ராஜபக்சவிற்கு IHL, HRL மற்றும் ICL ஆகியவற்றின் மீறல்கள் பற்றி சமகால அறிவு இருந்ததை நிரூபிக்கும் வகையில் களத்திலுள்ள தளபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தரவுகளுடன் கோத்தபய ராஜபக்சவை இணைக்கும் விரிவான ஆதாரங்களை இந்த அறிக்கை முன்வைக்கிறது. கோத்தபய பதவியில் இருந்தபோது, இந்த மீறல்களைத் தடுக்கவும், நம்பத்தகுந்த விசாரணைகளைத் தொடங்கவும் எண்ணற்ற வாய்ப்புகள் இருந்தன என்றும் அது விவரிக்கிறது; அதற்குப் பதிலாக, பொறுப்புக்கூறல் முயற்சிகளை கோத்தபய தடுத்தார், குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு வெகுமதி அளித்துப் பாதுகாத்தார்.

### சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் (IHL)

போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எழுவதற்கு, ஓர் ஆயுத மோதல் இருக்க வேண்டும் மற்றும் கேள்விக்குரிய நடத்தை ஆயுத மோதலுடன் இணைக்கப்பட வேண்டும், காணப்படும் ஆயுத மோதல் குறைந்தபட்சம் குற்றவாளியின் [குற்றம்] செய்யும் திறனில், அதைச் செய்வதற்கான அவரது முடிவில், அது செய்யப்பட்ட விதத்தில் அல்லது அது செய்யப்பட்ட நோக்கத்தில் கணிசமான பங்கைக் கொண்டிருக்க வேண்டும்'.[329]

ஆயுத மோதலுக்கான தொடர்பு நிறுவப்படும் வரை, எந்தவொரு தனிநபராலும், குடிமகனாலும் அல்லது இராணுவத்தாலும் போர்க்குற்றங்கள் செய்யப்படலாம்.[330] போர்க் குற்றங்களின் வரையறையின்படி சர்வதேச மனிதாபிமான அல்லது ஒப்பந்த வழக்குச் சட்டத்தின் கீழ் ஒரு பாதுகாக்கப்பட்ட மக்கள் அல்லது சொத்துக்களுக்கு எதிராகக் குற்றம் செய்யப்பட வேண்டும்.[331]

### போர்க்குற்றங்களைத் தடுத்தல்

#### பாதுகாக்கப்பட்ட நபர்கள்

சர்வதேச ரீதி அல்லாத ஆயுத மோதல்களில், அரசு, ஆயுதப் படைகள் அல்லது மோதலில் ஈடுபடும் ஒரு தரப்பின் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களில் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள் பொதுமக்களாவர் மற்றும் அவர்கள் நேரடியாக மோதலில் பங்கேற்காத வரை நேரடித் தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்பைப் பெறுகின்றனர்.[332] கூடுதல் நெறிமுறை I இன் பிரிவு 50(3) இன் படி 'பொதுமக்கள் என்ற வரையறைக்குள் வராத தனிநபர்கள் பொதுமக்களுக்கு மத்தியில் இருப்பதனால் அது தன் பொதுமக்கள் என்ற தன்மையை இழந்துவிடாது.'[333] ஒரு தாக்குதலில் இருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்படுதல் சர்வதேச

[329] உ.ம். குனாரக் மற்றும் பிறர், மேல்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு (n 75), para 58. ருத்தகண்டா, மேல்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பையும் பார்க்கவும் (n 74), பாராக்கள் 569–570.

[330] *குற்றவழக்கு நடத்துபவர் v அகாயேசு*, ICTR-96-4, விசாரணை நீதிமன்றம், தீர்ப்பு, 2 செப் 1998, மேலும் பார்க்கவும் பிரிவு 8(2) உரோம நியதி.

[331] பொதுச் சட்டப்பிரிவு 3, 'ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள், ஆயுதங்களைக் கீழே போட்டவர்கள் மற்றும் நோய், காயங்கள், தடுப்புக்காவல் அல்லது பிற காரணங்களால் போரில் இருந்து விலகியவர்கள் உட்பட, போர்களில் இனி தீவிரமாகப் பங்கேற்காத நபர்களைப் பாதுகாக்கிறது.'

[332] 1977 நெறிமுறை 12 ஆகஸ்டு 1949 இன் ஜெனீவா உடன்படிக்கைகளுக்குக் கூடுதலாக சர்வதேச ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது, பிரிவு.51(3); 1977 நெறிமுறை 12 ஆகஸ்டு 1949 இன் ஜெனீவா உடன்படிக்கைகளுக்கு கூடுதலாக, சர்வதேச அல்லாத ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது தொடர்பானது, பிரிவு 13(3).

[333] கூடுதல் நெறிமுறை II இன் வரைவில் இதே போன்ற விதி ஒருமித்த கருத்துடன் சேர்க்கப்பட்டது, ஆனால் இறுதியில்

மனிதாபிமான சட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டது, அதாவது வேறுபடுத்தி அடையாளப்படுத்தும் கொள்கை. வேறுபடுத்தும் கொள்கை ஆயுத மோதலில் ஈடுபடும் தரப்பினரை எல்லா நேரங்களிலும் சட்டபூர்வமான மற்றும் பாதுகாக்கப்பட்ட இலக்குகளை வேறுபடுத்திப் பார்க்கக் கட்டாயப்படுத்துகிறது.[334] இதில் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணடைந்த ஆயுதப் படைகளின் உறுப்பினர்களும் நோய், காயங்கள், சரணடைதல், தடுப்புக்காவல் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காகப் போரில் இருந்து விலகினவர்களும் உள்ளனர்.[335] மருத்துவப் பணிகளுக்குப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட மருத்துவப் பணியாளர்கள் எதிரிக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடாத வரை, எல்லா சூழ்நிலைகளிலும் மதிக்கப்பட வேண்டும் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும்.[336] உரோம நியதி, மருத்துவ மற்றும் மதப் பணியாளர்கள் அல்லது போரில் ஈடுபடும் நபர்கள் உட்பட பொதுமக்கள் மற்றும் பிற பாதுகாக்கப்பட்ட நபர்களை குறிவைக்கும் பல்வேறு மீறல்களை போர்க்குற்றங்களாக வகைப்படுத்துகிறது.

**பாதுகாக்கப்பட்ட பொருட்கள்: பொதுமக்களின் பொருட்களுக்கும் இராணுவ நோக்கங்களுக்கும் இடையிலான வேறுபாடு**

இராணுவ நோக்கங்களுடன் இணைக்கப்படாமல் இருப்பவையே பொதுமக்களின் பொருட்கள்.[337] சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின்படி மோதலில் ஈடுபடும் தரப்பினர் தற்செயலான பொதுமக்களின் உயிரிழப்பு[338] மற்றும் பொதுமக்களின் பொருட்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்க்க அல்லது குறைக்க, தாக்குதல் பொருட்களை சரிபார்க்க சாத்தியமான அனைத்தையும் செய்வது உட்பட 'எல்லா சாத்தியமான முன்னெச்-சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்'.[339] மோதலில் ஈடுபடும் தரப்பினரும், சூழ்நிலைகள் அனுமதிக்கும் போது தாக்குதல்கள் குறித்து 'பயனுள்ள முன்கூட்டியே எச்சரிக்கை' கொடுக்க வேண்டும்.[340]

**கண்மூடித்தனமான, பொருத்தமற்ற தாக்குதல்களுக்குத் தடை**

கண்மூடித்தனமான தாக்குதல்கள் என்பவை'... (a) ஒரு குறிப்பிட்ட இராணுவ நோக்கத்திற்கானவை அல்ல; (b) ஒரு குறிப்பிட்ட இராணுவ நோக்கத்தை நோக்கி செயல்படுத்த முடியாத ஒரு முறை அல்லது போர் வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது; அல்லது (c) சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திற்கேற்ப விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு முறை அல்லது போர் வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது; அதன் விளைவாக, இதுபோன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இராணுவ நோக்கங்கள் மற்றும் பொதுமக்கள் அல்லது குடிமக்களின் பொருட்களை வேறுபாடின்றி தாக்கும் தன்மை கொண்டது.[341] கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தடைசெய்யும் இந்தக் கோட்பாடு, NIAC க்கு பொருந்தும் என சர்வதேச வழக்குச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

விகிதாசாரக் கொள்கை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடாகவும் உள்ளது, இது NIAC க்குப் பொருந்தும் வழக்கமான சர்வதேச சட்டத்தின் நெறிமுறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மோதலில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரையும் தற்செயலான பொதுமக்களின் உயிர் இழப்பு, பொதுமக்களுக்கு காயம், பொதுமக்களின் பொருட்களுக்கு சேதம் அல்லது அவை அனைத்தும் இணைந்து நிகழக்கூடிய ஒரு தாக்குதலைத் தொடங்குவதை இந்தக் கொள்கை தடுக்கிறது; எதிர்பார்க்கப்படும் திடமான, நேரடி இராணுவ ரீதியான சாதகத்தை வைத்துப் பார்க்கும்போது இது மிகையானதாக இருக்கலாம்'.[342]

**போர்க் குற்றங்கள்**

சர்வதேச அளவில் அல்லாத ஆயுத மோதலின் போது நேரடி மோதலில் ஈடுபடாத பொதுமக்களையோ அல்லது தனிநபரான குடிமக்களையோ தாக்குதலுக்கான பொருளாக்குவது'[343] சர்வதேச மனிதாபிமான சட்டத்தைக்

எளிமைக்காக இறுதி வரைவில் இருந்து நீக்கப்பட்டது. https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v2_rul_rule6_sectionb. குற்றவழக்கை நடத்துபவர் v பாவ்லே ஸ்ட்ரூகர், வழக்கு எண் IT-01-42-T, தீர்ப்பு (TC), 31 ஜனவரி 2005, பாரா 282. மேலும் பார்க்கவும் Tadić , தீர்ப்பு, 7 மே 1997, பாரா 638. 1997 இல் டேடிக் வழக்கில் அதன் தீர்ப்பில் ICTY விசாரணை நீதிமன்றம் கூறியது, 'குறி வைக்கப்பட்ட மக்கள் [மனிதகுலத்திற்கு எதிரான குற்றம்] முக்கியமாகப் பொதுமக்கள் தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அவர்களது நடுவில் சில குடிமக்கள் அல்லாதவர்கள் இருப்பது மட்டுமே அந்த மக்கள்தொகையின் இயல்பை மாற்றாது.'

334 ICRC வழக்கு IHL தரவுத்தளம், விதி 1

335 எடுத்துக்காட்டாக, பொது விதி 3, 'இனிமேலும் போர்களில் தீவிரமாகப் பங்கேற்காத நபர்களைப் பாதுகாக்கிறது. இதில் ஆயுதங்களை ஒப்படைத்த ஆயுதப்படை உறுப்பினர்கள் மற்றும் நோய், காயங்கள், தடுப்புக்காவல் அல்லது பிற காரணங்களால் போரில் இருந்து விலகியவர்கள் அடங்குவர்'.

336 முதல், இரண்டாவது மற்றும் நான்காவது ஜெனீவா ஒப்பந்தங்கள், 1949; கூடுதல் நெறிமுறை 1 இன் 15 வது விதி. இந்த விதி ஜெனீவா ஒப்பந்தங்களின் பொதுப் பிரிவு 3 இல் மறைமுகமாக உள்ளது மற்றும் கூடுதல் நெறிமுறை II, கட்டுரை 9(1) இல் சேர்க்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் அல்லாத ஆயுத மோதலின் போது பொருந்தும் வழக்கமான சர்வதேச சட்டத்தின் நெறிமுறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ICRC, விதி 25ஐப் பார்க்கவும், https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule25#Fn_E202BFDC_00011

337 ICRC, Rule 9

338 Additional Protocol I, Art 57

339 AP I, Art 52(3); Art 57(2)

340 ibid

341 ICRC, விதி 14, https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule14/

342 ICRC, விதி 14, https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule14/

343 குடிமக்களுக்கு எதிரான தாக்குதல் வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்பதைத் தீர்மானிக்க, ICTY விசாரணைக் குழு பின்வரும் நிபந்தனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளித்தது: 'தாக்குதல் போக்கில் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் மற்றும் முறை, பாதிக்கப்பட்டவர்களின் நிலை,

கடுமையான முறையில் மீறுவது என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[344] அதுபோலவே, 'பொது மக்களுக்கு மரணம் அல்லது காயம் விளைவிக்கும் வகையில் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்துதல், அல்லது உடனடியாக அதிக அளவில் பொதுமக்களுக்கு இழப்பு, காயம் அல்லது சேதத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் தாக்குதல் நடத்துவது' மற்றும் 'பாதுகாக்கப் படாத பகுதிகளைத் தாக்கும் பொருளாக மாற்றுவது' ஆகியவை ஒரு NIAC இன் போது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.[345]

பின்வரும் செயல்களில் எந்த ஒன்றும் NIAC இன் சர்வதேச மனிதாபிமான சட்டத்தைக் கடுமையாக மீறுவதாகும்: 'உயிருக்கும் நபருக்கும் எதிரான வன்முறை, குறிப்பாக அனைத்து வகையான கொலைகள், உருக்குலைத்தல், கொடூரமாக நடத்துவது, சித்திரவதை'; தனிநபரின் கண்ணியத்தின் மீது தாக்குதல்; பணயக்கைதிகள் ஆக்குவது அல்லது தண்டனைகள் அளிப்பது, பொதுவாக இன்றியமையாததாக அங்கீகரிக்கப்படும் அனைத்து நீதித்துறை உத்தர-வாதங்களையும் வழங்கும் முறையான ஒரு நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்படாமல் மரண தண்டனை நிறைவேற்றுவது.'[346]

ஒரு மோதலில் ஒரு தரப்பினர் போர் விதிகளை மீறுவது என்பது எதிர் தரப்பின் மீறல்களை நியாயப்படுத்தாது.[347]

### மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பது தேசிய இனத்தைப் பொருட்படுத்தாமல் பொதுமக்களைக் குறிவைத்து பெரிய அளவிலான தாக்குதலின் பின்னணியில் செய்யப்படும் குறிப்பிட்ட குற்றங்களைக் குறிக்கிறது. இந்தக் குற்றங்களில் கொலை, சித்திரவதை, பாலியல் வன்முறை, அடிமைப்படுத்தல், துன்புறுத்தல் மற்றும் கட்டாயமாகக் காணாமல் போகச் செய்தல் ஆகியவை அடங்கும். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் பெரும்பாலும் அரசின் கொள்கைகளின் ஒரு பகுதியாக செய்யப்படுகின்றன, ஆனால் அவை அரசு அல்லாத ஆயுதக் குழுக்கள் அல்லது துணை இராணுவப் படைகளாலும் செய்யப்படலாம். மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் போலல்லாமல், போர் அல்லது சமாதான காலத்தில் செய்யப்படலாம், மேலும் அவை ஒரு குறிப்பிட்ட தேசிய, இனவியல், இன அல்லது மதக் குழுவிற்கு எதிராகச் செய்யப்பட வேண்டும் என்ற அவசியமில்லை.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் சூழ்நிலைக் கூறுகளுக்கு, எந்தவொரு பொதுமக்களுக்கும் எதிரான ஒரு பரவலான அல்லது முறையான தாக்குதலின் ஒரு பகுதியாக, குற்றவாளி (கள்) தாக்குதல் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.[348] 'எந்தவொரு பொது மக்களுக்கு எதிராகவும் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு' அத்தகைய தாக்குதலை மேற்கொள்ள ஓர் அரசு அல்லது அமைப்பு அளவிலான கொள்கையைத் தொடர அல்லது முன்னெடுத்துச் செல்ல எந்த ஒரு பொதுமக்களுக்கு எதிராகவும் செய்யப்படும் பல நடவடிக்கைகளின் ஒரு நடத்தைப்போக்கு என்று பொருள்.'[349] இந்த நடவடிக்கைகள் தாமே பரந்துபட்டதாகவோ அல்லது முறையானதாகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.[350]

### கொள்கை அல்லது அமைப்பு அளவிலான தேவை

வழக்குச் சட்டத்தின்படி ஒரு கொள்கை அல்லது திட்டத்தின்படி தாக்குதல் நடத்தப்பட்டது என்று காட்டவேண்டிய அவசியமில்லை என்று ICTY மற்றும் ICTR கூறுகின்றன.[351] எனினும், அந்தத் தாக்குதல் அரசின் அல்லது அமைப்பு அளவிலான கொள்கையைத்

---

அவர்களின் எண்ணிக்கை, பாரபட்சத் தாக்குதலின் தன்மை, அதன் போக்கில் நிகழ்த்தப்பட்ட குற்றங்களின் தன்மை, அந்த நேரத்தில் தாக்குதல் நடத்தியவர்களுக்கான எதிர்ப்பு மற்றும் போர்ச் சட்டங்களின் முன்னெச்சரிக்கை தேவைகளுக்கு இணங்க அல்லது இணங்க முயற்சித்ததாகக் கூறப்படும் அளவு '. ICTY, குற்ற வழக்கை நடத்துபவர் *v.* குனாராக், கோவாக் மற்றும் வுகோவிக், மேல்முறையீடுகள் தீர்ப்பு, IT-96-23-T மற்றும் IT-96-23/1-A, 12 ஜூன் 2001, பாரா 91.

[344] ICRC, விதி 156, https://ihl-databases.icrc.org/en/customary-ihl/v1/rule156. Moreover, under the Statute of the International Criminal Court 'மேலும், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றச் சட்டத்தின் கீழ், ' சர்வதேச ஆயுத மோதல்களின் போது பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்களை வேண்டுமென்றே நடத்துவது அல்லது மோதல்களில் நேரடியாகப் பங்கேற்காத தனிப்பட்ட குடிமக்களுக்கு எதிராக' தாக்குதல் தொடுப்பது போர்க்குற்றம் ஆகும். ICC சட்டப் பிரிவு 8(2)(b)(i), எடுத்துக்காட்டாக, ICC சட்டப் பிரிவு 8(2)(e)(ii) சர்வதேச ஆயுத மோதலின் போது, 'கட்டடங்கள், பொருள், மருத்துவ அலகுகள், சர்வதேச சட்டத்திற்கு இணங்க ஜெனீவா ஒப்பந்தங்களின் தனித்துவ சின்னங்கள் கொண்ட போக்குவரத்து மற்றும் பணியாளர்கள் மீது' குற்றவியல் நோக்கத்துடன் செய்யப்படும்தாக்குதல்கள் போர்க்குற்றமாகும்; கூடுதல் நெறிமுறை II, பிரிவுகள் 9 மற்றும் 11 ஐயும் பார்க்கவும்.

[345] மேற்படி

[346] நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளுக்குப் பொதுப் பிரிவு 3 சர்வதேச வழக்குச் சட்டமாக மாறியுள்ளது.

[347] ICRC விதி 140, ஜெனீவா மாநாட்டின் பொது பிரிவுகள் 1 மற்றும் 3 குறிப்பிடுகிறது.

[348] உரோம நியதி, பிரிவு 7 (1)

[349] உரோம நியதி, பிரிவு 7 (2)

[350] குற்றவழக்கை நடத்துபவர் *v.* டாடிக், மேல்முறையீட்டுத் தீர்ப்பு, IT-94-1-A, 15 ஜூலை 1999, n 311 முதல் பாரா 248 வரை, குற்றவழக்கை நடத்துபவர் *v.* மைல் மிர்க்சிக் மற்றும் பலர் மேற்கோள் காட்டி, விசாரணை நீதிமன்றம் I 'விதி 61 இன் படி குற்றப்பத்திரிகையின் மறுஆய்வு மற்றும் ஆதாரம்', IT-95-13-R61, 3 ஏப்ரல் 1996, பாரா 30: '[A] பொதுமக்களுக்கு எதிரான பரவலான அல்லது முறையான தாக்குதலுடன் தொடர்பு இருக்கும் வரை அது ஒரு செயலுக்கு எதிரான குற்றமாகத் தகுதி பெறலாம். எனவே, ஒரு நபர் ஒரு பாதிக்கப்பட்டவருக்கு எதிராக அல்லது குறைந்த எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக குற்றம் செய்தால், மேலே குறிப்பிட்டுள்ள குறிப்பிட்ட சூழலில் அவரது செயல்கள் ஒரு பகுதியாக இருந்தால், மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாக அது அங்கீகரிக்கப்படலாம்.'

[351] குனாராக் மற்றும் பலர், AJ ¶ 98; Blaškid, AJ ¶ 100; ஆனால் *கென்யா குடியரசின் நிலை*, வழக்கு எண் ICC -01/09- 01/1, குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்கான நடவடிக்கைகளின் இடத்தில்

தொடரவும் முன்னெடுத்துச் செல்லவும் நடத்தப் பட்டிருக்க வேண்டும் மேலும் ஒரு பொது மக்களுக்கு எதிரான அத்தகைய தாக்குதல் அந்த அரசு அல்லது அமைப்பால் தீவிரமாக ஊக்குவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ICC கூறுகிறது'.[352]

நிறுவனக் கொள்கைத் தேவைகளைக் கையாள்வதில் ICTY மற்றும் ICC ஆல் வெவ்வேறு அணுகுமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன, இது சர்வதேச வழக்குச் சட்டத்தின் கீழ் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு அரசு அல்லது நிறுவனக் கொள்கை ஒரு தேவை அல்ல என்பதை பிரதிபலிக்கிறது.

## நிகழ்வுகள்

### மன்னார் மாவட்டத்தில் தாக்குதல்கள் (வடக்கு)

2005 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2006 ஆம் ஆண்டிலும் கேணல் கருணாவின் 'ஆழ்ந்த ஊடுருவல் பிரிவுகளை' பயன்படுத்தி கிழக்கிலும், வடக்கிலும், குறிப்பாக மன்னார் மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சண்டைகளும் மோதல்களும் மீண்டும் தொடங்கின. தாக்குதல்கள் நடந்த போது, கோத்தபய ராஜபக்ச மன்னார் மாவட்டம் மற்றும் மடு தேவாலயத்தில் பாதுகாப்புப் படைகளைக் கட்டளையிடும் மற்றும் கட்டுப்படுத்தும் நிலையில் இருந்தார், தேசிய பாதுகாப்பு கவுன்சில் மற்றும் கூட்டு செயல்பாட்டு தலைமையகம் (JOH) ஆகியவற்றிற்குள் தனது பங்கு மற்றும் செயல்பாடுகளை வழங்கினார். மடு தேவாலயத்திற்கு பொறுப்பான பிஷப், பாதுகாப்புப் படையினரும் துணை இராணுவப் படையினரும் 'பாதுகாப்பு அமைச்சகத்தின் நேரடி அறிவுறுத்தலின் கீழ்' செயல்படுவதாகக் கூறினார். பிஷப் ராயப்பு ஜோசப், கோத்தபயவுக்கு கடிதம் மூலம் அறிக்கை அனுப்பியதோடு, '...ஒதுக்கீடு பகுதியில் இராணுவத் தாக்குதல்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்' என்று கூறுகிறார்.[353]

எனவே மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் கோவில்கள் போன்ற பாதுகாக்கப்பட்ட இடங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் குறித்து கோத்தபய ராஜபக்சவுக்கு அவரது கீழ்நிலை அதிகாரிகளால் முழுமையாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் அத்துமீறல்கள் நடைபெறப் போவதையும் அவர் அறிந்திருந்தார், மேலும் அவரது நிலையையும் அதிகாரத்தையும் பாதுகாப்புப் படைகள் மற்றும் துணை இராணுவப் படைகள் மீது அவருக்கு இருந்த கட்டுப்பாட்டையும் கருத்தில் கொண்டு, குறைந்தபட்சம் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் அல்லது ஆறு பொதுமக்கள் கொலை செய்யப்பட்டதை ஆயர் அவருக்கு அறிவித்தபின் விசாரணையைத் தொடங்கி, எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றங்களைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். யார் இதற்குப் பொறுப்பு என்பதைத் தீர்மானிக்காமல் விட்டுவிட்டார், அல்லது குற்றவாளிகளைத் தண்டிக்கவும் தவறிவிட்டார்.[354]

இந்தத் தாக்குதல்களில் 3 பொதுமக்கள் இறந்தனர், 16,000 பேர் இடம்பெயர்ந்தனர் மற்றும் பொதுமக்களுக்குக் கணிசமான அளவில் காயங்கள் ஏற்பட்டன. பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் (எ.கா. கிளேமோர் கண்ணிவெடிகள்), வான்வழி குண்டுவீச்சு, பீரங்கி எறிகணை தாக்குதல்கள் நடந்ததால் இந்தப் பாதிப்புகள் எதிர்பார்க்கக் கூடியவையே. அதனால் பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகளை வேறுபடுத்துவது சாத்தியமில்லை என்பதோடு வேறுபடுத்தும் கொள்கையை மீறாமல் இருப்பதும் சாத்தியமில்லை. மடு ஒரு புனித யாத்திரைத் தலமாகவும் சரணாலயமாகவும் புகழ்பெற்றது. எனவே அப்பகுதியில் பொதுமக்கள் திரளாக இருந்தனர். கிராமத்திற்கு அருகாமையில் இருந்ததால் பொதுமக்கள் அடிக்கடி வந்து செல்லும் இடமாகவும் விளங்கியது. தாக்குதல்கள் ஒரு குறிப்பிட்ட இராணுவ இலக்கைக் குறி வைக்கவில்லை. இந்தத் தாக்குதல்கள் கண்மூடித் தனமானவை மற்றும் அளவு கடந்தவை என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. இது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் ஆகும். மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் மோதலில் ஈடுபட்ட தரப்பினர் மீறல்களில் ஈடுபட்டதால் இதில் ஆயுதமேந்திய சர்வதேசம் அல்லாத மோதலுக்கான தெளிவான தொடர்பு உள்ளது.

முடிவாக, இந்தச் செயல்களில் போர்க் குற்றங்களுக்கான தனிநபர் பொறுப்பு அடங்கியுள்ளது.[355]

---

அவதானிப்புகளைக் கோரும் முடிவைப் பார்க்கவும், விசாரணைக்கு முந்திய நீதிமன்றம் II, 6 மார்ச், 2011 ; வில்லியம் சமோய் ருடோ மற்றும் பலர், வழக்கு எண் ICC -01/09-01/11, நீதிபதி ஹான்ஸ்-பீட்டர் கவுல் கருத்து வேறுபாடு விசாரணைக்கு முந்திய நீதிமன்றம் II இன் 'வில்லியம் சமோய் கி ருட்டோ, ஹென்ரிப்ரோவுக்கு ஆஜராக சம்மன்களுக்கான குற்ற வழக்கை நடத்துபவரின் விண்ணப்பத்தின் மீதான முடிவு மற்றும் ஜோசுவா அரப் சேங்', 15 மார்ச் 2011.

[352] உரோம நியதி, பிரிவு 7(2), ICC குற்றங்களின் கூறுகள் (n 85), பிரிவு 7 க்கு அறிமுகம்.

[353] 'மடு கிளேமோர் தாக்குதலில் காயமடைந்த பொதுமக்களில் ஒருவர் மரணமடைந்தார்', https://tamilnet.com/art.html?catid=13&artid=17964

[354] 'வெற்றியாளரில் இருந்து சமரசம் செய்பவராக இராணுவம் உருமாற்றம் அடைந்தது', தனேஷி யதவாரா, 8 செப் 2013, சண்டே அப்செர்வர் லங்கா http://archives.sundayobserver.lk/2013/09/08/sec03.asp
'பாதுகாப்புத் துறைச் செயலாளர் *கோத்தபாய ராஜபக்ச* போர் வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறார்' *,பிசினஸ் டுடே*, கோப்பில்.

[355] ICC சட்டத்தின் பிரிவு 8(2)(e)(i), ICTY, டேடிக் வழக்கு, வழக்கு எண் IT-94-1-AR72, அதிகார வரம்பின் மீது இடைநிலை

## மனிதாபிமான முகமையங்களின் அணுகல் மற்றும் நிவாரணம் மற்றும் உதவிசெய்யும் அமைப்புகள்

மனிதாபிமான செயல்களை ஆளுகை செய்யும் IHL விதிகளின் கீழ் மனிதாபிமான சேவைகளை அணுகுவது என்பது ஓர் ஆயுத மோதலின் விளைவாக உதவி மற்றும்/அல்லது பாதுகாப்பு தேவைப்படும் அனைவருக்கும் உயிரையும் பாதுகாப்பையும் பேணுவது அல்லது மன மற்றும் உடல் நலத்தை மீட்டெடுப்பது அல்லது பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டது ஆகும்.[356] அதன் விளைவாகப் பொதுமக்களுக்கு மட்டுமே அரசின் உதவி என மட்டுப்படுத்த முடியாது - காயம்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட போராளிகள், போர்க் கைதிகள், ஆயுத மோதல் தொடர்பாகத் தங்கள் சுதந்திரத்தை இழந்தவர்கள் மற்றும் ஆயுத மோதலால் பாதிக்கப்படக் கூடிய தனிநபர் ஆகியோருக்கு இந்த உதவியைப் பெறும் உரிமை உண்டு.

## கிளிநொச்சி - மனிதாபிமான உதவிகளைத் தடுப்பது

2008 செப்டம்பரில், கோத்தபய ராஜபக்சவின் எழுத்துப்பூர்வ அறிவிப்பின் பேரில், கிளிநொச்சியைச் சுற்றியுள்ள போர் மண்டலத்தில் இருந்து ஊழியர்களை வெளியேற்றுமாறு உதவி அமைப்புகளுக்கும் ஐ.நா.வுக்கும் உத்தரவிடப்பட்டது.[357] இதனை ராய்ட்டர்ஸும் பல உதவும் நிறுவனங்களும் உறுதி செய்தன. கோத்தபய ராஜபக்சவின் கையொப்பத்துடன் போர் மண்டலத்தை விட்டு வெளியேறுமாறு அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான பாதுகாப்பான மண்டலமாக அரசு, LTTE மற்றும் சர்வதேச சமூகத்தால் கிளிநொச்சி ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் பொதுமக்கள் அங்கு தங்கி இருக்கிறார்கள் என்பதை நன்கு அறிந்திருந்த போதிலும் 2008 ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடையில் கிளிநொச்சி மருத்துவமனை மற்றும் ஐ.நா. தளத்தின் மீது ('கிளிநொச்சி பெட்டியில்') எறிகணை வீச்சு மற்றும் குண்டுத் தாக்குதல்களுக்கு சிறிலங்கா இராணுவமே பொறுப்பு என்பதை இந்த அறிக்கையின் சான்றுகள் நிறுவுகின்றன. இந்தத் தாக்குதல்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.[358] நேரில் கண்ட சாட்சியங்களின்படி, கிளிநொச்சி மீதான தாக்குதலின் போது இலங்கை இராணுவத்தினரால் பல்குழல் எறிகணைப் பீரங்கிகள் (MBRLs) பயன்படுத்தப்பட்டன.[359] சாதாரண நிகழ்வுகளின் போது தொடர் வான்வழி குண்டுவீச்சும் எறிகணை தாக்குதல்களும், MRLB களைப் பயன்படுத்துவதும் (பெரும்பாலான நேர்வுகளில் துல்லியம் அற்றதும் வழிகாட்டுதல் இல்லாததுமான ஆயுதங்கள்) பரந்த அளவில் பொதுமக்களின் உயிர் இழப்புக்கும் பொருள் சேதங்களுக்கும் வழிகோலும் என்பதை இலங்கை இராணுவம் அறிந்திருந்தது.

பொதுமக்கள், மருத்துவப் பொருட்கள் உட்பட கிளிநொச்சி மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களால் ஏராளமான இறப்புகளும் பொதுமக்களுக்குக் காயங்களும், பொதுமக்களின் பொருட்களுக்கு அதிக அளவில் சேதமும் ஏற்பட்டன. டிஜிட்டல் வரைபடங்கள், வானில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள், UAV யினாலும் கண்காணிப்பு விமானத்தினால் எடுக்கப்பட்ட காட்சிகள் ஆகியவற்றில் இருந்து கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் இலக்கின் துல்லியம், இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல்கள் வேண்டுமென்றே நடத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது. ஓர் இலக்கைத் தாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கும் செயல்முறை விமானப்படைத் தளபதி வரை சென்றது; அவரது நடைமுறைக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தேசிய பாதுகாப்பு பேரவையால் மதிப்பாய்வு செய்யப்பட்டது; அவரது கூட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கினார் என்று கோத்தபய ராஜபக்ச உறுதிப்படுத்தினார்.[360] இந்தத் தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறுதல் ஆகும்; அதன்படி இத்தகைய தாக்குதல்கள் கண்டிப்புடன் தடைசெய்யப் பட்டுள்ளன; மேலும் அவை வேறுபடுத்தி அடையாளப் படுத்தும் மற்றும் விகிதாச்சாரக் கொள்கை மீறலாகும்.[361]

கிளிநொச்சியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள், மருத்துவமனை மற்றும் ஐ.நா. தளங்கள் மீதான தாக்குதல்கள் உட்பட கோத்தபய ராஜபக்சவின் கீழதிகாரிகளால் செய்யப்பட்ட குற்றங்கள் தொடர்பான உண்மைகள் யாவும் அவருக்கு முழுமையாக தெரிந்திருந்தது என்பதை இந்த அறிக்கையின் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. அவர் தனக்குக் கீழ் பணிபுரிபவர்களைத் தன் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். ஆனால் தனக்குக் கீழுள்ளவர்கள் செய்த மீறல்களை ஒப்புக்கொள்ளவோ அல்லது அவர்களைத் தண்டிக்கவோ செய்யாமல் கிளிநொச்சியைக் கைப்பற்றியதற்காக அவர்களைப் பாராட்டினார்.[362] கிளிநொச்சியில் நடத்தப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பு ஏற்காதது கோத்தபய ராஜபக்ச எதுவும் செய்யாமல் இருந்ததன் விளைவே ஆகும்.

---

மேல்முறையீட்டுக்கான பாதுகாப்பு முன்மொழிவின் மேல் முடிவெடுத்தல், மேல்முறையீட்டு நீதிமன்றம், 2 அக் 1995, §§ 100–118; ICRC, விதி 156, https://ihl-databases.icrc.org/en/customary-ihl/v1/rule156.

356 https://casebook.icrc.org/a_to_z/glossary/humanitarian-assistance

357 'வளைக்கப்பட்டனர், இடம்பெயர்ந்தனர் மற்றும் தடுக்கப்பட்டனர், சிறிலங்கா வன்னிப் பகுதி பொதுமக்களின் கதி', 23 டிச 2008, https://www.hrw.org/report/2008/12/23/besieged-displaced-and-detained/plight-civilians-sri-lankas-vanni-region

358 சார்லஸ் பெட்ரி அறிக்கை, இணைப்புகள், p14

359 மேற்படி

360 https://www.jurist.org/news/2010/08/sri-lanka-defense-minister-defends-government-conduct-during-civil-war/

361 https://casebook.icrc.org/a_to_z/glossary/distinction

362 https://www.jurist.org/news/2010/08/sri-lanka-defense-minister-defends-government-conduct-during-civil-war/

இந்த அறிக்கையில் காணப்படும் தகவல் மற்றும் சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, கோத்தபய ராஜபக்ச கட்டளையிடும் பொறுப்பின் கீழ் கடுமையான மீறல்களை இழைத்துள்ளார் என்பதற்கு நியாமான ஆதாரங்கள் உள்ளன; நிரூபிக்கப்பட்டால், அவருக்குக் கீழ் பணியாற்றியவர்கள் வேறுபடுத்தும், எச்சரிக்கும், விகிதாச்சார கொள்கைகளை மீறி இழைத்த குற்றங்கள் போர்க்குற்றங்கள் மட்டுமல்லாமல் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களும் ஆகும்; இவை அவருடைய குற்றவியல் பொறுப்பை ஈடுபடுத்துகின்றன.

**சித்திரவதைக்கு எதிரான தடை**

ஜெனீவா உடன்படிக்கைகள் எல்லா நேரங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் சித்திரவதையைக் கண்டிப்புடன் தடை செய்கிறது. சித்திரவதை பற்றிய வரையறையில், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், மோதல்களில் பங்கேற்காத அல்லது இனிமேலும் பங்கேற்கப் போகாதவர்களின் உயிர், ஆரோக்கியம், உடல் அல்லது மன நலத்துக்கு எதிராக வேண்டுமென்றே செய்யப்படும் வன்முறையையும் 'தனிப்பட்ட கண்ணியத்தின் மீதான தாக்குதல், குறிப்பாக அவமானகரமாகவும் இழிவாகவும் நடத்தப்படுதலையும்' உள்ளடக்கியுள்ளது.[363] GVC-V பொதுப் பிரிவு 3ன் கீழ் இதுபோன்ற செயல்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த வரையறை சித்திரவதையை அதன் அனைத்து வடிவங்களிலும், உடல் அல்லது உளவியல் உள்ளடக்கியது. சித்திரவதை செய்வது குற்றமாகும், தேவையான உள்நோக்கத்துடன் செய்யப்படுமானால், அது போர்க் குற்றமாகச் கருதப்படலாம் மற்றும் ICC யின் உரோம நியதி உட்பட, கலப்பின மற்றும் சர்வதேச நீதிமன்றங்களின் பல சட்டங்களில் வெளிப்படையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.[364] பல சர்வதேச நீதிமன்றங்களும் அமைப்புகளும் வன்புணர்வையும் பாலியல் வன் முறையையும் சித்திரவதையின் ஒரு வடிவமாக அங்கீகரித்துள்ளன.[365] சித்திரவதை என்னும் குற்றம் மனித குலத்திற்கு எதிரான குற்றம் என்று சர்வதேசச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[366]

சிறிலங்காவில் நடந்த போரின் போதும் அதன் பின்னரும் சித்திரவதைகள் செய்யப்பட்டன. கோத்தபய ராஜபக்சவின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் புனர்வாழ்வு முகாம்களிலும் சித்திரவதைகள் பரவலாக இருந்தன. LTTE யுடன் சரணடையும் தமிழர்களும் சித்திரவதை செய்யப்பட்டனர். தமிழ்ப் பொதுமக்கள் மீதான சித்திரவதைகள் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் தொடர்ந்தன. பாதுகாப்புப் படைகள் கோத்தபய ராஜபக்சவின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததன் அடிப்படையில், பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகளுக்கு அவர் மேல் குற்றப் பொறுப்பைச் சுமத்த நியாயமான காரணங்கள் உள்ளன. இந்தச் சூழ்நிலைகளில் சித்திரவதை செய்தது, நிரூபிக்கப்பட்டால் அவை போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகும்.

## வன்புணர்வு மற்றும் பிற வகையிலான பாலியல் வன்முறைகளைத் தடுத்தல்

சூழலைப் பொறுத்து **வன்புணர்வு மற்றும் பிற வகையிலான பாலியல் வன்முறைகள் போர்க்குற்றங்களாக**[367] அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகக் **கருதப்படும்**.[368] தனிப்பட்ட கண்ணியத்தின் மீதான தாக்குதல்கள் (போர்க்குற்றம் அல்லது மனித குலத்திற்கு எதிரான குற்றமாக) உட்பட,[369] உரோம நியதியின் கீழ் மற்ற குற்றங்களும், பிற மனிதாபிமானமற்ற செயல்களும் (மனித குலத்திற்கு எதிரான குற்றத்தைப் போல) போர்க்குற்றங்களாகக் கருதப்படும்.[370] ஓர் ஆயுத மோதலின் சூழலில் அல்லது அதனோடு தொடர்புடையதாக நிகழ்த்தப்படும் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை போர்க்குற்றம் ஆகும்,[371] இருந்தாலும் மோதல் நடந்த இடத்திலும் அதே நேரத்திலும்தான் நடந்தது என்று காட்ட வேண்டிய அவசியம் இல்லை[372] அவற்றிற்கு நெருக்கமான தொடர்புடையதாக இருந்தாலும், நேரடிக் குற்றவாளி ஆயுத மோதல் இருந்ததை நிறுவும் உண்மை சூழலை அறிந்திருந்தாலும் போதுமானது.[373]

---

[363] GIII பிரிவு17, API பிரிவு 75.2, APII பிரிவு. 4.2

[364] பிரிவு 8(2)(c)

[365] சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றங்கள், சித்திரவதைக்கு எதிரான குழு மற்றும் சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளர்கள் உட்பட பல சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை ஆகியவை சித்திரவதை வடிவங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எ.கா. குற்ற வழக்கை நடத்துபவர் v அகயேசு, ICTR-96-4-T, விசாரணை தீர்ப்பு, 2 செப் 1998; ICTY குற்ற வழக்கை நடத்துபவர் v குனாராக், எண் IT-96-23, விசாரணை தீர்ப்பு, 22 பிப்ரவரி 2001; சித்திரவதைக்கு எதிரான குழு, பொதுக் கருத்து எண் 2, அரசு தரப்புகள் (CAT/C/GC/2), 24 ஜனவரி 2008 மூலம் பிரிவு 2ஐ நடைமுறைப்படுத்துதல்.

[366] Kaing Giiek Eav alias Duch, ECCC, para 353.

[367] உரோம நியதி, பிரிவு 8(2)(e)(vi)

[368] உரோம நியதி, பிரிவு 7(1)(k) (பிற மனிதாபிமானமற்ற செயல்களின் மனித குலத்துக்கு எதிரான குற்றம்)

[369] உரோம நியதி, பிரிவு 8(2)(c)(ii)

[370] உரோம நியதி, பிரிவு 7(1)(k)

[371] பொதுவாக ICC ஐப் பார்க்கவும், குற்றக் கூறுகள் (2011), பிரிவு 8, ப 13 க்கு அறிமுகம் (குற்றங்களின் கூறுகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பைக் கொண்ட குற்றங்களின் விளக்கம் மற்றும் பயன்பாட்டிற்கு 'உதவியாக' வடிவமைக்கப்பட்டுள்ளன - பிரிவு 9, உரோம நியதி). குற்ற வழக்கை நடத்துபவர் *v* என்கௌண்டா (ICC -01/04-02/06 இல்லை), விசாரணை நீதிமன்றம் VI, தீர்ப்பு, 8 ஜூலை 2019, பாராக்கள் 698-704, 716-717 மற்றும் 726; ICTY, குற்ற வழக்கை நடத்துபவர் v டேடிக் (IT-94-1-A இல்லை), அதிகார வரம்பில் இடைநிலை மேல்முறையீட்டுக்கான தற்காப்பு இயக்கத்தின் மீதான முடிவு, 2 அக்டோபர் 1995, பாரா 70.

[372] குற்ற வழக்கை நடத்துபவர் *v என்கௌண்டா*, ICC-01/04-02/06, விசாரணைத் தீர்ப்பு, 8 ஜூலை 2019, பாரா 731.

[373] ICC குற்றங்களின் கூறுகள், பிரிவு 8, p13 க்கு அறிமுகம்

வன்புணர்வு உட்பட பாலியல் வன்முறை, வழக்கு மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான IHL[374] மற்றும் IHRL இன் கீழ் கண்டிப்புடன் தடைசெய்யப்பட்டுள்ளது.[375] பொது மக்களுக்கு எதிரான பரவலான அல்லது முறையான தாக்குதலின் ஒரு பகுதியாக நடத்தப்படும் வன்புணர்வு மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாக சர்வதேச சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல சர்வதேச நீதிமன்றங்களும் அமைப்புகளும் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறையை சித்திரவதையின் ஒரு வடிவமாக அங்கீகரித்துள்ளன.[376]

பாதுகாப்புப் படைகள் பாதிக்கப்பட்ட பலரை பாலியல் பலாத்காரம் செய்ததை[377] இந்த அறிக்கையில் உள்ள சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. (i) அவர்களின் ஆசனவாய்களில் ஆண்குறிகளை நுழைத்தனர் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் மற்றும் முட்கம்பி சுற்றப்பட்ட குழாய்கள் உள்ளிட்ட பொருள்களைச் செலுத்தினர்; (ii) பாதிக்கப்பட்டவர்களின் வாயில் ஆண்குறிகளை நுழைத்தனர். சர்வதேச சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் பிற வகையான பாலியல் வன்முறைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டனர், அதாவது கட்டாய நிர்வாணம் மற்றும் பிறப்புறுப்பு சிதைப்பு, ஆணுறுப்பில் மெல்லிய உலோக கம்பிகளை செருகுவது, பிறப்புறுப்புகளைக் குச்சிகளால் அடிப்பது மற்றும் பிறப்புறுப்புகளை எரிப்பது உட்பட பல.

இந்தச் செயல்கள் இராணுவத்தால் நடத்தப்பட்டன. சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் தன்னிச்சையாகப் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்புகள் அறுந்த நிலையில் இருந்தபோது அச்சுறுத்தி பலவந்தமாக இச்செயல்களை நடத்தினர். பாதுகாப்புப் படைகள் கெடுபிடியான சூழலைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டார்கள் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

ஆயுத மோதலின் போது போரின் இறுதி நாட்களில் குறிப்பாகத் தமிழ் பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் சரணடைந்த போதும் அதற்குப் பின்னரும் தனது கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட மீறல்கள் பற்றி கோத்தபய ராஜபக்ச முழுமையாக அறிந்திருந்தார். மேலும், இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் LTTE போராளிகள், அரசியல் எதிரிகள் மற்றும் LTTE யுடன் முன்னர் தொடர்பில் இருந்தவர்களுக்கும் நிகழ்த்தப்பட்ட கற்பழிப்பு மற்றும் பிற வகையான பாலியல் வன்முறைகளுக்கும் பாதுகாப்புச் செயலாளரான அவர் தலைமையிலான ஆயுதப் படைகளே காரணமாக இருந்தார்கள். IHL, HRL மற்றும் ICL ஐ மீறி மோதலுக்குப் பின்னரும் பாதுகாப்புப் படைகளால் வன்புணர்வும் பாலியல் வன்முறையும் அரங்கேற்றப்பட்டன.

கோத்தபய ராஜபக்சவின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டில் பாதுகாப்புப் படைகள் இருந்ததைக் கருத்தில் கொள்ளும்போது அவரது கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பாதுகாப்புப் படையினரால் செய்யப்பட்ட கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு அவரே பொறுப்பு என்பதற்கு

---

374 ஜெனீவா உடன்படிக்கையின் பொதுப் பிரிவு 3(1), 'மோதல்களில் பங்கேற்காதவர்கள் [...] எல்லா சூழ்நிலைகளிலும் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவார்கள், அதாவது 'உயிர் மற்றும் நபர் மீதான வன்முறை' மற்றும் தனிப்பட்ட கண்ணியத்தின் மீதான தாக்குதல், குறிப்பாக அவமானகரமான மற்றும் இழிவான நடத்தைக்கு உட்படுத்தக் கூடாது. இது வன்புணர்வு மற்றும் பிற வகையான பாலியல் வன்முறைகளை உள்ளடக்கியதாகப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஜெனீவா கன்வென்ஷன் III (2020)க்கு ICRC விளக்கத்தைப் பார்க்கவும், பராக்கள் 732-743; ஜெனீவா உடன்படிக்கைகளுக்கான கூடுதல் நெறிமுறை II, பிரிவு 4(2)(e), இதில் 'வன்புணர்வு, கட்டாயப்படுத்தப்பட்ட விபச்சாரம் மற்றும் வேறு ஏதேனும் அநாகரிகமான தாக்குதல்' ஆகியவை அடங்கும். ICTR சட்டம் (1994), பிரிவு 4(e); SCSL சட்டம் (2002), பிரிவு 3(e); குற்றவழக்கை நடத்துபவர் *v* குனாராக் மற்றும் பலர், IT -96-23 & IT -96-23/1- A, மேல்முறையீட்டுத் தீர்ப்பு, 12 ஜூன் 2002, பாரா 150: 'பாலியல் வன்முறையானது உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ கடுமையான வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்துகிறது. மற்றும் இந்த வழியில் ஒரு சித்திரவதை செயலாக அதன் இயல்பை நியாயப்படுத்துகிறது. மேலும் பார்க்கவும் குற்றவழக்கை நடத்துபவர் v பிரிலிக் மற்றும் பலர், IT-04-74-T, விசாரணை தீர்ப்பு, 29 மே 2013, பாரா 116; குற்றவழக்கை நடத்துபவர் v ஃபருண்டிசியா, IT-95-17/1-T, விசாரணை தீர்ப்பு, 10 டிசம்பர் 1998, பாரா 272; குற்றவழக்கை நடத்துபவர் v பாகோசோரா மற்றும் பலர், ICTR-98-41-T, தீர்ப்பு மற்றும் தண்டனை, 18 டிசம்பர் 2008, பாரா 2254.

375 ECtHR, M C v பல்கேரியா, விண்ணப்ப எண் 39272/98, தீர்ப்பு, 4 டிசம்பர் 2003, பாராக்கள் 148-166; ECtHR, ஆய்டின் v துருக்கி, விண்ணப்ப எண். 23178/94, தீர்ப்பு, 25 செப்டம்பர் 1997, பாராக்கள் 82-86; இண்டர்-அமெரிக்கன் கமிஷன் ஆன் ஹியூமன் ரைட்ஸ், வழக்கு 10.970 (பெரு), அறிக்கை, 1996, ப185; சித்திரவதைக்கு எதிரான UN குழு, T A v ஸ்வீடன், CAT/C/34/D/226/2003, 27 மே 2005, பாராக்கள் 2.4 மற்றும் 7.3; பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அகற்றுவதற்கான குழு, 'பெண்களுக்கு எதிரான பாலின அடிப்படையிலான வன்முறை குறித்த பொதுப் பரிந்துரை எண் 35, பொதுப் பரிந்துரை எண். 19 ஐப் புதுப்பித்தல், 26 ஜூ 2017, பாராக்கள் 10-20.

376 சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள், சித்திரவதைக்கு எதிரான குழு மற்றும் சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளர்கள் உள்ளிட்ட பல சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளால் கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறை ஆகியவை சித்திரவதை வடிவங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.. எ.கா. குற்றவழக்கைத் தொடர்ந்தவர் V. அகயேசு, ICTR-96-4-T, விசாரணை தீர்ப்பு, 2 செப் 1998; ICTY குற்றவழக்கைத் தொடர்ந்தவர் V. குனாராக், எண் IT-96-23, விசாரணை தீர்ப்பு, 22 பிப்ரவரி 2001; சித்திரவதைக்கு எதிரான குழு, பொதுக் கருத்து எண் 2, அரசு தரப்பினர் (CAT/C/GC/2), 24 ஜனவரி 2008 மூலம் பிரிவு 2ஐ நடைமுறைப்படுத்துதல்.

377 வன்புணர்வு என்ற குற்றச் செயல் (ஒரு போர்க் குற்றம் அல்லது மனித குலத்திற்கு எதிரான குற்றமாக) என்பது, 'குற்றவாளி ஒருவரின் உடலை ஆக்கிரமித்து, பாதிக்கப்பட்டவரின் உடலின் எந்தப் பகுதியிலும், அது எந்த அளவுக்குச் சிறியதாக இருந்தாலும், பால்வினை உறுப்பை நுழைத்தல் அல்லது பாதிக்கப்பட்டவரின் குதம் அல்லது பிறப்புறுப்பில் ஏதேனும் பொருள் அல்லது உடலின் வேறு எந்தப் பகுதியையும் நுழைத்தல்; மற்றும், இந்த ஊடுருவல் வன்முறை, வற்புறுத்தல், காவலில் வைத்தல், உளவியல் ஒடுக்குமுறை அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றால் அந்த நபருக்கு அல்லது மற்றொரு நபருக்கு எதிராக அல்லது அதை ஒரு சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஊடுருவுதல் அல்லது பலாத்காரம் அல்லது வற்புறுத்தி அச்சுறுத்தல் மூலம் செய்தல் அல்லது உண்மையில் சம்மதம் கொடுக்க இயலாத ஒரு நபருக்கு எதிராகச் செய்தல்.'

நியாயமான காரணங்கள் உள்ளன. அவர்கள் செய்த மீறல்கள் பற்றி அவர் அறிந்திருந்த போதும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்களை அவற்றிற்குப் பொறுப்பாக்கமல் இருந்ததற்கும் அவர் பொறுப்பேற்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில் வன்புணர்வும் பாலியல் வன்முறையும் போர்க்குற்றங்கள் மட்டுமல்லாமல் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகும். இதில் அவரது குற்றப் பொறுப்பு சம்பந்தப்பட்டுள்ளது.

### மோதல் தடை வலயங்கள்

மனிதாபிமானச் சட்டம் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு சிறப்புப் பாதுகாப்பை வழங்கும் பகுதிகள் அல்லது மண்டலங்களை வரையறுக்க பல்வேறு முறைகளை வரையறுக்கிறது மேலும் எந்தச் சண்டையும் அதில் நடைபெறக் கூடாது.[378] இந்த மண்டலங்கள் மோதலின் போது பொதுமக்கள், காயமடைந்தவர்கள் மற்றும் நோயுற்றவர்களுக்கு அடைக்கலம் அளிக்கும் நோக்கம் கொண்டவை. மருத்துவமனை மற்றும் பாதுகாப்பு மண்டலங்கள் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து தவிர்க்கப்பட வேண்டும், அதே நேரத்தில் நடுநிலைப்படுத்தப்பட்ட மண்டலங்கள் பொதுவாக இராணுவ நடவடிக்கைகள் நடைபெறும் பகுதிகளில் நிறுவப்படுகின்றன.[379] மரபான IHL பற்றிய அதன் ஆய்வில் ICRC யால் வரையறுக்கப்பட்டபடி பொதுமக்கள், மோதலின் விளைவால் காயம்பட்டோர் மற்றும் நோய்வாய்ப்பட்டோருக்கு அடைக்கலம் அளிப்பதற்காக உருவாக்கப்படும் ஒரு மண்டலத்தின் மீது ஒரு தாக்குதலைத் தொடுப்பது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்படுகிறது மேலும் அப்படிச் செய்வது சர்வதேசம் அல்லாத ஆய்த மோதலுக்குப் பொருந்தும் சர்வதேச வழக்குச் சட்டத்தின் விதிகளை மீறுவதாகும்.[380]

### தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தத் தடை

சர்வதேசம் அல்லாத ஆயுத மோதலின் போது சில தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்துவது ICC சட்டத்தின் கீழ் ஒரு போர்க் குற்றமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் விஷம் அல்லது விஷம் கலந்த ஆயுதங்கள், மூச்சுத்திணறல் ஏற்படுத்தக்கூடியவை, விஷ வாயுக்கள் அல்லது பிற வாயுக்கள் மற்றும் அனைத்து செயலொத்த திரவங்கள், பொருட்கள் அல்லது சாதனங்கள், விரிவடையும் அல்லது மனித உடலில் எளிதாகத் தட்டையாகும் தோட்டாக்கள் ஆகியவை அடங்கும். இந்தத் தோட்டாக்களுக்குக் கட்டியான உறை இருக்கும். அவை மையப் பகுதியை முழுமையாக மூடாது அல்லது அதில் துளைகள் போடப்பட்டிருக்கும்.[381]

### போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போர் தடை மண்டலங்களில் செய்யப்பட்டுள்ளன

21 ஜனவரி 2009 அன்று, சிறிலங்கா அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக NFZ-1, முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டுச் சந்திப்பு மற்றும் மஞ்சள் பாலம் இடையில் A35 வீதிக்கு வடக்கே பொதுமக்களுக்கான 35km² சுற்றளவுக்கான போர்த்தடை மண்டலமாகப் பிரகடனப்படுத்தியது.[382] NFZ-1, SLA முன்னேறும் பிரதான அச்சில், கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி (PTK என அறியப்படுவது) A35 நெடுஞ்சாலையில் நேரடியாக அமைந்திருந்தது.[383] இரண்டாவது NFZ ('NFZ-2') 12 பிப்ரவரி 2009 அன்று அறிவிக்கப்பட்டது, லண்டனின் ஹைட் பார்க் அளவுள்ள சுமார் 14கிமீ² பரப்பளவில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதை ஊக்குவிக்கும் துண்டுப் பிரசுரங்களை அரசாங்கம் விநியோகித்தது.[384] NFZ-2 இல் சுமார் 330,000 மக்கள், முக்கியமாக பொதுமக்கள் கூடியிருந்தனர்.

8 மே 2009 அன்று சிறிலங்கா இராணுவம் ஒருதலைப்பட்சமாக மூன்றாவது NFZ ஐ அறிவித்தது, இது 2km² க்கும் குறைவாக இருந்தது.[385] NFZ-3 நிறுவப்பட்டபோது, இடம்பெயர்ந்த குடிமக்களுக்கான இடம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது, மக்கள் சடலங்களின் மேல் தூங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.[386] 2009 பெப்ரவரி தொடக்கத்தில் இருந்து மே 2009 யுத்தம் முடிவடையும் வரை, சிறிலங்கா இராணுவம் வேறுபடுத்தல் மற்றும் விகிதாச்சார IHL கொள்கைகளை முற்றிலுமாக மீறும் வகையில், பொதுமக்கள் மற்றும் மருத்துவமனைகள் மற்றும் தேவாலயம் போன்ற பொதுமக்களை இலக்கு வைத்து தொடர்ச்சியான பீரங்கி தாக்குதல்கள் உட்பட தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தியது.[387] 2009 மே

[378] https://guide-humanitarian-law.org/content/article/3/protected-areas-and-zones/

[379] ICRC, விதி 35, https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule35

[380] மேற்படி

[381] பிரிவு 8(2)(e)

[382] சிறிலங்கா இராணுவம், 'வன்னி பொதுமக்களுக்கான புதிய பாதுகாப்பு மண்டலத்தைப் பிரகடனம் செய்கிறது', 21 ஜனவரி 2009, http://www.army.lk/morenews.php?id=19769, HRW இல் மேற்கோள் காட்டப்பட்டது, 'இடம்பெயர்ந்த சிறிலங்கா இராணுவத்தின் மீதான போர் மற்றும் வன்னியில் பொதுமக்களுக்கு எதிரான LTTE யின் அத்துமீறல்கள்' (2009), https://www.hrw.org/report/2009/02/19/war-displaced/sri-lankan-army-and-ltte-abuses-against-civilians-vanni#page

[383] மேற்படி

[384] பாரா 874, OISL

[385] பாரா. 873, OISL

[386] W288

[387] இந்த அறிக்கையின் ப18 இல் பொக்கனையில் உணவு விநியோக நிலையங்களுக்கு எதிரான இரண்டு தாக்குதல்களை விவரிக்கும் ஆதாரங்களைக் காண்க; புதுமாத்தளன் மருத்துவமனைக்கு எதிரான தாக்குதலை விவரிக்கும் ஆதாரங்கள், இந்த அறிக்கையின் ப 26-28; வலையன்மடத்தில் உள்ள தேவாலயம் மற்றும் மருத்துவமனை மீது தாக்குதல், ப 37-39; முள்ளிவாய்க்காலில் மருத்துவமனை மீதான தாக்குதல், இந்த அறிக்கையின் ப43.

8-12 க்கு இடையில் NFZ-3 'SLA பீரங்கிகள், விமானப்படை மற்றும் கடற்படையின் தீவிர தினசரி குண்டுவீச்சுக்கு' உட்பட்டதாக ஐ.நா. அறிவித்தது.[388] PTK, வள்ளிபுனம் மற்றும் உடையார்கட்டு, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட மருத்துவமனைகள் மீது எறிகணை மற்றும் குண்டுகள் வீசப்பட்டன.[389]

புதுமாத்தளன், மருத்துவமனை மீதான தாக்குதல்கள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய பொதுமக்களின் பொருட்களுக்கு எதிராக இலங்கை இராணுவம் மேற்கொண்ட அத்துமீறல்களின் அடையாளமாக கருதப்படுகிறது. 8 பெப்ரவரி 2009 மற்றும் ஏப்ரல் 2009 இன் பிற்பகுதிக்கு இடையில் மருத்துவமனை மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டது,[390] ஏப்ரல் 2009 தொடக்கத்தில் இருந்து புத்தமத்தளனைக் கைப்பற்றும் நடவடிக்கையில் 58 வது பிரிவு ஈடுபட்டிருந்தது.[391] இலங்கை இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் கடுமையான குண்டுவீச்சு NFZ-3 ஐ உள்ளடக்கியது. கூட்டு வெடிமருந்துகளில் வெள்ளை பாஸ்பரஸ் மற்றும் மோர்டார்ஸ் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக அதிக பொதுமக்கள் உயிரிழந்தனர் மற்றும் துன்பத்துக்கு உள்ளாயினர். தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதல் ஐ.நா.வின் செயற்கைக்கோள் படங்களின்[392] மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் ITJP ஆல் பெறப்பட்ட சாட்சியத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.[393]

பாதுகாப்புப் படைகளின் இடைவிடாத எரிகுண்டு வீச்சால் அனைத்து மருத்துவமனைகளும் பெரும் சேதம் அடைந்தன. அவற்றால் உயிர்காக்கும் சிகிச்சைகளை சரியான முறையில் செய்யமுடியாமல் போனது. இதனால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மிகுந்த துன்பத்துக்கு உள்ளாயினர். அவர்களது உடலுக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. அவர்களது உடல் மற்றும் மன நலம் பாதிக்கப்பட்டது.[394] காயம்பட்டு நோய்வாய்ப்பட்ட பொதுமக்கள் மற்றும் முந்தைய மருத்துவமனை தாக்குதலில் தப்பிப்பிழைத்தவர்கள் உட்பட போரில் இருந்து விலகிய நபர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று அறிந்திருந்த போதிலும் இடைவிடாத எரிகுண்டு வீச்சுகள் நடத்தப்பட்டன. பாதிக்கப்பட்டவர்கள் அடைந்த துன்பம் பிரிவு 7இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பிற செயல்களோடு ஒப்பிடத்தக்க கடுமையான இயல்பைக் கொண்டவைகளாக இருந்தன. அவை பின்வருமாறு: கொலை; மக்கள்தொகையை பலவந்தமாக இடம்பெயரச் செய்தல்; சிறைப்படுத்தல் மற்றும் அதுபோன்ற உடல் ரீதியான சித்திரவதை; வன்புணர்வு மற்றும் பிற வடிவிலான பாலியல் வன்முறை; பலவந்தமாகக் காணமல் போகச் செய்தல், துன்புறுத்தல், அழித்தல், மற்றும் வேண்டும் என்றே அதிகத் துன்பத்தை அளிக்கும் மனிதாபிமானமற்ற நடத்தை, அல்லது உடலுக்கும் மன அல்லது உடல் ஆரோக்கியத்துக்குக் கடுமையான தீங்கை ஏற்படுத்தல். இந்தத் தாக்குதல்கள் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட திட்டமிட்ட தாக்குதலின் ஒரு பகுதியாகும். குறிவைக்கப்பட்ட எந்த சேவை அமைப்புகளும் ஓர் இராணுவத் தாக்குதலுக்கான சட்டபூர்வமான இலக்குகள் அல்ல. ICRC அறிக்கைகள் மற்றும் சாட்சிகள் கூறியவற்றை வைத்துப் பார்க்கும்போது அவர்கள் குறி வைத்து தாக்கிய நேரத்தில் மருத்துவ நோக்கங்களுக்காக இந்த அமைப்புகள் பயன்படுத்தப்பட்டன என்பதையும், குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான காயமடைந்த பொதுமக்கள் அங்கு சிகிச்சை பெற்று வந்ததையும் உறுதிப்படுத்துகின்றன. LTTE யினர் பாதுகாப்புப் படையினர் மீது அந்த சேவை அமைப்புகளுக்கு உள்ளிருந்தோ அல்லது அவற்றிற்கு அருகில் இருந்தோ துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவோ அல்லது அப்பகுதியில் வேறு இராணுவ நோக்கங்கள் இருந்ததாகவோ எந்த ஆதாரமும் இல்லை.

அத்துமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை அரசாங்கம் மறுத்ததோடு, அப்பகுதியில் LTTE யின் இராணுவம் இருந்ததால் 'பொதுமக்களை மீட்பதற்கான' அவசியத்தைக் கருத்தில் கொண்டு, NFZ மீதான தாக்குதல்கள் சட்டபூர்வமானவை என்று கூறியது, ஏனெனில், LTTE யினர் அதிக மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் இராணுவ ரீதியான இலக்குகளை அமைத்ததன் மூலம் சர்வதேச மனிதாபிமான சட்டங்களைக் கடுமையாக மீறி, பொதுமக்களைக் 'கேடயங்களாக' பயன்படுத்தியுள்ளனர்.[395] ICTY யின் சட்டவியலின்படி, 'பொதுமக்கள் என்ற வரையறைக்குள் வராத தனிநபர்கள் பொது மக்கள்தொகைக்குள் இருப்பது, பொதுமக்கள் என்ற வரையறை தன் இயல்பை இழக்காது'.[396]

---

388 பாரா 878, OISL

389 இந்த அறிக்கையின் ப18 இல் பொக்கனையில் உணவு விநியோக நிலையங்களுக்கு எதிரான இரண்டு தாக்குதல்களை விவரிக்கும் ஆதாரங்களைக் காண்க; புதுமாத்தளன்மருத்துவமனைக்கு எதிரான தாக்குதலை விவரிக்கும் ஆதாரங்கள், இந்த அறிக்கையின் ப 26-28; வலையன்மடத்தில் உள்ள தேவாலயம் மற்றும் மருத்துவமனை மீது தாக்குதல், ப 37-39; முள்ளிவாய்க்காலில் மருத்துவமனை மீதான தாக்குதல், இந்த அறிக்கையின் ப43.

390 இணைப்பு 3; W59

391 இணைப்பு 2

392 இந்த அறிக்கையின் பக்கம் 42

393 எ.கா. இந்த அறிக்கையின் W280, W288, W292, W289, W60 ப 42-44.

394 OISL, பாராக்கள் 1145-1160

395 மேற்படி

396 கூடுதல் நெறிமுறை II இன் வரைவில் இதே போன்ற விதி ஒருமித்த கருத்துடன் சேர்க்கப்பட்டது, ஆனால் இறுதியில் எளிமைக்காக இறுதி வரைவில் இருந்து நீக்கப்பட்டது. https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v2_rul_rule6_sectionb. குற்ற வழக்கை நடத்துபவர் v பாவ்லே ஸ்ட்ருகர், வழக்கு எண் IT-01-42-T, தீர்ப்பு (TC), 31 ஜனவரி 2005, பாரா 282. மேலும் டாடிக், தீர்ப்பு, 7 மே 1997, பாரா 638 ஐப் பார்க்கவும், அங்கு ICTY விசாரணை நீதிமன்றம் கூறியது 'அது தெளிவாக உள்ளது [மனிதகுலத்திற்கு எதிரான குற்றத்தின்] இலக்கு மக்கள்தொகையானது முக்கியமாக பொதுமக்கள் இயல்புடையதாக இருக்க வேண்டும். அவர்கள் நடுவில் சில குடிமக்கள் அல்லாதவர்கள் இருப்பது மக்கள்தொகையின் தன்மையை மாற்றாது. '

இந்த அறிக்கையின் சான்றாதாரங்களின் அடிப்படையில், இடம்பெயர்ந்த மக்களை NFZ களில் கூடுமாறு அரசு வேண்டுமென்றே கட்டளையிட்டது மட்டுமல்லாமல், வரவிருக்கும் தாக்குதல்கள் குறித்து அவர்களை எச்சரிக்கத் தவறியது மற்றும் சில சூழல்களில் சிறிலங்கா இராணுவம் பொதுமக்களை வேண்டுமென்றே தவறாக வழிநடத்தியது என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. பொக்கணை மீதான இறுதிக் கட்டப் போரின் ஒரு கட்டத்தில், இரண்டு நாட்களுக்கு எறிகணைத் தாக்குதல் நடத்தப்படாது என சிறிலங்கா இராணுவம் ஒலிபெருக்கியில் அறிவித்ததையடுத்து, மக்கள் தங்குமிடங்களை விட்டு வெளியேறியதாக சாட்சி ஒன்று கூறியுள்ளது. அறிவிப்பு அவ்வாறு இருந்தபோதிலும், அதே நபர் ஒரு எறிகணை மக்கள் மீது விழுந்ததையும் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதையும் கண்டார்.[397] சிறிலங்கா இராணுவம் NFZ களைத் தாக்கத் திட்டமிட்ட அதே வேளையில், இடம்பெயர்ந்த பொதுமக்களை, 'பாதுகாப்பான மண்டலங்கள்' என்று அழைக்கப் படுபவைகளில் குண்டுகளை வீசுவதற்கு அவர்கள் உத்தேசித்திருப்பதாக எச்சரித்திருக்க வேண்டும். அப்படி ஒரு எச்சரிக்கை விடுக்கப்பட்டதற்கான எந்த அறிகுறியும் இல்லை.[398]

கொத்துக் குண்டுகள் மற்றும் வெள்ளை பாஸ்பரஸ் ஆகியவற்றை இலங்கை பாதுகாப்புப் படையினர் பயன்படுத்துவது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தைக் கடுமையாக மீறுவது மட்டுமன்றி, திரளாக மக்கள் வாழும் பகுதிக்குள் இந்த வகையான ஆயுதங்கள் மற்றும் RPG களைப் பயன்படுத்தியது வேறுபடுத்தல், முன்னெச்சரிக்கை மற்றும் விகிதாசார கொள்கைகளை சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் மீறியதற்கு தெளிவான சாட்சியங்கள் ஆகும்.

போர்த்தடை மண்டலங்களில் சிதறிக்கிடந்த 330,000 க்கும் மேலான பொதுமக்களைக் குறிவைத்தே சிறிலங்கா இராணுவம் போர்த்தடை மண்டலங்களின் மீது தாக்கியது என்பதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் இந்த அறிக்கையில் உள்ளன. இது மிகப்பரந்த திட்டமிட்ட தாக்குதலே. மேலும், அரசுக்குப் புலனாய்வும் கண்காணிப்பு அணுகலும் இருந்ததால் அதன் மூலம் ஏராளமான பொதுமக்கள் இருப்பதை அறிந்தும், அவர்கள் இருக்கும் இடம் துல்லியமாகத் தெரிந்திருந்தும் இந்தப் பகுதியில் இருப்பவர்கள் பொதுமக்களே என்றும் தெரிந்தும் போர்த்தடை மண்டலங்களில் 330,000 மேற்பட்ட பொதுமக்கள் இருப்பதை சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் அறிந்தே வேறுபடுத்தல் மற்றும் விகிதாச்சார கொள்கைகளை முற்றிலும் மீறி, பொக்கணை, புதுமாத்தளன், வலையன்மடம் ஆகிய இடங்களிலும் மோதலின் இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்காலிலும் சிறிலங்கா இராணுவத்தால் எறிகணை, குண்டுகள், கொத்து குண்டுகள், வெள்ளை பாஸ்பரஸ் மற்றும் மோர்ட்டார்களைப் பயன்படுத்தி தொடர் தாக்குதல் நடத்தப்பட்டது.[399]

தேசிய பாதுகாப்புப் பேரவையிலும் JOH லும் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பொதுமக்களின் மீது தாக்குதல் நடத்தும் அரசின் கொள்கைக்கு ஏற்பவே வன்னிப் பகுதியில் இராணுவத்தினால் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதலின் திட்டமிட்ட தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணிசமான ஆதாரங்கள், ஆயுதங்கள் மற்றும் ஈடுபட்ட இராணுவப் பிரிவுகள் அனைத்தும் இப்படிப்பட்ட ஒரு திட்டம் அல்லது கொள்கை இருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் பொதுமக்கள் பேரளவில் உயிரிழந்தனர் ('ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்' இறந்ததை ஒரு சாட்சி நினைவு கூர்ந்தார்),[400] மற்றும் மருத்துவமனை போன்ற பொதுமக்கள் இருந்த இடங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. மேலும், இராணுவ இலக்கில் இல்லாத மருத்துவமனைகள் மீது குறிவைத்து தாக்கியது, பிரிவு 8 (2) (e) (iv) உரோம நியதியின் கீழ் பாதுகாக்கப்பட்ட இலக்குகளைத் தாக்கும் போர்க்குற்றம் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

இந்தத் தாக்குதல்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றம் மற்றும் உரோம நியதி 7(1)(k) பிரிவின் கீழ் 'பிற மனிதாபிமானமற்ற செயல்கள்' என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.[401]

கொத்து வெடிகுண்டுகள் மற்றும் வெள்ளை பாஸ்பரஸைப் பயன்படுத்துவது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல் மட்டுமல்லாமல், வேறுபடுத்தல் மற்றும் விகிதாச்சாரக் கொள்கைகளை மீறுகிறது.

கனரக ஆயுதங்களை மக்கள் திரளாக உள்ள பகுதியான போர்த்தடை மண்டலங்களில் பயன்படுத்தும்போது ஏராளமான பொதுமக்கள் இறப்பார்கள் அல்லது காயமடைவார்கள் என்பதை கோத்தபயவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த SLA தளபதிகள் அறிந்தே இருந்தனர். பொதுமக்கள் மீதும் பாதுகாக்கப்பட்ட மருத்துவமனைகள் போன்ற இலக்குகளின் மீதும் தன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பாதுகாப்புப் படைகள் தாக்கும்போது ஏற்படும் சேதாரங்களை கோத்தபய ராஜபக்ச அறிந்திருந்ததோடு அதைத் தடுக்கவுமில்லை

---

397 W247, இந்த அறிக்கையின் ப 19-20

398 https://ihl-databases.icrc.org/en/customary-ihl/v1/rule15

399 UAV அணுகல் மற்றும் கண்காணிப்பு காட்சிகள் மற்றும் மதகுருமார்கள், UN, ICRC, மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிறரால் அனுப்பப்பட்ட தகவல் தொடர்பு.

400 W158, இந்த அறிக்கையின் பக்கம் 44

401 EoC, ப12

பாதுகாப்புப் படைகளை அதற்குப் பொறுப்பாக்கவும் இல்லை. போர்த்தடை மண்டலங்களில் பொதுமக்கள் இறந்ததை அவர் ஒப்புக்கொள்கிறார். இருப்பினும் போர்த்தடை மண்டலங்களில் பாதுகாப்புப் பகுதிகளையும் சுடுவது தடைசெய்யப்பட்ட மண்டலங்களையும் உருவாக்கி பொதுமக்களைப் பாதுகாக்கும் எந்த முயற்சியையும் அரசு எடுத்ததாக அறிக்கைகளில் அவர் கூறவும் இல்லை.

போர் தடை மண்டலங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுவதும், போர்க்குற்றங்களும் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுமாகும் என நிரூபிக்கப்பட்டால், கோத்தபய ராஜபக்ச தனிப்பட்ட குற்றப் பொறுப்பை ஏற்கவேண்டி இருக்கும்.

**உயிர்வாழ்க்கைக்கான பொருட்களைக் கிடைக்கவிடாமல் செய்தல்**

போரின்போது பொதுமக்களைப் வேண்டுமென்றே பட்டினிக்குள்ளாக்க தடைகள் செய்யப்பட்டது தெளிவாகத் தெரிகிறது. பொதுமக்களைப் பட்டினிக்கு உள்ளாக்க நேரடியாகத் தடைகள் ஏற்படுத்தியது போரின் ஒரு முறையாக இருந்தது'[402] பொதுமக்களின் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களைக் கிடைக்கவிடாமல் செய்வதற்காகத் தாக்குதல், அழித்தல், அகற்றுதல் அல்லது பயனற்றதாகச் செய்யப்பட்டது': உணவுப்பொருட்கள், உணவு உற்பத்தி செய்யும் விவசாய நிலங்கள், பயிர்கள், கால்நடைகள், குடிநீர் வசதி, நீர்ப்பசனம் போன்றவை. இவை அனைத்தும் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பொதுமக்களுக்கான பொருட்கள்.[403] நேரடியாக பட்டினியில் வாடும் பொதுமக்களுக்கு எதிரான தடையைப் பொறுத்த வரையில், குறைந்தபட்சம் 1990 இல் இருந்து அதைத் தீர்மானிக்க போதுமான சான்றாதாரங்கள் இருந்ததாக ICRC கூறியது, IAC மற்றும் NIAC களில் ஒரு மோதலில் அனைத்துத் தரப்புகளும் சட்டத்தின்படி மனிதாபிமான உதவிகள் செல்வதை அனுமதிக்கும் கடப்பாடு உடையவர்கள்..[404]

வன்னியில் தேவையில் இருந்தவர்களுக்கு மருத்துவ உதவிகள் சென்றடையும் வகையில் மனிதாபிமான உதவி அமைப்புகளுக்கும் மனிதாபிமான முகமையங்களுக்கும் வேண்டுமென்றே பாதுகாப்புத் துறைச் செயலாளரான கோத்தபய ராஜபக்ச அனுமதி மறுத்தார். மேலும், முல்லைதீவின் சுகாதாரச் சேவையின் வட்டார இயக்குநர் பல முறை கோரிக்கை வைத்தும் தேவையான பாதுகாப்பு அனுமதியை கோத்தபயாவின் கட்டுபபட்டுக்குள் இருந்த அமைச்சகம் அளிக்காததனால் அவர்களால் பொதுமக்களுக்குத் தேவையான சுகாதார சேவைகளைச் செய்ய முடியவில்லை என்பதை இந்த அறிக்கையில் காணப்படும் சான்றாதாரங்கள் மெய்ப்பிக்கின்றன.[405] முல்லைத்தீவின் வட்டார சுகாதார சேவைகள் இயக்குநர் ஒருவரின் திறந்த கடிதம், 2009 ஜனவரி மற்றும் மார்ச் நடுப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மருத்துவமனைகளில் ஏற்பட்ட 500 இறப்புகளில் பெரும்பாலானவை 'அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கப் பெற்றிருந்தால் தடுக்கப்பட்டிருக்கலாம்... நுண்ணுயிர் எதிர்ப்பிகள், மயக்க மருந்து மற்றும் ஒரு பாட்டில் IV திரவம் கூட வழங்கப்படவில்லை' என்று கூறுகிறது.[406] வன்னிப் பிரதேசத்திற்கான நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு இடையூறு விளைவிப்பதன் மூலம், பட்டினி மரணம் ஏற்படும் என்பதும், ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கடுமையான காயங்களைச் சமாளிக்க முடியாமல் போகும் என்பதும் கோத்தபயவுக்கு முழுமையாகத் தெரியும். மேலும், போர் நடக்கும் பகுதிக்கு மேலும் மருந்துகளை அனுப்புமாறு ஐ.நா. விடுத்த வேண்டுகோள் கடிதத்தின் நகல் கோத்தபயவுக்கும் அனுப்பப்பட்டது.[407] விக்கிலீக்ஸால் வெளியிடப்பட்ட ஒரு டெலக்ஸ் மனிதாபிமான உதவிகள் பற்றிய கோத்தபயாவின் விரோதப் போக்கை சுட்டிக்காட்டுவதோடு, ஏற்கனவே 2006 இல் கோத்தபய ஐ.நா, ICRC மற்றும் EU, LTTE கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அதிக அணுகலைக் கோரியபோது அனுமதிக்க 'தயக்கம்' காட்டினார் என்று குறிப்பிடுகிறது.

வன்னியை மனிதாபிமான முகமையங்கள் அடைய ராஜபக்ச அனுமதி மறுத்ததும், அந்தப் பகுதியில் நிலவிய உணவு மற்றும் மருத்துவப் பற்றாக்குறையைத் தீர்க்காமல் விட்டதனால் பொதுமக்கள் பட்டினியால் துன்பப்பட்டதும், உயிர்பிழைப்பதற்குத் தேவையான பொருட்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் போனதற்கும் ராஜபக்சதான் காரணம் என்பதற்கான சான்றுகள் இந்த அறிக்கையில் கிடைக்கின்றன. மனிதாபிமான முகமையங்களை மிரட்டும் நோக்கத்துடன் அவரது கட்டுப்பாட்டில் இருந்த சிறிலங்கா விமானப் படை ICRC தொடரணியின்[408] மீது நடத்திய தாக்குதல் இந்த வகையில் அவருக்கு இருந்த பொறுப்பை மேலும் காட்டுகிறது.[409] இந்தச் செயல்கள் நிரூபிக்கப்பட்டால்

402 https://ihl-databases.icrc.org/en/customary-ihl/v1/rule53#title-3

403 பிரிவு 54(2) AP I

404 இது வழக்கு விதிகள் 55 (தேவையில் இருக்கும் குடிமக்களுக்கு மனிதாபிமான நிவாரணத்திற்கான அணுகல்) மற்றும் 56 (மனிதாபிமான நிவாரணப் பணியாளர்களின் நடமாட்ட சுதந்திரம்) ஆகியவற்றில் பிரதிபலிக்கிறது

405 'அரசு மற்றும் அரசு சாரா படைகள் நிவாரணத்தைப் பறிமுதல் செய்யலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியை அணுக அனுமதி மறுக்கலாம்.' கிறிஸ்டியா ரோட்டென்சினர், 'சர்வதேச சட்டத்தின் கீழ் மனிதாபிமான உதவியை மறுப்பது ஒரு குற்றமாகும்', செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச ஆய்வு, எண் 845, p555-582.

406 இந்த அறிக்கையின் பக்கம் 37

407 இந்த அறிக்கையின் பக்கம் 36

408 D மார்க்கஸ், 'சர்வதேச சட்டத்தில் பஞ்சம் சார்ந்த குற்றங்கள்', 97 AJIL 245, p258

409 'மனிதாபிமான அமைப்புகளின் பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கான மிகவும் சிறந்த உத்தி, அவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று கூறுவதுதான். அரசு முகவர்கள், கிளர்ச்சிப் படைகள், பிற அரசு

போர்க்குற்றமாகவும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றமாகவும் கருதப்பட்டு கோத்தபய ராஜபக்ச குற்றப்பொறுப்பை ஏற்கவேண்டி இருக்கும்.

### விசாரணையற்ற மரணதண்டனை, சித்திரவதை, வன்புணர்வு மற்றும் பிற வகையான பாலியல் வன்முறை

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்த இராணுவத்தினர் மற்றும் நோய், காயம், தடுப்புக்காவல் மற்றும் பிற காரணங்களால் போரில் இருந்து விலகியவர் உட்பட யாருக்கும் எந்தச் சூழலிலும் விசாரணையின்றி மரணதண்டனை நிறைவேற்றுவது சட்டவிரோதமாகும்.

LTTE யின் அரசியல் தலைவர்களும் அவர்களுடன் சென்றவர்களும் 2009 மே 18 அன்று வன்னிப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து, IHL, ICL மற்றும் IHRL க்கு முரணாக அவர்கள் பாதுகாப்புப் படையினரால் சட்டவிரோதமான முறையில் கொல்லப் பட்டதாக இந்த அறிக்கையின் ஆதாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. LTTE யின் அரசியல் தலைவர்கள் போரில் இருந்து விலகிய பிற போராளிகளுடன் அரசின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க சரணடையும் தங்கள் நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி வெள்ளைக் கொடி ஏந்தி ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் பாதுகாப்புப் படையினரை நோக்கிச் சென்று சரணடைந்தபோது கொல்லப்பட்டனர்.

தடயவியல் பகுப்பாய்வு, சாட்சியங்கள், காணொளி ஆதாரங்கள் மற்றும் திறந்த மூல ஆதாரங்கள் உட்பட சேகரிக்கப்பட்ட பிற ஆதாரங்களின் அடிப்படையில், நடேசனும் புலித்தேவனும் 'பாதுகாப்புப் படையினரால் தூக்கிலிடப்பட்டிருக்கலாம்' என்று 'நம்புவதற்கு நியாயமான காரணங்கள்' உள்ளன என்று OISL அறிக்கை கூறுகிறது. மே 18 அன்று காலை 06:00 மணிக்கு[410] சவேந்திர சில்வாவின் தலைமையின் கீழ் 58 ஆவது பிரிவு இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டாலும், MOD இன் வலைப்பக்கம் அந்தப் பதிவை நீக்கியது.

சரணடைந்தவர்களையும் பொதுமக்களையும் கொல்லும் நோக்கத்துடனேயே இந்த சட்ட விரோத படுகொலைகள் நடத்தப்பட்டதால் இது போர்க்குற்றமாகும். அரசின் உயர் மட்டத்தில் சமரசம் பேசப்பட்டு போரில் இருந்து விலகி, நிராயுத பாணிகளாக வெள்ளைக் கொடி ஏந்தி தங்களிடம் சரணடைந்தவர்களைப் பற்றி பாதுகாப்புப் படைகள் நன்கு அறிந்திருந்தனர்.

2009 மே 18 அல்லது அதை ஒட்டி சரணடைந்த LTTE - யின் அரசியல் தலைவர்களும் ஏனைய 'வெள்ளைக்கொடி' ஏந்தி சரணடைந்தவர்களும் கொல்லப்பட்டது IHL ஐ மீறுவதாகவும், ஒரு போர்க்குற்றமாகவும் அமைகிறது.

கோத்தபய ராஜபக்சவின் கட்டளையின் கீழும் முழு கட்டுப்பாட்டிலும் இருந்த சிறிலங்கா பாதுகாப்புப் படைகளைக் கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த சட்டவிரோதமான படுகொலைகள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகும்.

கோத்தபய ராஜபக்ச இந்த விசாரணையற்ற மரணதண்டனைகளுக்கு உத்தரவிட்டார் என்று குற்றம் சாட்டப்படுகிறது, மேலும் அதைப் பற்றி அவர் அறிந்திருந்தார் என்பதும் அதைத் தடுக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதும், அதற்குப் பொறுப்பாக இருந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியதாகவும் கூறப்படுகிறது. இந்த மீறல்கள், நிரூபிக்கப்பட்டால், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகும். இதற்கு அவர் தனிப்பட்ட முறையில் குற்றப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

### வலிந்து காணாமல் ஆக்கப்படுதலைத் தடுத்தல்

2016 ஆம் ஆண்டு முதல், பலவந்தமாகக் காணாமல் போகச்செய்வதில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டில் சிறிலங்கா ஓர் அரசுத் தரப்பாக இருந்து வருகிறது, இது சிறிலங்காவை அதன் உள்நாட்டு சட்ட அமைப்பின் கீழ் காணாமல் போகச்செய்வதைக் குற்றமாக அறிவிப்பதைக் கட்டாயமாக்குகிறது. [411].

உலகில் காணாமல் போனோர் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. 1980 மற்றும் 2014 க்கு இடையில் 12,000 பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா செயற்குழு (WGEID) 12,000 புகார்களைப் பதிவு செய்துள்ளது.[412] இலங்கை இராணுவம், காவல்துறை (CID, TID, STF) மற்றும் தமிழ்த் துணை இராணுவக் குழுக்கள் பெரும்பான்மையான பலவந்தமாகக் காணாமல்

---

சாரா குழுக்கள், கொள்ளைக்காரர்கள் அல்லது பொதுமக்கள் - உதவிப் பணியாளர்கள் அல்லது ஓட்டுநர்களை மிரட்டுவதன் மூலம் அல்லது நிவாரணப் படைகள், கப்பல்கள் அல்லது விமானங்கள் அல்லது உதவிப் பணியாளர்களைத் தாக்குவதன் மூலம் உதவி வழங்குவதைத் தடுக்கலாம். சில சமயங்களில், மனிதாபிமான உதவிகளைச் சேகரிக்கச் செல்லும் மக்கள் மீது வீரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கிறிஸ்டினா ரோட்டென்சினரின், 'சர்வதேச சட்டத்தின் கீழ் மனிதாபிமான உதவி மறுப்பு ஒரு குற்றமாகும்.' செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச ஆய்வு, எண் 845, ப 555-582

[410] OHCHR Investigation on Sri Lanka (OISL), A/HRC/30/CRP.2, 16 Sep 2015. para 304

[411] பிரிவு 2, அனைத்து நபர்களையும் பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யப்படாமல் பாதுகாப்பது பற்றிய மாநாடு

[412] WEGID 2007, 2008, 2009 and 2010

போகச்செய்யப்பட்ட நேர்வுகளுக்குக் காரணம் என கூறப்படுகின்றது.[413]

தந்தை பிரான்சிஸ் மற்றும் நூற்றுக்கணக்கான பொது மக்கள் மற்றும் ஆயுதங்களை ஒப்படைத்த முன்னாள் LTTE போராளிகளின் சுதந்திரம் மே 18 அல்லது அதை ஒட்டி அவர்கள் பாதுகாப்புப் படையின் காவலில் சரணடைந்ததால் பறிக்கப்பட்டது என்பது இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. ITJP யின் பல நேரில் பார்த்த சாட்சிகள், தந்தை பிரான்சிஸ் மற்றும் நூற்றுக்கணக்கானவர்களைப் பாதுகாப்புப் படையினர் பேருந்துகளில் ஏற்றிச் செல்வதைக் கண்டனர், அதற்குப் பின் மீண்டும் ஒருபோதும் அவர்களைப் பார்க்க முடியவில்லை. காணாமல் போகச் செய்யப் பட்டவர்களின் குடும்பங்கள் இலங்கை நீதிமன்றங்களில் பல ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. ஆனால் சிறிலங்கா அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் அவர்கள் போரில் இறந்துவிட்டார்களா அல்லது நாட்டை விட்டு ஓடிவிட்டார்களா என்று எந்த ஒரு விசாரணையும் நடத்தாமல் சரணடைந்தவர்களைக் கைது செய்ததையும்/ அல்லது தடுத்து வைத்திருப்பதையும் தொடர்ந்து மறுத்து வருவதால் எந்தப் பயனும் விளையவில்லை.

இந்தக் காணாமல் போன சம்பவங்கள் இலங்கை பாதுகாப்புப் படையின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப் பட்டதாகச் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன, அவர்கள் இந்த நபர்களை நீண்ட காலத்திற்கு சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து அகற்றும் நோக்கத்தில் இருந்தனர், ஏனெனில் அவர்கள் உயிருடன் இருந்ததாகப் பதிவு செய்யப்படவில்லை. சரணடைந்து ஓர் அறியப்படாத இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்தப் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தல்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பரவலான மற்றும்/அல்லது திட்டமிட்ட தாக்குதலின் ஒரு பகுதியாக அமைந்ததாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. காணாமல் போகச் செய்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பாதுகாப்புப் படையினரின் காவலில் ஒப்படைக்கப்பட்ட அன்புக்குரியவர்களின் தலைவிதியைப் பற்றிய தகவல்களைத் தேடுவதற்குப் பதிலளிக்கும் வகையில், பழிவாங்கல், துன்புறுத்தல் மற்றும் தடுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் மீறலுக்கு எதிராக நியாயத்தைப் பெறும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் ஆதாரங்களின் அடிப்படையில், தமிழ் மக்களுக்கு எதிரான பரவலான மற்றும் திட்டமிட்ட தாக்குதலின் ஒரு பகுதியாக, அவர்கள் இருந்த இடம் மற்றும் காலத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் அதே மக்களைக் குறிவைத்துப் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்ததற்குப் பொறுப்பானவர்கள் என்று நம்புவதற்கு நியாயமான உறுதியான காரணங்கள் உள்ளன. மோதலின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்திடம் சராணடைந்த பின்னர் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் LTTE யின் படைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற காரணத்தினாலேயே அவர்கள் வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.[414]

2009 இல் JVP ஆட்சிகாலத்தில் நடந்த உள்நாட்டுப் போரின்போதும் அதன் பின்னரும் மாத்தளையில் நடைபெற்ற பலவந்தமாகக் காணாமல் போகச் செய்ததற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தபய ராஜபக்சதான் காரணம் என்று இந்த அறிக்கையில் இருக்கும் சான்றாதாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. நடைமுறையில் இருந்த அமைப்பையும், தன் கட்டுப்பாட்டில் இருந்த பாதுகாப்புப் படைகள் செய்த மீறலையும் கோத்தபய அறிந்தே இருந்தார். சுதந்திரம் பறிக்கப்பட்டதை அவர் அங்கீகரிக்காததும் அல்லது காணாமல் போனவர்களின் நிலை அல்லது அவர்கள் இருக்கும் இடத்தைத் தெரிவிக்காததும் காணாமல் போனவர்களைக் குறித்த சிறிலங்கா அரசின் நிலை எப்படிப்பட்டது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த அறிக்கையில் உள்ள தகவல்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில், கோத்தபயவுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் செய்த அத்துமீறல்கள் நிரூபிக்கப் பட்டால், அவை போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என நிரூபிக்கப்பட்டால், அதற்கு அவர் தனிப்பட்ட முறையில் குற்றப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

**சிறைப்படுத்தல் அல்லது உடலியல் சுதந்திரத்தைக் கடுமையான முறையில் பறித்தல்**

தனிப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமை குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன் படிக்கையின் பிரிவு 9 இல் வரையறுக்கப்பட்டுள்ளது.

**தன்னிச்சையாகத் தடுத்துவைத்தல், மற்றும் IDP முகாம்களிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் உள்ளக இடமாற்றல்**

சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களில் தன்னிச்சையாக சுதந்திரம் பறிக்கப்படுவது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையில் தடை செய்யப்படுகிறது. உள்ளக இடப்பெயர்வுக்கான ஐ.நா வழிகாட்டுதல் கோட்பாடுகள், சுதந்திரத்துக்கான உரிமைக்கு இணங்க, உள்ளக இடம்பெயர்வு அடைந்த நபர்கள் 'முகாமில் அடைக்கப்படவோ அல்லது சிறை வைக்கப்படவோ கூடாது', மேலும் 'விதிவிலக்கான சூழ்நிலைகளில்' முற்றிலும் தேவைப்பட்டால் மட்டுமே சிறைவைக்கப்படலாம். இலங்கை அரசாங்கம் அவ்வாறான சூழ்நிலைகள் இருப்பதை நிரூபிக்க

[413] OISL 412

[414] OISL A/HRC/30/CRP.2, 16 செப் 2015, பாராக்கள் 1127-1128

வில்லை என ICRC குறிப்பிட்டுள்ளது.[415] உள்ளக இடப்பெயர்வு குறித்த ஐ.நா வழிகாட்டுதல் கோட்பாடுகள் உள்ளக இடம்பெயர்வுக்கு உட்பட்ட நபர்களுக்கு அரசாங்கங்களின் கடமைகள் குறித்த அதிகாரப்பூர்வ தரநிலைகளை வழங்குகின்றன. இடம்பெயர்ந்த நபர்களுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் குடிநீர், அடிப்படை தங்குமிடம் மற்றும் வீடு, பொருத்தமான ஆடை மற்றும் அத்தியாவசிய மருத்துவ சேவைகள் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றுக்கான 'குறைந்தபட்சம்' பாதுகாப்பான அணுகலை கொள்கைகளின் கீழ் அதிகாரிகள் வழங்க வேண்டும்.[416]

மோதலின் போதும் மோதலுக்குப் பின்னும் LTTE யுடன் உண்மையில் தொடர்புடையவர்களும் தொடர்பு டையவர்கள் என்று கருதப்பட்டவர்களும் தன்னிச்சையாகத் தடுப்புக்காவலுக்கு உடப்டுத்தப்பட்டு உரோம நியதி பிரிவு 7 (1) இன் அர்த்தத்தின்படி தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளை எதிர் கொண்டார்கள் என்று ஆவணங்கள் கூறுகின்றன.

அமைக்கப்பட்ட முகாம்களுக்கு வெளியே சுதந்திரமாக நடமாட அனுமதிப்பதில்லை மற்றும் உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளான குடும்பங்களைப் பிரித்ததன் மூலம், மனிதாபிமானமற்ற மற்றும் பாரபட்சமான முறையில் நடத்தியதன் மூலம் ஐ.நா.வின் உள்ளக இடப்பெயர்வுக் கோட்பாடுகளை இலங்கை பாதுகாப்புப் படையினர் மீறியுள்ளனர்.[417] மேலும், 2009 மே மாதத்திற்குப் பின் நடத்தப்பட்ட பாரபட்சமான நேர்காணல் செயல்முறைகள் உட்பட, தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை மற்றும் LTTE யின் உண்மையான அல்லது முன்னாள் உறுப்பினர்கள் மேல் பாலியல் வன்முறை நடத்தப்பட்டதன் மூலம் ஜெனீவா ஒப்பந்தம் IIV, விதி 3 மற்றும் PII, பிரிவு 2 (2) ஆகியவை மீறப்பட்டுள்ளன.

நேர்காணல் செயல்முறையைக் கண்காணிக்க IDP முகாம்களுக்குச் செல்ல ICRC மற்றும் அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையருக்கு சிறிலங்கா அரசு அனுமதி மறுத்தது ஜெனீவா மாநாடு I, பிரிவு 3 இன் படி ஒரு மீறலாகும்.

கோத்தபய ராஜபக்சவின் கட்டளையின் கீழ் செயற்படும் இலங்கைப் பாதுகாப்புப் படையினர், சட்டத்துக்கு விரோதமான சிறைத்தண்டனை, சுதந்திரத்தைப் பறித்தல், கொலை, தன்னிச்சையாகக் காவலில் வைத்தல் போன்ற செயகைகள் மூலம் கைதிகளின் அடிப்படை உரிமைகளைத் தொடர்ந்து மீறியதாகவும், ஒரு சுதந்திரமான நீதித்துறை அதிகாரியின் முன் தடுப்புக்காவலின் சட்டபூர்வமான தன்மையை சவால் செய்யும் உரிமையையும், சட்ட ஆலோசகர் மற்றும் குடும்ப உறுப்பினர்களை அணுகுவதற்கான உரிமையையும், அத்துடன் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தைக் கூறாததும் அவர்களின் இருப்பிடத்தை குடும்பத்தினருக்கு தெரிவிக்கத் தவறியதும் இந்த அறிக்கையின் ஆதாரங்கள் காட்டுகின்றன. சரியான முறை பின்பற்றப்படாததாலும் சட்டத்தின் அணுகல் இல்லாததாலும் பெரும்பாலான கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டிருப்பார்கள் என்ற சாத்தியக் கூறையே இந்த மீறல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**'புனர்வாழ்வு' முகாம்கள்**

சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் பற்றி 2014 இல் வெளியிடப்பட்ட ITJP இன் முதல் அறிக்கை ('ஒரு முடிக்கப்படாத போர்: சிறிலங்காவில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை 2009-2014') முன்னாள் LTTE உறுப்பினர்கள் இலங்கை அரசாங்கத்தின் 'புனர்வாழ்வு திட்டத்தில்' நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டது. முன்னாள் போராளிகள். புனர்வாழ்வுத் திட்டத்தில் சித்திரவதையே தவிர மிகக்குறைந்த அளவுக்கே மறுவாழ்வு இருந்ததை இந்த அறிக்கையின் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. 21 ஜனவரி 2010 அன்று, OHCHR, LTTE யுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் பிரித்து 'புனர்வாழ்வு மையங்களில்' தங்கவைக்கப் பட்டவர்களின் சட்டப்பூர்வத் தன்மை குறித்து கவலைகளை எழுப்பியதுடன், 'கிடைத்துள்ள புள்ளிவிபரங்களின்படி 11,000 க்கும் அதிகமானோர் உள்ளனர், ஆனால் உண்மையான எண்ணிக்கை தெரியவில்லை', மற்றும் மையங்களுக்கு ICRC அணுகலை வழங்க அரசாங்கத்தை வலியுறுத்துகிறது என்று அறிக்கை கூறியது.[418]

அரசின் மறுவாழ்வுத் திட்டத்தை தவறான தடுப்புக்காவல் என்று ஐ.நா.வின் தன்னிச்சையான தடுப்புக்காவல் பற்றிய பணிக்குழு அறிவித்தது மேலும் ஐ.நா.வின் சிறப்பு அறிக்கை அளிப்பவர் ஜுவான் மெண்டஸ் அதை மூடவேண்டும் என்று கூறினார்.

சரணடைந்தவர்களை நடத்துவது குறித்து, சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம், அரசாங்கத்தின் 'சரணடைதல்' மற்றும் 'புனர்வாழ்வு' நிர்வாகம் சர்வதேச சட்டம் மற்றும் தரநிலைகளைக் கடைபிடிக்கத் தவறியது, சுதந்திரத்துக்கான உரிய நடைமுறை மற்றும் நியாயமான விசாரணைக்கான உரிமைகளைப் பாதிக்கிறது என்று கவலை தெரிவித்தது. சித்திரவதை மற்றும் பலவந்தமாகக் காணாமல் போகச்செய்தல் போன்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.[419]

[415] அகதிகளுக்கான UN உயர் ஆணையர் (UNHCR), 'உள்ளக இடப்பெயர்ச்சிக்கான வழிகாட்டுதல் கோட்பாடுகள்', 22 ஜூலை 1998, ADM 1.1,PRL 12.1, PR00/98/109, https://www.refworld.org/docid/3c3da07f7.achdtml 13 அக்டோபர் 2023]

[416] மேற்படி

[417] ஐ.நா.உள்ளக இடப்பெயர்வு பற்றிய வழிகாட்டும் கொள்கைகள், கொள்கைகள் 14 மற்றும் 17

[418] பெட்ரி அறிக்கை, இணைப்பு

[419] ஒரு சுருக்கமான குறிப்பின் செயல் தொகுப்புரை, 'சட்டப்பூர்வக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால்: LTTE என்று சந்தேகப்படும் நபர்களை

2015 ஆம் ஆண்டு திரிகோணமலை இரகசியக் கடற்படை சித்திரவதை தளத்தின் இருப்பிடத்தை ITJP அடையாளம் கண்டு, உயிர் பிழைத்தவரின் சாட்சியத்தின் அடிப்படையில் புவி நிலைகாண் தொகுதி ஆள்கூறுகளை வெளியிட்டது. பின்னர், பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாகக் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் பற்றிய பணிக்குழு தளத்தைத் பார்வையிட்டு அதன் இருப்பு மற்றும் ITJP வழங்கிய விவரங்களை உறுதிப்படுத்தியது.

IDP முகாம்கள் மற்றும் புனர்வாழ்வு முகாம்களில் ஏற்படும் மரணங்கள் மற்றும் தன்னிச்சையாக சுதந்திரம் பறிக்கப்படுதல் மட்டுமல்லாமல் விருப்பமில்லாத கட்டாய மறுவாழ்வு, சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை ஆகியவற்றை உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கு கோத்தபய ராஜபக்சவின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சிறிலங்கா பாதுகாப்புப் படையினரே பொறுப்பு என்பதை இந்த அறிக்கையின் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. கட்டாயப் புனர்வாழ்வு என்பது புனர்வாழ்வு பெறுபவர் சுதந்திரத்தை இழத்தலை உள்ளடக்கியுள்ளது. குற்றவாளி என்று தீர்க்கப்படாமலேயே தனிப்பட்ட மற்றும் கூட்டு தண்டனை, சட்ட பாதுகாப்பு மறுக்கப்படுதல், மேலும் சில சந்தர்ப்பங்களில் குற்றச்சாட்டு இல்லாமலேயே இரண்டு ஆண்டுகள் வரை சிறைப்படுத்தல் அல்லது சட்ட அணுகல் கிடைக்காமல் செய்தல் ஆகியவை இதில் அடக்கம்.

இந்த அறிக்கையில் உள்ள தகவல்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில், கோத்தபய தனக்குக் கீழ் பணிபுரிபவர்கள் செய்த அத்துமீறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும், அது நிரூபிக்கப்பட்டால், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்றும் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

### படுகொலையைத் தடுத்தல்

சிறிலங்கா உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்ட IHL, HRIL மற்றும் ICL ஆகியவற்றின் மீறல்களில் கோத்தபய ராஜபக்ச முக்கிய பங்கு வகித்ததை இந்த அறிக்கையின் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன, இது ஜெனீவா ஒப்பந்தங்களின் கடுமையான மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் மற்றும் சிறிலங்கா உள்நாட்டுப் போரின் போது சர்வதேசக் குற்றவியல் சட்டம் மற்றும் அதன் பின்னர். கொலை, சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தை, மரணதண்டனை, துரோகம், வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறையின் பிற வடிவங்கள், சுதந்திரத்தைப் பறித்தல், கடுமையான உடல் மற்றும் மன பாதிப்புகள் மற்றும் பட்டினி ஆகியவை அடங்கும்.

### இறந்த உடல்களைச் சிதைப்பதற்குத் தடை

ஜெனீவா உடன்படிக்கையின் கூடுதல் நெறிமுறை II, சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களில் இறந்தவர்களின் உடல்கள் சிதைக்கப்படுவதைத் தடுக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய கடமையை விதிக்கிறது.[420] சர்வதேசம் அல்லாத ஆயுத மோதலுக்குப் பொருந்தும் வழக்கமான சர்வதேச சட்டத்தின் விதியாக இறந்த உடல்களைச் சிதைப்பதைத் தடை செய்வதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[421] ICC சட்டத்தின் கீழ், சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களில் இறந்த உடல்களைச் சிதைத்தலைத் தடுப்பது, 'தனிப்பட்ட கண்ணியத்தின் மீதான தாக்குதல்' என்ற போர்க்குற்றத்தின் கீழ் வருகிறது.[422]

படைவீரர்களின் கைபேசிகளில் எடுக்கப்பட்ட அருவருக்கத்தக்க வகையில் அட்டூழியம் நிகழ்த்தப்பட்ட பெண்களின் உடல்களையும், இழிவுபடுத்தப்பட்ட LTTE போராளிகளின் உடல்களையும் பற்றிய மனதைப் பாதிப்புக்குள்ளாக்கும் காணொளிகளையும் புகைப்படங்களையும் பார்த்ததாக OISL அறிக்கை குறிப்பிடுகிறது. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் உயிரோடு இருந்தபோது அவமானப்படுத்தப்பட்டு இழிவான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் இந்த சாட்சியங்களை வைத்துப் பரந்த அளவில் கருதவேண்டும்.

இந்த சடலங்கள் அவமதிக்கப்பட்டு சிதைக்கப் படுவதற்குப் பொறுப்பானவர்கள் கோத்தபய ராஜபக்சவின் கட்டளையின் கீழும் முழு கட்டுப்பாட்டின் கீழும் இருந்த பாதுகாப்புப் படையினரே என்பதை இந்த அறிக்கையின் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அவர் தன் கட்டளையின் கீழும் கட்டுப்பாட்டிலும் இருந்த பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயல்களைத் தடுக்கவோ அல்லது அவர்களே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டி- யவர்கள் என்று நடவடிக்கை மேற்கொள்ளவுமில்லை.

கோத்தபயவின் செயல்கள் தனிப்பட்ட கண்ணியத்தை சீர்குலைக்கும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுமாகும்.

### குழந்தைப் போர்வீரர்களை அமர்த்துதலுக்கு எதிரான தடை

1991 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தையும், 2000 ஆம் ஆண்டு ஆயுத மோதலில் சிறுவர்களை ஈடுபடுத்துவது பற்றிய குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்த நெறிமுறையையும்

சிறிலங்காவில் பெரிய அளவில் தடுத்து வைத்தல்', செப் 2010, சர்வதேச நீதிபதிகள் ஆணையம்.

[420] கூடுதல் நெறிமுறை II, பிரிவு 8 (ஒருமித்த முடிவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

[421] ICRC, விதி 113, https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule113

[422] ICC சட்டம் பிரிவு 8(2)(c)(ii), இந்தக் குற்றத்தின் கூறுகள் ICC குற்றங்களின் கூறுகளோடு ஒருங்குவைத்து படிக்கப்படுகிறது, ப27 n49

சிறிலங்கா அங்கீகரித்துள்ளது. ஆகவே மோதலின் போது சிறிலங்கா அந்த விதிகளுக்கு கட்டுப்பட்டிருந்தது.

சர்வதேச சட்டத்தின் கீழ், ஆயுதப் படைகள் மற்றும் ஆயுதக் குழுக்களில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு எதிரான தடையானது சர்வதேச வழக்குச் சட்டத்தின் அந்தஸ்தைப் பெற்றுள்ளது மற்றும் சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களுக்கும் இது பொருந்தும்.[423] ICC யின் சட்டத்தில் இது சர்வதேசம் அல்லாத ஆயுத மோதலுக்குப் பொருந்தக்கூடிய போர்க்குற்றம் என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[424]

இந்த அறிக்கையின் சாட்சியங்கள், கருணாவின் துணை இராணுவக் குழுவின் நடைமுறை மற்றும் சட்டபூர்வத் தளபதியாக கோத்தபய ராஜபக்ச இருந்ததையும், குழந்தைகள் ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான துணை இராணுவக் குழுவில் (கருணா TMVP) தளபதி- கீழதிகாரி உறவு இருந்ததையும் உறுதிப்படுத்துகிறது. இதனால் SLA சோதனைச் சாவடிகளை அவர்கள் தடையின்றிக் கடந்துசென்றனர்.

குழந்தைகளைச் சட்டவிரோதமாக இராணுவத்தில் சேர்த்தல், அப்படிச் சேர்க்கப்பட்ட குழந்தைகள் சோதனைச் சாவடிகளையும் இராணுவ முகாம்களையும் பாதுகாப்பாகக் கடந்துசெல்ல அனுமதித்தல் உட்பட துணை இராணுவத்தின் செயல்பாடுகளைக் கருணா, கோத்தபய ராஜபக்சவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செய்தார். குழந்தைகளை இராணுவத்தில் சேர்ப்பதையும் IHL, HRL மற்றும் ICL ஆகியவற்றைத் துணை இராணுவக் குழுக்கள் மீறுவதையும் தடுக்க கோத்தபய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நிரூபிக்கப்பட்டால் இந்த மீறல்கள் போர்க்குற்றமாகவும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றமாகவும் கருதப்பட்டு கோத்தபய ராஜபக்சவைத் தனிப்பட்ட குற்றப் பொறுப்புக்குள் கொண்டுவரும்.

### இன, அரசியல், பாலின அடிப்படையில் துன்புறுத்தல்

அரசியல், இனம், தேசியம், இனக்குழு, கலாச்சாரம், மதம், பாலினம் அல்லது பிற அடிப்படையில் குழுவாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ அடையாளப்படுத்தி சர்வதேச சட்டங்களுக்கு மாறாக அடிப்படை உரிமைகளை வேண்டுமென்றே கடுமையான முறையில் பறித்தல் சர்வதேச சட்டத்தின் படி அனுமதிக்க முடியாதது என்று ஏற்கப்பட்டு மனிதகுலத்துக்கும், அடையாளங் காணக்கூடிய குழுவுக்கும் அல்லது ஒட்டுமொத்தமாகவும் ஒரு குற்றம் என்று உரோம நியதியால் வரையறுக்கப்படுகிறது.[425]

இந்த அறிக்கையின் சான்றுகள், தமிழர்கள் ஒரு குழுவாகவும் ஒட்டுமொத்தமாகவும் மற்றும் அவர்களுடைய தமிழ் இனம் மற்றும் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என்ற அவர்களது மதத்தின் அடிப்படையிலும் அரசியல் அடிப்படையிலும் அவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்பட்டு, அவர்கள் LTTE க்கு ஆதரவாகக் கருதப்படுவதாலும், அவர்கள் LTTE, அமைப்பில் அங்கம் வகித்ததாலும், சிறிலங்கா அரசை அவர்கள் அரசியல் ரீதியாக எதிர்த்ததாலும் இனவாத சிங்கள பௌத்த அரசால் குறிவைக்கப்பட்டு பலிகடாவாக்கப்பட்டனர்'. தன்னிச்சையான தடுப்புக் காவல், பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தல், சித்திரவதை, மிருகத்தனமான வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை, சட்டவிரோத சிறைவாசம், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இடம்பெயர்வுக்கு உட்படுத்தல் மற்றும் ஆயுத மோதலின் போதும் சரணடைந்த போதும் சட்டவிரோதமான கொலைகள் ஆகியவை அத்துமீறல்களில் அடங்கும். தப்பிப்பிழைத்த தமிழர்கள் IDP முகாம்களுக்குள் நுழைய நிர்பந்திக்கப் பட்டனர் (இது சித்திரவதை முகாம்களுக்கு ஒப்பிடப்பட்டது), முன்னாள் LTTE உறுப்பினர்கள் 'புனர்வாழ்வு முகாம்களில்' பாலினத்தின் அடிப்படையில் மாறுபட்ட புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டனர். சட்டவிரோதத் தடுப்புக்காவல், சித்திரவதை, வன்புணர்வு மற்றும் பாலியல் வன்கொடுமை ஆகியவற்றில் இருந்து குழந்தைகள் கூட தப்பிக்கவில்லை.

மேலும், போரின் இறுதி நாட்களில், சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் உட்பட தமிழர்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது, கொலைகள் மூலம் தமிழர்கள் துன்புறுத்தப்பட்டதற்கு இது ஓர் அப்பட்டமான உதாரணம். உள்நாட்டுப் போரின் போது, தமிழர்களின் அடிப்படை உரிமைகளான உணவு, மருத்துவ உதவி, தண்ணீர் உள்ளிட்ட உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத பொருட்களைப் பாதுகாப்பதற்கும் அணுகுவதற்குமான உரிமைகள் பறிக்கப்பட்டன.

சிறிலங்காவில் வாழும் தமிழர்களைக் குறிவைத்து அரசியல், இன, மத, பாலின அடிப்படையில் பாகுபடுத்தும் முறையில் சிறிலங்கா அரசும் கோத்தபய ராஜபக்சவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த பாதுகாப்புப் படைகளும் செயல்பட்டார்கள் என்று இந்த அறிக்கையின் தகவலும் சான்றாதாரங்களும் காட்டுகின்றன. இது நிரூபிக்கப்பட்டால் போர்க் குற்றமாகவும் மனித குலத்திற்கு எதிரான குற்றமாகவும் கருதப்பட்டு கோத்தபய தனிப்பட்ட முறையில் குற்றப் பொறுப்பை ஏற்கவேண்டி இருக்கும்.

### கோத்தபய ராஜபக்சவின் தனிப்பட்ட குற்றப் பொறுப்பு

2005 மற்றும் 2015 க்கு இடையில், கோத்தபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளராகவும், அரசின் மிக மூத்த பொதுத்துறை ஊழியராகவும், பாதுகாப்பு

[423] https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule136

[424] பிரிவு 8(2)(e)(vii)

[425] பிரிவு 7.1.h, ICC சட்டம்

உத்திகளை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் மற்றும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும் பொறுப்பான-வராக இருந்தார்.[426] அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ச சிறிலங்காவின் அதிபராகவும், ஆயுதப்படைகளின் தளபதியாகவும் இருந்ததால், கோத்தபய அரசியல் ரீதியாகவும் சக்திவாய்ந்தவராக இருந்தார். பாதுகாப்பு அமைச்சில் இருந்த கோத்தபய ராஜபக்ச, ஆயுதப் படைகள் மீது திறம்பட கட்டுப்பாட்டை செலுத்தியதில் இருந்து 2015 வரை ஆயுதப் படைகள் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளுக்கு நேரடியாகக் கட்டளை கொடுக்கும் நிலையில் இருந்ததை இந்த அறிக்கையின் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. தளபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சட்டரீதியாகத் தக்க வைத்துக் கொண்டாலும், கோத்தபய ராஜபக்சவுக்கு 'அனைத்து நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் ஒழுங்குமுறை செயல்பாடுகளோடு இராணுவ நீதிமன்றத்தில் [ஆயுதப் படைகளுக்குள்] குற்றவாளிகளை விசாரணை செய்யும் அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரமும் இருந்தது.[427]

கோத்தபய ராஜபக்ச இராணுவத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையிலான இடைமுகமாக இருந்தார் மற்றும் அனைத்து இராணுவ நியமனங்களையும் கட்டுப்படுத்தினார் மேலும் வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் அமைச்சர்கள் மற்றும் அரசியல் நியமனங்களுக்கு அறிவுறுத்துவதில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டிருந்தார் என்பதை இந்த அறிக்கையின் சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன.[428]

அவர் இராணுவத்தில் பணிபுரிந்த காலத்தில் அவர் நிறுவிய வலைப்பின்னல்களில் அவரது முன்னாள் இராணுவ சகாக்களும் அடங்குவர், அவர்களை அவர் உயர்நிலைப் பதவிகளில் நியமித்தார். இந்தப் பின்னணியில்தான் சர்வதேசக் குற்றச் செயல்களில் கோத்தபய ராஜபக்சவின் பங்கு மற்றும் பொறுப்பு பற்றிய எந்தவொரு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இராணுவத்தின் புதிய பெட்டாலியன்கள், பிரிகேடுகள் மற்றும் பிரிவுகளின் அமைப்பை ஒழுங்குபடுத்தும் அதிகாரமும் கோத்தபயவிடம் இருந்தது.[429] 2009 ஆண்டு போரில் தீவிரமாக ஈடுபட்ட மூத்த இராணுவ அதிகாரிகளை நியமனம் செய்ய, ஏற்கனவே உள்ள அதிகார அமைப்புகள் மற்றும் பணி மூப்பு போன்றவற்றைப் புறக்கணித்தார்.[430] 2009 இல் பாதுகாப்புப் பணியாளர்களின் தலைவர்,[431] என்ற பதவியை அவர் உருவாக்கி அந்தப் பதவியின் மீது முழு அதிகாரம், வழிகாட்டுதல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையை வைத்திருந்தார். கோத்தபய தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் இரண்டாவது உயர் மட்ட உறுப்பினராகவும் இருந்தார். பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விஷயங்களை வழிநடத்தும் அதிகாரம் அவருக்கு இருந்தது',[432] மேலும் காவல்துறை மற்றும் ஆயுதப்படைகளுக்கு இடையேயான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் முடிவுகளை செயல் படுத்துவதற்கும் பொறுப்பான கூட்டு செயல்பாட்டு தலைமையகத்திற்கும் (JOH) அவர் கட்டளைகள் அளித்தார்.[433]

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் (LLRC) ஆஜராகிய கோத்தபய, LTTE மீதான வெற்றிக்கு வழிவகுத்த இறுதிக்கட்டப் போரின் போது இராணுவ நடவடிக்கையில் மூளையாகச் செயல்பட்டதாக ஒப்புக்கொண்டார். 'இராணுவ நடவடிக்கையை நாங்கள் எவ்வாறு திட்டமிட்டோம் என்பது பற்றிய உண்மைகளை ஆணைக்குழுவிடம் முன்வைக்க ஆர்வமாக உள்ளது' என்றார்.[434] கோத்தபய, தான் ஆயுதப்படைகளுக்குத் தலைமை தாங்கியதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார், 'பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றும் போது, வெற்றி பெற்ற சிறிலங்கா ஆயுதப்படைகளுக்குத் தலைமை, ஊக்கம் மற்றும் தளவாட ஆதரவை வழங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது'.[435] பாதுகாப்புச் செயலர் என்ற முறையில், இரண்டரை ஆண்டுகளில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர இராணுவத்தையும் புலனாய்வுப் பிரிவுகளையும் முதலில் வழிநடத்த முடிந்தது என்பது உங்களுக்குத் தெரியும்' என்றார்.[436]

கோத்தபய குறிப்பிட்ட செயற்பாடுகள் பற்றி அறிந்திருந்ததோடு மட்டுமன்றி படைகளின் தளபதிகளுக்குக் குறிப்பிட்ட செயற்பாட்டு கட்டளைகளையும் வழங்கியதாகக் கூறப்படுகிறது. மாவில்ஆறு மீதான தாக்குதலுக்கு இரண்டு

---

426 **http://www.defence.lk/main_abt.asp?fname=mission**, OSIL, பாரா106 இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது

427 இந்த அறிக்கையின் அடிக்குறிப்பு 12

428 இந்த அறிக்கையின் அடிக்குறிப்பு 46

429 கோத்தபாய, ப75, கமால் குணரட்ண

430 http://www.indiandefencereview.com/spotlights/lessons-from-the-war-in-sri-lanka/2/, கோத்தபாய,ப78, கமால் குணரட்ண

431 *டெய்லி நியூஸ்*, 12 ஜூன் 2009 , CDS பற்றிய புதிய சட்டம் குறித்து.

432 பரனகாம அறிக்கை §179

433 OSIL, பாரா 112; 2006-9 வரை JOH இன் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக இருந்தவர் டொனால்ட் பெரேரா ஆவார், அவர் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிற்கும் பதிலளித்தார். 2015 ஆம் ஆண்டு, சிறிலங்காவின் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால், 2 ஏப்., 2015 இல், MIG விமான ஒப்பந்தம் தொடர்பாக அவர் விசாரிக்கப்பட்டார், http://www.ft.lk/article/402905/Former-Air-Chief-Marshal-Donald-Perera-questioned-over-MiG-aircraft-transaction

434 கோத்தபாய ராஜபக்ச எழுத்துப்படி, LLRC

435 https://www.facebook.com/437355006429820/posts/1275498389282140?sfns=mo (கோத்தபாயவின் முகநூல் பக்கம்).கோத்தாவின் போரில் உறுதிப்படுத்தப்பட்டது ப291, சரத் பொன்சேகாவிற்கு வாய்ப்பை வழங்க கோத்தா முடிவடுத்துவிட்டார்.'

436 19 அக் 2019, பெலியத்தை தேர்தல் பிரச்சார ஊர்வலம், https://www.youtube.com/watch?v=BdtQ-E5sBPw 10'47'-11'37.

நிமிடங்களில் கோத்தபய ஒப்புதல் அளித்ததாக கோத்தபய ராஜபக்சவின் கீழ் பணியாற்றிய துணை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.[437] இராணுவம் மற்றும் தேசிய பாதுகாப்பு முன்னேற்றங்கள் குறித்து கோத்தபயவுக்குத் தினமும் தெரிவிக்கப்பட்டதாக இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. சிறிலங்காப் பத்திரிகை ஒன்றின் அறிக்கையின்படி, 'பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே (...) தலைமைத் தளபதியுடன் நேரடித் தொடர்பைப் பெற முடிந்தது மற்றும் எண்ணிக்கையைக் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக உயர்த்துவது உட்பட ஆயுதப் படைகளின் சார்பாகக் கோரிக்கைகளை முன்வைக்க முடிந்தது,. - மற்றும் வெளி அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டாம் என்று ஜனாதிபதிக்குத் தோள்கொடுத்து உறுதியாக நின்றார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 'தேவையான ஆதரவை' வழங்க மட்டுமே செய்தார் என்று கூறுவது மிகவும் நியாயமற்றது.'[438]

போர் நடைபெற்ற போது பல புலனாய்வு முகமையங்கள் இருந்தன; அவை போருக்குப் பின்னும் இருந்தன. உண்மையில் காகிதத்தில் தனியாக இருக்கும் அவற்றின் செயல்பாடுகள் தெளிவற்றதாக உள்ளன. ஆயுத மோதலின் போது அவற்றில் பல இராணுவ அல்லது இராணுவப் பணி போன்றவற்றைச் செய்தன. இராணுவப் புலனாய்வு அமைப்பு என்று அழைக்கப்பட்ட அவை கோத்தபய ராஜபக்சவின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தன. இராணுவப் புலனாய்வு இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும். ஆனால் அது கோத்தபய ராஜபக்சவின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும், கொழும்புப் புலனாய்வுத் துறையைப் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தில் இருந்து அதிகாரபூர்வமற்ற நிலையில் பாதுகாப்புத் துறை செயலாளர் இயக்கியதாகவும், வெள்ளை வேன் கலாச்சாரத்தை உள்ளடக்கிய நேரமையற்ற பல செயல்பாடுகளை கோத்தபயவும் அவருக்குக் கீழ் பணியாற்றிய அதிகாரிகளும் மேற்கொண்டதாகவும் பொன்சேகா குற்றம் சாட்டினார்'.

2013 ஆம் ஆண்டு வரை சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு இந்த சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனத்தின் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்கும் வரை கோத்தபய ராஜபக்ச அரசின் புலனாய்வு சேவை மற்றும் காவல்துறையின் மீது தன் கட்டுப்பாட்டைச் செலுத்தினார். இது தொடர்பாக, 2005-2013 க்கு இடையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID), பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (TID), துணை இராணுவச் சிறப்பு அதிரடிப் படை (STF)[439] மற்றும் கொழும்பு குற்றப்பிரிவு (CCD) உட்பட அனைத்துக் காவல்துறைப் படைகளும் அமைச்சுக்கு அறிக்கை அளித்தன. கூடுதல் பாதுகாப்புச் செயலாளர்கள், காவல்துறை பொது ஆய்வாளர் மற்றும் காவல்துறை துணைப் பொது ஆய்வாளர் உட்பட வழமையான கட்டளைச் சங்கிலியை கோத்தபய புறக்கணித்தார்.[440]

2006 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப் பட்டதற்கும், 2008 க்கு இடையில் போர் முடிவடையும் வரை நாட்டில் ஆயுத மோதல்கள் தீவிரமடைந்ததற்குக் காரணமான இராணுவத் தாக்குதல்களில் ஈடுபடுவதற்கு ஆயுதப்படைக்குக் கட்டளையிட்ட கோத்தபய ராஜபக்ச எவ்வாறு முக்கிய பங்கு வகித்தார் என்பதை அறிக்கை காட்டுகிறது. மே 2009 இல். விதிமீறல்களில் விசாரணையற்ற மரணதண்டனைகள், தன்னிச்சையான மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல்கள் மற்றும் சித்திரவதை, அத்துடன் வன்புணர்வு மற்றும் பிற பாலியல் வன்முறைகள் ஆகியவையை உள்ளடக்கிய பெருகிவந்த மனிதாபிமான நெருக்கடியை கோத்தபய முழுமையாக அறிந்திருந்தார், மேலும் 2008 இல் போர் மண்டலத்தை விட்டு வெளியேறுமாறு சர்வதேச உதவி மற்றும் நிவாரண அமைப்புகளுக்கு உத்தரவிட்டதற்குத் தனிப்பட்ட முறையில் அவரே பொறுப்பாளியாக இருந்தார். பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து, கோத்தபய வேண்டுமென்றே உதவி மற்றும் மனிதாபிமான முகமையங்கள் போர் மண்டலத்தை அணுகுவதைத் தடுத்து, மக்கள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத உணவு மற்றும் மருந்துகள் மற்றும் பொருட்களை வழங்குவதைத் தடுத்தார்.

---

437 'ஜூலை 2006 இல், திருகோணமலைக்கு தென்மேற்கே மாவில் ஆறு பகுதியைக் கைப்பற்றிய LTTE, கிழக்கு மாகாணத்தில் நீர் வழங்கும் முக்கியமான ஒரு நீர்த்தேக்கத்தின் மதகை மூடி, திருகோணமலை கடற்படைத் தளத்தின் மீது தாக்குதல்களை நடத்தினர்.' கிழக்கில் இறுதிப் போரின் தொடக்கத்தை இது குறித்தது. §66, OISI, 2015.

438 'ஹீரோவில் இருந்து ஜீரோ: பொன்சேகாவின் வீழ்ச்சி', 18 அக் 2009, சண்டே டைம்ஸ் லங்கா, http://www.sundaytimes.lk/091018/Columns/political.html

439 'The Special Task Force has been reassigned under the Ministry of Defence, Public Security, Law & Order with effect from 1st August 2006 and all matters of the Special Task Force are now handled by the Police Division, since of then.' On file, MOD webpage, Ref MOD D.

'The STF only operate under orders from Gotabaya', ITJP witness.

440 எ.கா. புலனாய்வுப் பிரிவுகள் ஹெந்தாவிதாரணவின் கீழ் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பது கோத்தபாயவின் 'ஆணை', 'பிரத்தியேகமானது: கோத்தாவின் புலனாய்வு ஜார் சைனீஸ் மோல் என கையும் களவுமாக பிடிபட்டார்', https://www.colombotelegraph.com/index.php/exclusive-gotas-intelligence -czar-caught-red-handed-as-chinese-mole/ மில்லியன் கணக்கானவர்கள் முன்னாள் புலனாய்வுத் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தாவிதாரணவின் கணக்கில், 25 பிப்ரவரி 2017, https://srilankabrief.org/millions-credited-to-ex-intelligence- தலைமை-மஜ்-ஜென்-கபில-ஹெந்தவிதாரணஸ்-கணக்கு/ . பிசினஸ் டுடே, ஏப். 2009க்கு வழங்கிய நேர்காணல்களில், அப்போதைய சிறிலங்கா காவல்துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் இருவரும் பல்வேறு புலனாய்வு சேவைகளின் நெருக்கமான ஒருங்கிணைப்பை (பாதுகாப்புச் செயலாளரின் கீழ் வாராந்திர சந்திப்புகள் உட்பட) விவரித்தனர். 2009 ஏப், கோப்பில்

பெம்பா வழக்கில் ICC விசாரணைக்கு முந்தைய தீர்ப்பு, நடைமுறைத் தளபதிகள் என்ற கருத்து 'பொதுவாக ஆயுதமேந்திய காவல்துறைப் பிரிவுகள் போன்ற முறையான அரசப் படைகள் அல்லது கிளர்ச்சிக் குழுக்கள், துணை இராணுவப் பிரிவுகள், ஆயுதமேந்திய எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் இராணுவப் படிநிலை அல்லது கட்டளைச் சங்கிலியின் கட்டமைப்பைப் பின்பற்றும் போராளிகள் உட்பட முறைசாராப் படைகள் (அரசு சாராத படைகள்) போன்றவற்றின் மீது அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டைக் கொண்ட உயர் அதிகாரிகளை உள்ளடக்கியதாக இருக்கலாம்.' என்று குறிக்கிறது.'[441]

கருணாவின் துணை இராணுவக் குழுவின்[442] உண்மையான தளபதியாக இருந்த கோத்தபய ராஜபக்ச தமிழ் வணிகர்களிடம் கப்பம் பெறவும் பணம் வசூலிக்கவும் அதன் தலைமைக்கு அதிகாரம் வழங்கியதுடன், சிறுவர்களைப் படையில் சேர்த்துப் பயன்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறினார்.[443] 2007 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அவர் கேணல் கருணாவிற்குப் போலிப் பெயரில் இங்கிலாந்துக்குச் செல்வதற்காக இராஜாங்க கடவுச்சீட்டை வழங்கியதாகவும் கூறப்படுகிறது.[444] ITJP சாட்சியத்தின்படி, குடியேற்றத்துறைக்குப் பகிரப்பட்ட 'கருப்புப் பட்டியல்' மீதான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த கோத்தபயவின் உதவியுடன் சிறிலங்காவின் கடவுச்சீட்டு கட்டுப்பாட்டை மீறி கருணா பயணம் மேற்கொண்டார்.[445]

LTTE க்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகப் போரை நடத்துவதற்கான வழிமுறைகளையும் கோத்தபய பயன்படுத்தினார், இதில் தகவல் தொடர்புச் சாதனங்கள், UAVகள் வழங்கிய புலனாய்வு மற்றும் கனரக ஆயுதங்கள் மற்றும் பீரங்கிகள் தொடர்ந்து போராடுவதற்கான திறன் அல்லது ஆயுதங்கள் LTTE யிடம் இல்லாதபோதும் இந்தத் தாக்குதல்களில் கண்மூடித்தனமாகவும் அளவற்ற வகையிலும் பயன்படுத்தப்பட்டன. தனக்குக் கீழ் பணிபுரிபவர்களால் நடத்தப்பட்ட தன்னிச்சையான மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல், சித்திரவதை, வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள் பற்றி கோத்தபாய முழுமையாக அறிந்திருந்தார், மேலும் இந்த மீறல்களை அவர் அறிந்திருந்தும் அவற்றைத் தடுக்கவோ அல்லது அவர்களுக்கு எதிராக செயல்படவோ தவறிவிட்டார். அதற்குப் பதிலாக பாதுகாப்பு படைகள் மற்றும் மூத்த தளபதிகளுக்கு வெகுமதி அளித்து பொதுவெளியில் இந்தச் செயல்களுக்கு ஒப்புதல் வழங்கினார்.

பெம்பா வழக்கு[446] கட்டளைப் பொறுப்பிற்கான அளவுகோல்களை வரையறுத்துள்ளது, இதில் உத்தரவுகளை பிறப்பிக்கும் அதிகாரம் மற்றும் பெம்பாவின் கட்டளையின் கீழ் பாதுகாப்புப் படைகள் அல்லது பிரிவுகளுக்கு உத்தரவிடுவதற்கான அதிகாரம் ஆகியவை அடங்கும். அவருடைய உடனடி கட்டளையின் கீழ் அல்லது கீழ் மட்டங்களில், போர்களில் ஈடுபட, உத்தரவுகள் உண்மையில் பின்பற்றப்பட்டதா என்பதைக் கருத்தில் கொள்வது உட்பட கட்டளைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துகிறது.

கோத்தபய ராஜபக்ச அலகுகளை மறுசீரமைப்பதற்கு அங்கீகாரம் அளித்தார், மேலும் கட்டளை கட்டமைப்புகளில் மாற்றங்களைச் செய்தார், வழக்கமான கட்டளை சங்கிலியைத் தவிர்த்துவிட்டார். படைகளின் எந்தவொரு உறுப்பினரையும் பதவி உயர்வு, மாற்றுதல், நீக்குதல் அல்லது ஒழுங்குபடுத்துதல் மற்றும் போர் நடைபெறும் பல்வேறு இடங்களுக்கு படைகளை வழிநடத்தும் அதிகாரம் அவருக்கு இருந்தது.

வன்னியில் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுவதற்கு இனம், இனவியல் மற்றும் மதம், அரசியல் அடிப்படையில் அரசுக்கு எதிரான எதிர்ப்பின் அடிப்படையில் கூட்டாகத் தண்டிக்கப்படுவதற்கு கோத்தபய ராஜபக்ச பொறுப்பேற்கிறார்.[447]

முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செயலாளராகவும், சிறிலங்கா பாதுகாப்புப் படை மற்றும் துணை இராணுவக் குழுக்களின் நடைமுறை மற்றும் சட்டப்படியான தளபதியாகவும் இருந்த கோத்தபய ராஜபக்ச இந்த அறிகையில் கூறப்பட்டுள்ள மீறல்களைச் செய்யும்படி கட்டளை இட்டதாகக் கூறப்படுகிறது மேலும் அதைப் பற்றி அவர் அறிந்திருந்த போதிலும் அவர்களைத் தடுக்கவோ அல்லது அவற்றிற்குக் காரணமாக அவர்களைப் பொறுப்பேற்கச் செய்யவோ இல்லை. இந்தச் செயல்கள் சர்வதேசம் அல்லாத ஆயுதம் ஏந்திய மோதல்களில் சட்டங்களையும் வழக்கங்களையும் மீறியவை ஆகும். இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவல் மற்றும் சான்றாதாரங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டால் அவை போர்க் குற்றங்களாகவும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படும் மேலும் கட்டளைப் பொறுப்பு என்ற கொள்கையின் கீழ் கோத்தபய குற்ற பொறுப்பு ஏற்க வேண்டும்.

---

441 https://www.icc-cpi.int/CourtRecords/CR2009_04528.PDF பாரா 410

442 https://wikileaks.org/plusd/cables/06COLOMBO1622_a.html 06கொழும்பு1622_a

443 https://wikileaks.org/plusd/cables/07COLOMBO728_a.html

444 'கோத்தபாய "எனக்குப் பாஸ்போர்ட் கொடுத்தார்"', BBC சிங்களம், 25 ஜன 2008, https://www.bbc.com/sinhala/news/story/2008/01/080125_karunajail.shtml

445 இந்த அறிக்கையின் பக்கம் 51.

446 https://casebook.icrc.org/case-study/international-criminal-court-trial-judgment-case-prosecutor-v-jean-pierre-bemba-gombo

447 ஐ.நா. செயலாளர் நாயகம் (UNSG), செயலாளர் நாயகத்தின் வல்லுநர் குழுவின் சிறிலங்காவின் பொறுப்பேற்றல் குறித்த அறிக்கை, 31 மார்ச் 2011, https://www.refworld.org/docid/4db7b23e2.html [அணுகல் 28 நவ 2023]

**‘ஒரு போர்ச் சூழலில் ஒரு நபர் என்ன செய்தார் என்பதைக் கொண்டு உங்களால் அவரை மதிப்பிட முடியாது’.**

**கோத்தபாய ராஜபக்ச[448]**

[448] http://www.dailymirror.lk/article/How-can-there-be-freedom-without-discipline-Gotabaya-162220.html

# இணைப்பு 1: கோத்தபாய ராஜபக்ச பணி வரலாறு

| | |
|---|---|
| 20 ஜன. 1949 | மாத்தறையில் பிறந்தார். |
| கல்வி | ஆனந்தா கல்லூரி[449] |
| 26 ஏப்ரல். 1971 | ஒரு கடேற் அதிகாரியாக சிறிலங்கா இராணுவத்தில் சேர்ந்தார். |
| 25 மே 1972 | தியதலாவு இராணுவப் பயிற்சி மையத்தில் அடிப்படை பயிற்சியை முடித்த பின் 2ம். லெப். ஆகப் பொறுப்பேற்று சிலோன் சிக்னல்ஸ் படைப்பிரிவில் அதிகாரியாகப் பதவிபெற்றார். |
| 1972 | சிக்னல்ஸ் இராணுவக் கல்லூரி, ராவல்பிண்டி, சிக்னல்ஸ் இளம் அதிகாரி படிப்பு |
| தெரியவில்லை | சிங்க ரெஜிமெண்ட் மற்றும் ரஜரத ரைஃபிள்ஸ். |
| 1974 | யாழ்ப்பாணத்தில் பணியமர்வு[450] |
| 1975 | காலாட்படை மற்றும் தந்திரோபாயம் பள்ளி, க்வெட்டா இன்ஃபென்டரி கம்பனி தளபதிகள் படிப்பு. |
| 1980 | கலக எதிர்ப்பு மற்றும் வனப்போர் பள்ளி, அசாம், இந்தியா |
| 1982-83 | வெல்லிங்டன் பாதுகாப்புச் சேவைகள் அதிகாரிகள் கல்லூரி (DSSC), நீலகிரி, தமிழ்நாடு, கட்டளை மற்றும் பணியாளர் பயிற்சி. |
| 14 அக். 1983 | கஜபா றெஜிமென்ட் (தமிழர் எதிர்ப்பு ஈடுபாடு என குற்றம் சாட்டப்பட்டு ரஜரதா ரைஃபிள்ஸ் கலைக்கப்பட்டு விஜயபாகு இன்ஃபேண்டரி ரெஜிமெண்டுடன் இணைக்கப்பட்ட பின்). |
| 1987 மே &ஜூன். | வடமராச்சி நடவடிக்கை, யாழ்ப்பாணம்.[451] |
| 1987 ஜூலை. | IPKF தலையீட்டுக்குப் பின் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டு வித்யலங்காரா முகாமில் இருந்தார்[452] |
| 1987 டிச. | தலைமை அலுவலக அதிகாரி, இராணுவ HQ[453] |
| 1988 | USA பயணம்[454] |
| 1989[455] | ஃபோர்ட் பென்னிங், USA உயர் இன்ஃபேண்டரி அதிகாரி படிப்பு[456] |
| 1 மே 89 | அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாற்றாசிரியர் (சி. ஏ. சந்திரபிரேமா[457]), கோத்தபாய ராஜபக்ச 1வது கஜபா ரெஜிமெண்டில் இருந்தார் என்றும், கட்டளை அதிகாரி என்னும் பதவி உயர்வு பெற்று அவர் மாத்தளையில் மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக 2 வது JVP கலகம் வரை இருந்தார் என்றும் (அதிகாரபூர்வமாக 13 நவ 1989[458]) ஆனால் ஜன் 1990 வரை இருந்ததாக நம்பப்படுவதாகவும் எழுதுகிறார். |
| 8 ஜூலை.1989-26 ஜன். 91 | கமாண்டர் 1 கஜபா ரெஜிமெண்ட்[459] |

---

449 Like Karannagoda, Fonseka, Sarath Weerasekera, Jagath Dias, Prasanna de Silva, Chagie Gallage and Kamal Gunaratne.

450 'I spent most of my time in Jaffna. I first went to Jaffna around 1974." As a Signals officer. – Interview with Chandana Kariyawasam, Ceylon Week in Sinhala, https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html

451 VADAMARACHCHI OPERATION, JAFFNA: 1987 May & June, Eelam II War
யாழ்ப்பாண தீபகற்பத்தில் வெல்வெட்டித்துறையை (VVT) கைப்பற்றியபோது கஜபா படைப்பிரிவின் ஒரு படைப்பிரிவுக்குத் தலைமைத் தாங்கியதன் மூலம் கோத்தபாய ராஜபக்ச ஆரம்ப காலத்தில் இருந்தே வடக்கில் போரில் தீவிரமாக இருந்தார். எண்பதுகளின் பிற்பகுதியில் வடமராட்சி நடவடிக்கை இந்தியாவின் தலையீட்டால் பாதியிலேயே கைவிடப்பட்டதாக அவர் புகார் கூறினார், இந்தியப் பிரதமர் "பயங்கரமான உயிர் இழப்பு" என்று புகார் செய்தார். வடமராட்சி நடவடிக்கை வெற்றியடைய அனுமதித்திருந்தால் யுத்தம் இவ்வளவு காலம் நீடித்திருக்காது என்பதில் கோத்தபாய உறுதியாக உள்ளார். அரசியலில் தீர்வு இல்லை, இராணுவம் மூலம்தான் தீர்வு என்பதில் அவருக்கு இருந்த உறுதியான நம்பிக்கையை இது காட்டுகிறது. "ஜெனரல் விமலரத்ன தான் இப்படி இருக்க முடியாது என்று சொல்லி இந்த முகாம்களை விரிவுபடுத்தினார். இது போருக்குச் செல்வதற்கான ஒத்திகை. அது ஒரு குறிப்பிட்ட நிலைக்கு கொண்டு வரப்பட்டதும், அதனை முழுவதுமாக சுத்தப்படுத்த வடமராட்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்தியத் தலையீட்டால் அந்த வடமராட்சி நடவடிக்கை பாதியில் நிறுத்தப்பட்டது. "
Source: (https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html)
Lalith Weeratunga, Secretary To The President, https://www.businesstoday.lk/article.php?article=7101

452 Interview with Chandana Kariyawasam, Ceylon Week in Sinhala, https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html

453 Gota's War. P 173.

454 Gota's war P173

455 This is the date the course concluded according to Gota's War.

456 P177, Gota's War

457 https://itjpsl.com/assets/press/Chandraprema-PRESS-RELEASE-english.pdf

458 Date Wijeweera was killed. "Gota remained the security coordinating officer of matale until the end of second JVP insurrection" Gota's War, pg 177.

459 https://alt.army.lk/gajabaregiment/1-gajaba-regiment, Online official Biography says 1983-1990.

| | |
|---|---|
| ஜன.1990 | 3 மாத விடுப்பில் கோத்தபாய ராஜபக்ச USA சென்றார். |
| 1990 | நடவடிக்கை 'ஸ்ட்ரைக் ஹார்டு ' மற்றும் நடவடிக்கை திருவிதா பலாயா. |
| 1990 | யாழ்ப்பாணம் கோட்டையைத் திருப்பிப் பிடிக்க ஒரு பட்டாலியனைத் தலைமைத் தாங்கி நடத்தினார்.[460] |
| 1990 இன் பிற்பகுதி | சமீட் ஃபிளாட்ஸுக்குச் செல்லுதல்[461] |
| 1990-1991 | வெலி ஓயா பகுதியில் ஒருங்கிணைப்பு அதிகாரி - மனித உரிமை மீறல்களும் சிங்களக் குடியேற்றமும் நடந்த இடம். [8 ஜூலை 1990 மன்னார் வளைகுடாவில் சுமேதா பிரேராவுடன் புகைப்படத்தில்]. |
| 1990 இன் பிற்பகுதி | 1990 களின் பிற்பகுதியில் அமைச்சர் விஜயரத்னேயின் பரிந்துரையின் பேரில் இராணுவத் தலைமையகம் லெப். கேணல் ராஜபக்சவை கொத்தேலாவாலா பாதுகாப்புக் கழகத்தின் (KDA) துணைத் தளபதியாக நியமித்தது.[462] |
| ஜூலை. 1991 | ஆனையிறவு போர். |
| 1 நவ. 1991 | இராணுவத்தில் லெப். கேணல் பதவியில் இருந்து பணிமூப்பு பெற்று அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்து[463] US குடியுரிமை பெற்றார்.<br>USA வில், '*...அவர் லாஸ் ஏஞ்சல்ஸின் லயோலா சட்டப் பள்ளியில் ஒரு சிஸ்டம்ஸ் இண்டெக்ரேட்டர் மற்றும் யூனிக்ஸ் சொலாரிஸ் நிர்வாகியாகப் பணிபுரிந்தார்.*[464] ' |
| 2005 | இரு நாட்டு குடியுரிமை பெற்ற இவரை இவரது சகோதரரான ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆக்கி அதில் இவர் பத்து ஆண்டுகள் பணிபுரிந்தார். |
| 1 டிச. 2006 | கொழும்பில் இவர்மேல் நடத்தப்பட்ட கொலை முயற்சி தோல்வி அடைந்தது.. |
| 6 செப். 2009 | இவரை ஒரு போர் வீரராக அங்கீகரித்து கொழும்பு பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்தது. |
| 16 நவ. 2019 | சிறிலங்கா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| 12 ஜூலை. 2022 | இவரை பதவி விலகக் கோரி பொதுமக்கள் போராட்டம் செய்தனர். சிறிலங்காவை விட்டு மாலைதீவுக்குக், சிங்கப்பூருக்கும், தாய்லாந்துக்கும் ஓடிப்போனார்.[465] |
| 22 ஜூலை. 2022 | ITJP சிங்கப்பூரில் இவர் மேல் குற்றவியல் புகார் அளித்தது[466] |
| 2 செப். 2022 | சிறிலங்காவுக்குத் திரும்பினார்.[467] |

---

460 "General Kobbekaduwa called me to Vavunia with Sarath Fonseka and said that our two battalions will have to launch the assault".

1990 யாழ்ப்பாணக் கோட்டை

கமல் குணரட்ணவின் சுயசரிதை, 1990 ஆம் ஆண்டு யாழ் கோட்டை சண்டையில் இன்றைய உயர்மட்ட இராணுவ வீரர்கள் எவ்வாறு ஈடுபட்டார்கள் என்பதை விவரிக்கிறது. இதில் கோத்தபாய ராஜபக்ச, அவரது இரண்டாவது தளபதி சுமேத பெரேரா (கஜபா ரெஜிமென்ட்), படைப்பிரிவுத் தளபதிகள் உதய பெரேரா (கஜபா ரெஜிமென்ட்) மற்றும் சவேந்திர சில்வா (கஜபா படைப்பிரிவு) ஆகியோர் அடங்குவர். பின்னர் 2019 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் சரத் பொன்சேகா, கோத்தபாய ராஜபக்ச யாழ்ப்பாண நிகழ்வுகளுக்காக இராணுவ நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படும் ஆபத்து இருந்ததால் இராணுவத்தை விட்டு வெளியேறினார் என்று குற்றம் சாட்டினார்,.

`*"யுத்தத்தில் யாழ்ப்பாணக் கோட்டையை விடுவிக்கும் நடவடிக்கைக்கு நானும் கோத்தபாயவும் ஒன்றாகச் சென்றோம். யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள் காரணமாக, கோத்தபாய ராஜபக்சவை இராணுவ நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல அப்போதைய துணைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சன் விஜேரத்னே தீர்மானித்தார். அப்போது கோத்தபாயவும், எதிர்க்கட்சி எம்.பி.யாக இருந்த மகிந்த ராஜபக்சவும் ரஞ்சன் விஜேரத்னேவை சந்தித்து, அவரை இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டாம் என்றும், இராணுவத்தை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கையை ஜெனரல் ரஞ்சன் விஜேரத்னே ஏற்றுக்கொண்டார். தனிப்பட்ட காரணங்களுக்காக வெளியேறியதாக அவர் கூறினாலும் உண்மையான காரணத்தைச் சொல்ல நான் வெட்கப்படுகிறேன். "*

https://archives1.dinamina.lk/2019/10/21/පුවත්/82709/යුද-බිමට-වඩා-වැඩි-කාලයක්-ගෝඨාභය-ගත-කළේ-කොළඹයි

461 Sunday, 30 June 2013, Ayoma wins the day, The Island, *War on terror revisited : Part 151.

462 Ibid

463 Ibid

464 http://gotabaya.info/about

465 https://www.theguardian.com/world/2022/jul/12/sri-lanka-president-gotabaya-rajapaksa-fails-attempt-flee-airport

466 https://www.aljazeera.com/news/2022/7/24/rights-group-seeks-arrest-of-former-sri-lanka-president

https://itjpsl.com/press-releases/itjp-files-criminal-complaint-against-gotabaya-rajapaksa-in-singapore

467 https://www.aljazeera.com/news/2022/9/2/sri-lankas-gotabaya-rajapaksa-returns-weeks-after-fleeing-island

# இணைப்பு 2: ஊடக அறிக்கைகள்

**22 டிசம்பர் 2005 யாழ்ப்பாணத்தில்**
'இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவின் சகோதரர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவர் துணை அட்மிரல் தயா சண்டகிரி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.[468]'

**LLRPவலைப்பதிவு[469], 31 மே 2006**
'மன்னார் பேராயர் ராயப்பு ஜோசப், மடுப்பகுதியில் இடம்பெற்று வரும் படுகொலைகள் குறித்துத் தனது கவலையைத் தெரிவித்துள்ளார். காடுகளில் பொது மக்களைக் கொன்று குவிக்கும் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்குப் பேராயர் ராயப்பு ஜோசப் கடிதம் எழுதியுள்ளார். கடந்த சில வாரங்களில் கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதலில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகப் பேராயர் கூறினார். பாதுகாக்கப்பட்டப் பகுதியில் இராணுவத் தாக்குதல்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்றார் பேராயர் ராயப்பு ஜோசப்.'

**LLRPவலைப்பதிவு,[470] 31 ஆக 2008**
'வவுனியாவில் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு வெளியேறும் பாதைகள் திறக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கடந்த வாரம் அறிவித்திருந்தார். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, 'பொதுமக்கள் உயிரிழப்புகள் அறவே இருக்காது' என்பது தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கமாகும் என்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். LTTE யின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிழக்குப் பகுதியான வாகரையைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்களின் பாதுகாப்புக்கும் அதே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மாறாக அதில் முழுமையாக வெற்றிபெற முடியவில்லை.'

**MOD சூழ்நிலை அறிக்கை, 31 ஆக 2008**
'பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்புப் படைகளின் பிரதமத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் கடற்படைத் தளபதி துணை அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோருடன் நேற்று முதல் ஆகஸ்ட் 30, 2008 வரை மன்னாருக்கு வருகை புரிந்தார். வட மத்திய கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியின் பாதுகாப்பு நிலையைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்வதே இந்தப் பயணத்தின் திட்டமாகும்.'

**தி ஐலாண்ட்[471], 23 செப் 2012**
'கடற்படை நடவடிக்கைகளின் இறுதிக் கட்டத்தில் (ஜனவரி- மே 2009), சிறிய படகுப் பிரிவுகள் FAC உடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டன. SLN இன் சிறிய படகு செயல்பாடுகள் இந்தியா உட்பட பல நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. SBS பல ஆண்டுகளாக அமெரிக்கப் பணியாளர்களுடன் பயிற்சியளிக்கும் வாய்ப்பைப் பெற்றது, எனவே சர்வதேச அங்கீகாரம் பெற்றது. 2008 செப். 11 ஆம் தேதி வெலிசரவில் உள்ள SLN உற்பத்தி நிலையத்திற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வருகை புரிந்து கருத்துருவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.'

**செப் 2008: போர் மண்டலத்தில் இருந்து UN மற்றும் INGOகள் விலகுதல் - கடிதம் கோத்தபாயவிடம் இருந்து வந்தது[472]**
போர் தீவிரமடைவதற்கு இதுவே முன்னோட்டமாகவும், சர்வதேச சாட்சிகள் இல்லை என்பதை உறுதிப் படுத்துவதற்கான வழியாகவும் இருந்தது. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் தளங்கள் பல சந்தர்ப்பங்களில் குண்டுவீசித் தாக்கப்பட்டன.

---

468 https://lrrp2.wordpress.com/2005/12/22/sla-attacks-on-jaffna-protesters-justified-says-fonseka/

469 https://lrrp2.wordpress.com/2006/05/31/stop-madhu-attacks-mannar-bishop/

470 https://lrrp2.wordpress.com/2008/08/31/human-suffering-looms-large-in-the-wanni/

471 http://slwaronterror.blogspot.com/2012/09/fac-role-in-battle-off-mullaitivu.html

472 The Island, 20 Nov 2012

"Defence Secretary Gotabhaya Rajapaksa took a strong stand on clandestine INGO operations. Acknowledging that the UN and INGOs had an important role to play to alleviate the suffering of civilians, Defence Secretary Rajapaksa insisted that the LTTE couldn't be allowed to exploit those engaged in humanitarian operations."

http://slwaronterror.blogspot.com/2012/11/earth-bunds-on-vanni-front-and-ingo.html

"பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு LTTE இன் INGO மற்றும் NGO ஆதரவை இழக்க வைப்பது ஒரு முன்நிபந்தனை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ராஜபக்ச அறிவித்தார். வெறிகொண்ட ராஜபக்ச, பணிக்குழு I (TFI) மற்றும் 57 வது பிரிவு மேற்கு மற்றும் மத்திய முனைகளில் முறையே முன்னேறி, திறந்த நிலப்பரப்பு மற்றும் நீர்வழிகள் முழுவதும் பள்ளங்கள் மற்றும் பள்ளங்களைக் கொண்ட பலத்த பாதுகாப்புக் அமைப்புகளைக் கண்டதாகக் கூறினார். அக்கராயன்குளம் ஊடாக நாச்சிக்குடாவில் உள்ள மேற்குக் கரையோரப் பகுதியை திருவுருகண்டி வரை இணைத்து LTTE யால் கட்டப்பட்ட மேடுகள் முன்னேறிச் செல்லும் படையினருக்குப் பெரும் சவாலாக அமைந்திருந்தன. INGO களால் கிடைக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தாமல் LTTE யால் அத்தகைய பாதுகாப்பு அரண்களை கட்டியிருக்க முடியாது என்று பாதுகாப்புச் செயலாளர் உறுதிப்படுத்தினார் (பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்: INGO கள், NGO களால் பயங்கரவாதிகள் நன்மை அடைந்தனர் - தி ஐலாண்ட் ஆக 8, 2008).

'2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் 08 ஆம் தேதி நடைபெற்ற சந்திப்பின் போது, வன்னியில் விடுவிக்கப்படாத பகுதிகளில் இருந்து செயற்பாடுகளை மாற்றுமாறும், வவுனியா மையத்தில் இருந்து மனிதாபிமான நடவடிக்கைகளைத் தொடருமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு.கோத்தபாய ராஜபக்ச அனைத்து UN மற்றும் INGO களை வேண்டிக்கொண்டார் என்று அமைச்சர் சமரசிங்கே ஊடகத்திடம் தெரிவித்தார்.[473]'

**டெய்லி நியூஸ் (அரசால் நடத்தப்படும் செய்தித்தாள்), 19 செப் 2008**

'ஆனால் இறுதியில், குறிப்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக அனைத்து INGO மற்றும் NGO க்களும் வன்னியிலிருந்து வெளியேற வேண்டும் என்ற. அரசின் கோரிக்கையை அனைத்து INGO க்களும் ஏற்றன.'

## வன்னிக்கு நுழையும் இடத்தில் ICRC இருப்பிடம்

***டெய்லி நியூஸ் (அரசால் நடத்தப்படும் செய்தித்தாள்),*** **18 நவ 2008**

கமாண்டோ படையினரையும் சிறப்பு அதிரடிப் படையினரையும் நிலைநிறுத்தியதன் பின்னர் ஓமந்தைக்கு வடக்கே உள்ள பகுதியைச் விடுவித்ததன் மூலம் ஓமந்தை பாதுகாப்பு கோட்டத்தில் இயங்கும் படையினரும் மாக்குளம் வரை இணைக்க முடியும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நுழைவுப் பாதைக்குப் பொருத்தமான இடத்தைக் கண்டறியுமாறு ICRC க்கு அறிவித்ததன் பின்னர், ஓமந்தை நுழைவுப் பாதையை ஒட்டுசுட்டான் தெற்கிற்கு மாற்றுவதற்குப் பாதுகாப்பு அமைச்சகம் ஏற்கனவே முன்முயற்சி எடுத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கடந்த வாரம் டெய்லி நியூஸிடம் தெரிவித்தார். மாங்குளத்தைக் கைப்பற்றுவது ஓமந்தை நுழைவுப் பாதையை ஒட்டுசுட்டான் தெற்கிற்கு மாற்றுவதற்கான உறுதியான அடித்தளத்தை அமைக்கும் என இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

**22 பெப் 2009**

'தற்கொலைப் பணியில் ஈடுபட்டிருந்த LTTE யின் விமானங்கள் இரண்டும் விமான எதிர்ப்புத் தாக்குதலில் எரிந்து நாசமானது என்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் ரொஷான் குணதிலக்க ஆகியோர் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கும், உள்நாட்டு வருவாய்த் திணைக்கள கட்டிட வளாகத்துக்கும் நேரில் சென்று நிலைமையை நேரில் அவதானித்துள்ளனர்.[474]'

**17 ஏப்ரல் 2009 கிளிநொச்சிக்கு வருகை**

'பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி துணை அட்மிரல் வசந்த கரன்னாகொட, காவல்துறை மாஅதிபர் ஜயந்த விக்கிரமரத்ன ஆகியோரும் ஜனாதிபதியுடன் சென்றிருந்தனர்.[475]'



தேநீர் விருந்தொன்றில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, காவல்துறை மாஅதிபர் ஜயந்த விக்கிரமரட்ண. படம்: சுதத் சில்வா [476]

## போர்த்தடை மண்டலங்களின் இருப்பிடம்

GOSL ஆல் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டவை மற்றும் முன்னணியில் அமைந்துள்ளன- பிரச்சினைகளின் பகுப்பாய்விற்கு OISL ஐப் பார்க்கவும். NFZகள் அனைத்தும் மீண்டும் மீண்டும் குண்டுவீசித் தாக்கப்பட்டன.

---

[473] Press Release, Ministry of Disaster Management and Human Rights, 3 Oct 2008, on file.

[474] SUNDAY OBSERVER "Air Force proves its mettle".

[475] Firt Visit by a head of state:President in Kilinochchi, Daily News, 17 Apr 2009.

மேலும்: "இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கோத்தபாய ராஜபக்ச வெள்ளிக்கிழமை (11) வன்னியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய இந்தச் சுற்றுப்பயணத்தில் அவருடன் சென்றுள்ளார். முல்லைத்தீவு வந்தடைந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தற்செயலாக அவரது பழைய படைப்பிரிவான ஒன்பதாவது கஜபா படைப்பிரிவினரால் மார்ச் பாஸ்ட் வழங்கப்பட்டது. அங்கு அவர் இறுதிப் போர் நடைபெற்ற புதுமாத்தளன் பகுதியைச் சுற்றிப்பார்த்தார். இங்கே அவர் 59 வது பிரிவு, அதிரடிப்படை VIII மற்றும் அதிரடிப்படை II ஆகியவற்றின் வீரர்களிடம் உரையாற்றினார், மேலும் அவர்களின் நலனில் எப்போதும் கவனம் செலுத்துவதாகவும், ஊனமுற்ற வீரர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாகவும் கூறினார்."
https://lrrp.wordpress.com/2009/09/

[476] On file.

**டெய்லி நியூஸ், 7 பெப் 2009, கோத்தபாயவோடு நேர்காணல் -NFZ 2 பற்றி**

'அரசு இன்னும் விடுவிக்க வேண்டிய மொத்தப் பரப்பளவில் பாதியளவைப் போர்த்தடை மண்டலமாக நிர்ணயித்துள்ளதுடன், அந்த மண்டலத்திற்குள் நுழைய விடாமல் பொதுமக்களை வலுக்கட்டாயமாக வைத்திருப்பது LTTEதான். இந்தச் செய்தித் தொடர்பாளர்கள் மறைக்கும் முக்கிய காரணி இதுதான்,' என்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் கூறியதாவது: . 'சர்வதேச அமைப்புகள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்குள் காலங்காலமாக ஊடுருவிய LTTE யின் முகவர்களால் அரசையும் பாதுகாப்புப் படையினரையும் இழிவு படுத்துவதற்கும், போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த அழுத்தம் கொடுப்பதற்கும் நன்குத் திட்டமிடப்பட்ட பிரச்சாரம் நடைபெறுகிறது.'

உணவுப் பொருட்களைக் குறைப்பதற்காகப் போர்த்தடை மண்டலத்தில் மக்கள் தொகை எண்ணிக்கையை மறைக்கிறார் (140 ஆயிரம் என்று கூறுகிறார் ஆனால் 282 ஆயிரம் பேர் உயிருடன் வெளிவருகின்றனர்), கொத்து குண்டுகளைப் பயன்படுத்துவதை மறுக்கிறார் (உண்மையல்ல) மற்றும் பெருமளவிலான மறுவாழ்வுத் திட்டம் என்று கூறுகிறார். ஆனால், அது பொதுமக்களைச் சட்ட விரோதமாகத் தடுப்புக்காவலில் வைத்திருப்பதாகும்.

**டெய்லி நியூஸ், 10 மே 2009 - NFZ3 பற்றி**

'எவ்வாறாயினும், முன்னர் அறிவிக்கப்பட்ட NFZ இன் பெரும்பகுதி ஏற்கனவே ஏப்ரல் 20 க்குப் பின் படையினரால் கைப்பற்றப்பட்டதால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புத்துறை சபைக் கூட்டத்தில் முன்வைத்த யோசனையைத் தொடர்ந்து, புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்புத்துறை சபைக் கூட்டத்தில் NFZ யை மறுவடிவமைப்பு செய்ய முடிவு எடுக்கப்பட்டது.'

**LLRP வலைப்பதிவு [477] 14 செப் 2009**

அதே வேளையில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வெள்ளிக்கிழமை (11) வன்னிக்கு வந்தார். அவருடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவும் இந்தச் சுற்றுப் பயணத்தில் கலந்துகொண்டார். முல்லைத்தீவு வந்தடைந்த பாதுகாப்புச் செயலாளருக்குத் தற்செயலாக அவரது பழைய படைப்பிரிவான கஜபாவின் ஒன்பதாவது கஜபா படைப்பிரிவினரால் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. அங்கு அவர் இறுதிப் போர் நடைபெற்ற புதுமாத்தளன் பகுதியைச் சுற்றிப்பார்த்தார்.'

[477] https://lrrp.wordpress.com/2009/09/14/six-tiger-stragglers-gunned-down-in-kovilladdi-jungles/

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT